தினமலர்
ஆகஸ்ட் 10, 2019 இதழுடன் இணைப்பு

# ஆன்மிக மலர்

நம்பர் 1
ஆன்மிக இதழ்



உள்ளே...

## அத்தி வரதர் தொடர்



# வரதா வரம்தா...

பக்தித் தொடர் 1

இந்திரா சௌந்தர்ராஜன்



**இந்த** பூஉலகில் மோட்சம் தரவல்ல புனித க்ஷேத்திரங்கள் ஏழு!

'அயோத்தி, மதுரா, ஹரித்வார், உஜ்ஜயினி, காசி, காஞ்சி, துவாரகை'

இந்த ஏழில் காஞ்சி தென்புலம் சார்ந்தது மட்டுமல்ல. புராண, வரலாற்று, பூகோள சிறப்புகளுக்கு களமாக விளங்குகிறது காஞ்சி என்னும் காஞ்சிபுரம்.

இன்றுள்ள பூகோள அமைப்பில் ஆன்மிகத் தலமாகவும், குறுநகரமாகவும் காஞ்சிபுரம் கருதப்பட்ட போதிலும் 'நகரம் என்றால் அது காஞ்சி' என்று வரலாற்று ஆய்வாளர்களாலும், ஞானியர், தூதுவர் போன்றவர்களாலும் போற்றப்பட்டு வந்துள்ளது.

ஆதிசங்கரரின் ஷண்மத ஸ்தாபனம் என்னும் ஆறு சமயக் கொள்கைக்கு எடுத்துக்காட்டாக 'வைணவம், சைவம், சாக்தம், காணாபத்யம், கவுமாரம், சவுரம்' என்னும் ஆறுவகைக்கும் கோயில்கள் இங்கு உண்டு. சமணர், பவுத்தர்களும் கோயில்கள் கட்டினர்.

இவைகளுக்கெல்லாம் உச்சமாய் ஆன்மிக எழுச்சியாய் இன்று நிகழ்ந்து கொண்டிருப்பதே அத்திவரதரின் நித்ய தரிசனம்! 'அத்திகிரி மகாத்மியம்' என்னும் இந்த அத்திவர மகாத்மியத்தை ஆதாரங்களோடும், பக்தியோடும் காண விழைவதே இந்த 'வரதா வரம்தா' தொடரின் நோக்கம்.

தமிழகம் அன்று சேர, சோழ, பாண்டிய நாடுகளாகவும் தொண்டை மண்டலத்தில் பல்லவ தேசமாயும் திகழ்ந்தது. பல்லவ நாட்டின் தலைநகர் காஞ்சி. அதற்கு எவ்வளவோ பெயர்கள்!

'விஷ்ணுபுரம், சிவபுரம், பிரம்மபுரம், காமபீடம், தபோவனம், ஜகச்சாரம், சகலசித்தி, கன்னிக்காப்பு, தொண்டீரபுரம், தண்டகபுரம்' என பல பெயர்கள் இருந்தன.

வைணவத் தலங்களில் பெரிய கோவிலாம் ஸ்ரீரங்கத்துக்குப் பின் உள்ள கோவிலாகவும், காஞ்சியே கருதப்படுகிறது. இதனால் 'அத்திகிரி, அட்டபுயம், திருவெஃகா, ஊரகம், நீரகம், திருத்தண்கா, திருவேளுக்கை, பாடகம், நிலாத்திங்கள் துண்டம், காரகம், கார்வனம், கள்வனூர், பரமேச விண்ணகரம், பவள வண்ணம் என பல பெயர்கள் இருந்தாலும் 'ஹரி க்ஷேத்திரம், புண்ணியகோடி க்ஷேத்திரம், வைகுண்ட க்ஷேத்திரம், ஹஸ்தி சைல க்ஷேத்திரம், திரிஸ்ரோத க்ஷேத்திரம்' என்ற பெயர்களால் வைணவர்கள் அழைக்கின்றனர்.

தற்போது 'காஞ்சி' என அழைக்கப்படுகிறது. காஞ்சம், கஞ்சம் என்பது தங்கத்தை குறிக்கும். உலோகங்களில் தங்கம் மட்டும் மாறாத் தன்மை உடையது. பஞ்ச பூதங்களால் ஏதும் செய்ய இயலாத அழிவற்ற தன்மை உடையதாய் இது விளங்குகிறது. தங்கம் முதல் சகல செல்வங்களுக்கும் உரியவள் மகாலட்சுமி. இவள் விஷ்ணுவின் மார்பிலேயே தங்கி இருப்பவள். அதே சமயம் பக்தர்களுக்கு எப்படி விஷ்ணுவின் காலடியில் கிடந்து சேவை சாதிக்கிறாளோ, அப்படி அவர்கள் காலடியில் செல்வம் கிடக்கச் செய்பவளாகவும் இருக்கிறாள்.

அந்த வகையில் காஞ்சிபுரம் மகாலட்சுமிக்கு உரியதும் கூட... இங்கு வாழ்வோர் இவள் அருளுக்கு எளிதில் பாத்திரமாவர்.

காஞ்சிக்கு இன்னொரு பெயர் அத்திகிரி. இந்த பெயர் வரக் காரணமாகவும், இம்மண்ணுக்கு மகாவிஷ்ணு வரங்கள் தரும் வரதராஜாவாக வரக் காரணமாகவும் இருந்தவளும் இவளே!

அதை சொல்வதே 'அத்திகிரி மகாத்மியம்' என்னும் அத்திவரத புராணம்!

பாற்கடலில் ஒருநாள் தாமசம் என்னும் உறக்கம் நீங்கிய நிலையில் மகாவிஷ்ணுவாகிய



அந்த மாலவன் இருந்த தருணம்!

அவன் மார்பே வாசஸ்தலமாய் இருப்பினும், காலடி கருணை மிகுந்தது என்பதால் அக்காலத்தில் அமர்ந்திருந்த லட்சுமி தேவி எம்பெருமானோடு உரையாடலானாள்.

"பிரபுவே... என்னுள் சில கேள்விகள்... கேட்கலாமா?"

"தாராளமாக கேள் தேவி.."

" பதினான்கு லோகங்களோடு கோள்களுடன் சகலத்தையும் படைத்து, அவைகளுக்கென மாறாத இயக்க விசையையும் அமைத்து உறக்கத்தில் ஆழ்ந்த நிலையிலேயே இயக்கிடும் வல்லமையை கற்பனை செய்து கூட பார்க்க இயலவில்லை"

"எதற்கு இந்த பீடிகையும் ஆயாசமும்"

"காரணம் இருக்கிறது"

" முதலில் அதைச் சொல்"

"ஈரேழு புவனங்களில் பூஉலகு தான் தங்களுக்கு மிக விருப்பமானதோ?"

"எதை வைத்து கேள்வி உன்னுள் எழும்பியுள்ளது?"

"நிஜமாக தங்களுக்குத் தெரியாதா... நான் உங்கள் மார்போடு அகலாது கிடப்பவள்... நான் ஒன்றை நினைக்கும் முன்பே தங்களுக்கு தெரிந்து விடுமே..?"

"இது உனக்கும் பொருந்துமே தேவி...நீயும் நான் நினைப்பதை அறிந்து விடலாமே...?"

"பொருந்தாது... என்னை நீங்கள் அறியலாம். ஆனால் உங்களை தவிர அன்றி வேறு யாராலும் உங்களை அறியவே முடியாது"

"சரி.. விஷயத்திற்கு வா.. பூமியின் மீது எனக்கு அதிக விருப்பமா என்பது தானே உன் கேள்வி?

"ஆம்.."

"நான் விருப்பம், விருப்பமின்மை என்னும் உணர்வுகளுக்கு அப்பாற்பட்டவன். இது தெரிந்திருந்தும் நீ கேட்கிறாய் என்றால் அதனால் வரும் காலகதியில் திருவிளையாடல்கள் நடக்க இருக்கின்றன என்பதே உட்பொருள்."

" புரிகிறது. இப்படி சொல்லும் சாக்கில் திருவிளையாட்டு புரிய சித்தமாகி விட்டதை புரிந்து கொண்டேன். எனக்கு முதலில் பதில் சொல்லுங்கள்.."

"சொல்கிறேன். பூவுலகை நான் மட்டுமல்ல... அவ்வுலகில் ஜனனம் எடுத்த பலரும் மிக விரும்புகின்றனர். எனது ராம அவதாரத்தின் முடிவில் நான் அனுமனையும், ஜாம்பவானையும் இந்த வைகுண்டத்திற்கு அழைத்தேன். ஆனால் இருவருமே மறுத்து விட்டனர். காரணம் கேட்டேன். ஐயனே! இன்பம் மட்டுமே தருவது சொர்க்கம், துன்பம் மட்டுமே தருவது நரகம் – உமது வைகுண்டமோ பிறவியே இல்லாத முக்தி பேற்றை தந்து உம்மோடு கலக்கச் செய்வது... பூஉலகம் ஒன்று தான் இன்பம், துன்பம் கலப்பாக இருப்பது. இங்கே பக்தி புரிந்தாலே போதும் உங்கள் பேரருளுக்கு பாத்திரமாகி அர்த்தம் மிகுந்த வாழ்வு வாழ முடியும். இதை விடவா முக்தியும் மோட்சமும் பெரியது...? எங்களுக்கு பெரும் துன்பம் தரும் நரகமும் வேண்டாம். இன்பம் தரும் சொர்க்கமும் வேண்டாம். உங்களையே மறக்கச் செய்து உங்களுடன் கலக்கச் செய்திடும் வைகுண்ட முக்தியும் வேண்டாம்.

> இன்பம் மட்டுமே தருவது சொர்க்கம், துன்பம் மட்டுமே தருவது நரகம் – உமது வைகுண்டமோ பிறவியே இல்லாத முக்தி பேற்றை தந்து உம்மோடு கலக்கச் செய்வது...

சர்வ காலமும் 'ராம் ராம் ராம்' என சொல்லிக் கொண்டும், அப்படி சொல்வோருக்கு உதவிக் கொண்டும் வாழ்வதே வாழ்வு. எனவே எங்களுக்கு அதை அருளிடுக என இருவரும் கேட்டுப் பெற்றனர். அதனால் சொல்கிறேன் அப்படிப்பட்ட பக்த உள்ளங்கள் வாழ்ந்திடும் பூவுலகை நானும் விரும்புகிறேன் என்றார். லட்சுமியும் புன்னகைத்தபடி, "அதனால் தான் உங்களின் உருவத்தை அர்ச்சாரூபமாக (சிலை வடிவில்) உள்ள பிரணவாகார ஸ்ரீரங்க விமானத்தை நீங்கள் பிரம்மனுக்கு அளிக்க, அவன் அதை சூரியனின் பேரனான இக்ஷவாகுவுக்கு அளித்திட பின், அது தங்களின் ராம அவதாரத்தில் தங்களாலேயே பூஜிக்கப்பட்டு பின் விபீஷணன் மூலமாய் ஸ்ரீரங்கத்தை அடைந்து அது பூலோக வைகுண்டம் என்றானதோ?"

"சரியாகச் சொன்னாய்... எனது பூலோக சான்னித்யம் மையம் கொண்டிருப்பது அங்கே தான்.."

"அத்தனை பெரிய பூஉலகுக்கு அந்த ஸ்ரீரங்கத் தலம் மட்டும் போதுமா?"

லட்சுமி என்ன சொல்ல வருகிறாள் என்பது பெருமாளுக்கு புரிந்தது.

**இன்னும் வருவார்**

## நல்ல நேரம் வந்தாச்சு

மதுரை மாவட்டம் அழகர்கோவிலில் உள்ள சக்கரத்தாழ்வார் விசேஷமானவர். மூன்று கண்கள், நீண்ட பற்கள், ஆயுதம் தாங்கிய பதினாறு கைகளுடன் இவர் காட்சியளிக்கிறார். இவரது சிலையின் மீது பொறிக்கப்பட்டுள்ள மந்திரம், யந்திரங்கள் சக்தி மிக்கவை. இரண்யாசுரனை வதம் செய்த கோலத்தில் நரசிம்ம மூர்த்தியும் உடனிருக்கிறார். இவர்களை வழிபட்டால் நல்ல நேரம் வரும். கிரக தோஷம் நீங்கும். நியாயமான தீர்ப்பு கிடைக்கும்.









# வரதா வரம்தா...

பக்தித்தொடர் **2**

இந்திரா சௌந்தர்ராஜன்



**தி**ருமாலுடன் உரையாடும் போது ஸ்ரீரங்கம் பற்றி குறிப்பிட்ட லட்சுமி, பூவுலகிற்கு இந்த தலம் (ஸ்ரீரங்கம்) மட்டும் போதுமா எனக் கேட்டாள். திருமாலின் அழகுமுகத்தில் ஒரு புன்னகை.

அந்த புன்னகைக்கு பொருள் தெரிந்திருந்தும் தெரியாதவள் போல பேசலானாள்.

''பிரபோ... என் கேள்விக்கு சிரித்தால் ஆயிற்றா? மானுடம் உய்வு பெற ஸ்ரீரங்கம் போல பல அரங்கங்கள் இருந்தால் அல்லவா பூவுலகில் பக்தி தழைக்கும். அமைதி, ஆரோக்கியம் என எல்லா செல்வங்களையும் பெற்று வாழ முடியும்?''

''இந்த கேள்வியை நீ தெரிந்து தான் கேட்கின்றாயா... இல்லை பூவுலகில் மனிதர் பக்திபுரிய உகந்த தலங்களை என் வாயாலேயே அறிய விரும்புகிறாயா?''

''அப்படித்தான் வைத்துக்கொள்ளுங்களேன்...''

''தலம், தீர்த்தம், விருட்சம் என்னும் மூன்றாலும், தெய்வதம் விளங்கப் பெற்றிடும் தலமான காஞ்சியை நீ எங்ஙனம் மறந்தாய்? கோயில் என்றால் ஸ்ரீரங்கம், மலை என்றால் திருமலை. அது போல தலம் என்றால் காஞ்சியல்லவா? அங்கே நான் வரங்களை வாரி வழங்குகின்ற வரதராஜனாய் திகழ்வதை நீ அறியாதவளா?''

''அறிவேன்...காஞ்சி மண்டல எல்லைகளை எண்ணும் போதே பிரமிப்பு உண்டாகுமே? ஐம்பது கோடி யோசனை விசாலம் உள்ள பூமி மண்டலத்தில் ஸ்ரீசக்தி பீடங்களில் அரிதிலும் அரிதான மூன்று பீடங்களில் காமராஜ பீடம் என்னும் சக்திபீடம் அமையப் பெற்ற தலம் அல்லவா காஞ்சி!

அலையடிக்கும் சமுத்திரமே கிழக்கு எல்லை, தென்பெண்ணையாறே தெற்கு எல்லை, கல்லாறே மேற்கு எல்லை, புஷ்கரணி என்னும் திருக்குளமே வடக்கு எல்லை... நான்கு எல்லையிலும் தீர்த்தங்கள். இதில் நீராடுபவர்களின் பாவங்கள் நீங்கிடும் அருட்தன்மை என காஞ்சியம்பதி திகழ்வதால் தான் இத்தலத்தில் வரதராஜனாய் கோயில் கொண்டீரா?''

''அருட்தன்மை கொண்ட தீர்த்தங்கள் என சொன்னால் போதுமா? இந்த தீர்த்தங்களின் சிறப்பை நீ கூறவில்லையே...''

''எனக்கு தெரிந்ததை, நான் உணர்ந்ததை அதாவது உங்கள் உள்ளத்துக்குள் இருப்பதை கூறட்டுமா?''

''கூறு... காஞ்சியின் பெருமையை காரணம் இல்லாமல் நீ பேசப் போவதில்லை என்பதையும் அறிவேன். முதலில் தீர்த்தங்களின் அருள் சிறப்பைக் கூறு...''





● தினமும் 45 நிமிட நடை; நோய்க்குத் தடை

''கூறுகிறேன். வரதராஜராய் நீங்கள் எழுந்தருளியிருக்கும் புண்ணிய கோடி விமானத்தின் ஈசான்யத்தில் இருக்கும் அனந்த சரஸ் என்னும் திருக்குளத்தில் சனிக்கிழமையன்று நீராடுபவர்கள் காவிரியில் நீராடிய பயனையும், ஆதிசேஷனின் பரிவையும் பெறுவர். நாக தோஷங்கள் நீங்கப் பெறுவர். சரி தானே?''

''வாயு திக்கில் இருக்கும் பக்தோதய சரஸ் அளிக்கும் பயன் பற்றியும் சொல்..''

''இந்த குளத்தில் ஏகாதசி திதியில் நீராடுபவர்கள் திருப்பாற்கடலில் நீராடிய புண்ணிய பயனைப் பெறுவர்... ஆம் தானே?''

''வடக்கில் இருக்கும் இந்திர தீர்த்தம்...?''

''இந்திர தீர்த்தத்தில் புதன் கிழமை நீராடுவோர் யமுனை நதியில் நீராடிய பயனோடு இந்திரனுடைய கருணைக்கும் ஆளாவர்!'

''மெத்தச் சரி.. அக்னி திக்கில் உள்ள பாஞ்சாலிகை குளத்தில் நீராடுபவர்கள் பற்றியும் கூறி விடு''

''கேட்டை, திருவோண நட்சத்திர நாட்களில் பாஞ்சாலிகையில் நீராடுவோர் விரஜை நதியில் நீராடிய பயனோடு, ஐஸ்வர்யங்களையும் அடைவர் என்பதல்லவா அதன் சிறப்பு?''

''அப்படியானால் இத்தலம் க்ஷேத்திரங்களில் தலையானது என்பதில் சந்தேகம் இல்லை தானே?''

''உண்மை தான்... ஆயினும் அனுபவ பூர்வமாக உணர்வதும், உணர்த்துவதும் தனிச் சிறப்பு தானே?''

''அப்படி ஒரு அனுபவத்திற்கு நாமே ஆட்படுவோமா?''

''தங்களின் சித்தம் என் பாக்கியம் அல்லவா?''

''தேவி... இந்த காஞ்சியம்பதியில் வரும் நாட்களில் பல விசேஷங்களும், வினோதங்களும் அரங்கேற உள்ளன. பூபாரத்தை பூமிதேவியாக இருந்து நீ தாங்கி நிற்கிறாய். யுகபாரமோ என் மேல்... அதிலும் இந்த கலியுகத்தில் அந்த பாரம் பஞ்ச பூதங்களின் போக்கிலேயே மாற்றத்தை ஏற்படுத்தி விடும். அவ்வாறு ஆகாமல் கலிபாரத்தை சமன் செய்யும் செயலாக நாளொரு விசேஷ வடிவும், போக்கும் கொள்ளப் போகிறேன். அதற்கான தொடக்கமே இன்று நாம் காஞ்சியம்பதி பற்றி பேசியது.''

''கலியுகத்தின் பிடியில் பஞ்ச பூதங்களின் போக்கில் மாற்றம் நேருமோ? கலிக்கு அப்படி ஒரு சக்தியா?''

''ஆம்... கலிபுருஷனின் தன்மை அத்தகையது! பேராசை, பொறாமை, கொலை, களவு, சூது, வாது, பெண் மயக்கம் என அவ்வளவும் கலியின் வெளிப்பாடுகள். இதன் நடுவில் மானுடம் கடைத்தேறவும், பக்தி நெறியைக் காக்கவும் உரியதைச் செய்ய வேண்டும் அல்லவா?''

''ஆம்.. முன்பொரு முறை நீ நிகழ்த்திய திருவிளையாடலால் தானே இந்த அத்திகிரியே உருவானது. அதை சற்று எண்ணிப் பார்'' என எம்பெருமான் கூறிட மகாலட்சுமியும் அந்த எண்ணங்களுக்கு ஆட்படத் தொடங்கினாள். அத்திகிரி என்னும் வரதன் கோயில் தோன்றிய விதம் அவளுக்குள் எழும்பலாயிற்று.

எம்பெருமான் வைகுண்டத்தில் பள்ளி கொண்டிருக்கும் நிலையில் முகத்தில் தீவிர சிந்தனை. அதைக் கண்ணுற்ற மகாலட்சுமியும் வினவலானாள்.

''பெருமானே எது குறித்து இத்தனை விசாரம்?''

''பூவுலகு குறித்தே சிந்திக்கிறேன். யுகங்கள் விரிந்து உயிர்க்கூட்டம் பல்கிப் பெருகும் தருணத்தில் பக்திநெறி தழைத்திட உரியதைச் செய்ய வேண்டுமல்லவா?''

''அதில் என் பங்கு என்னவென்று கூறுவீர்களா?''

முப்பெரும் தேவியர்களில் நீயே முதலானவள் என சரஸ்வதியிடம் உன் நாடகத்தை தொடங்கு... மற்றது தானாய் நிகழும்.

லட்சுமி தேவியை வேடிக்கையாகத் தூண்டினான் பரந்தாமன்.

சரஸ்வதிபுத்ரன் எனப்படும் நாரதன் தேடி வரவும் மகாலட்சுமியும் நாடகத்தை தொடங்கினாள்.

''வா நாரதா... சரியான சமயத்தில் தான் வந்திருக்கிறாய்..'' என ஆரம்பித்தாள்.

''தாயே! பீடிகை பலமாக இருக்கிறதே... வைகுண்டத்தில் கூடவா சரியான சமயம், சரியில்லாத சமயம்?...'' என நாரதனும் அந்த நாடகத்தில் அறியாது பங்கு கொள்ளலானான்.

''அது சரி.. உன் அன்னை வாணி எப்படி இருக்கிறாள்?''

''அவர்களுக்கு என்ன.. தந்தை பிரம்ம தேவனின் படைப்புத் தொழிலுக்கு உற்ற துணையாகவும், உலக மாந்தரின் கல்வி, கேள்விகளுக்கு அருட்கொடையாகவும் சதா காரியம் செய்து கொண்டே இருக்கிறார்..''

''என்ன இருந்து என்ன பயன்.. உலக மாந்தருக்கு பேரின்பத்தை என் செல்வம் அல்லவா தருகிறது?''

– லட்சுமியின் பேச்சு நாரதனுக்கு புரிய வேண்டியதை புரிய வைத்து விட்டது.

''தாயே... நீங்களா இப்படி பேசுவது/ இது என்ன நாடகம்? – என்றான்.

''நாடகம் தான்... வாணியிடம் சென்று என் கருத்தைக் கூறு. கலகம் புரிவதில் கைதேர்ந்த உன்னால் தேவலோகமே திகைக்க வேண்டும். குறிப்பாக தேவர்கள் தலைவன் இந்திரன் முதல் உன் தந்தை பிரம்ம தேவர் வரை எல்லோருக்குமே எம்பெருமானின் ஆட்டுவிப்பில் பெரும் கடமைகள் காத்திருக்கின்றன. இதில் தொடக்கம் மட்டுமே நீ...!'' என்றாள் லட்சுமி.

''கடமைகள் என தாங்கள் கூறுவதைப் பார்த்தால் எம்பெருமான் அடுத்து ஏதும் அவதாரம் எடுக்கத் திட்டமா?'' என ஆவலாகக் கேட்டான் நாரதன்.

''அவதாரமில்லை. அதற்கு இணையான ஒரு செயல்பாடு...''

''அது என்ன? புரியும் படி கூறுங்களேன்''

''நாராயணன் செயல் என்பதே நடக்க நடக்கத் தானே தெரியும். முன்னதாக தெரிந்து கொள்ளும் சக்தி எனக்குமில்லை, உனக்குமில்லை, அது நமக்கு தேவையும் இல்லை. நாம் கடமையை ஆற்றுவோம். மற்றவை அந்த நாராயணராகிய வரதராஜரின் பாடு...''

''வரதராஜர் பாடு என்றால் காஞ்சியம்பதி தானே தலம்.. அந்த புண்ணிய க்ஷேத்திரத்திலா?''

''ஆம்...!'' என அழகாய் தலையை அசைத்து அனுக்கமாய் சிரித்தாள் திருமகளான மகாலட்சுமி!

தொடரும்



# வரதா வரம்தா...

பக்தித்தொடர் 3

இந்திரா செளந்தர்ராஜன்



**ச**த்ய லோகத்தில் பிரம்மன் யோக நிஷ்டையில் படைப்புத் தொழிலில் பரிபாலனத்திற்குள் இருந்தான். வீணையை மீட்டிக் கொண்டிருந்தாள் கலைவாணி. ''நாராயணா... நாராயணா...'' என உச்சரித்தபடி நாரதன் வரவும் நிமிர்ந்தாள். ஆயினும் விரல்கள் இசைத்தபடி இருந்தன.

இசை நாரதனையும் மயக்கியது. தன்னை மறந்து தலையசைத்தான். வீணை இசை வெள்ளமாய்ப் பெருகி சத்ய லோகத்தையே நிறைத்தது. நிஷ்டை கலைந்த பிரம்மதேவன் எழுந்து வாணியின் இசையை ரசித்தான்!

வாணி இசைப்பதை நிறுத்தி விட்டு புன்னகைத்தாள்.

''தாயே... ஏன் நிறுத்தினீர்கள். தொடருங்கள்'' என்றான் நாரதன்.

''ஆம் தேவி... உன் இசை என்னை நெகிழச் செய்தது.' என்றான் பிரம்மதேவன்

'' இருவரும் சொல்வது மனதுக்கு மகிழ்ச்சி தருகிறது. ஆயினும் அளவுக்கு மிஞ்சினால் அமிர்தமும் விஷமல்லவா? போதும் என எண்ணுகிறேன்'' என்றாள் வாணி.

''தாயே... தங்களிடம் பிடித்த விஷயமே இது தான். எதிலும் நிதானம்! தன்னடக்கம்...! தங்களை நினைத்தால் பெருமையாக இருக்கிறது. அதே சமயம் சிலரை நினைத்தால் சங்கடமாக இருக்கிறது''.

ஆரம்பமாகி விட்டது நாரதனின் லீலைக்கான செயல்பாடு.

''யார் அந்தச் சிலர்?'' என அவளும் நாரதனுக்கு இசைந்து கொடுக்கத் தொடங்கி விட்டாள்.

''அடடா... அறியாமல் உளறி விட்டேனே..! வேண்டாம் தாயே. நான் எதையும் சொல்லவுமில்லை. நீங்கள் கேட்கவுமில்லை...'' என சமாளித்தான் நாரதன்.

''நாரதா.. என்னிடமே மறைக்கப் பார்க்கிறாயா?''

''இல்லை தாயே! நீங்கள் வீணையில் வாசித்தது காம்போதி ராகம் தானே?''

பேச்சை மாற்றினாலும், வாணி மாறுவதாக இல்லை.

''ஏதோ நடந்துள்ளது... இல்லாவிட்டால் இப்படி பேசுவானா என்ன? இந்திர லோகத்தில் தான் ஏதாவது பிரச்னை உருவாகியிருக்க வேண்டும்... என யூகித்தாள் வாணி.

''நாரதா... இந்திர லோகத்தில் சிக்கலா... பேசக் கூடாததை இந்திரன் பேசி விட்டானா?'' என விடாது கேட்டாள்.

''தாயே விடுங்கள் என்றேனே... ஏன் விடாமல் கேட்கிறீர்கள்?''



'' எங்கே எது நடந்திருந்தாலும் சொல்! உனக்கு தீங்கு நேராது என உறுதி தருகிறேன். சொல்!''

''எனக்கு தீங்கா! தவறு தாயே...தீங்கு வந்தாலும் தாங்குவேன். ஆனால் உலகிற்கே தீங்கு வந்தால்?''

''உலகிற்கா.. என்ன சொல்கிறாய்? விபரமாகக் கூறு..''

''உலக மாந்தருக்கு முதலில் தேவையானது கல்வியா? செல்வமா?''

''இரண்டும் தான்...''

''முதலில் என்றேனே...''

''என்ன சந்தேகம்...கல்வி தான்!''

''இல்லை. செல்வம் தான் பெரிது... முதல் வணக்கத்திற்குரியவள் திருமகளே! மற்றவர்கள் எல்லாம் பின்பு தான்?''

''சொன்னது யார்?'' மவுனமாக இருந்த பிரம்மதேவன் இடையிட்டான்.

''தந்தையே தாங்களுமா சங்கடப்படுத்த வேண்டும்?''

''நாரதா... பீடிகை வேண்டாம். விஷயத்திற்கு வா...சொன்னது யார்?''

''அது..அது..அது..!''

''சொல்லப் போகிறாயா? இல்லையா?''

''சொல்கிறேன்... தரிசனத்திற்காக வைகுண்டம் சென்ற இடத்தில், லட்சுமித்தாயார் தான் இதைச் சொன்னார்கள்..!'' – நாரதன் கூறி முடிக்கவும் வாணியின் முகத்தில் கோபம் வெளிப்பட்டது.

''வாணி...வருந்தாதே! தன்னை ஒருவர் பெரிதாகக் கருதுவதும், பெருமை கொள்வதும் இயல்பு தானே?'' என்று சமாதானம் செய்த பிரம்ம தேவனை ஏறிட்டாள் வாணி

''நான் இப்படி பேசினால் சும்மா இருப்பீர்களா? இயல்பு என்றீர்களே... அது மனிதர்களுக்கு வேண்டுமானால் பொருந்தலாம்... லட்சுமியோ அமிர்தம் கடைந்த போது அதன் பரிசாகத் தோன்றியவள்! அவளுக்கு எப்படி பொருந்தும்?'' என ஆவேசப்பட்டாள்.

'' நமக்குள் எதற்கு சர்ச்சை. கோபம் நமது எதிரி என நீ அறிந்தவள் தானே?''

''பிரபு... நான் எனக்காக வருந்தவில்லை. என் அம்சமான கல்வியே அழியாச் செல்வம். லட்சுமியின் செல்வம் அழிந்து போய் விடுவதுடன் பலரையும் பாவியாக ஆக்குகிறது.

ஆனால் கற்றவர் பாவியே என்றாலும், ஞானத்தால் நற்கதி அடைவர். இதனால் தான் நாரதனும் உலகிற்கு தீங்கு என கூறியுள்ளான். இல்லையா நாரதா?''

''ஆம் தாயே...இந்த கருத்து பரவினால் என்னாகும்? மக்கள் பொருள் பெரிது என கருதி, அருட்செல்வமான கல்வியை அப்புறம் என நினைக்க மாட்டார்களா?''

''ஏதோ... நாரதன் முன் தன்னை மறந்து பெருமைப்பட்டுக் கொண்டு விட்டாள் திருமகள். இதை பெரிதுபடுத்தாதே..'' என பிரம்மா சமாதானம் செய்தான்.

''இல்லை தந்தையே.. இக்கருத்து பரவி விட்டது. இந்திரனிடம் கூட நான் கேட்டேன். அவனும் செல்வமே முதல் தேவை என கூறியதோடு ரிஷிகளும், ஞானிகளும் என்னை கல்வியாளன் என கருதியா வணங்குகின்றனர்? நான் தேவர்களின் தலைவன், பெரும் செல்வம் உடையவன், குபேரனை தன் கட்டுப்பாட்டில் வைத்திருப்பவன் என்பதால் தானே வணங்குகின்றனர். எனவே செல்வமே பெரிது; அதுவே முதலானது என கூறியதோடு வழிபாட்டில் லட்சுமி தேவிக்கே பிரதான இடம் என்றும் கூறினான்..!'' நாரதன் பேச்சில் சுருதி ஏறிக் கொண்டே போக வாணிக்கு கோபம் அதிகமானது. அவள் 'இந்திரா' என அழைத்ததும் அங்கே பிரசன்னமாகி வணக்கம் சொன்னான்.

''இந்திரா... ஏன் அழைத்தேன் தெரியுமா?'' என்றாள் வாணி. நாரதரைக் கண்டதும் அவனுக்கு விஷயம் புரிந்தது.

''இந்திரா நீ தேவர்களின் தலைவன். நீயே தவறாக வழிகாட்டலாமா?''

''தேவி.. என்ன கூறுகிறீர்கள்?''

''செல்வம் பெரிது என்றால் எத்தனை துன்பம் உருவாகும் என்பது தெரியவில்லையா?''

''உண்மை தான் தேவி.. மகாலட்சுமியை திருப்திப்படுத்தவே அப்படி சொன்னேன்...''

''அப்படியானால் என்னைத் திருப்திப்படுத்தவே இப்படி சொல்கிறாயா?'' இந்திரன் திருதிருவென விழித்தான்.

''என்ன விழிக்கிறாய்... தலைமைப் பொறுப்பில் இருப்பவர்கள் இடத்திற்கு தகுந்த மாதிரி பேசலாமா? மன உறுதி வேண்டாமா?''

''நான் உறுதியானவன் தான் தேவி...அதனால் தான் மூவராகிய விஷ்ணுவுக்கும், சிவனுக்கும், பிரம்மனுக்கும் வாய்த்த வாகனங்களான கருடன், ரிஷபம், அன்னத்தை விட எனக்கு சக்தி மிக்க யானை வாகனமாக உள்ளது''

'' மூடன் போல் பேசுகிறாயே? யானை உனக்கு வாகனமானால் நீ உறுதியானவன் என பொருளா?

அப்படியானால் அந்த யானையாகவே உன்னை மாற்றுகிறேன். இனி யார் உன்னை மதிக்கிறார்கள் என்றும் பார்க்கிறேன். இந்த நொடியே நீ யானையாகக் கடவாய்.

ஆதிசக்தியின் ஞானசக்தி நான் என்பது உண்மையானால் கல்வியே கரை சேர்க்கும் என்பது உண்மையானால் சாபம் பலிப்பதாக...'' என சபித்தாள். மறுகணமே இந்திரன் மதம் கொண்ட யானையாக மாறினான். பிளிறியபடி வைகுண்டம் நோக்கி ஓடத் தொடங்கினான்!

**தொடரும்**



## தேன் கிண்ணம்

மகாவிஷ்ணுவின் பெருமை, அவரது எட்டெழுத்து மந்திரமான 'ஓம் நமோ நாராயணா' என்பதன் சிறப்பை சாம வேதம் விவரிக்கிறது. இந்த மந்திரத்தை ஜபிப்பவன் உடல்நலம், மனநலம், நல்லபுத்தி, நீண்ட ஆயுள் பெற்று வாழ்வான். 'தேனால் நிரப்பப்பட்ட பாத்திரங்கள் போல இருக்கும் வேதங்களைப் பாடி மகிழுங்கள்' என்றும் இதில் கூறப்பட்டுள்ளது. ரிக், யஜுர், சாம, அதர்வனம் என்னும் நான்கில் இசை நயம் மிக்க சாமவேதத்தை 'தேன் கிண்ணம்' என்றே சொல்லலாம்.



**பெ**ங்களூரு மல்லேஸ்வரம் 8 வது கிராஸில் உள்ள விநாயகருக்கு சோமாஸி என்னும் கர்ஜிக்காய் மாலை சாத்தி வழிபட திருமணத்தடை நீங்கும். வளர்பிறை சதுர்த்தியன்று இவரை தரிசிப்போருக்கு குறையில்லா வாழ்வு கிடைக்கும்.



# வரதா வரம்தா...

பக்தித்தொடர் **4**

இந்திரா சௌந்தர்ராஜன்



**ஸ்ரீ**வைகுண்டம்!

வைகுண்ட வாசலில் பிளிறியபடி நின்ற இந்திரனாகிய யானையைப் பார்த்து துவார பாலகர்களான ஜெய, விஜயர்கள் திடுக்கிட்டனர்.

பள்ளி கொண்டிருக்கும் மாலவனின் காதில் மட்டுமல்ல மகாலட்சுமியின் காதிலும் சப்தம் விழுந்தது.

''தேவி உன் திருவிளையாட்டின் எதிரொலி என நினைக்கிறேன்'' என்றான் மாலவன்.

''வாணியின் கோபமும், வேகமும் எனக்கு வியப்பைத் தருகிறது'' என்றபடி யானை முன் வந்து நின்றாள் மகாலட்சுமி.

யானையின் விழிகளில் கண்ணீர்.

''இந்திரா கலங்காதே...பூவுலக மாந்தர்களின் நலனுக்கான இந்த விளையாட்டில் உனக்கு பங்கு கிடைத்ததற்காக சந்தோஷப்படு... உன் சாபம் தீர நான் வழிகாட்டுகிறேன். பூலோகத்தில் சிம்மாசலம் என்ற மலை உள்ளது. அதன் தொடர்ச்சியில் தண்டகாரண்யம் வனம் உள்ளது. அங்கு விஷ்ணு பக்தனான பிரகலாதன், நரசிம்மரை தியானித்தபடி தங்கியுள்ளான்.

அவன் கருவிலேயே ஹரி பக்திக்கு ஆளாகி இலக்கணம் படைத்தவன். அவனைச் சந்தித்து 32 எழுத்துக்கள் கொண்ட நரசிம்ம மந்திரத்தை உபதேசம் பெற்று, அதை இடையறாது தியானி! இதனால் உன் தோஷம் நீங்கும். அப்படி நீங்கினால் உன்னால் ஹரி க்ஷேத்திரம் என்னும் காஞ்சிபுரத்தை அடைய முடியும். அங்கே சென்ற நிலையில் நீ நரசிம்மரை தியானிப்பாய். அதன் பின் உனக்கு விமோசனம் கிடைக்கும். அழியாப் புகழ் பெறத் தக்க நிகழ்ச்சி அங்கு அரங்கேறும்'' என மகாலட்சுமி இந்திரனுக்கு வழிகாட்டினாள். இந்திரனும் தண்டகாரண்யத்தில் பிரகலாதனைச் சந்தித்து ஸ்ரீநரசிம்ம மந்திரத்தை உபதேசிக்க வேண்டினான். அதை தியானித்தபடி காஞ்சிபுரத்தை அடைந்தது யானை! இம்மண்ணை மிதித்ததும் உடம்பெங்கும் பரவசம் ஏற்பட்டது. இத்துடன் மனதை அடக்கி தியானிப்பதும் சுலபமானது. அதன் விளைவாக எழுந்தருளிய நரசிம்மமூர்த்தி, இந்திர யானையை தன் கைகளால் பிளந்து வீச, பிளவுபட்ட உடல் துண்டு இரண்டும் கூம்பு வடிவில் ஒன்றுபட்டு குன்று உருவானது. அக்குன்றைச் சுற்றிலும் அத்திமரங்கள் இருந்த நிலையில், குன்றின் மீதும் வளரத் தொடங்கின. இதனால் அந்த குன்று 'அத்தி கிரி' என்றானது.

அத்திகிரியில் நரசிம்மரும் மலைக் குகையில் இருக்க, இந்திரனுக்கு சாப விமோசனம் அளித்த திருமால் கிரியின் மீது தேவராஜனாக கோயில் கொண்டான். இவரை 24 படிகள் ஏறி தரிசிக்க வேண்டும். இந்த படிகள் காயத்ரி மந்திரத்தின் உட்பொருளை அடிப்படையாக கொண்டவை.

சாப விமோசனம் பெற்ற இந்திரன் புறப்பட்ட போது இன்னொரு அதிசயம் நடந்தது. முகப் பொலிவு, தேஜஸ் கொண்ட இரு அந்தண சிறுவர்கள் அத்திமர வனத்தில் இருந்தனர்.

> **நாங்கள் ரிஷி புத்திரர்கள்... ஹேமன் என் பெயர். இவன் பெயர் சுக்லன். கவுதம ரிஷியின் சாபத்திற்கு ஆளாகி பல்லிகளாக மாறி அத்தி வனத்தில் இருந்தோம்.**

அவர்கள் சிரிங்கிபேரர் என்னும் பிராமண ரிஷியின் மகன்கள். கவுதம முனிவரிடம் சீடர்களாக வேதம் கற்றவர்கள். இவர்களின் பின்னாலும் ஒரு சாபக்கதை உண்டு.

குருகுலத்தில் சீடர்கள் குருவுக்கு சேவை புரிவர். ஒரு மாணவனை வேகமாக கரை சேர்க்க இது உதவும். புத்திக்கூர்மை இல்லாத சீடர்கள் கூட சேவையால் குருவருளுக்கு பாத்திரமாவர்.

இவ்விருவரும் ஒருநாள் பூஜைக்காக அங்கிருந்த 'அனந்த சரஸ்' குளத்தில் தீர்த்தமும், சமித்து என்னும் மரக்குச்சிகளையும் எடுக்கச் சென்றனர். குளத்து நீரை ஒரு பாத்திரத்தில் எடுத்த நிலையில், குச்சிகளுக்காக மரத்தின் மீது ஏறிய போது மரப்பல்லி ஒன்று நீரில் விழுந்து தத்தளித்தது. சீடர்கள் அதை கவனிக்கவில்லை. பல்லி விழுந்த நீருடன் முனிவரிடம் சென்றனர். அக்னி ஹோத்ரியான அவர் யாகம் வளர்த்து தினமும் வேள்வி நடத்துபவர். யாக குண்டத்தை மந்திர நீரால் சுத்தம் செய்ய முயன்ற போது பல்லி செத்து மிதந்தது! முனிவர் அதிர்ந்தார்.

அனைவரும் நலமாக வாழத் தானே முனிவர் வேள்வி நடத்துகிறார். ஆனால் அதன் தொடக்கமே



• காலை 9:00, பகல் 1:00, இரவு 7:00 மணிக்குள் உணவு அருந்துங்கள்



**மு**ருகப்பெருமானின் நான்காம் படைவீடான சுவாமிமலை அடிவாரத்தில் கண் கொடுத்த விநாயகர் இருக்கிறார். கண்ணில் அறுவை சிகிச்சை செய்யும் முன் இங்கு வழிபடுகின்றனர். விநாயகர் சதுர்த்தியன்று தரிசித்தால் கண் நோய் வராது. வயதான காலத்திலும் பார்வைக் குறைபாடு ஏற்படாது.



ஒரு பல்லியின் மரணத்தோடு இருக்கலாமா? கோபமாக சீடர்களை பார்த்தார்.

"இப்படியா... ஒரு உயிர் இறந்தது கூட தெரியாமல் இருப்பீர்கள்? இனி நான் இங்கே வேள்வி நடத்த முடியாது. ஒருநாள் கூட விடாமல் செய்த வேள்வி பூஜை தடைபட்டு விக்னமும் உண்டாகி விட்டது" என வருந்தியவர், சீடர்களை பல்லிகளாக மாறும்படி சபித்தார்.

இவர்கள் தான் ஹேமன், சுக்லன் என்னும் பெயர் கொண்ட சிருங்கிபேரரின் புதல்வர்கள்! இருவரும் இந்திரன் சாப விமோசனம் பெற்ற நேரம் அங்கு வந்தனர்.

"யார் நீங்கள்... உங்களிடம் தான் என்ன தேஜஸ்! இங்கு என்ன செய்கிறீர்கள்?" இதற்கு ஹேமன் பதிலளித்தான்.

"நாங்கள் ரிஷி புத்திரர்கள்... ஹேமன் என் பெயர். இவன் பெயர் சுக்லன். கவுதம ரிஷியின் சாபத்திற்கு ஆளாகி பல்லிகளாக மாறி அத்தி வனத்தில் இருந்தோம். யானை உருவில் வந்த உனக்கு நரசிம்மரால் சாப விமோசனம் உண்டான சுபவேளையே எங்களுக்கும் விமோசனத்தை அளித்தது.

எங்களுக்கு மட்டுமல்ல... அறியாமல் பிழை செய்து சாபம் பெற்ற அனைவருக்கும் இந்த அத்திகிரி விமோசனம் அளிக்கும்.

குருசாபம் எப்படிப்பட்டது என்பதும், நல்லோர் சாபம் கூட நன்மையில் முடியும் என்பதும் நம் மூலம் உலகிற்கு தெரிய வரும்" என ஹேமன் விளக்கம் தர இந்திரன் மகிழ்ந்தான். அன்போடு அவர்களின் தலையை வருடினான்.

"எம்பெருமானின் திருவிளையாடல்கள் நமக்கு மட்டுமின்றி, மனித குலத்திற்கே பாடமாகி விட்டதை உணர்கிறேன். தலைமைப் பொறுப்பில் இருக்கும் நான் ஒன்றே பேச வேண்டும். உறுதிபட நன்றே பேச வேண்டும். இதற்கு மனதில் உறுதி இருக்க வேண்டும். சரஸ்வதி தேவியார் விஷயத்தில் சராசரி மனிதனைப் போல நடந்து சாபத்திற்கு ஆளாகி விட்டேன். சாபத்தால் துன்பம் நேர்ந்தாலும் இப்போது மகிழ்கிறேன். இல்லாவிட்டால் இப்படி ஒரு திருத்தலம் வாய்த்திருக்குமா?" என நெகிழ்ந்த இந்திரன் அந்தண சீடர்களோடு அனந்த சரஸ் குளத்திற்கு சென்றான்.

"பாற்கடலுக்கு ஈடான இந்த குளம் எதிர்காலத்தில் உயிர்களுக்கு அருள் தரும் பொக்கிஷமாக இருக்கும். இனி நாம் மூவரும் உலகிலுள்ள அனைவராலும் சிந்திக்கப்படுவோம்" என்றபடி நீராடி எழுந்தான்.

பின் சீடர்கள் கவுதம முனிவரின் ஆசிரமம் நோக்கியும், இந்திரன் வைகுண்டம் நோக்கியும் புறப்பட்டனர்.

**தொடரும்**



# வரதா வரம்தா...

பக்தித்தொடர் **5**

இந்திரா செளந்தர்ராஜன்



வைகுண்டம் செல்ல ஆயத்தமான இந்திரன், சிறிது தூரம் சென்று விட்ட ஹேமன், சுக்லனை நோக்கி, "முனிசீடர்களே.." என அழைத்தான். எதற்கு அழைத்தாய் என்பது போல அவர்கள் பார்த்தனர்.

"சீடர்களே! நாம் மூவரும் சாப விமோசனம் பெற்றவர்கள். காரணம் இல்லாமல் நம் சந்திப்பு நிகழவில்லை. சாபம் பெற காரணமான தவறு குறித்து நம்மால் சிந்திக்க முடிந்தது. இதனால் எனக்குள் சில கேள்விகள் எழும்பின. உங்களுக்கு ஏதும் தோன்றவில்லையா?" என கேட்டான் இந்திரன்.

"இதில் என்ன இருக்கிறது?"

"சாபத்தால் பல்லிகளாக இருந்தீர்களே... உங்களுக்கு வருத்தம் இல்லையா?"

"மனித வடிவம் எடுத்த பின்பே மனம் காரணமாக பழைய நினைவுகள் தோன்றின. பல்லியாக இருந்தவரை அதற்குண்டான நிலையில் அப்படியே வாழ்ந்தோம்"

"அந்த வாழ்வு எப்படி இருந்தது?"

"எதற்காக கேட்கிறீர்கள்?"

"நான் யானையாக இருந்ததும், நீங்கள் பல்லியாக இருந்ததும் சாபத்தால் தான். தண்டனைக்குரிய பிறப்பும், வாழ்வும் எப்படிப்பட்டது என்பதை நான் உணர்ந்து விட்டேன். அதிலும் யானையாக திரிந்த போது கிடைத்ததை உண்டேன். ஒவ்வொரு நாளும் துன்பமாகவே கழிந்தன. மனிதப்பிறப்பு எத்தனை மேலானது என்பதை யானையாக இருந்த போது உணர்ந்தேன். படைப்பின் அதிசயத்தை எண்ணி பிரமித்தேன்."

" பல்லி பிறப்பில் கடமைகள் ஏதுமில்லை. பசிக்கு இரை தேடியும், பாதுகாப்பாக மரத்தில் பதுங்கியும் வாழ்ந்தோம். மழை பெய்தால் வெளியே வர மாட்டோம். உணவும் கிடைக்காது"

"இப்படிப்பட்ட நிலையில் இருந்து மேலான பிறப்பாக இப்போது இருக்கிறோம். உயிர்களை புரிந்து கொள்ள கிடைத்த வாய்ப்பு இது. அதே நேரம் வினைப்பயனால் தான் இந்த நிலை ஏற்பட்டது. எனவே நல்வினைகளை மட்டுமே நாம் செய்ய வேண்டும். ஒருவேளை தவறு செய்தாலும் இந்த தலமும், அதில் கோயில் கொண்டிருக்கும் தேவராஜனும் நமக்கு விமோசனம் கொடுப்பார். அப்படி அளிக்கவே பரம்பொருளான மகாவிஷ்ணு நம்மை வைத்து இந்த திருத்தலத்தை உருவாக்கியுள்ளார்"

"மகாவிஷ்ணுவின் அருளால் நமக்கு விமோசனம் கிடைத்தது. இனி நம்மைப் போல உலகிலுள்ள அனைவருக்கும் கிடைக்கப் போகிறது" என்றனர் ஹேமனும், சுக்லனும்.

" அது மட்டும் போதாது. குருநாதருக்கு எப்படி சேவை செய்ய வேண்டும் என்பது பற்றியும் இங்கு வருவோர் அறிய வேண்டும். எனவே உங்களின் பல்லி வடிவை நான் இங்கு சிலை வடிவாக்கி பிரதிஷ்டை செய்யப் போகிறேன். உங்களை தொட்டு வணங்குவோர் குருசாபமோ, குருசேவையில் குறையோ இருந்தால் நீங்கப் பெறுவர் என தேவர்களின் தலைவன் என்ற முறையில் வரம் தர விரும்புகிறேன்" என்றான் இந்திரன்.

ஹேமனும், சுக்லனும் அதைக் கேட்டு மகிழ்ந்தனர்.

"குருநாதரின் சாபம் கூட முடிவில் மேலான நன்மை தரும் என்பதற்கு உதாரணமாகி விட்டோம்" என்றனர்.

அதன் பின் இந்திரன் மூலம் பல்லி உருவங்கள் இரண்டு தங்கம், வெள்ளி கவசத்துடன் இக்கோயிலில் உருவாகின.

"என்னை சிந்தித்தபடி உங்களின் உருவத்தை தொடுவோரின் தோஷம் போகும்" என்றான் இந்திரன். பின்னர் வைகுண்டம் புறப்பட்டான்.

வைகுண்டத்தில் மகாவிஷ்ணுவையும், மகாலட்சுமி தாயாரையும் பணிந்தான்.

"இந்திரா! நீ விமோசனம் பெற்று திரும்பியது கண்டு மகிழ்கிறோம். இனி கடமையில் கருத்தாக இருப்பாய் அல்லவா?" என்றாள் மகாலட்சுமி.

"ஆம் தாயே! பாடம் கற்றுக் கொண்டேன். உங்களோடு சேர்ந்து என்னையும் மக்கள்வழிபடும் நிலையையும் அடைந்தேன். சாபம் பெற்ற போது



வருத்தமாக இருந்தது. ஆனால் அதன் பயனாக ஒரு திருத்தலம் கிடைத்துள்ளதே. அதற்கு நன்றி சொல்லவே இங்கு வந்தேன்''

''மகிழ்ச்சி... அந்த திருத்தலத்தில் இன்னும் பல அதிசயங்களும் நடக்க இருக்கிறது.'' என்றாள் மகாலட்சுமி.

அத்தனை சம்பவமும் மகாலட்சுமியின் நினைவில் தோன்றி முடிந்த நிலையில், ''தேவராஜ சுவாமியாக விளங்கும் தங்களின் அடுத்த திருவிளையாடல் யாதோ?'' எனக் கேட்டாள்.

''இந்த முறையும் கலைவாணியே அத்திகிரியின் அடுத்த வரலாற்றினை தொடங்கப் போகிறாள். தேவராஜனான நான் வரதராஜனாக ஆகப் போகிறேன்'' என்றார் மகாவிஷ்ணு.

''அது ஏன் இப்போதும் வாணியைத் தேர்வு செய்தீர்கள் என அறியலாமா?'' எனக் கேட்டாள் மகாலட்சுமி.

''வாணியே கல்வி, கேள்வியின் சூட்சும சக்தி. மன இருள் போக்கி ஞானதீபம் ஏற்றுபவள். அப்படி இருளை நீக்க வேண்டியவள் தவறு செய்தால் என்னாகும் என்பதை தேவர்கள் மட்டுமின்றி மனிதர்களும் உணர வேண்டும் அல்லவா?''

''இப்படி சக்தி படைத்த வாணி எப்படி தவறு செய்வாள்?''

''முன்பு ஒருமுறை எப்படி செய்தாளோ.. அப்படியே தான்!''

மகாவிஷ்ணுவின் விருப்பப்படி சத்திய லோகத்தில் இருந்து தொடங்கியது அடுத்த கட்டம்.

சத்தியலோகத்தில் பிரம்மாவின் முன் கோபத்துடன் வந்தாள் சரஸ்வதி.

''தாமரை மலர் போன்ற உன் முகத்திலா கோபம்?'' கேட்டான் பிரம்மன்.

''நான் என்ன செய்வேன்? நான் கோபப்படும்படி நடக்கிறார்களே...?''

'' யாரைச் சொல்கிறாய்?''

''படைப்புக்கடவுளான தாங்கள் அறியாததா?''

''என்ன தான் அறிந்தாலும், பராசக்தியின் அம்சமான மூன்று தேவியரின் மனதை அறிவது சுலபமல்ல! அதிலும் ஞானச் செல்வம் மிக்க உன்னை அறிவது கடினம்.....''

''அது என்ன ஞானச்செல்வம்! எனக்கு இந்த செல்வம் என்ற வார்த்தையே எரிச்சலைத் தருகிறது''

''ஓரிடத்தில் நில்லாமல் செல்லும் எல்லாமே செல்வம் தானே?''

''கல்வி என்பது இந்த மற்ற செல்வங்களுக்கு இணையானது அல்ல... ஏனைய செல்வங்கள் அழியும் அல்லது திருடப்படும் சாத்தியம் உண்டு. ஆனால் கல்வி அப்படியல்ல! எடுக்க எடுக்க குறையாத ஊற்று. கொடுக்க கொடுக்க பெருகுவது. அப்படிப்பட்ட கல்வியை ஓரிடத்தில் நிற்காத செல்வத்துடன் எப்படி ஒப்பிடலாம்?''

''ஒரு புரிதலுக்காக சொன்னேன். இதைப் போய் பெரிதுபடுத்துகிறாயே?''

''பெரிதுபடுத்தவில்லை... நான் எப்போதும் பெரிதாகவே உள்ளேன். ஆனால் என்னை சிறுமைப்படுத்தும் சம்பவம் நிகழும் போது சும்மா இருக்க முடியுமா?''

''உன்னை யார் சிறுமைப்படுத்தியது?''

''எல்லாம் உங்கள் படைப்பால் உருவானவர்கள் தான். ஒருபுறம் லட்சுமி, இன்னொரு புறம் நாரதன், அது போக இந்திரன்...''

''மீண்டும் யார் பெரியவர் என்ற கேள்வியா?''

''உங்களை இப்போது நான் கேட்கிறேன். மூவரில் நான் பெரியவளா இல்லையா?''

'' இப்படி கேட்பதே தவறானது தேவி... இதை நீயும் அறிவாய்... இருந்தும் கேட்கிறாயே?''

''என் கேள்விக்கு இதுவல்ல பதில்... நீங்களே என்னை பெரிதாக கருதத் தவறினால் அதை விட இழிவு கிடையாது.''

''உயர்வு தாழ்வு கருதுவது பாவம் என சொல்லத்தக்க கல்வியை உடைய நீயா இப்படி பேசுகிறாய்?''

''இப்படி கேட்டபடியே இருப்பதற்கு எது பெரியது என சொல்லலாமே?''

''அப்படி கூறினால் அது என்னை நானே புகழ்ந்தது போலாகும்?''

''உங்களையே சம்மதிக்க வைக்க முடியவில்லை... அப்படி இருக்க உங்கள் படைப்பில் உருவான உயிர்கள் மட்டும் எப்படி சம்மதிப்பர்?''

''எதனால் கோபம் என கேட்ட என்னையே கோபம் கொள்ள வைப்பது போல் பேசுகிறாயே?''

''படைப்புக் கடவுளான உங்களிடமே பதில் கிடைக்கவில்லையே?'' என்ற வாணியின் பார்வை பிரம்மாவின் சிருஷ்டி தண்டம் என்னும் தண்டக்கோல் மீது விழுந்தது.

தொடரும்

## ஆன்மிக புதிர்

4 வாசகருக்கு பரிசு



மகாவிஷ்ணு ............ அலங்காரத்தில் காட்சி தருகிறார்

தினமலர்
ஆன்மிக மலர்
டி.வி.ஆர்.ஹவுஸ்
தினமலர் அவென்யூ
மதுரை – 625 016

செப்.12, 2019க்குள் விடைகளை உங்கள் அலைபேசி எண்ணுடன் எழுதி அனுப்பவும். தலா ரூ.200 பரிசு பெற்றவர் விபரம் செப்.14, 2019 தினமலர் நாளிதழில் வெளிவரும்.



# வரதா வரம்தா...

பக்தித்தொடர் **6**



இந்திரா சௌந்தர்ராஜன்

**அந்த** சிருஷ்டி தண்டம் பிரம்மனுக்கு மகாவிஷ்ணுவால் அளிக்கப்பட்டதாகும். உயிர்களைப் படைக்கும் ஆற்றலை அதில் ஏற்றிய மகாவிஷ்ணு, "இந்த தண்டமே படைப்புக்கான சக்தியை அளிக்கும். இது வேறு நான் வேறு அல்ல. இதை இழந்தால் படைப்புத் தொழிலை நடத்த முடியாது. எப்போதும் இது உன் வசம் இருக்கட்டும். நெடிய வாழ்வை உடைய அத்தி மரத்தால் ஆன இந்த தண்டம், உயிர்களை உருவாக்க தேவைப்படும் சக்தியை அளித்தபடியே இருக்கும். இதன் மூலமாக மண்ணில் பசுமைக்கும், அதற்கு மூலமான மழைக்கும் வழிகள் கண்டு உன் சிருஷ்டித்தொழிலை சிறப்பாக செய்..." என்றார் மகாவிஷ்ணு.

வாணியின் கண்ணில் பட்ட அந்த சிருஷ்டி தண்டம், மகாவிஷ்ணு சொன்னதை எல்லாம் நினைத்துப் பார்க்கச் செய்தது. அதன் பின் பிரம்மாவிடமும் ஒரு மாற்றம்.

'இது இருக்கும் வரை 'மேலானவன் நானே'என பிரம்மா கருதுவதால் தான் தனது சிறப்பை ஏற்க மறுக்கிறாரோ என்று வாணிக்கும் தோன்றியது.

மொத்தத்தில் ஆதிமூலமான மகாவிஷ்ணு ஒரு திருவிளையாடலுக்கு ஆசைப்படவும், அதற்கேற்ப முதலில் அலைமகளான திருமகள் அசைந்தாள். பின் கலைமகள்... அவளைத் தொடர்ந்து பிரம்மாவும் நடந்திட நாடகத்தின் முக்கியச் சம்பவம் அரங்கேறியது.

வாணி பீடத்தின் மீதிருந்த பிரம்ம தண்டத்தை கையில் எடுத்தாள்.

"வாணி.. அதை ஏன் எடுக்கிறாய்?"

"இது என் வசமிருக்கட்டும்.."

"உனக்கு எதற்கு அது?"

"ஏன் உங்கள் வசம் தான் இருக்க வேண்டுமா? உங்களில் பாதியான என் வசம் இருக்கக் கூடாதா?"

"என் கடமைக்குரியது அது... உன் கடமைக்குரிய ஏடும், எழுதுகோலும், ஸ்படிக மாலையும், கமண்டலமும், பிறைநிலவும் இருக்கிறதே..."

"அந்த வரிசையில் இதுவும் சேரட்டும். எது மேலானது, எது முதலானது என தெரியாத உம்மிடம் இருந்தால், உம் படைப்பால் பிறப்பு எடுப்பவர்களும், உங்களைப் போலவே இருப்பார்கள். பொன், பொருளை பெரிதாக கருதும் சமூகம் உருவாவது படைப்புத் தொழிலுக்கோ, உலகிற்கோ நல்லதல்ல..." என சொல்லிய வாணி அதற்கு மேல் பேச விரும்பாமல் சத்தியலோகத்தை விட்டு மறைந்தாள்.

பிரம்மன் திகைத்தான். தண்டத்தை வழங்கிய மகாவிஷ்ணுவின் முன் நாராயண மந்திரத்தை ஜபித்தபடி நிற்க மகாவிஷ்ணுவும், மகாலட்சுமியும் வரவேற்றனர்.

"என்ன பிரம்மா...எங்கே இவ்வளவு தூரம்?" என எதும் அறியாதவள் போல பேச்சைத் தொடங்கினாள் மகாலட்சுமி.

"தாங்கள் அறியாத ஒன்று இருக்குமா?" என்ற பிரம்மா தனக்கும், வாணிக்கும் நேர்ந்த வாக்குவாதத்தை விவரித்தான். இறுதியில் வாணி சிருஷ்டி தண்டத்துடன் மறைந்து விட்டதையும் கூறி முடித்தான்.

www.t.me/TamilPDF_Enewspapers



மகாலட்சுமி சிரித்தாள். முத்துக்கள் தெறித்தது போல அந்தச் சிரிப்பு இருந்தது. அர்த்தம் காண இயலாத புன்னகை மகாவிஷ்ணுவிடமும் வெளிப்பட்டது.

"ஐயனே! என் கடமையைத் தடையின்றி தொடர வழிகாட்டுங்கள்" என முறையிட்டான் பிரம்மன்.

"அதற்கு ஒரே வழி தான் இருக்கிறது" என்றார் மகாவிஷ்ணு.

"என்ன அது?"

"பூவுலகில் அத்தி கிரியை அறிவாய் அல்லவா?"

"அறிவேன் ஐயனே! இந்திரன் சாபம் தீர உருவாக்கப்பட்ட தலம் அல்லவா அது?"

"சாப விமோசன தலம் மட்டுமல்ல... முப்பெரும் தேவியரான சக்தி, சரஸ்வதி, லட்சுமி மூவரின் வடிவமான காமாட்சி குடியிருக்கும் தலம். ஏகாம்பரேஸ்வரராக சிவன் அருளும் தலம். அங்கு நிகழும் ஒவ்வொரு நல்வினைக்கும்

பன்மடங்கு லாபம் உண்டு. இங்கு பசுவுக்கு ஒரு வேளை தரும் உணவு ஆயிரம் மடங்கு பலனைத் தரும். இங்கு நிகழும் யாகங்கள் பன்மடங்கு புண்ணியம் தரும்''

''இதை நான் முன்பே அறிவேன். தங்களால் இப்போது தெளிவு பெற்றேன்''

''அப்படியானால் அத்திகிரி சென்று அஸ்வமேத யாகம் நடத்து. அதன் நோக்கம் சிருஷ்டி தண்டத்தை பெற வழிவகுக்கும். சிறு தடை கூட குறுக்கிடாமல் வேள்வியை முடிக்கும் சமயம், நானே தோன்றி புதிய சிருஷ்டி தண்டத்தை அளிப்பேன்''

பிரம்மனும் அத்திகிரியில் வேள்வி நடத்த புறப்பட்டான்.

மகாலட்சுமி, ''சுவாமி... இப்போதே சிருஷ்டி தண்டத்தை தரக் கூடாதா? எதற்காக வேள்வி... அதுவும் பூலோகத்தில்... எனக்கு புரியவில்லையே''

''தேவி... சிருஷ்டி தண்டம் எத்தனை அரிதானது என்பதை உணர்த்த வேண்டுமே! வேதமும் அதன் வெளிப்பாடாகிய வேள்வியும் அரிதானது. வேதம் ஒலி மூலமானது. வேள்வி ஒளி மூலமானது. ஒலி, ஒளி மூலமே இந்த உலகம், நீ, நான், நாம் என பிரபஞ்சத்தில் உள்ள எல்லோருமே...! இதை கால காலத்திற்கும் தோன்றவிருக்கும் மானிடர்கள் அறியவே வேள்வியை பிரம்மன் மூலம் செய்யச் சொன்னேன். வேள்வியின் பரிசாக இழந்த சிருஷ்டி தண்டம் கிடைக்கும்''

''யாகத்தை காஞ்சியில் நடத்தினால் தான் சிறப்பு எனக் கூறி அங்கே ஒன்று பலவாகும் என்றீரே?''

''ஆம்...பசுவின் உடம்பு எங்கும் ரத்தம் ஓடினாலும், அது பாலாகி வெளிப்படுவது மடிக்காம்பின் வழியே தான்... அது போல பிரம்மன் நிகழ்த்தும் வேள்வி உலகிற்கு உரியதாக இருந்தாலும், அது வெளிப்பட ஒரு திருத்தலம் வேண்டும் அல்லவா? அந்த மடிக்காம்பு போன்ற தலமே காஞ்சி என்னும் அத்திகிரி''

''அற்புதம்... இன்னொரு சந்தேகம்... வாணியிடம் இருக்கும் சிருஷ்டி தண்டம் இதன் பின் என்னாகும்?'' – மகாலட்சுமி கேட்க வேண்டிய கேள்வியைத் தான் கேட்டாள்.

**தொடரும்**

## மும்மூர்த்தி தலங்கள்



- தஞ்சாவூர் மாவட்டம் திருக்கண்டியூரில் மும்மூர்த்திகளுக்கும் கோயில் இருக்கின்றன. சிவபெருமான் வீரட்டேஸ்வரராகவும், திருமால் ஹரசாப விமோசனப் பெருமாளாகவும், பிரம்மா தன் தேவி சரஸ்வதியோடும் இருக்கின்றனர்.
- திருச்சி உத்தமர் கோவிலில் திருமால் புருஷோத்தமராக சயனக் கோலத்திலும், சிவபெருமான் பிட்சாடனராகவும், பிரம்மா தன் மனைவி சரஸ்வதியோடும் இருக்கின்றனர்.
- ஈரோடு அருகிலுள்ள கொடுமுடியில் சிவன் லிங்க வடிவத்தில் மூலவராகவும், திருமால் ரங்கநாதராகவும், பிரம்மா வன்னி மரத்தடியிலும் காட்சி தருகின்றனர்.
- கோவை அருகிலுள்ள திருமூர்த்தி அமண லிங்கேஸ்வரர் கோயிலில் பிரம்மா, விஷ்ணு, சிவன் மூவரும் ஒரே லிங்க ரூபமாக உள்ளனர்.
- கடலூர் மாவட்டம் சிதம்பரம் நடராஜர் கோயிலில் மூலட்டானேஸ்வரராக சிவனும், பள்ளி கொண்ட நிலையில் கோவிந்தராஜ பெருமாளும், பிரம்மா தனி சன்னதியிலும் உள்ளனர்.
- கன்னியாகுமரி மாவட்டம் சுசீந்திரம் தாணுமாலய சுவாமி கோயிலில் ( தாணு – சிவன், மால் – திருமால், அயன் – பிரம்மா) இணைந்த வடிவத்தை கொன்றை மரத்தடியில் தரிசிக்கலாம்.

## பலே! ராம்போலா!

**அ**யோத்திக்கு அருகிலுள்ள ஹரிபூர் கிராமத்தில் கோயில் திருவிழா நடந்தது. நரஹரிதாஸ் என்பவர் தினமும் உபன்யாசம் செய்தார். ஒருநாள் அவர் தன் பேச்சை பக்தர்கள் எப்படி புரிந்து கொள்கிறார்கள் என அறிய விரும்பினார்.

''நேற்று நான் பாடிய ராமாயணப் பாடல் யாருக்காவது நினைவில் இருக்கிறதா?'' எனக் கேட்டார். கூட்டத்தில் அமர்ந்திருந்த ராம்போலா என்னும் அனாதை சிறுவன் ராகத்தோடு பாடினான். 'பலே! ராம்போலா' என பாராட்டி அவனைத் தன் குழந்தையாக ஏற்றார். இச்சிறுவனே துளசிதாசராக மாறினார்.





# வரதா வரம்தா...

பக்தித்தொடர் 7

இந்திரா சௌந்தர்ராஜன்





அந்த சிருஷ்டி தண்டம் என்னாகும் என்ற கேள்விக்கு புன்னகைத்த மகாவிஷ்ணு, "அது வாணியின் கைபட்டதும் தன் சக்தியை இழந்தது. சிருஷ்டி தண்டம் பிரம்மனுக்கே உரியது. ஒருவருக்கு உரிய ஒன்றை அவர் விரும்பாத நிலையில் மற்றவர் எடுப்பது திருட்டுக்கு சமம். இதனால் வாணி தோஷத்திற்கு ஆளானாள்" என மகாலட்சுமியை அதிரச் செய்தார்.

"தங்கள் திருவிளையாட்டு வாணியை இப்படி கூடவா ஆக்கும்?" என வருத்தமுடன் கேட்டாள் மகாலட்சுமி.

"வலி இல்லாமல் பிரசவம் இல்லை தேவி... அது போல உளி செதுக்காமல் சிலை இல்லை, பலி இல்லாமல் வரம் இல்லை, ஒலி இல்லாமல் மந்திரங்கள் இல்லை, மானுடம் பக்தி நெறியோடு வாழச் செய்யும் செயல்களின் முடிவை மட்டும் பார். இந்த செயல் என்பது நல்ல விளைவுக்காகவே" என்ற மாலவன் கருத்தை ஏற்ற மகாலட்சுமி "தேவராஜனான உங்களை நானும் வரதராஜனாக காண ஆவல் கொண்டுள்ளேன்" என்றாள்.

அத்திகிரி! கிருத யுகம், ஐந்தாம் மனுவின் காலம், வைகாசி மாதம்... இந்திரனின் முயற்சியால் உருவான கோயிலில் தினமும் ஆகம முறைப்படி பூஜைகள் நடந்தன. கோயிலின் மேற்குபுறம் நரசிம்மரின் சன்னதியில் எழுந்தருளினார் பிரம்மா. தேவசிற்பியான மயன் மூலம் யாக குண்டம் அமைத்தான்.

குண்டம் அமைக்கப்பட்டு அக்னி வளர்த்த நாளில் இருந்து, ஒரு வருடம் அணையாது எரிந்தபடி இருக்க வேண்டும் என்பது யாகத்திற்கான விதி. இயற்கையாகவோ, செயற்கையாகவோ யாகம் தடைபடாமல் இருக்க விநாயகரை பிரதிஷ்டை செய்து அவரிடம் சங்கல்பம் செய்து கொண்டார் பிரம்மா.

அஸ்வம் என்னும் குதிரைதான் யாகத்தின் மூலப்பொருள். வெள்ளை நிறமும், நெற்றியில் கருப்பு மச்சமும் கொண்டதாக அது இருக்க வேண்டும். குதிரை பிறந்தது முதல் யாரும் அதன் மீது ஏறி அமர்ந்திருக்க கூடாது. ஒரு தாய்க்கு பிறந்த ஒரே குட்டியாக இருக்க வேண்டும். அப்படி ஒரு குதிரையை அலங்கரித்து, அதன் முதுகு மீது தங்க இழைகள் சேர்த்த நீலநிற ஆடையும், நெற்றியில் நேத்ர படம் என்னும் பட்டயம் கட்டி, காலில் வெள்ளிக் கவசம் அணிவிக்க வேண்டும். இந்தக் குதிரை பூமண்டலத்தை சுற்றி வரும் போது அதன் காவலன் மற்றும் அவனைச் சார்ந்த நூறு பேர் பின் தொடர வேண்டும்.

இவ்வாறு குதிரை வரும் போது யாரும் அதை தன் வசப்படுத்தக் கூடாது. மீறினால் போர் தொடுத்து வெற்றி பெற வேண்டும். அரசர்கள் மட்டுமின்றி யட்சர், கந்தர்வர், ராட்சஷர்களாலும் குதிரை கவரப்படலாம். எனவே அவர்களையும் வெல்ல வேண்டும். ஆனால் குதிரையைக் கண்ட அனைவரும் பிடித்துக் கட்டாமல் பிரம்மனுக்கு துணை நின்றனர். யாக சாலையில் 'பூபஸ்தம்பம்' என்றொரு தூண் இருக்கும். அதில் குதிரையின் கழுத்து இறுகாதபடி பட்டுக்கயிறால் கட்டப்பட வேண்டும்.

இதைத் தொடர்ந்து 'புருஷ மேதம்' என்றொரு கிளைச்சடங்கு நடக்கும். இதற்காக நால்வகை வருணத்தாருக்கு நான்கு மேடைகள் அமைத்திருப்பர். மிருகங்கள், பறவைகள், பூச்சிகள், மீன்கள், முதலைகள் என பல்வேறு உயிர்களும் அவற்றின் தன்மைக்கேற்ப கட்டப்பட்டிருக்கும். அவற்றை யாரும் இடையூறு செய்வது கூடாது.

இதை ஒட்டி 11 மேடைகளில் பலவித தொழில் செய்யும் குலத்தவர்கள் 185 என்னும்

www.TamilPDF Enewspapers



• காலை 9:00, பகல் 1:00, இரவு 7:00 மணிக்குள் உணவு அருந்துங்கள்

எண்ணிக்கைக்கு குறையாமல் இருக்க வேண்டும். இதன் பிறகே யாகம் தொடங்கப்பட வேண்டும். யாகத்தை முன் நின்று நடத்துபவர் 'கர்த்தா' எனப்படுவார். கர்த்தா மணமானவர் என்றால் மனைவியோடு சேர்ந்து 'தேவ சேர்க்கை புரிதல்' என்னும் சடங்கை நடத்த வேண்டும்.

இதில் சுப்பிரமணியர், மணிகண்டீசர், வருணன், எமதர்மன், சாதான்ஹிகர், ரிஷிகள், கந்தர்வ, யட்ச, கின்னரர், அச்பரர், சித்த சாத்தியர் போன்றோருக்கு அவரவருக்கு உரிய பொறுப்பை கொடுக்க வேண்டும். கணாத்யட்சர், க்ஷேத்திர பாலகர், யோக சிம்மர் முதலியோரை யாக காப்பாளர்களாக நியமிக்க வேண்டும்.

ஒட்டுமொத்தமாக யாகம் தொடங்கும் முன்பு மனைவி உடன் இருக்க வேண்டும். அவளை ஒதுக்கினால் பலன் ஏற்படாது. ஒருவேளை மனைவி பங்கேற்க மறுத்தால் அந்த இடத்தில் இன்னொரு பெண்ணை மனைவியாக நிறுத்தி யாகம் தொடங்கலாம்.

இந்நிலையில் தன் மகனான வசிஷ்டரிடம் சரஸ்வதியை அழைத்து வர பணித்தார் பிரம்மா. அவள் வந்ததும் யாகத்தை தொடங்க வேண்டியது தான்...

யாகத்திற்காக குதிரையும் பட்டுக்கயிறால் கட்டப்பட்டது. சரஸ்வதி வந்ததும் அவ்வளவு பேரும் யாகப் பசுக்களாக கருதப்பட்டு பலி நிவேதனம் செய்வர். பலி நிவேதனம் என்பது வெட்டிக் கொல்வது அல்ல! மந்திர முறைப்படி யாக மூர்த்தியான மகாவிஷ்ணுவுக்கு அர்ப்பணம் செய்வது. கத்தியின்றி, ரத்தமின்றி பலி கொடுக்கும் வழி உள்ளது. மாவினால் உருவம் செய்து அதை நெருப்பில் இட்டு பலியை நிறைவேற்றுவர்.

இப்படி எல்லாம் தயாரான நிலையில்...!

சரஸ்வதி காஞ்சியை ஒட்டிய வேகவதி நதிக்கரையில் தவம் செய்தாள். அவளைக் கண்ட வசிஷ்டர், "மாதா சரணம்... தேவி சரணம்.. வாணி சரணம்..பிரம்ம பத்னி சரணம்"

"அடடே வசிஷ்டனா.. வா மைந்தா! நலமாக இருக்கிறாயா?"

" நலத்திற்கு என்ன குறை? ஆனால் உலகமே இப்போது ஒரு ஊனத்தில் இருக்கிறது. தாங்களும் அறிவீர்கள்..."

"என்ன சொல்கிறாய் நீ?"

"அம்மா...சிருஷ்டி தண்டத்தை எடுத்ததால் படைப்புத் தொழில் செய்ய முடியவில்லை. உலக இயக்கமே நின்று விட்டதே"

"ஓ..அதைச் சொல்கிறாயா? அது சரி... உன்னை ஒன்று கேட்கிறேன். வற்றாச் செல்வமான கல்வியை விட நிலையற்ற செல்வத்தை பெரிதாக கருதுவது குறையில்லையா?"

"தாயே... அது ஒரு திருவிளையாடல்! இது பெரிது அது சிறிது என மாயையில் சிக்கிய மனிதர்கள் நினைக்கலாம். தேவ தேவியான தாங்கள் அப்படி எண்ணலாமா?"

"வசிஷ்டா... இப்படிப்பட்ட மயக்கம் நமக்கும் வந்ததே என் வேதனை"

"இல்லை தாயே! தங்களுக்கு தெரியாதது இல்லை. மகாலட்சுமி விளையாட்டாக பேசியதை பொருட்படுத்த வேண்டாம். தங்களின் வருத்தம் தந்தையான பிரம்மாவை யாகம் நடத்தச் செய்து விட்டது"

"கேள்விப்பட்டேன். இப்போது கூட நான் இல்லாமல் யாகம் தொடங்கக் கூடாது என்பதற்காகவே தூது அனுப்பியுள்ளார். என்னைக் காண அவர் விரும்பவில்லை என்பதையும் தான் பார்க்கிறேனே!"

"தாயே! யாகப்பணியில் இருப்பதால் அவர் எதற்கு என்றே நான் வந்தேன்"

"வசிஷ்டா... நன்கு சமாளிக்கிறாய். ஆனாலும் எனக்கு சமாதானம் இல்லை. கல்வி விளையாட்டுப் பொருள் அல்ல... அதுவே ஞானம், தெளிவு, நிம்மதி தரக் கூடியது"

"அம்மா... தங்களின் கருத்தை ஏற்கிறேன். செல்வமே பெரிது என கருதினால் நானும் குபேரன் ஆகியிருப்பேனே! இப்படி தவசியாக திரிய மாட்டேன். நானும் சரி, தந்தையும் சரி தெளிவாகவே உள்ளோம்"

"அப்படியானால் என்னைக் காண அவர் வந்திருக்கலாமே?" கோபமாக கேட்டாள் வாணி.

தொடரும்

## எந்த நூலை எப்போது படிப்பது?

**ம**கான்கள், முனிவர்கள் காலையில் சூதாட்டக்கதை, மதியம் பெண்களின் கதை, இரவில் திருடனின் கதையைப் படிக்கவோ, கேட்கவோ செய்வார்களாம்.

இதில் சூதாட்டக்கதை என்பது மகாபாரதம். இதை காலை நேரத்தில் படிக்க வேண்டும். வேலைக்கு கிளம்பும் போதே, சூதாட்டம், பெண் கொடுமை போன்ற தீயசெயல்களில் ஈடுபடக் கூடாது என்ற எண்ணம் வர வேண்டும் அல்லவா! அதனால் தான் இந்த ஏற்பாடு.

ராமாயணத்தை மதியம் படிக்க வேண்டும். சீதையைப் போல பொறுமையுடன் இருக்க வேண்டும் என்பதை உணர்த்தும் நூல் ராமாயணம். பெண்கள் வீட்டு பணிகளை முடித்து விட்டு, மதியம் ஓய்வெடுப்பர். இந்த நேரத்தில் தூக்கம், தொலைக்காட்சி தொடர்களை பார்ப்பதை தவிர்த்து விட்டு ராமாயணம் போன்ற நல்ல கதைகளை படிக்க வேண்டும். உள்ளம் கவர் கள்வனான கிருஷ்ணரின் கதையான ஸ்ரீமத் பாகவதத்தை இரவில் படிக்க வேண்டும். அப்படியே கிருஷ்ணரின் திருவடியை மனதில் சிந்தித்தபடி தூங்கச் செல்ல வேண்டும்.





# வரதா வரம்தா...

பக்தித்தொடர் 8

இந்திரா சௌந்தர்ராஜன்



**த**ன்னை அழைக்க பிரம்மா ஏன் வரவில்லை? என வாணி கேட்டதும் சற்றே தடுமாறினான் வசிஷ்டன். இருப்பினும், "அம்மா என்ன இது? அவர் தான் வர வேண்டுமா? நான் வரக் கூடாதா? தங்களை அழைக்கும் தகுதி எனக்கு இல்லையா?" என பதில் கேள்விகள் கேட்டான்.

வாணியும் அசரவில்லை.

"வசிஷ்டா! நீ பிரம்ம ஞானி! உனக்கு தெரியாதது ஏதுமில்லை. அப்படியிருக்க ஏன் இப்படி கேட்கிறாய்? உன் அழைப்பை ஏற்று நான் வரும் போது, 'இப்போது மட்டும் ஏன் வந்தாய்?' என பிரம்மா கேட்டால் என்ன செய்வேன்?" என பதில் கேள்வி கேட்டாள்.

"அம்மா... அப்படி தந்தை கேட்க மாட்டார். அவர் அழைக்கச் சொன்னதால் தானே வந்திருக்கிறேன்.."

"இருக்கலாம்... அதே வேளை நான் சொல்வதையும் கேட்டுக் கொள். இந்த மாபெரும் வேள்வியே சிருஷ்டி தண்டத்திற்காகத் தானே?"

"ஆமாம் தாயே... அதில் என்ன சந்தேகம்?"

"அதற்காக எதற்கு இத்தனை பெரிய வேள்வி? என்னிடம் கேட்டால் தந்து விடப் போகிறேன்."

" எடுத்துச் சென்ற நீங்களே கூட திரும்ப வந்து இந்தாருங்கள்; நான் அறியாமல் பிழை செய்து விட்டேன் எனக் கூறலாம் அல்லவா?"

"வசிஷ்டா.. நான் எங்கே அறியாமல் செய்தேன்? அறிந்து தான் செய்தேன்."

எதிர்பார்க்காத பதிலை அளித்தாள் வாணி. வசிஷ்டன் திகைத்தான்.

"என்ன வசிஷ்டா திகைக்கிறாய்? அந்த பராசக்திக்கு உடம்பில் பாதியை அளித்தார் சிவன். மகாலட்சுமிக்கு மார்பையே கொடுத்தார் விஷ்ணு. இந்த சிருஷ்டி தண்டத்தைக் கூட பிரம்மா எனக்கு கொடுக்கவில்லையே? அதனால் நானாக உரிமையோடு எடுத்துக் கொண்டேன். இது எப்படி அறியாமல் செய்த பிழையாகும்? அறிந்து செய்த என் உரிமைக்கான செயல் இது."

"தாயே... முடிவாய் என்ன சொல்கிறீர்கள்?"

"கல்விச் செல்வமே பெரியது என்றும், எனக்கான உரிமையை தந்ததாகவும் பிரம்மா ஏற்றுக் கொண்டால் அடுத்த நொடியே இந்த தண்டத்தை தருவேன். இதற்கு இத்தனை பெரிய வேள்வி எதற்கு?"

வாணி அப்படி கூறவும் 'இது சுலபத்தில் முடியும் விஷயம் அல்ல' என்ற உண்மை வசிஷ்டனுக்கு புரிந்தது.

திரும்பி வந்த வசிஷ்டன் நடந்ததை பிரம்மாவிடம் தெரிவித்தான்.

பிரம்மாவுக்கு கோபம் வந்தது.

"ஞானம் மிக்க வாணி ஏன் இப்படி அஞ்ஞானியாகி விட்டாள்? நான் என்னும் செருக்கால் தடுமாறுகிறாள். அதுவே இப்படி பேச வைக்கிறது. தகுந்த பாடம் கற்பித்தால் தான் திருந்துவாள்." என்றான் பிரம்மன்.

"தந்தையே... தாயான வாணியிடம் செருக்கும், பிடிவாதமும் இருப்பது போல நியாயமும் அவர் பக்கம் அல்லவா உள்ளது? அழியாச் செல்வம் கல்வி தானே? அதே போல் உங்களில் பாதியும் அவர்கள் தானே?"

வசிஷ்டன் கோபத்தை தணிக்க முயன்றான்.

"மைந்தா... நான் கல்விச் செல்வத்தை குறைத்து மதிப்பிடவில்லையே.. என்னில் பாதி வாணி என்பதிலும் மாற்றுக் கருத்து இல்லையே..?"

"அப்படியானால் தாயை சமாதானம் செய்வதில் என்ன தயக்கம்?"

"தொடக்கத்திலேயே செய்தேனே? ஆனால் அதை உணராத அவள் சிருஷ்டி தண்டத்தை தூக்கிச் சென்றது இப்போது இவ்வளவு தூரம் வந்துள்ளது?"

"இன்னொரு முறையும் சமாதானம் செய்யுங்களேன். அந்த வேள்வியே தேவையில்லையே.."

"இல்லை... எல்லா ஏற்பாடுகளையும் செய்த பின் வேள்வியை செய்யாமல் விட முடியாது. நாளை அது தவறான உதாரணமாகி விடும்"

"பிரம்மமும், கல்வியும் மோதுவது மட்டும் உதாரணம் ஆகாதா?"

"நான் மோதவில்லையே... வாணி தானே தொடங்கினாள்? அவள் தான் முடித்தும் வைக்க வேண்டும்"

"அப்படியானால்?"

"இந்த வேள்வி



கட்டாயம் நிகழ்ந்தாக வேண்டும். அப்படி நிகழ்வது சிருஷ்டி தண்டத்திற்காக மட்டுமல்ல. இதன் விளைவாக கால காலத்துக்கும் பல நன்மைகள் நிகழப் போகின்றன. அதனாலேயே எம்பெருமானாகிய மகாவிஷ்ணு இந்த அத்திகிரியில் இதை நடத்த கட்டளையிட்டார். இதை விட்டு நான் வாணியின் விருப்பப்படி நடப்பதால் அவளுக்கு வேண்டுமானால் சமாதானம் ஏற்படலாம். அதனால் உலகத்திற்கு நன்மை கிடைக்காது.''

''எல்லாம் சரி.... அன்னை இல்லாமல் எப்படி வேள்வி நடக்கும்? தம்பதி சமேதராக சங்கல்பம் செய்வது தானே விதி?''

''ஆம்...அதனால் என்ன? என் பத்தினிகளில் ஒருத்தியான சாவித்ரி மூலம் வேள்வியை முடிப்பேன்''

''நீங்கள் இப்படி சொல்வீர்கள் என எதிர்பார்க்கவில்லை தந்தையே...''

''எதிர்பாராத பல விஷயங்கள் நிகழும் போது நீயும் இப்படி சொல்வதில் ஆச்சரியப்பட ஒன்றுமில்லை மகனே..''

''நீங்கள் இப்படி பேசுவதே நல்லதில்லையே?''

''அனைத்து நலம் கெட்டவைகளும் கூட இந்த வேள்வியால் நலமாகி விடும்! அதை தேவலோகமும், பூலோகமும் வரும் நாட்களில் காணப் போகிறது. இது மகாவிஷ்ணுவின் திருவிளையாடல். நம் கடமையை சரியாக செய்தால் போதும். மற்றவை தானாக நிகழும். சாவித்ரியை நான் அழைத்ததாகச் சொல்லி அழைத்து வா..''

பிரம்மா கட்டளையிட சாவித்ரியும் பிரம்மபத்னியாக அங்கு நின்றாள்!

வேள்வி தொடங்கியது.. வேத மந்திரம் முழங்கின. யாக குண்டத்தில் அக்னி ஆள் உயரத்திற்கு கொழுந்து விட்டெரிந்தது. ஒட்டு மொத்த உலகின் கவனமும் அந்த வேள்வியில் மையம் கொண்டது. ஆனால் வாணியாகிய சரஸ்வதி இதை எதிர்பார்க்கவில்லை.

பிரம்மா தன் மதிப்பை உணராமல் பெரிய தவறை செய்ய தொடங்கியதாக கருதி கோபித்தாள். பிரம்மனை விட்டு விலகியதால் அவளது சக்தியில் தயை, பரிவு, கருணை முதலிய உணர்ச்சிகள் ஒடுங்கி, ஆத்திரம், கோபம், கொந்தளிப்பு போன்ற எதிர் உணர்வுகள் கொப்பளித்தன.

தன்னை விடுத்து வேள்வி நடக்கக் கூடாது என்ற முடிவுக்கு வந்தாள். அதை தடுத்து நிறுத்தி தக்க பாடத்தை கற்பிக்க நினைத்தாள்.

அதற்காக தன் யோக சக்தியில் ஒரு பகுதியை நெருப்பாக்கி அதை யாகசாலை நோக்கி ஏவினாள். இதை தன் ஞான திருஷ்டியால் உணர்ந்த பிரம்மன், ''எம்பெருமானே மகாவிஷ்ணு! வேள்விக்கு வாணி இடையூறு செய்யப் பார்க்கிறாள். தாங்கள் தான் என்னை காக்க வேண்டும்'' என பிரார்த்தித்தான். யாகசாலை நோக்கி வந்த அக்னியை கையில் பிடித்தான் விஷ்ணு. அதனால் 'தீபப்பிரகாசன்' எனப் பெயர் பெற்றான். அக்னி பயன் தராமல் போனதை அறிந்த சரஸ்வதி 'கபால அஸ்திரம்' என்ற ஒன்றை ஏவினாள். மகாவிஷ்ணுவின் நரசிம்ம சொரூபம் இதை விழுங்கி கர்ஜனை புரிந்தது.

**தொடரும்**





# வரதா வரம்தா...

பக்தித்தொடர் 9



இந்திரா செளந்தர்ராஜன்

**ந**ரசிம்ம கர்ஜனை கலைமகளாகிய வாணியை கலங்கடித்தது. இருந்தாலும் பிரம்மனின் தந்திரம் எனக் கருதியவள் தன் கோபத்தில் இருந்து இரு அசுரர்களைப் படைத்து யாகசாலை நோக்கி அனுப்பினாள். பனை போல உயரமான அவர்கள் ஒரு காலால் உதைத்தால் யாகசாலை நிர்மூலமாகும் என்னும் அளவிற்கு உக்கிரமானவர்களாக இருந்தனர். ஆனாலும் மகாவிஷ்ணு அவர்களை தன் கைகளால் அழுத்திப் பிசைந்தார். அவர்களின் உடல் தெறித்து விஷ்ணுவின் மேனி எங்கும் ரத்தம் பட்டு பவளவண்ணப் பெருமாள் என்னும் நாமத்திற்கு உரியவரானார்.

வாணி ஏமாற்றம் அடைந்தாள். கபால மாலை அணிந்து கண்களால் பயமுறுத்தும் சிவந்த நாக்கு கொண்ட காளியை ஏவினாள். ஆனால் மகாவிஷ்ணுவைக் கண்டதும் காளியின் ஆவேசம் மறைந்தது.

மகாவிஷ்ணு, "வாணியின் கோபம் நியாயமானது என அறிந்து தான் வந்தாயா? வேள்விக்கு இடையூறு செய்வது பெரும் பாவம் என உனக்கு தெரியாதா?'' எனக் கேட்க மவுனம் காத்தாள் காளி. இந்நிலையில் எட்டு கைகளுடன் விஷ்ணு காட்சியளிக்க பணிந்து வணங்கிச் சென்றாள்.

வாணியின் ஒவ்வொரு அஸ்திரமும் பொய்யாகி விடவே, தானே புறப்படத் தீர்மானித்தாள். தன் வாகனமான அன்னத்தின் மீது மீது செல்வதை விட, பெரு வெள்ளமாக அங்கே செல்வது யாகத்தை தடுக்கவும், தன் சக்தியின் வலிமையை புரிய வைக்கவும் செய்யும் என எண்ணினாள்.

இந்நிலையில் காஞ்சிபுரத்தை ஒட்டி கம்ப நதியும், பாலாறு ஓடின. அசுவமேத யாகத்திற்காக காஞ்சி வருவோர் இவற்றில் நீராடவும், பருகவும் சீரான நீரோட்டத்தை உருவாக்கியிருந்தான் வருணன்.

இரு கரைகளை தொட்டபடி ஓடிய ஆற்றங்கரையில் தேர்கள் நின்றிருக்க, மன்னாதி மன்னர்கள் நீராடி வேள்வியில் பங்கேற்க தயாராகி இருந்தனர். அந்த ஆற்றின் உற்பத்தி இடமான நந்தி மலை மீது நின்ற வாணி, மந்திர சக்தியால் பெருமழையை வரவழைத்தாள். வெள்ளப் பெருக்கால் காஞ்சி நகரத்தையே விழுங்கும் ஆவேசத்துடன் ஓடி வந்தாள்.

இதை அறிந்த பிரம்மன் தியானத்தில் அமர்ந்தபடி, "எம்பெருமானே! உன் வழிகாட்டுதலால் நிகழும் வேள்வி இது.. உனக்கான வேள்வியும் கூட.. நீயே காப்பாற்ற வேண்டும்'' என பிரார்த்தித்தான். மகாவிஷ்ணுவும் இடுப்பில் கவுபீனம் மட்டும் அணிந்து ஆற்றின் குறுக்கே படுத்தான், மகாவிஷ்ணுவே பரம்பொருள் என்பதையும், அந்த பரம்பொருளின் சக்தி வடிவுகளில் ஒன்றான வாணி அதன் ஒரு அங்கமாகவும் இருக்கும் நிலையை உணர்த்தவே வாணியும் செயல் இழந்தாள். தன் எண்ணம் நேரானதாக இருப்பினும் ஆத்திரத்தால் அனைத்து முயற்சிகளும் தோற்றதை உணர்ந்தாள்.

வாணி திருந்திட பிரம்மனின் வேள்வியும் தடைகளைக் கடந்து இனிதாக நடந்தது. வேள்விக்கான செயல்கள் அவ்வளவும் சரிவர பிசகின்றி நடந்தன.

பூமியில் அத்திகிரி என்னும் தலமானது அஸ்வமேத வேள்வியை பிரம்மதேவனே செய்ததால் வேள்வியின் பயனாக ஆதிமூலமான எம்பெருமான் அதில் எழுந்தருளினார். புதிய சிருஷ்டி தண்டத்தையும் பிரம்மனிடம் அளித்தான்.

யாக நெருப்பில் விஸ்வரூபமாக காட்சி தந்த மகாவிஷ்ணுவை சகலரும் 'ஹே நாராயணா... ஹே மாதவா...ஹே வைகுண்டா'' என அழைத்து வணங்கினர். மகாவிஷ்ணுவின் இந்தக் கோலம் கண்ட பிரம்மன் வேண்டுகோள் ஒன்றை விடுத்தான்.

"எம்பெருமானே! அபூர்வமான இந்த வேள்வியின் தனிச்சிறப்பு தங்களின் அக்னி பிரசன்னம் தான்! இதை காண தரிசித்த அனைவரும் பாக்கியசாலிகள். அதே வேளை வரும் நாட்களில் பூமியில் வாழ்பவர்கள் இந்த தரிசனம் வாய்க்காமல் போய் விட்டதாக வருந்தக் கூடும். எனவே தாங்கள் காட்சியளித்த கோலத்திலேயே கோயில் கொள்ள வேண்டும் என வரம் தர வேண்டுகிறேன்''



## மூன்று ரகசியம்

**வா**ழ்வின் அடிப்படைத் தேவைகள் கல்வி, செல்வம், வீரம். கல்வி தெய்வமாகிய சரஸ்வதிக்கு நாவில் இடம் கொடுத்தார் பிரம்மா. அதனால் அவள் ' நாமகள் ' என பெயர் பெற்றாள். படித்ததின் அடையாளம் நல்லதை மட்டும் பேச வேண்டும். கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்ற வேண்டும். ஒருவரின் படைப்பாற்றல் நன்மைக்காக மட்டும் பயன்பட வேண்டும் என்பது தான். செல்வத்திற்கு அதிபதியான மகாலட்சுமி, திருமாலின் மார்பில் குடியிருக்கிறாள். பொருள் தேடுபவன் நல்ல மனம் படைத்தவனாக இருக்க வேண்டும். இரக்கமுடன் மற்றவருக்கு உதவ வேண்டும் என்பதை லட்சுமி உணர்த்துகிறாள். வீரம் என்பது உடல் முழுதும் பரவியிருக்க வேண்டும் என்பதற்காக வீரத்தை வழங்கும் பார்வதி, தலை முதல் பாதம் வரை சிவனின் சரிபாதியாக (அர்த்தநாரி) இருக்கிறாள்.



மகாவிஷ்ணுவும் அந்த நொடியே வரதராஜனாக காட்சியளித்தான்.

இந்திரனால் அத்திகிரி உண்டாகிய போது நரசிம்மரூபம் கோயில் கொண்டது. இப்போது பிரம்மனால் அத்திகிரி வரதராஜரும் அங்கு கோயில் கொண்டார். கிருத யுகத்தில் வைகாசி மாதம் சுக்லபட்ச சதுர்த்தசி, அஸ்த நட்சத்திரத்தன்று வரதராஜ கோலம் உருவாக்கப்பட்டு ஸ்தாபிதம் செய்தனர்.

யாகத்தீயில் தோன்றியதால் சுவாமியின் திருமேனி தகித்தது. அதனை குளிர்விக்க பால், தயிர், நெய்யால் அபிஷேகம் செய்தனர். அப்போது தேவர்கள் பெருமிதப்படும் விதமாக அரிய பரிசுகளை அளித்தனர்.

விஸ்வகர்மா கஜேந்திரன் போல வெள்ளை யானை ஒன்றைத் தந்தான். இந்திரன் முத்துக்குடை தந்தான். பிரம்மனோ நவரத்தினம் பதித்த கிரீடம் கொடுத்தான். அஸ்வினி தேவர்கள் பொன்மாலை சாற்றினர். கந்தர்வர்கள் தங்கள் மகரயாழை தந்ததோடு கானம் இசைத்தனர். ஆதிசேஷன் ரத்தினமாலையை பரிசளித்தான். பிரம்மன் இறுதியாக மகாவிஷ்ணுவின் நாபிக் கமலத்திற்கு மாணிக்கக் கல் சாற்றி வரங்கள் அளிக்கும் வரதராஜனாக வழங்கினான்.

மொத்தத்தில் வாணியின் கோபத்தால் அரிய திருத்தலம் உருவானது. பிரம்மனும் சிருஷ்டி தண்டம் பெற்று படைப்புத் தொழிலை உற்சாகமாகத் தொடங்கினான்.

சரஸ்வதியாகிய வாணிக்கும் உற்சாகம் ஏற்பட்டது. பிரிந்த இருவரையும் இணைக்க விரும்பி மகாவிஷ்ணுவை பிரார்த்தித்தான் வசிட்டன். மகாவிஷ்ணுவும் எழுந்தருளி. "வாணி... உன் கோபம் தணிந்ததா?" எனக் கேட்டான்.

லட்சுமியும் அவளை அணைத்தபடி, "வாணி! வற்றாத செல்வம் உன்னுடையது தான்! பிறகே என்னுடைய நிதிகள்" என்றாள்.

"போட்டி என வந்தால் செருக்கு, பொறாமை, ஆற்றாமை, ஆவேசம் என கீழ் உணர்வுகள் வந்து விடுகிறது. அதை அடக்கி பொறுமை காப்பதே பெருமை என்பதற்கு நடந்த சம்பவங்கள் உதாரணமாகி விட்டன" என்றாள்.

"அத்திகிரி வரதனை நினைக்கும் போது லட்சுமி, வாணி இருவரும் மானிடர்களால் சிந்திக்கப்படுவீர்கள். அதைப் போல பூவுலகில் தலையானது வேள்வி என்பதும் அப்போது சிந்திக்கப்படும்" என்றான் விஷ்ணு. மேலும், "வாணி நீ இங்கு வேகவதி என்னும் பெயரில் மிருதுவாகப் பாய்ந்து கடலில் சங்கமிக்கும் உனக்கு பிரம்மனும் தன்னில் சரி பாதி என்னும் உரிமையை வழங்கி ஆசீர்வதிப்பான்" என்றான்.

வாணியும்வேகவதிநதியாகிஅத்திகிரிஎனப்படும் காஞ்சியில் பாய்ந்து கடலை அடைந்தாள். பிரம்மனும் அவளை ஆட்கொண்டான். இதனால் வேகவதி நீராடல் பிரிந்தவரை ஒன்று சேர்க்கும் என்னும் அருட்தன்மை கொண்டதாயிற்று.

அதன் பின் கிருதயுகம் முடிந்து கலிபுருஷனின் ஆட்சி தொடங்கியது. போட்டி, பொறாமை, பேராசை, துர்புத்தி, காமாந்தகம், சூது, வாது இவையே அவனது மந்திரிகளின் அம்சங்கள். இவையும் தங்களின் வேலையைக் காட்ட ஆரம்பித்தன.

தொடரும்

## ஆன்மிக புதிர்

**உங்களுக்கு பரிசு காத்திருக்கு**



**சரஸ்வதி அவதரித்த நட்சத்திரம்...**

தினமலர்
ஆன்மிக மலர்
டி.வி.ஆர்.ஹவுஸ்
தினமலர் அவென்யூ
மதுரை – 625 016

அக்.10, 2019க்குள் விடைகளை உங்கள் அலைபேசி எண்ணுடன் எழுதி அனுப்பவும்.
தலா ரூ.200 பரிசு பெற்றவர் விபரம் அக்.12, 2019 தினமலர் நாளிதழில் வெளிவரும்.



# வரதா வரம்தா...

பக்தித்தொடர் 10 இந்திரா செளந்தர்ராஜன்





இந்திரன், பிரம்மனால் வரதராஜப் பெருமாளும் அத்திகிரியும் உருவான நிலையில், எம்பெருமானின் அருளாட்சியில் அத்திகிரி பெரும் சாம்ராஜ்யமாக மாறியது. இதனால் வைணவம் தழைத்தது போலவே, சைவம், சாக்தம் இங்கே தழைத்தன!

சைவ சாக்த தழைப்பால் தான் அத்திகிரி, 'காஞ்சி' என்றும் ஆனது. காரணம் இன்றி காரியம் இல்லை என்ற பொன்மொழி உண்டு. காஞ்சி எனப்படும் காஞ்சிபுரம் உருவாகவும் காரணம் வேண்டும் அல்லவா?

அத்திகிரி என்பது மலை உள்ள இடத்தோடு முடிந்து விடுகிறது. அத்திகிரி இருக்கும் தலம் எப்படி தொண்டை மண்டலம் என்றானது? எப்படி காஞ்சிபுரம் என்றும் ஆனது என்பதைக் காண்போம்.

அத்தி வரதனின் அருளாட்சியால் இவை எல்லாம் நிகழப்பெற்றன. கைலாயத்தில் ஒரு சமயம் சிவனின் கண்களைத் கைகளால் பார்வதி மூடினாள். அப்படி மூடி மறைத்தது ஒரு முகூர்த்த காலம் ஆகும். இந்த காலத்தில் பூவுலகில் ஒரு பிரளயம் உருவாகி, பகலிலேயே இரவு உருவாகி தடுமாற்றம் ஏற்பட்டது. இயற்கைக்கும், இயல்புக்கும் மாறுபட்ட இந்த சம்பவத்தால் விலங்கினங்கள் கூக்குரல் இட்டன. மனிதர்கள் சிலர் பைத்தியங்களாகினர். தாவரங்களிடமும் தடுமாற்றம்!

சுருக்கமாகச் சொன்னால் மண்ணுலகே அழிவைக் கண்டு நடுங்கியது. சிவனின் சரிபாதியாக இருக்கும் பார்வதியின் மேனி கருத்து உருமாறினாள். அதை உணர்ந்து கண்கட்டை விடுவித்தவள், எதனால் இந்த மாற்றம் ஏற்பட்டது என்றும் கேட்டாள்.

சிவனும், "என் பார்வை மறைந்ததால் எங்கும் இருள் சூழ்ந்தது. உன் செயலால் பூவுலகிலும் தடுமாற்றங்கள்... அதனால் ஏற்பட்ட பாவத்திற்கு நீயே காரணமாகி விட்டாய்" என்றான். வருந்திய பார்வதி, "இப்பாவம் தீர செய்ய வேண்டிய பரிகாரம் என்ன?" எனக் கேட்டாள்.

"கவலைப்படாதே... நீ செய்யும் பரிகாரத்தால் புனித தலமான அத்திகிரி அதன் அடுத்த கட்ட



• தங்கத்தை விட விலை அதிகம் தண்ணீருக்கு. தண்ணீரை விட விலை அதிகம் நேரத்திற்கு!

வளர்ச்சியை காணப் போகிறது. அத்தலம் நகரமாகி மண்ணுலகின் சிறந்ததாக விளங்கப் போகிறது' என்றார் சிவன். அதற்காக பார்வதியை ஒரு குழந்தையாக்கி, பத்ராசிரமத்தில் குழந்தைப்பேறுக்காக தவம் செய்த கார்த்யாயன முனிவரிடம் சேர்ப்பித்தார். இந்தக் குழந்தையும் கருப்பாகவே இருந்தது.

முனிவரிடம் எட்டு ஆண்டுகள் வளர்ந்த பார்வதி, பின் ஒரு நாளில் பெரும் சக்தியோடு யோக தண்டம், ஜபமாலை, தீபஸ்தம்பம், இரண்டு குடம், விசிறி, சாமரம், ஏடுகள், வறுத்த பயறு வகைகள் இவற்றுடன் கங்கை ஆற்று மணல், தீர்த்தம், குடை ஆகியவற்றை பெற்று காசிக்குப் புறப்பட்டாள்.

அங்கு சென்ற வேளையில் எங்கும் வறட்சி. மக்கள் உணவின்றி மடிந்தனர். காசியை ஆண்ட மன்னனும் வருத்தத்தில் இருந்தான். மேற்கண்ட பொருட்களுடன் வந்த பார்வதி மழை பெய்யச் செய்து மக்களுக்கு அன்னம் கிடைக்கச் செய்து 'அன்னபூரணி' எனப்பட்டாள். காசிராஜனும் மகிழ்ந்தான்.

பன்னிரண்டு ஆண்டுகள் காசியில் அன்னபூரணியாக இருந்தாள் பார்வதி. சிவனின் வழிகாட்டுதலால் அங்கிருந்து அத்திகிரி நோக்கிப் புறப்பட்டாள். அத்திகிரியை அவள் அடையவும் அவளிடம் இருந்த கங்கை மணல் சிவலிங்கமாக மாறியது. ஏனைய பொருட்கள் ஒவ்வொன்றும் அதே போல மாறின! இதில் விசிறி கிளியாகவும், ஏடுகள் காமதேனுவாகவும், குடம் தீபமாகவும் மாறின. வறுத்த பயிறு முளை விட்டது. கங்கை நீர் பாலாக மாறியது!

இப்படி மாற்றங்களை ஏற்படுத்திய அத்திகிரியில் ஊசி மீது நின்று தவம் புரிய பணித்தான் சிவன். பார்வதியும் தவக்கோலம் கொண்டாள். அப்போது கிளியைக் கையில் ஏந்திக் கொண்டாள். தன் கருமை நிறம் நீங்கி அவள் மேனி பொன்னிறமாக மாறியது. பொன்னை 'காஞ்சனம்' என அழைப்பர். பார்வதி காஞ்சனையாகி, அங்கு ஒரு மாமரத்தின் கீழ் சிவலிங்கமாக கோயில் கொண்ட ஏகம்பனைக் கண்டு வழிபட்டாள்.

இந்த வேளை நாரதமுனி அங்கு வந்தான். ''நான் உபதேசம் செய்யும் மந்திரத்தை தீவிரமாக உபாசிப்பாய். அதனால் சிவன் கைலாயத்தை விட்டு இங்கு வந்து மீண்டும் உன் கரம் பிடிப்பார்'' என்றான்.

பார்வதியும் மந்திரத்தை உபாசித்தாள். அதன் தீவிரம் கைலாய சிவனைத் தாக்கவே கங்கையின் துணையால் அதைக் குளிரச் செய்தான்.

இந்த வேளையில் தான் மகாவிஷ்ணுவும் காட்சியளித்து, ''அருமை சகோதரியே... பார்வதி! உன் தவமும், பூஜையும் உன்னை மீண்டும் சிவனோடு சேர்க்கும் காலத்தை கொண்டு வந்து விட்டது'' என்றிட பார்வதியும் தான் பூஜித்த சிவலிங்க உருவத்தையே சிவனாக உணர்ந்து கட்டித் தழுவினாள். இதனால் அத்திருமேனியில் முலைத்தழும்பும், வளைத்தழும்பும் ஏற்பட்டது. அதே சமயம் பார்வதியின்(காஞ்சனையின்) பொன்வடிவம் மேலும் மிளிர்ந்தது. இதனால் காஞ்சீ என்று பெயர் பெற்றாள்.

**காமாட்சி என்னும் பெயருக்குள் மூன்று தேவியரும் உள்ளனர். 'கா' என்றால் சரஸ்வதி 'மா' என்றால் மகேஸ்வரி 'க்ஷி' என்றால் லட்சுமி.**

தன்னை 'காஞ்சீ' தழுவிய பரவசத்தை உணர்ந்த சிவனும் வரதராஜனை அடைந்து, ''நீரே எங்கள் இருவருக்கும் மணம் முடித்து வைப்பீராக'' எனத் தெரிவிக்க அவ்வாறே மணம் முடித்தார். இதன் மூலம் பார்வதி கண்களைக் கட்டிய செயல் ஒரு முடிவுக்கு வந்தது. இதன் விளைவாக பார்வதி பொன்னிறம் மிக்கவளாகி காமாட்சி என்றும் ஆனாள்.

ஒரு மாமரத்தின் அடியில் சிவன் லிங்க வடிவம் கொண்டு பார்வதிக்கு அருளியதால் ஏகாம்பரன் என்று ஆனான். காலத்தால் சக்தியின் 51 சக்தி பீடங்களில் இதுவே காமகோடி பீடமாக விளங்குகிறது.

காமாட்சி என்னும் பெயருக்குள் மூன்று தேவியரும் உள்ளனர். 'கா' என்றால் சரஸ்வதி, 'மா' என்றால் மகேஸ்வரி, 'க்ஷி' என்றால் லட்சுமி. மூவரும் ஒன்றாக இணைந்தவள் என்றும் பொருள் உண்டு.

கிருதயுகத்தில் காமாட்சியின் மீது துர்வாசர் 2000 ஸ்லோகங்களையும், திரேதாயுகத்தில் பரசுராமர் 1500 ஸ்லோகங்களையும், துவாபர யுகத்தில் தவுமியாசர் 1000 ஸ்லோகங்களையும், கலியுகத்தில் ஆதிசங்கரர் 500 ஸ்லோகங்களையும் பாடினர்.

காமாட்சிக்கு இங்கே மூன்று ரூபங்கள்! அவை ஸ்தூலம், சூட்சுமம், காரணம். பார்த்த அளவில் நமக்கு கோடி கோடியாக அருள் புரிவதால் 'காம கோடி காமாட்சி' எனப்படுகிறாள். காமாட்சி பொன்னிறம் கொண்டவளாக இருப்பதால் காஞ்சனம் என்றாகி பின்னர் 'காஞ்சி' என்று ஆனாள். தலமும் காஞ்சிபுரம் என்றானது.

இந்த பகுதியை துண்டீரன் என்பவன் ஆட்சி செய்ததால் துண்டீர மண்டலம் என்றாகி பின்னர் தொண்டை மண்டலம் என்றானது.

காமாட்சி சன்னதியில் கலியுகத்தில் ஆதிசங்கரர் ஸ்ரீசக்கரத்தை பிரதிஷ்டை செய்தார். அதற்கு முன்பு வரை உக்கிரமாக இருந்தவள், ஆதிசங்கரரால் சாந்தம் ஆனாள். மன்மதனின் கரும்பு, மலர் அம்பை இவள் தன் வசம் கொண்டாள். இதற்கு காரணம் அவனால் ஏற்படும் காம விகாரத்தை தன் அருளால் வெற்றி கொள்ள முடியும் என்பதை உணர்த்தவே!

இப்படி அத்திகிரி காஞ்சியாகி, தொண்டை நாடான நிலையில் தான் பல அபூர்வ நிகழ்வுகளும் அத்திகிரி வரதன் சன்னதியில் நடந்தன.

தொடரும்



# வரதா வரம்தா...

பக்தித்தொடர் 11



இந்திரா செளந்தர்ராஜன்



**அ**த்திகிரி வரதன் சன்னதியில் எவ்வளவோ அற்புதங்கள். அதில் ஒன்று பன்னிரு ஆழ்வார்களில் ஒருவரான திருமங்கை ஆழ்வாருக்கு நிகழ்ந்தது! ஒன்பதாம் நூற்றாண்டுக்காலம்...

பன்னிருவரில் இவர் விசித்ரமானவர். கள்ளர் குலத்தில் பிறந்து திருவாலி என்னும் சோழ நாட்டின் சிற்றரசனாக இருந்தவன் நீலன்.

இவனுக்கு வீரகேசரி, பரகாலன் என பெயர்கள் உண்டு. சிற்றரசனாக இருந்த போதிலும் இவனது வீரத்திற்காக சோழ அரசன் இவனை பெரிதும் மதித்தான். சோழப் பேரரசே மதிக்கும் போது மற்றவர்கள் மதிக்காமல் இருப்பார்களா?

மொத்தத்தில் நீலன் என்றால் சோழ மண்டலமே நடுங்கியது. இவன் வசம் 'ஆடல்மா' என்ற தேர்ந்த ஜாதிக்குதிரை இருந்தது. இதன் மீது இவனைத் தவிர வேறு யாரும் ஏற முடியாது. இதன் மீது ஏறி வீதியில் வந்தால் எட்டுத் திக்கும் விட்டுத் தெறிக்கும். ஒருநாள் வீதியுலா வந்தான். அதிலும் வெள்ளக்குளம் என்னும் வயல் சூழ்ந்த ஊரின் பக்கம்.

அந்த ஊர்க்குளத்தில் குமுதவல்லி என்றொருத்தி தோழிகளோடு நீராடிக் கொண்டிருந்தாள். அவள் குளம் ஒன்றில் தாமரைகளின் நடுவே வைத்தியர் ஒருவரால் கண்டு எடுக்கப்பட்டு வளர்க்கப்படுபவள். மிக தெய்வீகமானவள்.

பேரழகி. திருமால் பக்தை! திருமாலை அன்றி எவரையும் சிந்திக்காதவள். அவளை பார்த்தவுடன் தீராக்காதல் கொண்டான் நீலன்.

ஆனால் குமுதவல்லியோ காதலை ஏற்க மறுத்தாள். நீலன் 'தனக்கு என்ன குறை.. ஏன் என்னை மறுக்கிறாய்?' எனக் கேட்டான். குமுதவல்லியும் அதற்கான காரணத்தை கூறத் தொடங்கினாள்.

''மன்னவனே! நீ மாவீரன்... மட்டுமா? பேரழகனும் கூட... இந்த நாட்டுக்கே அரசன். ஆனாலும் நிலையானது எது நிலையற்றது எது என்பதை நீ அறிந்திருக்கவில்லை.

உன் இளமையும், வீரமும் குறிப்பிட்ட காலம் வரையில் தான். இந்த நாட்டு அரசனாகவும் எப்போதும் இருக்க முடியாது. உன்னை விட வலிமையான ஒருவன் இந்த நாட்டை கைப்பற்றினால் நீ பணிந்தாக வேண்டும்.

இப்படி நிலையில்லாத ஒரு வாழ்க்கை வாழும் எவரையும் என் மனம் விரும்பாது'' என்றாள். ''அப்படியானால் நிலையான வாழ்வு எது எனக் கேட்டான் நீலன்.

''இந்த உலகில் நிலையானவன் திருமால். அவன் மீது பக்தி கொண்டு தூய வைணவனாக வாழ்பவர்களே நித்யமானவர்கள். அவர்களே இந்த பிறவி மட்டுமின்றி மறுமையிலும் அவனை அடைந்து அழியாத இன்பத்தை அனுபவிப்பவர்கள். ஆகவே வைணவமும் அதை தன் வழியாக கொண்ட வைணவனுமே நித்யமானவன். அப்படி ஒருவனையே என்னால் ஏற்க முடியும்'' என்றாள் குமுதவல்லி.

நீலன் முதன்முதலாக வைணவம் பற்றி அறிந்தான். அவன் மீதுள்ள மோகத்தில், ''சரி!

உன் விருப்பப்படி நான் வைணவ வழி நடக்கிறேன். அப்போது என்னை ஏற்பாயா?'' என்றும் கேட்டான்.

குமுதவல்லி அதைக் கேட்டு சிரித்தாள்.

'''மன்னவனே!

வைணவனாவது வேடமிடுவது போன்றதல்ல. வேதம் புகுவது போன்றது. நீயோ வேதம் என்றால் என்னவென்றே அறியாதவன். மழைக்கு கூட கோயில் பக்கம் ஒதுங்கியிராதவன். உன்னால் வாள் கொண்டு சண்டையிட முடியும். நூல் கொண்டு பக்தி புரிவது இயலாது. எனவே விட்டு விடு'' என்றாள்.

உண்மையான வீரனிடம், 'உன்னால் முடியாது' என்று சொல்லும் போது தான் வீரம் பொங்கி எழும். 'முடித்துக் காட்டி விட்டு மறுவேலை பார்க்கிறேன்' என்பான். இந்த நீலனும் அதையே செய்தான்.

''நீ விரும்புகின்ற வைணவனாய், பெருமாளின் கழலடி போற்றும் பக்தனாய் மாறிக் காட்டுகிறேன்'' என்றான்.

''வீம்புக்கு மாறினால் போதாது. தினமும் வைணவ அடியார்களுக்கும், பசித்தவர்களுக்கும் உணவிட வேண்டும். உம்மால் முடியுமா'' என்றும் கேட்டாள்.

''சோழ வளநாடு சோறுடைய நாடு. இந்த நாட்டு அரசனைப் பார்த்தா இப்படி கேட்கிறாய்? உன் விருப்பப்படியே தினமும் சோறிடுவேன்'' என்றான். அதற்கேற்ப நம்பி என்ற வைணவ ஆச்சாரியரிடம் சென்று தீட்சையும், பஞ்ச சம்ஸ்காரமும் பெற்றான். அவனுடைய இந்த மாற்றத்தைக் கண்ட அனைவரும் ஆச்சரியம் அடைந்தனர். எல்லாம் சில காலம் தான். குமுதவல்லியை மணந்து அவன் மீதுள்ள மோகம் நீங்கவும் மாறி விடுவான் என்றனர். ஆனால் நீலன் எம்பெருமான் மீது குமுதவல்லி காரணமாக பக்தி கொண்டாலும் அது அவனை தலைகீழாக மாற்றியது.

தேன் குடிக்க வந்தவன் தேன் குடத்திலேயே விழுந்து விட்டவன் போல் ஆனான். ஒரு ஆச்சரியம் போல் குமுதவல்லியைக் கூட நீலன் பெரிதாக கருதவில்லை. அவளைத் தன் குருவாக கருதத் தொடங்கி விட்டான்.

நிகர்த்த மீசை, பரந்த மார்பு, இடையில் வாள் என குதிரை மீது ராஜ கம்பீரமாக வந்தவன் அப்படியே மாறி பன்னிரு திருமண் காப்பு, பஞ்ச கச்சம் என மாறிப் போனான். இந்த வேளையில் நாட்டில் மழையின்றி பஞ்சம் ஏற்பட்டது.

அப்போதும் அடியவருக்கு உணவளிப்பதை நிறுத்தவில்லை. இதனால் அவனது கஜானா காலியாகி கடன் வாங்கும் நிலை ஏற்பட்டது.

அதோடு சோழப் பேரரசனுக்கு வரி கட்டுவதும் நின்று போனது. பத்தாயிரம் பொன்னும், ஆயிரம் கலம் நெல்லும் சோழனுக்கு கட்ட வேண்டும். ஆனால் முடியவில்லை. இதனால் சோழன் தன் அமைச்சரை அனுப்பி வைத்தான். அமைச்சரோ நீலனின் மாறுபட்ட கோலத்தைப் பார்த்து அதிர்ந்தார்.

''நீலா என்ன இது கோலம்?''

''கோலம் அல்ல அமைச்சரே.. இது தான் என்றும் நித்யம்''

இந்த தொடரின் ஆசிரியர்
இந்திரா சௌந்தர்ராஜன் எழுதிய புத்தகங்கள்
**தெரிந்த பாரதம் தெரியாத பாத்திரம், கிருஷ்ண ஜாலம், கடவுளைக் கண்டவர்கள்** பெற 1800 425 7700 ல் தொடர்பு கொள்ளலாம்.

''நீயா இப்படி பேசுகிறாய்?''

''எம்பெருமான் கருணை உம்மை ஆட்கொண்டால் நீரும் இப்படி பேசுவீர்''

''போகட்டும், ஏன் வரி கட்டவில்லை?''

''வசூலிக்கப்படும் வரி அன்னம் அளிக்கவும், ஆலய சேவைக்குமே சரியாக இருக்கும் போது எப்படி வரி கட்ட முடியும்?''

''இது முட்டாள் தனம். இதனால் நீ நீக்கப்பட்டு வேறு ஒருவர் அரசனாக ஆக்கப்படுவார்''

''அது நான் இருக்கும் வரை நடக்காது''

''என்ன மிரட்டுகிறாயா?''

''அன்பாகத் தானே சொன்னேன்''

''நீ மாறி விட்டாய்''

''ஆம். அர்த்தமுள்ள வாழ்வு வாழத் தெரிந்த வைணவனாக மாறி விட்டேன்''

''இனி உன்னிடம் பேசிப் பயனில்லை'' என்ற அமைச்சர் திரும்பிச் சென்று சோழனிடம், ''நீலன் இப்போது அரசன் இல்லை. ஆண்டி போல இருக்கிறான். ஆனால் வீரப் பேச்சுக்கு மட்டும் குறைவில்லை'' என்றான்.

அதன் பின் பேரரசனின் கட்டளைப்படி நீலனை அமைச்சர் தந்திரமாக ஒரு கோயிலுக்கு வரவழைத்து கைது செய்தான்.

நீலன் பதறிப் போனான். ''வேண்டாம். என்னை விட்டு விடுங்கள். இது துரோகம்'' எனக் கதறினான்.

''பைத்தியக்காரா... நீ பேரரசருக்கு செய்தது துரோகமா இல்லை நான் தந்திரமாக கைது செய்தது துரோகமா?'' என வெடித்தான் அமைச்சன்.

''நான் எனக்காக ஒரு பொன் கூட செலவு செய்யவில்லை. எல்லாம் எம்பெருமான் அடியார்களுக்கு செய்த செலவே...''

''இப்போது அந்த எம்பெருமானா வந்து உனக்கு படியளப்பான்... பைத்தியக்காரனே'' ஏளனமாய் பேசிய அமைச்சன் சிரித்தான். நீலன் மனமோ துடித்தது.

''எம்பெருமானே... இது என்ன சோதனை? உன்னை ஒருவன் ஏளனமாகப் பேசுகிறான். என்னைப் பேசினால் கூட பொறுப்பேன். உன்னைப் பேசுகிறானே?'' கண்ணீர் சிந்தினான் நீலன்.

கைகள் சங்கிலிகளால் கட்டப்பட்டிருந்தன. அப்போது அந்தக் கோயிலில் நீலன் காதுகளுக்கு கேட்கும்படியாக அசரீரிக்குரல் ஒலித்தது!

''நீலா... கலங்காதே! இந்த யுகத்தில் அடியார் படும் துன்பங்களைத் தீர்க்கவே நான் வரதராஜனாக காஞ்சியில் கோயில் கொண்டிருக்கிறேன். அங்கே என் சன்னதிக்கு இந்த அமைச்சனோடு வா. மற்றவை எல்லாம் தானாக நடக்கும்!'' என்றது குரல்!

தொடரும்



# வரதா வரம்தா...

பக்தித்தொடர் 12



இந்திரா செளந்தர்ராஜன்

சன்னதியில் ஒலித்த அசரீரி குரல் நீலனுக்கு புது தெம்பை அளித்தது. அருகில் இருந்து அவனை ஏளனம் செய்த அமைச்சருக்கு அது கேட்கவில்லை. அது தெரியாமல், "அமைச்சரே! கேட்டீரா? எம்பெருமான் நம்மை காஞ்சிக்கு வரச் சொல்லி விட்டான். மற்றவை தானாக நடக்கும் என்றும் கூறி விட்டான். புறப்படுங்கள்" என்றான். அதைக் கேட்ட அமைச்சர் அதிர்ந்தார்.

"நீலா... என்ன உளறுகிறாய்? இங்கேயே உன்னோடு இருக்கும் என் காதில் ஏதும் விழவில்லையே?" என்றார்.

"அப்படியானால் நான் பொய் சொல்கிறேனா?"

"அது யாருக்குத் தெரியும்? ஒன்று மட்டும் தெரிகிறது. பக்தியால் பைத்தியமாகி விட்டாய். அதனால் தான் பெருமாளே பேசுவதாக எல்லாம் கூறுகிறாய். எந்த காலத்தில் பெருமாள் பேசியிருக்கிறார்? எங்காவது கற்சிலை பேசுமா?" அமைச்சரின் கேள்வியால் நீலனின் கவனம் எம்பெருமான் பக்கம் திரும்பியது.

"எம்பெருமானே! இது என்ன அதிசயம். உன் குரலை கேட்கவில்லை என்கிறாரே அமைச்சர். இதனால் என்னை பக்திப் பைத்தியம் என்று அல்லவா கூறுகிறார். அது உன் காதில் விழவில்லையா? பதில் சொல்" என நீலன் புலம்பினான். மீண்டும் அசரீரி குரல் கேட்டது.

"நீலா... நான் எங்கும் இருப்பதை நம்பி பக்தி செய்கிறாய். அவனோ கல் பேசாது என்ற பவுதீக விதியை நம்புபவன். எனவேதான் என் குரல் அவனுக்கு கேட்கவில்லை. நீ நம்புவதால் கேட்கிறது. அவ்வளவு தான் சூட்சுமம். கவலைப்படாதே! காஞ்சி வந்தால் கடன் தீரும் என உறுதியாகச் சொல். மற்றவை தானாக நடக்கும்" என்ற அந்தக் குரல் நீலனுக்கு மகிழ்ச்சியைத் தந்தது.

"அமைச்சரே! இப்போதும் எம்பெருமான் பதில் அளித்தான். காஞ்சிக்கு வந்தால் கடன் தீரும் என கூறினான். உமக்கு கேட்காததற்கு பவுதீக நம்பிக்கையின்மையே காரணம். இப்போதும் சொல்கிறேன். என்னோடு காஞ்சிபுரம் வாருங்கள். உங்கள் கடன் தீர்க்கப்படும்!" என்ற நீலனை வெறித்துப் பார்த்தார் அமைச்சர்.

" என்ன பார்க்கிறீர்?"

"பார்க்காமல்... எவ்வளவு பெரிய வீரன் நீ... இப்படியா முட்டாள் தனமாக நடப்பாய்?

"எது முட்டாள் தனம்?"

"உன் பேச்சு.. போக்கு.. என எல்லாம் முட்டாள்தனம் தான்!"

"வார்த்தைகளை அளந்தும் கவனமாக பேசுங்கள்"

"அப்படித்தான் பேசுவேன். நீ இப்போது குறுநில மன்னன் இல்லை. சோழநாட்டுக் கைதி. வரி கட்டாத உனக்கும் பேச்சு ஒரு கேடா என்ன?"

"அமைச்சரே! பொறுமையைச் சோதிக்காதீர். நான் காஞ்சிபுரம் செல்கிறேன். வாருங்கள். கடனை அடைக்கிறேன்"

"உன்னை நம்பி வர முடியாது. உதவுவதாக இருந்தால் பெருமாள் அதை இங்கேயே நிறைவேற்றலாமே? எதற்காக காஞ்சிபுரம் வரச் சொல்ல வேண்டும்?"

அமைச்சரின் கேள்வியிலும் நியாயம் இருந்தது. நீலன் திரும்ப பெருமாளின் பக்கம் திரும்பினான்.

"எம்பெருமானே! இதக்கு என்ன பதில் சொல்ல...?" என உருகினான்.

"பசுவின் உடல் எங்கும் பால் ஓடினாலும் மடி வழியாகத் தான் வெளிப்படும். அதுபோல நான் வரம் தரும் வரதராஜனாக உள்ள இடத்தில் தான் என்னாலும் வரம் தர முடியும். அத்துடன் நீ அங்கே என்னைக் காண இதுவரை வரவில்லை. உண்மையில் நான் உனக்காக அழைக்கவில்லை. எனக்காக அழைக்கிறேன்! உன்னைப் போல ஒரு பக்தன் பாதம் பட அத்தலம் கொடுத்து வைத்திருக்க வேண்டும்?"

"எம்பெருமானே... என்ன பேச்சு இது? நான் அத்தனை மேலானவனா? பெருமானே! நான் ஒரு பாவி. என் வாழ்நாளை கணக்கிட்டால் அதில் உன்னை மறந்திருந்த நாட்களே அதிகம். குமுதவல்லியின் கருணையால் உன்னை அறிய நேர்ந்தது. அதுவும் சில காலமாகத்தான்! அப்படிப்பட்ட என்னையா இப்படி உயர்த்திப் பார்க்கிறாய்?"

"நீலா... எத்தனை நாள் என்பதை விட, எத்தனை ஆழமான நம்பிக்கையுடன் பக்தி செய்கிறாய் என்பதே பெரிது. இப்போது கூட அந்த அமைச்சனின் பேச்சுக்கு உன் வீரத்தால் பதில் அளிக்காமல் பக்தியால் எதிர்கொள்ள நினைக்கிறாயே.. இப்படி ஒருவனே தூய வைணவன்!"

"எம்பெருமானே இது போதும் எனக்கு! இப்போதே உன்னைக் காண புறப்படுகிறேன். இந்த அமைச்சன் வந்தாலும் சரி, வராவிட்டாலும் சரி! உன் கருணையை விட எதுவும் பெரிதில்லை" என்ற படி பலம் கொண்ட மட்டும் இழுத்து கட்டிய இரும்புச் சங்கிலிகள் துண்டாகும்படிச் செய்தான். அதைக் கண்டு அமைச்சன் அதிர்ந்தான். அப்படி ஒரு ஆவேசம்!

"அமைச்சரே! என்னோடு காஞ்சிபுரம் வந்தால் நெல்லும், பொன்னும் கிடைக்கும். இல்லாவிட்டால் என்னைக் குறை சொல்லக் கூடாது" என்று சொல்லி குதிரை மீதேறி புறப்பட்டான். அமைச்சனும் பின்தொடர்ந்தான்.

காஞ்சியின் எல்லைக்கு வந்தது குதிரை. அதை விட்டு இறங்கிய நீலன் விழுந்து வணங்கினான். அத்திகிரி கோயிலை அடைந்தான். அனந்த சரஸ் குளத்தில் நீராடினான். திருநாமம் இட்டு பரம பாகவதனாக சன்னதி நோக்கி நடந்தான்.


இந்த தொடரின் ஆசிரியர்
இந்திரா செளந்தர்ராஜன் எழுதிய புத்தகங்கள்
தெரிந்த பாரதம் தெரியாத பாத்திரம்,
கிருஷ்ண ஜாலம், கடவுளைக் கண்டவர்கள் பெற
1800 425 7700ல் தொடர்பு கொள்ளலாம்.


• தங்கத்தை விட விலை அதிகம் தண்ணீருக்கு.
தண்ணீரை விட விலை அதிகம் நேரத்திற்கு!



சன்னதியில் கும்பத்துடன் நின்ற பட்டர்பிரான், நீலனை வரவேற்றார். மேள தாளம் முழங்க தூப புகையால் கமகம என நறுமணம் கமழ்ந்தது.

''என்ன இது... எனக்கா வரவேற்பு?''

''ஆம்.. எம்பெருமான் உத்தரவு''

''இந்த நாயேனுக்கா?''

''தாயான அவனுக்கு நாம் எல்லாம் சேய் அல்லவா? பேதங்கள் நமக்கே... அவனுக்கு ஏது?''

''இத்தனை இனியனை இத்தனை நாள் கண்டதில்லையே. வரதா... வரதா..'' விம்மி அழுதான் நீலன்.

''வரம் தா' என கேட்கும் முன்பே நமக்கான வரம் தருவதால் 'ம்' என்ற ஆமோதிப்புக்கு தேவை இல்லை. வரதா என்றாலே 'வரம் தா' என்றே பொருள்.

பட்டரின் பொருள் விளக்கம் கேட்டபின், கற்பூர ஆரத்தி காட்டி, ''தீயில் பூவாக பூத்தவன் திருக்காட்சியை காணுங்கள்'' என்றார். உடன் இருந்த அமைச்சனுக்கோ எல்லாம் புதிய அனுபவங்கள்!

''நடப்பதெல்லாம் அவன் செயல்தானா? இல்லை நீலனின் உணர்ச்சிப் பெருக்கா?''

அவருக்குள் கேள்வி. அப்போது அத்திகிரி அருளாளன் குரல் ஒலித்தது.

''நீலா... உன் வருகையால் அத்திகிரி பெருமை பெற்றது. உன் குறை தீர வரத்தையும் தந்தேன். இங்கு ஓடும் வேகவதி ஆற்றின் கரைக்கு செல். அங்கு நெல்லும், பொன்னும் கிடைக்கும். கடந்த காலம் மட்டுமின்றி வரும் காலத்திற்கும் சேர்த்து சோழன் கணக்கை நேர் செய். உன் பக்தியாலே அனைத்தையும் சீர்செய்''

என்ற அக்குரலைத் தொடர்ந்து சன்னதிக்குள் இருந்து கருடபட்சி ஒன்று பறந்து வழிகாட்டத் தொடங்க, சோழ அமைச்சன் சிலிர்த்தான்.

வேகவதி ஆற்றின் கரையை அடைந்த போது ஆற்று மணல் எல்லாம் நெல்லாக ஒருபுறமும், தங்கமாய் மறுபுறமும் கிடந்தது. நீலன் ஆனந்தக் கண்ணீர் விட்டான். சோழ அமைச்சனோ மண்டியிட்டபடி, ''நீலா... உன் மாற்றத்தை தடுமாற்றம் என கருதினேன். இப்போது தான் புரிகிறது இது பெரும் ஏற்றம் என்று! உன்னாலே இறை குரல் கேட்டேன். இதோ இறை பரிசையும் காண்கிறேன். வரத ராஜனே படியளக்கும் மகாராஜன் நீ! உண்மையில் நீ எங்களுக்கு கட்டுப்பட்டவனாய் இருந்தது இது வரை... இனி நாங்களே உனக்கு கட்டுப்பட்டவர்கள்... என் அடாத செயலை பொறுப்பாயாக. என்னை மன்னிப்பாயாக'' என்று ஆற்று மண்வெளியில் கதறினான் அமைச்சன்!

நீலன் காதிலோ எதுவும் விழவில்லை. வரதா... வரதா.. வரதா.. என்று அவன் மனம் அத்திகிரி அருளாளனின் திருநாமத்தைச் சொல்லியபடியே இருந்தது!

வரதன் சன்னதியில் இது போல எத்தனையோ அருட்செயல்பாடுகள். அருளை இருள் சில சமயம் விழுங்கப் பார்க்கும். அது தான் இருளின் குணம்! ஆனாலும் அருளே இறுதியில் வெல்லும். அது போல சில சம்பவங்கள்! அவை என்ன?

தொடரும்



# வரதா வரம்தா...

பக்தித்தொடர் 13

இந்திரா செளந்தர்ராஜன்



**சோழ** நாட்டின் ஆட்சிக்கு உட்பட்ட திருவாலி என்னும் நாட்டின் அரசன் தான் நீலன். பரகாலன் என்றும் அழைக்கப்பட்டவன். நீலனுக்கு காஞ்சி வரதன் அருள் செய்த விதம் அபாரமானது!

இவனே பின்னாளில் திருமங்கையாழ்வார் என்னும் திருநாமம் பெற்று பன்னிரு ஆழ்வார்களில் ஒருவராக திகழ்ந்தார். இவரது காலத்தை தொடர்ந்து கால வெள்ளத்தின் ஓட்டத்தில் காஞ்சியை எண்ணும் போது நினைவுக்கு வருபவர் ராமானுஜர். கி.பி.1017ல் காஞ்சிக்கு அருகிலுள்ள ஸ்ரீபெரும்புதூரில் பிறந்த இவர், திருவல்லிக்கேணி பார்த்தசாரதிப் பெருமாளின் அருளால் பிறந்தவர். ஆசூரி கேசவாச்சாரியார், காந்திமதி தம்பதியருக்கு தொடக்கத்தில் குழந்தைப்பேறு இல்லை. வேதவித்தகரான கேசவாச்சாரியார் திருவல்லிக்கேணிக்கு வந்த போது பெருமாளிடம் உருகி வழிபட்டதன் பயனாக ஆதிசேஷன் அம்சமாக பிறந்தவரே ராமானுஜர்!

ஸ்ரீபெரும்புதூருக்கு அருகிலுள்ள தலமான காஞ்சியே ராமானுஜரின் நடுத்தர வயது வரை பெரும் பங்கு வகித்தது. இங்கு தான் தன் 32ம் வயதில் இல்வாழ்வை வெறுத்து துறவியானார்.

ராமானுஜரை நினைக்கும் போது ஸ்ரீபெரும்புதூர், காஞ்சி, மேல்கோட்டை, திருவரங்கம் என்ற நான்கு ஊர்கள் மனதிற்குள் பளிச்சிடும். இதில் பிறந்தது ஸ்ரீபெரும்புதூரில் என்றாலும் வளர்ந்தது மலர்ந்தது சிறந்தது எல்லாம் காஞ்சியில் தான்! பிறகே 80 வயதில் கர்நாடகத்தில் உள்ள மேல்கோட்டைக்கு சென்று திருநாராயணப் பெருமாள் கோயிலைக் கட்டினார். பின் முற்றிய முதுமையில் திருவரங்கம் சென்று எஞ்சிய காலத்தைக் கழித்தார்.

ராமானுஜரின் வாழ்வில் எவ்வளவோ அரிய செயல்கள்! அதில் பிரதானமானது திருக்கோஷ்டியூரில் அவருக்கு கிடைத்த மந்திர உபதேசம்! இதற்கான விதை காஞ்சி வரதராஜனின் சன்னதியில் தான் அவருக்குள் விழுந்தது!

யாதவப் பிரகாசரை குருவாக ஏற்ற ராமானுஜர் பல துன்பத்திற்கு ஆளான போதிலும், அவற்றை ஞான பாடமாக ஏற்று மதிப்புக்கும், மாண்புக்கும் உரியவரானார். காஞ்சி மட்டுமின்றி உலகமே வணங்கும் ஒருவராகத் திகழ்ந்த ஒரு நாளில் தான் அத்திகிரி வரதனின் சன்னதியில் அந்த விதை விழுந்தது.

உருக்கமாய் வரதனை தரிசித்து விட்டு பிரகாரத்தில் நடந்த தருணம்! அவருடன் கூரேசர், திருவரங்கத்து அமுதனார், முதலியாண்டான் என்ற சீடர் குழாமும் வந்தது. அனந்த சரஸை ஒட்டி வரும் போது தென்றல் மேனியில் பட்டு சிலிர்ப்பைத் தந்தது. அங்கேயே அமர்ந்திட எண்ணம் வந்தது.

அந்த திருக்குளத்தைப் பார்த்தார் ராமானுஜர்.



இந்த தொடரின் ஆசிரியர்
இந்திரா சௌந்தர்ராஜன் எழுதிய புத்தகங்கள்
**தெரிந்த பாரதம் தெரியாத பாத்திரம், கிருஷ்ண ஜாலம், கடவுளைக் கண்டவர்கள்** பெற
1800 425 7700ல் தொடர்பு கொள்ளலாம்.

அதை கவனித்த கூரேசர்,''ஸ்வாமி..''

''சொல்...கூரேசா?''

''குளத்தை தாங்கள் காண்பதில் இனம் புரியாத உணர்வு தெரிகிறதே?''

''உண்மை தான்.. பாற்கடலுக்கு நிகரானது இந்த குளம். எல்லா புண்ணிய நதிகளிலும் நீராடுவதும், இதில் நீராடுவதும் ஒன்று என என் மனதிற்குள் ஒரு குரல் சொல்கிறது''

''அப்படியானால் அது எம்பெருமான் குரலாகத் தான் இருக்க வேண்டும்...''

''ஆம்.. ஆழ்மனம் மிக விசித்ரமானது. அதன் சக்தி அலாதியானது. ஜென்மாந்திர தொடர்புகளும், பதிவுகளும் அதனுள் தான் இருக்கிறது..''

''அரிய கருத்து. இன்று இவ்வாறு தாங்கள் சிந்திக்கக் காரணம்?''

''தெரியவில்லை.. ஒன்று மட்டும் உறுதி! இக்குளம் வருங்காலத்தில் பெரிய அளவில் சிந்திக்கப்படும். இதன் ஒவ்வொரு சொட்டிலும் அந்த நாரணனின் ஜீவ கருணை தளும்பிக் கிடக்கிறது''

''பிரம்மனால் உருவான இக்குளம் பிரம்ம சிருஷ்டிகளான நமக்கெல்லாம் மோட்சம் தருமோ?''

''தருமோ என்ற கேள்வி தவறு. தரப் போகிறது என்ற விருப்பமும் நம்பிக்கையுமே சரி...''

''ஸ்வாமி...'' இடையிட்டார் திருவரங்கத்து அமுதனார்.

''சொல்லுங்கள் அமுதனாரே..''

''இந்த குளத்துக்கு சற்றும் குறையாதது எங்கள் திருவரங்கத்து சந்திரபுஷ்கரணி''

''உண்மை... எம்பெருமானின் திவ்ய தேசத்து குளங்கள் எல்லாமே பாற்கடலுக்கு இணையானவை தான். அனைத்தையும் தரிசிக்க வேண்டும். அனைத்திலும் நீராட வேண்டும். இது என் நெடுநாள் விருப்பம்...''

''அதன் முதல்கட்டமாக திருவரங்கத்து ஆச்சாரியனான ஆளவந்தார் இடத்தில் தாங்களும் அமர்ந்து எம்மையும் நாம் சார்ந்த வைணவத்தையும் வழிநடத்த வேண்டும்''

''அது பெரும் கடமையல்லவா?''

''இன்றுள்ள நிலையில் அக்கடமையைச் செய்ய தங்களைத் தவிர யாருமில்லை''

''அப்படி எல்லாம் சொல்லாதீர்! வைணவம் தனி ஒருவனை நம்பியிருக்கும் மார்க்கம் அல்ல. அது அனைவராலும் இழுக்கப்பட வேண்டிய தேர்!''

''சரியாகச் சொன்னீர்... தேருக்கு சாரதி வேண்டும் அல்லவா? அதற்கு தங்களை தவிர யார் இருக்கிறார்கள்?''

''உங்களுக்குத் தான் என் மீது எவ்வளவு அன்பு! நீங்கள் அறியாத ஒன்றும் உள்ளது..'' என ராமானுஜர் சொல்லவும் எல்லோரும் அவரை 'எது அது?' என்பது போல பார்த்தனர்.

''எனக்கு மந்திர உபதேசம் ஆகவில்லை. அஷ்டாட்சர மந்திரத்தின் உட்பொருளை நான் இன்னமும் உபதேசிக்கப் பெறவில்லை. என்னால் எப்படி ஆளவந்தாரின் இடத்தில் அமர்ந்து அனைவரையும் நெறிப்படுத்த முடியும்?'' என்ற ராமானுஜரைப் பார்த்த அமுதனார் ''அதை உபதேசிக்கப் பெற்றவர்களை விட, தங்களின் சொல்லும் செயலும் மேலனதாக இருக்கும் போது அது ஒரு குறையா என்ன?'' என்று எதிர்க்கேள்வி கேட்டார்.

''அமுதனாரே!

வழிவழியாக உள்ள வழிமுறைகளை மதிப்பது முக்கியம். அதை விட்டு விலகுவது சுலபம். ஆனால் அது பாவம்!''

''அப்படியானால் தாங்கள் ரகஸ்யாத்ரம் அறிய தகுந்த குருவை நாடலாமே?''

''இன்று காஞ்சி வரதனிடம் என் விண்ணப்பம் அது தான். எனக்கொரு நல்வழி காட்டு என்றே வேண்டினேன்''

''ஸ்வாமி... நான் ஒரு கருத்தைக் கூறலாமா?'' அமுதனார் தான் கேட்டார்.

''தாராளமாக''

''அஷ்டாட்சர மந்திர உபதேசம் பெற்றிட கைதேர்ந்த ஆச்சாரியன் திருக்கோஷ்டியூரில் இருக்கிறார். நம்பி – அவரது திருநாமம்!

திருக்கோஷ்டியூர் சென்றால் திவ்ய தேசம் ஒன்றை தரிசித்தது போலும் ஆயிற்று. தங்களுக்கு உபதேசமும் ஆகி விடும். அதன் பின் தாங்கள் பூரணமான ஆச்சாரியனாகி விடுவீர்கள்...''

அமுதனார் சொல்லவும் ராமானுஜரின் முகம் மலர்ந்தது.

''இந்த காஞ்சி வரதன் அருளாளன் என்பதை நிரூபித்தான் பார்த்தீர்களா? பிரார்த்தித்து சிறிது நேரம் கூட ஆகவில்லை. அதற்குள் திருக்கோஷ்டியூர் திசையைக் காட்டி, ஆச்சார்ய நம்பியையும் தங்கள் மூலம் உணர்த்தி விட்டானே?''

''ஆம்... இந்த அருளாளன் அருளோடு நாளையே திருக்கோஷ்டியூர் புறப்படுவோம். பயண ஏற்பாட்டை செய்கிறேன்'' என்றார் முதலியாண்டான். ஆமோதித்தார் கூரேசர், ஆனந்தமானார் அமுதனார்... ஆனால் ஒருவருக்குமே தெரியாது. திருக்கோஷ்டியூர் பயணம் கால காலத்திற்கும் ஞானப்பாடமாக போகிறது என்று!

**தொடரும்**

## அத்திவரதரை பாடிய பக்தர்

கடந்த இரண்டு இதழ்களில் வெளிவந்த அத்திவரதர் ஸ்லோகத்தை இயற்றியவர் ஆயுர்வேத மருத்துவர் அய்யப்பன் காரியாட். நாராயணீய சகஸ்ர நாமம் எழுதிய இவர், தமிழ் வளர்ச்சித்துறை உதவியுடன் திருக்குறள், நீதி இலக்கியங்களை மலையாளத்தில் மொழி பெயர்த்துள்ளார். பகவத் கீதையின் ஸ்லோக அமைப்பில் உள்ள அத்திவரத ஸ்தோத்திரத்தின் பொருளை படிக்க பலன் கிடைக்கும். இவரை தொடர்பு கொள்ள 94444 87160

# வரதா வரம்தா...

பக்தித்தொடர் 14

இந்திரா சௌந்தர்ராஜன்

## திருக்கோட்டியூர்!

இதன் ஒருபுறம் சேது நாடு, இன்னொரு புறம் பாண்டிய நாடு...ஊடாக செட்டி நாடு...இன்றிருப்பது போன்ற இந்த பிரிவு நிலை ராமானுஜர் வாழ்ந்த காலத்தில் இருக்கவில்லை. பாண்டியர்களாலும், சிலகாலம் பாண்டியர்களை அடக்கி ஆண்ட சோழர்களாலும் ஆளப்பட்ட பகுதியாக இருந்தது.

இதன் புராண வரலாறு ஆச்சரியம் தருவதாகும். ஒருவகையில் காஞ்சியின் அத்திகிரி கோயிலுக்கு மிக இணையானது. அத்திகிரியின் முதல் மூர்த்தம் நரசிம்மம்! அந்த கோலத்தை ஹிரண்யனை அழிக்கச் செல்லும் முன் தேவர்களுக்கு இங்கே தான் மகாவிஷ்ணு காட்டினார்!

'ஹிரண்ய சம்ஹாரத்திற்கு எது தான் வழி?' என மும்மூர்த்திகளும், தேவர்களும் கூடி வழி கண்ட இடம்! ஹிரண்யனாலேயே நெருங்க முடியாத இடமாகவும் இது இருந்தது! காரணம் கதம்ப மகரிஷி! கதம்பர் வைகுண்ட பதவிக்காக தவத்தில் மூழ்க விரும்பினார். ஹிரண்யனுக்கு இது தெரிந்தால் தவம் புரிய விடமாட்டான். எனவே, அவன் நெருங்க முடியாத பகுதியாக தன் தவசக்தியால் இப்பகுதியை மாற்றவே, தேவர்களும் இங்கு ஒன்று சேர வசதியானது.

அதனாலேயே மூவர், தேவர் என சகலரும் ஒன்று கூடும் விசேஷம் இங்கு நிகழ்ந்தது. 'ஹிரண்யனை அழிப்பேன்; கவலை வேண்டாம்' என மகாவிஷ்ணு வரம் அளித்து வதமும் செய்தார்.

வதங்களில் ஹிரண்ய வதம் இங்கு சிந்திக்கதக்கது. தேவ சக்தி, அசுர சக்தி என இரண்டுக்குமான தன்மையை ஹிரண்ய வதம் மூலம் துல்லியமாக அறியலாம். இதில் தேவசக்தியின் விஸ்வரூப உருவமே நரசிம்மம். அதன் முதல் வெளிப்பாடு அத்திகிரியில் என்றால், அதன் திருக்காட்சி திருக்கோட்டியூரில் தான் நிகழ்ந்தது.

இதன் எதிரொலியாக எட்டுத்திக்கும் இத்தலப் பெருமை விளங்க வேண்டும் எனக் கருதி, எட்டு அங்கம் கொண்ட அஷ்டாட்சர விமானம் மயன் மற்றும் விஸ்வகர்மாவால் நிறுவப்பட்டது. இந்த எட்டு அங்கத்திலும் எம்பெருமானின் அஷ்டாட்சர சாரமும் கோபுர





• தங்கத்தை விட விலை அதிகம் தண்ணீருக்கு. தண்ணீரை விட விலை அதிகம் நேரத்திற்கு!

வடிவில் நிலைநிறுத்தப்பட்டது. இதன் கீழே எம்பெருமானும் 'நின்ற அமர்ந்த கிடந்த நடந்த' கோலங்களைக் காட்டி எழுந்தருளினார்.

ஸ்ரீமகாவிஷ்ணுவுக்குள் தானும் அடக்கம் என்பதை உணர்த்துவது போல சுயம்புவாக ஒரு லிங்கமும் தோன்றியது.

ஞானகாரகனான கேதுவும், யோககாரகன் ராகுவும் இங்கே நரசிம்ம கோலம் அருகில் தங்களை நிலைநிறுத்திக் கொண்டனர். மொத்தத்தில் இக்கோயில் பல சான்னித்யங்களின் கலவை. அதனாலேயே இங்கு விளக்கேற்றி மன இருள் அகற்றி இகபர வாழ்வுக்கென கேட்பதை ஸ்ரீமன் நாராயணன் அளிக்கிறான்.

இதை எல்லாம் நன்கறிந்த ராமானுஜர் திருக்கோட்டியூருக்கு சீடர்களுடன் வந்தார்.

'விசேஷமான மண்...காஞ்சிக்கு இணையான மண்... தேவ சான்னித்யம் மிகுந்த மண்... அஷ்டாட்சர ஒளி திகழும் மண்...'. எனவே திருக்கோட்டியூர் எல்லை தொட்டதும் விழுந்து வணங்கினார். ஒரு சிட்டிகை மண் எடுத்து தலை மீது இட்டுக் கொண்டார். அப்படியே சன்னதிக்கு சென்று சவுமிய நாராயணனாக காட்சி தரும் பெருமாளை 'ஸ்ரீதேவி, பூமாதேவியுடன் வணங்கி மகிழ்ந்தார். இறையருளுக்கு பாத்திரமாயிற்று. இனி அஷ்டாட்சர மந்திர உபதேசமும், ரகஸ்யார்த்ர விளக்கமும் தான் மீதம்! அதற்காக பூ, பழங்களுடன் ஆச்சார்ய நம்பியின் இல்லம் சென்றார். அவர் நித்ய வழிபாட்டில் இருந்தார். பாசுரங்கள் பாடுவது காதில் விழுந்தன. மணி சப்தம் முதல் சுகந்த வாசம் வரை எல்லாம் புதிய உலகிற்கு வந்தது போன்ற உணர்வை ராமானுஜருக்கு ஏற்படுத்தின. உடனிருந்த கூரேசர், அமுதனார், முதலியாண்டான் ஆகியோரும் மகிழ்ந்தனர்.

விசேஷமான மண்... காஞ்சிக்கு இணையான மண்... தேவ சான்னித்யம் மிகுந்த மண்... அஷ்டாட்சர ஒளி திகழும் மண்...'. எனவே திருக்கோட்டியூர் எல்லை தொட்டதும் விழுந்து வணங்கினார்.

தங்களுக்கும் உபதேசம் கிடைக்கப் போகிறது. குருவுக்கேற்ற உற்ற சீடர்களாக திகழப் போகிறோம் என எண்ணினர்.

நெடுநேரம் கழிந்தது. ஆச்சார்ய நம்பி அவர்களை அழைத்தார். 'யார் வந்திருப்பது?' எனக் கேட்டார். அவரது திருமுன் பூக்கள், பழங்களை வைத்தபடி, 'மந்திர உபதேசம் பெற நான் ராமானுஜன் திருக்கச்சியில் இருந்து வந்திருக்கிறேன்' என்றார்.

ஆச்சார்ய நம்பியிடம் அந்தக் குரலைக் கேட்டதும் 'கேள்விப்பட்ட பெயராக உள்ளதே' எனத் தோன்றியது. சற்று மவுனம் காத்த நம்பி, "அப்படியாயின் அப்புறம் பார்க்கலாம். இப்போது அதற்கான காலமில்லை" என்றார். ராமானுஜர் முகத்தில் லேசான அதிர்ச்சி.

"உனக்குத் தான் சொன்னேன் – அப்புறம் பார்க்கலாம் புறப்படு" என அதிர்ந்தார் நம்பி. சீடர்களும் அவரை எதிரொலித்தனர்.

இந்த தொடரின் ஆசிரியர்
இந்திரா சௌந்தர்ராஜன் எழுதிய புத்தகங்கள்
தெரிந்த பாரதம் தெரியாத பாத்திரம்,
கிருஷ்ண ஜாலம், கடவுளைக் கண்டவர்கள் பெற
1800 425 7700ல் தொடர்பு கொள்ளலாம்.

சோகமாக ராமானுஜரும் புறப்பட்டார்.

"என்ன இப்படி சொல்லி விட்டார்?" என ஆரம்பித்தார் முதலியாண்டான்.

"ஏதாவது காரணமிருக்கும். ஆச்சார்ய புருஷர்கள் காரணமின்றி சொல்ல மாட்டார்கள். இனி இது குறித்து பேச வேண்டாம்" என ராமானுஜர் வாய்ப்பூட்டு போட்டார்.

அதன் பின் காஞ்சி சென்று சேர்ந்திட ஆறு நாள் ஆனது. வழியில் திருக்கோயிலூர் உள்ளிட்ட திவ்ய தேசங்களை சேவித்தனர்.

அதன்பின் ஒரு நல்லநாளில் காஞ்சி வரதனை வணங்கி விட்டு ராமானுஜர் முன்போல மீண்டும் புறப்பட்டார். ஆச்சார்ய நம்பி தரிசனமும் ஆனது. அதே பதிலைத் தான் அப்போதும் கூறினார். சிலநாட்கள் கழித்து சந்திப்போம் என திருக்கோட்டியூரிலேயே தங்கினார். ஒருநாள் குளத்தில் நீராடி அஷ்டாங்க விமான தரிசனத்துடன் எம்பெருமானின் திருக்கோலங்களை எல்லாம் தரிசித்து முடித்து சென்றார். இப்போதும் அதே பதில் தான்!

"யார் வந்திருப்பது?"

"நான் ராமானுஜன் வந்திருக்கிறேன்"

"அப்படியாயின் அப்புறம் பார்க்கலாம்"

அப்புறம் என்றால் எப்போது? ராமானுஜர் வருந்தினாலும் 'காரணமில்லாமல் காரியமில்லை' என்பதிலும், இந்த தேவபூமியில் எனக்கும் என்மூலம் உலகுக்கும் எதையோ உணர்த்த எம்பெருமான் விரும்புகிறான் என்பதில் உறுதியாக இருந்தார்.

"ஆச்சார்ய நம்பிக்கு உங்கள் மீது பொறாமையோ என்னவோ? தங்களை அறிந்த அளவுக்கு மக்கள் அவரை அறியவில்லையே அது கூட காரணமாக இருக்கலாம்" என்றனர். இதைக் கேட்ட ராமானுஜர் மிக வருந்தினார்.

இதற்காகவாவது மந்திர உபதேசம் நடந்து விடக் கூடாதா? என ஏங்கினார். 17 வது முறையாக அவர் சென்ற போது நம்பியின் பதிலில் சிறு மாற்றம். 'அப்புறம் பார்க்கலாம்; இது காலமில்லை எனச் சொல்லாமல் 'நான்' செத்தபிறகு வா எனக் கூறினார்.

நான் செத்த பிறகு என்றால் ஆச்சார்யநம்பி இறந்த பிறகு என்று பொருளா? அப்படியாயின் வரச் சொல்ல மாட்டாரே?

நான் செத்த பிறகு என்றால்...?

தொடரும்



# வரதா வரம்தா...

பக்தித்தொடர் 15



இந்திரா சௌந்தர்ராஜன்

**நான்** செத்த பிறகு வா எனச் சொன்ன திருக்கோட்டியூர் நம்பியின் வார்த்தைகளைக் கேட்டு ராமானுஜர் வருந்தினார். "ஆச்சார்யன் இப்படி சொல்லலாமா? இப்படி அலைக்கழிக்கவும் செய்யலாமா? இதற்கு... உனக்கு உபதேசம் செய்ய இஷ்டமில்லை என்று கூறலாமே!" என சீடர்களான கூரேசரும், முதலியாண்டானும் வருந்தினர்.

குருவின் வருத்தத்தை தங்களின் வருத்தமாக கருதினர். உபதேசத்திற்காக வேறொரு ஆச்சார்யனைப் பார்க்கலாமா? ஸ்ரீரங்கத்தில் யாராவது இருப்பர் என்றும் அவர்களிடம் எண்ணம் தோன்றியது.

"ஒரு முறையா? இரு முறையா? பதினேழு முறை..!"

காஞ்சி எங்கே இருக்கிறது – இது சோழநாடு என்றால் காஞ்சி தொண்டை நாடு. இதை எண்ணியாவது இந்த நம்பியின் மனம் இரங்காதா?"

இப்படி எல்லாம் சீடர்கள் கேட்டனர்.

ஆனால் ராமானுஜர் தெளிவுடன், "அன்புச் சீடர்களே! அமைதியாக இருங்கள். எந்த ஒரு ஆச்சார்யனும் கருணை இல்லாமல் இருக்க மாட்டார்கள். அதிலும் எம்பெருமானை நெஞ்சில் நிறுத்தி அவனே எல்லாம் என எண்ணுபவர்கள், காண்பவர்களிடமும் அவனையே காண்பர்? அப்படி இருக்க என்னிடம் பாரபட்சமாக நடப்பாரா? விருப்பம் இல்லை என்றால் தான் எடுத்த எடுப்பில் மறுத்து விடுவாரே....என்னிடத்தில் தான் ஏதோ பிழை! அதனால் தான் உபதேசம் தள்ளிப் போகிறது" என தன் மீதே குறை கூறினார். அதைக் கேட்ட திருவரங்கத்தமுனார், 'எம்பிரானே! தங்களின் திருஉள்ளம் பொன்னால் ஆனதோ?

இத்தனை தடவைக்கு பின்னும் எப்படி ஆச்சார்யனை மதிக்க முடிகிறது. எங்களால் முடியவில்லையே" என்றார்.

"அமுதனாரே! குரு என்பவர் எப்படி வேண்டுமானாலும் பாடம் நடத்தலாம். இப்படித் தான் நடத்த வேண்டும் என அவரை வற்புறுத்தக் கூடாது. ஒரு தாயானவள் பசியறிந்து குழந்தைக்கு சோறு ஊட்டுவது போல குருவும், சீடனின் பக்தி, ஒழுக்கத்தை அறிந்து ஞானம் ஊட்டுகிறார். எந்த நிலையிலும் ஆச்சார்யனை விமர்சனம் செய்யாதீர்கள். இது ஒரு வைணவன் பின்பற்ற வேண்டிய முக்கிய நெறிமுறை" என அமுதனாரைத் திருத்தினார். பின் பதினெட்டாம் முறையாக ஆச்சார்ய நம்பி இல்லம் நோக்கி செல்லும் போது மனதுக்குள் உருக்கமான ஒரு பிரார்த்தனை.

"எம்பெருமானே!

என் பிழை எது என நீ காட்டியருள வேண்டும். அதை நான் உணர்ந்து நீக்கிய பின் உபதேசத்தை பெற்றிட வேண்டும். காஞ்சிக்கும், திருக்கோட்டியூருக்கும் அலைய முடியாத நிலையில் இதை நான் வேண்டவில்லை. ரகஸ்யார்த்தம் உணர்ந்து உன்னை தியானிக்கும் காலம் வீணாகிறதே என்ற வருத்தத்தில் தான் பிரார்த்திக்கிறேன்" என்றார். வழக்கம் போல கூரேசரும், முதலியாண்டானும், அமுதனாரும் உடன் சென்றனர்.

ஆச்சார்யன் மனைக்கு செல்லும் போது அங்கு ஒருவர் காத்திருந்தார். தோற்றப்பொலிவு மிக்க அவரது காதில் வைரத்தோடு, கையில் வைர மோதிரம் மின்னியது. பட்டுக் கச்சமுடன் பன்னிரு காப்பும் அணிந்து திருச்சன்னதியில் இருந்து பெருமாளே எழுந்து வந்தாற் போலிருந்தார். மேனி எங்கும் நறுமணம். ராமானுஜர் பணிவுடன் வணங்க அவரிடம் ஒரு இதமான புன்னகை. பின் உரையாடல் தொடங்கிற்று.

"தாங்கள்?"

"நான் ஒரு ஸ்ரீவைஷ்ணவன். ஆச்சார்ய தரிசனத்திற்காக வந்திருக்கிறேன்"

"உங்கள் ஊர்?"

"இதே ஊர் தான்.."

"பெயர்?"

"சவுமிய நாராயணன்"

"எம்பெருமானின் திருப்பெயர்"

"ஆம்..என் பெயர் தான் எம்பெருமானின் பெயரும்..." பதிலுக்கு அவர் கூறியதில் சன்னமாய் ஒரு செருக்கு. அது சீடர்களை வருந்த வைத்தது. ஆனால் சவுமிய நாராயணனிடமோ ஒரே புன்னகை மயம். மனதிற்குள் ஒரு கீர்த்தனை ஓடுகிறதோ என்னவோ – உதட்டில் முணுமுணுப்பு. அப்படியே "நீர் தான் அந்த விடாக்கண்டரோ?" என்றும் கேள்வி.

திகைத்த ராமானுஜர், "என்னைத் தாங்கள் அறிவீரா?"

"தினமும் தான் திருச்சன்னதியில் பார்க்கிறேனே?"

"ஆனால் நான் உங்களைப் பார்த்ததில்லையே..?"

"அப்படியானால் உங்கள் கவனம் எம்பெருமானின் மீது இல்லை. வேறு எதன் மீதோ என நினைக்கிறேன்..."

"ஐயோ என்ன இது.... வருவதே

இந்த தொடரின் ஆசிரியர்
இந்திரா சௌந்தர்ராஜன் எழுதிய புத்தகங்கள்
**தெரிந்த பாரதம் தெரியாத பாத்திரம், கிருஷ்ண ஜாலம், கடவுளைக் கண்டவர்கள்** பெற
1800 425 7700 ல் தொடர்பு கொள்ளலாம்.



• தங்கத்தை விட விலை அதிகம் தண்ணீருக்கு. தண்ணீரை விட விலை அதிகம் நேரத்திற்கு!



எம்பெருமானின் திவ்ய தரிசனம் பெறத் தானே?''

''அப்படியானால் என்னைத் தெரிந்திருக்க வேண்டுமே?''

''எங்கேயோ தவறு நடந்திருக்கிறது. இம்முறை வரும் போது பார்க்கிறேன்''

''நானும் பார்க்கிறேன்''

அந்த சவுமிய நாராயணன் பேச்சு ராமானுஜரை ஆழம் பார்ப்பது போலவே இருந்தது. அப்போது உள்ளே ஆச்சார்ய நம்பியிடம் இருந்தும் அழைப்புக்குரல்.

''யார் வந்திருப்பது?''

''அடியேன் சவுமிய நாராயணன் வந்திருக்கிறேன்''

''அப்படியாயின் உள்ளே வரலாம்'' என்றவுடன் அவரும் உள்ளே சென்றிட ராமானுஜரிடம் ஒருவித திகைப்பு. கூரேசர் கவனித்துக் கேட்டார்.

''எம்பிரானே... எதனால் இந்த திகைப்பு?''

''அவர் என்ன சொல்லிச் சென்றார் என கவனித்தீரா?''

'' கவனிக்கவில்லையே...''

''இவர் உத்தம வைஷ்ணவர். என்ன பணிவு.. என்ன பணிவு!''

ராமானுஜர் சொல்வதைக் கேட்ட சீடர்கள் மூவரும் திகைத்தனர்.

''இவரிடமா பணிவு... ஒரே அலட்டல்... எப்படி இவரை பணிவானவர் எனக் கருதுகிறார் நம் குருநாதர்!'' என ஆராயத் தொடங்கினர்.

அதற்குள் சவுமிய நாராயணனும் திரும்ப வந்து சிரித்தபடியே ''பார்த்து நடந்து கொள்ளுங்கள்'' என்றார். அதில் பல உட்பொருள்.

''நிச்சயம் சுவாமி. உங்களிடம் தான் ஆச்சார்ய நம்பி கடந்த முறை பேசியதற்கான பொருளை முழுமையாக உணர்ந்தேன். உங்களுக்கு என் நன்றி''

''நன்றி கிடக்கட்டும் எதை உணர்ந்தீர்? அதைச் சொல்லும்'' என்றார் அவர்.

''நான் என்ற செருக்கு மிக்க சொல்லின் கசடு தெரியாமல் அதைப் பயன்படுத்தி வந்த எனக்கு இதமான 'அடியேன்' என்ற பதத்தை காட்டி அருளினீர். எம்பெருமானே உம் வடிவில் வந்ததாக கருதுகிறேன்'' என்றார்.

''புரிய வேண்டியது புரிந்து விட்டது'' என சிரித்தபடி சென்றார் அவர்.

''அடடா... நன்றி சொல்ல மறந்தோமே'' என எட்டிப் பார்த்தார் ராமானுஜர்.

அவரோ மாயமாகி விட்டார். ஒரே வியப்பு ராமானுஜருக்கு... இந்நேரம் பார்த்து ஆச்சார்யனின் குரல்.

''யார் வந்திருப்பது?''

''அடியேன் திருக்கச்சி ராமானுஜன் சுவாமி''

''அப்படியாயின் உள்ளே வா...''

ஆச்சார்யனின் குரல் ராமானுஜரை சிலிர்க்கச் செய்தது. இது நாள் வரை இல்லாத அழைப்பு!

'நான் செத்த பிறகு வா' எனக் கூறியது இதற்கு தானா? நான் என அவர் தன்னைக் குறிப்பிடவில்லை. 'நான்' என்ற மமகாரம் மிக்க சொல்லைக் கூறியுள்ளார். இந்த நான் என்ற சொல்லை எந்த தொனியில் சொன்னாலும் அது அகங்காரச் சொல்லே! ஒரு துறவி முதலில் துறக்க வேண்டியது 'நான்' என்பதைத் தான். இது புரியாமல் இதுநாள் வரை சிரமப்பட்டு விட்டேனே...?''

ஒரு கோணத்தில் இது சிறிய விஷயம் தான். இன்னொரு கோணத்திலோ இதுவே பெரிய விஷயம்!

இது விஷயம் மட்டுமல்ல... விஷமும் கூட! இன்று அந்த விஷம் நீங்கியது. அந்த இடத்தில் 'அடியேன்' என்ற பணிவிலும் பணிவாக இதமான சொல் சேர்ந்தது. ராமானுஜரும் அடியேன் ராமானுஜராக ஆச்சார்ய நம்பிகள் முன் கூப்பிய கைகளுடன் சென்றார்.

**தொடரும்**



# வரதா வரம்தா...

பக்தித்தொடர் **16**

இந்திரா சௌந்தர்ராஜன்



**தன்** முன்னால் வந்து நின்ற ராமானுஜரை ஆச்சார்யநம்பி உற்று பார்த்தார். அதில் பலவித அர்த்தங்கள்... கூடவே 'உன்னை அலைக்கழித்தது எதனால் என புரிந்ததா?'' என்றும் ஒரு கேள்வி.

ராமானுஜரோ கூப்பிய கைகளும், கனிந்த முகமுமாக பார்த்தார்.

''ராமானுஜா''

''சுவாமி''

''சந்தோஷம் தானே?''

''மிகுந்த சந்தோஷம் சுவாமி''

''உன்னை மிக அலைக்கழித்து விட்டேனோ?''

''இல்லை சுவாமி... என்னுள் பொறுமையை வளரச் செய்துள்ளீர்! என்னுள் இருந்த 'நான்' என்னும் அழுக்கை நீக்கினீர். இன்று தான் அடியேன், பூரண வைஷ்ணவனாக இருக்க சீர்படுத்தினீர்.''

''நேர்மறையாகப் பேசுகிறாய். விடாமுயற்சியும் உன்னிடம் உள்ளது. குருபக்தியால் நன்கு கனிந்து விட்டாய். உன்னோடு வந்த சீடர்கள் எங்கே?''

''வெளியே காத்திருக்கின்றனர். அழைக்கட்டுமா?''

''அவசியம் இல்லை. அவர்கள் தாங்களாகவே வந்தவர்களா? இல்லை உனக்காக வந்தவர்களா?''

''எனக்கு துணையாக வந்தார்கள் சுவாமி!''

''உபதேசம் பெற தன் பொருட்டு தான் வர வேண்டும்''

''புரிந்தது சுவாமி''

''உபதேசிக்கும் முன் சில கருத்துக்களை கூறப் போகிறேன். கேட்கச் சித்தம் தானே?''

''சித்தமா... பாக்கியம் சுவாமி''

''நான் என்னும் எண்ணம் துளியும் இல்லாதவனே வைஷ்ணவன். சுயநலச் சிந்தனைக்கு அவனிடம் இடமில்லை. நாம், நமது என்னும் பரந்த நோக்கமே முக்கியம் புரிகிறதா?''

'' புரிகிறது சுவாமி''

''நித்ய தியானம், நித்ய சேவை, நித்ய பாராயணம் துளியும் தவறக் கூடாது''

''உத்தரவு சுவாமி''

''ஆச்சார்ய ஆராதனை, பாகவத சேவையும் மிக முக்கியம்''

'' உத்தரவு சுவாமி''

''ரகஸ்யாத்ரம் அறிந்த நிலையில் அதை உயிராக காத்திட வேண்டும்''

''நல்லது சுவாமி''

''நான் இப்போது உபதேசம் செய்யப் போகிறேன். மண்டியிட்டு கைபொத்தி உன் செவிகளை மட்டும் கொடு பார்ப்போம்''

ராமானுஜரும், ஆச்சார்ய நம்பியின் கட்டளைப்படி செயல்பட்டார். ரகஸ்யாத்ர விளக்கமும், மந்திர உபதேசமும் பிறர் அறியா வண்ணம் தொடங்கியது. ஆச்சார்ய நம்பியின் ஆசனத்திற்கு அருகில் குத்துவிளக்கு ஒன்று எரிந்தது.

வெளியே முதலியாண்டானும், கூரேசரும், அமுதனாரும் மனம் தவித்தபடி இருந்தனர். 'ஒருவேளை இம்முறையும் பிரச்னையா? என்ன என்றே தெரியவில்லையே' என எம்பெருமானை பிரார்த்திக்க உள்ளே உபதேசம் முடிந்திருந்தது.

ராமானுஜர் முகத்தில் புளகாங்கிதம். தன் தெய்வீகத் திருமேனியை எழுப்பி ஒருமுறைக்கு நான்கு முறை ஆச்சார்யனின் காலடியில் விழுந்து வணங்கி கண்ணீரை துடைத்தார். ஆச்சார்ய நம்பியும், ''ராமானுஜா! நீ இந்த நொடி முதல் பூரண வைஷ்ணவனாகி விட்டாய். எம்பெருமானின் திருவருள் உனக்கு சித்திக்கட்டும். இப்போது நான் கட்டாயமாக கூற வேண்டிய ஒன்றும் உள்ளது''

> உங்களுக்கு மட்டுமல்ல... ஊருக்கே உபதேசிக்கப் போகிறேன். அஷ்டாட்சரம் ஆசைப்பொருள் அல்ல.. பெட்டியில் பூட்டி வைக்க... அது உயிர்களின் விடுதலைக்கான விமோசனம். அது பொதுவாக இருக்க வேண்டும்

''சொல்லுங்கள் சுவாமி''

''நீ குடும்பஸ்தனாக இருந்தும் அதிலிருந்து விலகி சன்யாசி ஆனவன். ஆன போதிலும் பூரண வைஷ்ணவனாக இன்றே ஒரு ஆச்சார்ய நிலைக்கு தயாராகி விட்டாய். உபதேசித்த எதையும் நான் இருக்கும் வரை பிறருக்கு உபதேசிக்க கூடாது.''

ராமானுஜரிடம் பெரும் அதிர்ச்சி. இருந்தும் வெளிக்காட்டாமல் ''ஏன் சுவாமி அப்படி?'' என்றார்.

''ரகஸ்யார்த்தம், மந்திர உபதேசம் இரண்டும் நாராயணப் பதம் அளிப்பவை. மோட்ச கதிக்கும் மேலானது அது! அதை அனைவருக்கும் உபதேசித்து மலிவாக்கி விடக் கூடாது. பெரும் முயற்சி கொண்டவர்களுக்கே உபதேசிக்க வேண்டும்''

''இப்படித்தான் செயல்படுத்த வேண்டும் என பிரமாணம் உண்டா சுவாமி?''

''இல்லை. இது ஆச்சார்யன் திருவுள்ளம் தான்''

**இந்த தொடரின் ஆசிரியர்**
**இந்திரா சௌந்தர்ராஜன் எழுதிய புத்தகங்கள்**
**தெரிந்த பாரதம் தெரியாத பாத்திரம்,**
**கிருஷ்ணா ஜாலம், கடவுளைக் கண்டவர்கள்** பெற
1800 425 7700ல் தொடர்பு கொள்ளலாம்.



• தங்கத்தை விட விலை அதிகம் தண்ணீருக்கு. தண்ணீரை விட விலை அதிகம் நேரத்திற்கு!



"என் சீடர்களுக்காக, அவர்கள் காட்டும் விசுவாசத்திற்காகக் கூட உபதேசிக்க கூடாதா?"

"கூடவே கூடாது"

"மீறினால்?"

"இது என்ன கேள்வி... நரகம் செல்வாய். ஆச்சார்யன் வாக்கு என்பது வரம் போன்றது. அப்படியே நடக்கும்"

"நல்லது சுவாமி"

"சென்று வா...சொன்னது நினைவில் இருக்கட்டும்"

நம்பி விடை தந்திட வெளியே வந்தார் ராமானுஜர். காத்திருந்தவர்கள் ஓடி வந்து "தவறாக ஏதும் நடக்கவில்லையே?" எனக் கேட்டனர்.

"ரகஸ்யார்த்தம் முழுதும் அறிந்து மந்திர உபதேசம் பெற்றேன்!"

"அற்புதம்.. ஆனந்தம்.. நாங்கள் சென்றால் எங்களுக்கும் உபதேசம் கிடைத்திட தடையில்லை எனக் கூறுங்கள்"

"மன்னிக்க வேண்டும். எனக்காக வந்தவர்கள் நீங்கள். உபதேசம் பெற்றிட அதன் பொருட்டே முயற்சிக்க வேண்டும்"

"உங்களைப் போல நாங்களும் அலைய வேண்டுமா?"

"அவசியமில்லை" அதைக் கேட்டு ஆச்சர்யமுடன் பார்த்தனர்.

"அப்படியானால்...?"

"என்னை நம்பி வந்த உங்களை கைவிட மாட்டேன். ஆச்சார்ய உபதேசம் பெற்றதாலும், சன்னியாசியாக வாழ்வதாலும் உபதேசிக்கும் தகுதி எனக்கு உண்டு"

"வேறென்ன வேண்டும். நாங்கள் பாக்கியசாலிகள்"

"நீங்கள் மட்டுமல்ல. எம்பெருமான் கருணை வேண்டுவோர் அனைவரும் பாக்யசாலிகளே"

"சொல்வது புரியவில்லையே"

"உங்களுக்கு மட்டுமல்ல... ஊருக்கே உபதேசிக்கப் போகிறேன். அஷ்டாட்சரம் ஆசைப்பொருள் அல்ல.. பெட்டியில் பூட்டி வைக்க... அது உயிர்களின் விடுதலைக்கான விமோசனம். அது பொதுவாக இருக்க வேண்டும்"

"அப்படி இருந்தால் எப்போதே உபதேசம் ஆகியிருக்குமே?"

"அப்படி நடக்காததும் நல்லதற்கே... நான் பாடாய் பட்டதால் தான் அதன் மகத்துவம் புரிந்தது. இனி பொதுவாக போகின்றது.."

"அப்படியானால்?"

"வாருங்கள் என்னோடு..." என்ற ராமானுஜர் திருக்கோட்டியூர் கோயில் நோக்கி நடந்தார். அவர்கள் பின்தொடர்ந்தனர்.

"வாருங்கள் எல்லோரும். செவியுடையோர் அனைவருக்கும் மந்திர உபதேசம் ஆகப் போகிறது. பிறவிக்கடன் தீரும் வழி தெரியப் போகிறது" என கூரேசர் அழைத்திட ராமானுஜர் விறுவிறு என கருவறை விமானத்தின் மீதேறினார்.

அனைவருக்கும் தெரியும்படியாக ஓரிடத்தில் நின்றார். ஊரே திரண்டிருக்க அதில் கூரேசர், முதலியாண்டான், அமுதனாரும் நின்றனர்.

ராமானுஜரும் உரத்த குரலில் 'ஓம் நமோ நாராயணாய" மந்திரத்தை உபதேசம் செய்யத் தொடங்கினார்.

தொடரும்



# வரதா வரம்தா...

பக்தித்தொடர் 17



இந்திரா சௌந்தர்ராஜன்

ராமானுஜரின் மந்திர உபதேசத்தால் அன்று திருக்கோஷ்டியூரில் கூடிய அனைவருமே தேவர்களாயினர். கனத்த குரலில் பக்தி உணர்வுடன் ராமானுஜர் சொல்லச் சொல்ல கூட்டத்தினர் மவுனமாக கேட்டு ஆனந்தக் கண்ணீர் சிந்தினர். அந்த மந்திர உபதேச நிகழ்வு ஊருக்குள்ளும் காட்டுத்தீ போல பரவ பலரும் ஓடோடி வந்தனர். மொத்தத்தில் அன்று திருக்கோஷ்டியூரில் இருந்தவர்கள் அவ்வளவு பேருமே கொடுத்து வைத்தவர்கள் ஆயினர்.

அஷ்டாட்சரமும் உலகப் பொதுவாகி அங்குள்ளோர் காதுகளில் மட்டுமின்றி, கோபுரத்தில் இருந்த புறாக்களின் காதுகளிலும் விழுந்து அவைகளுக்கும் பரகதி கிடைத்திட காரணமானது.

ராமானுஜரின் இந்த செயல்பாடு ஆச்சார்ய நம்பியின் செவிகளை அடையவும் அவர் அதிர்ந்தார். சினம் அவரைக் கவ்விக் கொண்டது.

“என்ன ஒரு தைரியம்... இப்படி ஊருக்கே சொல்லவா நான் உபதேசித்தேன்? இது என்ன பிரசாதமா அனைவருக்கும் வழங்கிட... ஆத்ம விசாரம் உள்ளவர்கள் மட்டுமே அறிய வேண்டிய ஒன்றல்லவா?” நம்பி சிடுசிடுத்தார். அவருக்கு தகவல் அளித்தவர்கள் அவரை மேலும் தூண்டினர்.

“நீங்கள் அப்புறம் பார்க்கலாம் என பலமுறை சொல்லியும் விடாமல் வந்த போதே தெரியும்... இவன் நம் போன்றவன் அல்ல என்று...!”

“உபதேசம் பெற்ற மறுநிமிடமே தன்னை ஆச்சாரியனாக வரித்து விட்டானே... என்ன பேராசை?”

“இவன் போன்றவர்களை சும்மா விடக் கூடாது. விட்டால் வைணவ சித்தாந்தத்தையே ஏலம் போட்டு விடுவான்...”

இப்படி விமர்சனம் எழுந்த நேரத்தில் ஒருவர், “அவனை அப்படியே கட்டித் தூக்கி வரவா?” எனக் கேட்டார்.

‘அதற்கு அவசியமில்லை’ என்றொரு குரல்! திரும்பினால் ராமானுஜரே நின்றிருந்தார்! எல்லோரிடமும் அதிர்வு மட்டுமல்ல, ஆச்சரியமும் கூட...

“என்ன தைரியம் உனக்கு? ஆச்சார்யன் பேச்சைக் கேளாமல் தன்னிச்சையாக நடந்தது மட்டுமின்றி, இப்போது அவரைக் காண நேரிலேயே வந்து விட்டாயா? உன் மனதில் என்ன வீரதீரன் என்ற எண்ணமா?” என எகிறினார் ஒருவர்.

ராமானுஜர் முகத்தில் பதிலுக்கு யாதொரு சலனமும் இல்லை.

“எங்கு வந்தாய்... இன்னும் என்ன உள்ளது என அறிய வந்தாயா?” என ஒருவர் கீறி விட்டார்.

“ஆச்சார்யனிடம் மன்னிப்பு கேட்க வந்திருக்கிறேன்” என்றார் ராமானுஜர்.

ஆச்சார்ய நம்பியும் அதைக் கேட்டு ஆச்சர்யமுடன் ராமானுஜரைப் பார்த்தார். ராமானுஜரும் பணிவுடன், “ஆச்சார்யன் திருவடிகளில் என் அனந்தமான தெண்டனிட்ட விக்ஞாபனங்கள். தங்களின் கட்டளையை நான் மீறியதற்காக மன்னிக்க வேண்டுகிறேன்” என்றார்.

“மன்னிப்பா...மன்னிப்பதால் நீ செய்த தவறு சரியாகும் எனக் கருதுகிறாயா?”

“உங்கள் கட்டளையை மீறியதே நான் செய்த தவறு. ஆனால் மந்திரம் உபதேசித்ததில் தவறில்லை. அதை என் கடமை”

“இது என்ன புது வியாக்யானம். கட்டளை என்பதே மந்திர உபதேசம் என்பது ஆச்சார்யன் மூலம் மட்டுமே நடக்க வேண்டும் என்பது தானே?”

“இப்போதும் அப்படித்





• தங்கத்தை விட விலை அதிகம் தண்ணீருக்கு. தண்ணீரை விட விலை அதிகம் நேரத்திற்கு!

தானே நடந்துள்ளது...?''

''அப்படியானால் நீ உன்னை ஆச்சார்யனாக கருதி விட்டாயா?''

''என்னை அப்படி கருதுவோரும் உள்ளனரே?''

''அப்படியானால் நரகம் புகுவாயே — அவர்களும் உடன் வருவார்களா?''

''என்னையன்றி ஒருவர் கூட நரகம் புகக் கூடாது. அனைவருக்கும் எம்பெருமானின் திருவடிகளில் இளைப்பாறல் கிட்ட வேண்டும். அதுவே என் விருப்பம்?''

''என்ன உளறுகிறாய்?''

''எம்பெருமானின் மந்திர உபதேசமே பிறவித்தளையை நீக்கத் தானே அருளப்படுகிறது? அப்படியிருக்க உபதேசம் பெற்றவர்களுக்கு ஏன் நரகதி வாய்க்கும்?''

''உனக்கு கிட்டாத நிலையில் அவர்களுக்கு எப்படி கிடைக்கும் என நம்புகிறாய்?''

''உங்கள் கட்டளையை மீறியதால் எனக்கு நரகம். ஆனால் நான் எவரிடமும் அது போல கட்டளையிடவில்லையே? அப்படியிருக்க மற்றவருக்கு எப்படி நரகதி ஏற்படும்? அத்துடன் அவர்கள் உபதேசம் பெற்றவர்கள்— அவர்களுக்கு பரகதி தான் உறுதியாகி விட்டதே...?''

ராமானுஜரின் இக்கேள்வி ஆச்சார்ய நம்பியை சிந்திக்க வைத்ததோடு சிலிர்க்கவும் வைத்தது. நெடுநேரம் மவுனமாக உற்றுப் பார்த்தவர் ''ராமானுஜா... என்ன சொல்கிறாய்? தெளிவாகச் சொல்'' என்றார் சற்றே மிருதுவான குரலில்.

''சுவாமி.. நான் ஒருவன் நரகம் போனாலும், மந்திர உபதேசம் கேட்க கொடுத்து வைத்த அனைவரும் பரகதிக்கு செல்வரே? பலருக்கும் பரகதி கிடைக்குமாயின் ஒருவர் நரகதி அடைவதில் தவறேது?''

''அப்படியானால் உனக்கு நரகதி என்பதில் வருத்தமில்லையா?''

'' பலருக்கும் பரகதி கிடைத்த மகிழ்ச்சியின் முன் என் நரகதிக்கான துன்பம் ஒரு துன்பமா சுவாமி?''

''ராமானுஜா'' எழுந்தார் நம்பி.

''சுவாமி''

''என் அகக் கண்களைத் திறந்தாய்''

''நானா.. பெரிய வார்த்தை எதற்கு சுவாமி''

''பெரிதாக பாராட்ட வேண்டிய உன்னை உட்காரக் கூடச் சொல்லாமல் அவமதித்தேனே.. முதலில் அமர்வாயாக! பின் என்னை மன்னிப்பாயாக''

''சுவாமி.. தாங்களா இப்படி பேசுவது? உங்களால் அல்லவா என் அறியாமை அகன்றது. என்னைச் சலவை செய்த மகான் தாங்கள். இன்று பலரும் பரகதிக்குச் செல்ல நான் ஒரு கருவி தானே... நீங்கள் தானே ஆதிமூலம்?''

''ராமானுஜா... உண்மையில் நீ அசாதாரணன்! மகா உத்தமன்... தனக்கென வாழாதவன்... சொல்லப்போனால் வைணவச் சூரியன்!''

''இவைகளை எல்லாம் தங்களுக்கே அர்ப்பணிக்கிறேன் சுவாமி. என்னை மன்னித்தேன் என்று மட்டும் சொல்லுங்கள்''

''உன்னை நான் மன்னிப்பதா? பின்னை எவர் மன்னிப்பர்?''

''சுவாமி.. தங்களை தாழ்த்திக் கொள்ளாதீர்கள். நீங்கள் என்றும் என் ஆச்சார்யன்; நான் என்றும் எப்போதும் உங்கள் மாணவனே!''

''மகிழ்ச்சி ராமானுஜா. மிக்க மகிழ்ச்சி! நான் உனக்கு ஆச்சார்ய குரு தான். எது எனக்கான பேறு....ஆனால் நீ இந்த உலகிற்கே குருவாக ஆகி விட்டாய்! பரகதிக்கான மந்திரத்தை எனக்கு பாதுகாக்கத் தான் தெரிந்திருக்கிறது. உனக்கோ அதை உலகத்திற்காக பயன்படுத்தவும் தெரிந்திருக்கிறது. உன்னால் என் எல்லை விரிந்தது. நான் என்னும் மமகாரம் நீக்க உன்னை பலமுறை நடக்கச் செய்தேன். மமகாரத்தை மட்டுமின்றி உன்னையே இழக்கத் துணிந்து உதாரண புருஷனாகி விட்டாய். ஒளி தரும் விளக்கின் அடியிலும் துளியிருள் இருப்பது போல, உன் முன்னால் நான் அஞ்ஞானியானேன். பகலவன் போல் நீ வரவும் என் துளி இருளும் விலகிற்று! இப்போதும் சொல்கிறேன்... நீயே உத்தம ஸ்ரீவைஷ்ணவன். உத்தம ஆச்சார்யன், உத்தமத் தவசீலன், உத்தம மானுடன், உத்தம பெருஞ்சீடன்!

பஞ்ச பூதங்கள் போல பஞ்சமச் சிறப்பு பெற்ற உன்னால் இந்த மண்ணுலகம் சிறக்கட்டும். செழிக்கட்டும். உன்னை சிந்திப்பவர், உன் பெயர் சொல்பவர், உன் வழி நடப்பவர், ஏன் உன்னை உணராதவர் கூட உன் பொருட்டு குருவருள் பெற்றிடட்டும். அவர்களின் வாழ்வு சிறக்கட்டும்''

ஆச்சார்ய நம்பி மனம் நெகிழ்ந்து வாழ்த்தினார். ராமானுஜர் அவர் திருவடி பணிந்து எழுந்தார். அப்படியே திரும்பவும் காஞ்சி நோக்கி பயணமானார்!

வழியெங்கும் ஆச்சார்ய ராமானுஜருக்கு கோலாகல வரவேற்பு! காஞ்சியை அடைந்த ராமானுஜர் முதலில் சென்று நின்றது அருள்மிகு வரதராஜனிடம் தான்! அங்கு உள்ளவர்கள் ராமானுஜரைப் போற்றினர். அப்படியே அஷ்டாட்சர முழக்கம் இட்டனர். பின் சிலர் ராமானுஜரிடம், ''பாடுபட்டு மந்திர உபதேசம் பெற்று, அதை உலகிற்கே பொதுவாகவும் ஆக்கி விட்டீர்கள்... இந்த வேளையில் தங்கள் மூலம் உபதேசத்தை நாங்களும் பெற விரும்புகிறோம்'' என்றனர்.

ராமானுஜரும் திருவாய் மலர்ந்தார்.

''அருமை பெருமக்களே! உங்களுக்கு மட்டுமல்ல உலகுக்கே உபதேசிக்க தயாராக இருக்கிறேன். அது என் கடமை. உங்களுக்கும் கடமை இருக்கிறது. எம்பெருமானாலேயே நான், நீங்கள், நாம் எல்லோரும் இருக்கிறோம். இந்த கலியுகத்தில் நம்மைச் சோதிக்கும் விதமாக தன்னையே சக்தியற்றவன் போல் ஆக்கிக் கொண்டும் அவன் செயல்படுவான். அது போன்ற தருணங்களில் நாம் காட்டும் மனஉறுதியும், பக்தி விசுவாசமுமே, வரும் தலைமுறைக்கு பாடமாகி உலகம் தழைக்க வழி செய்யும். எனவே சுயநலமின்றி தியாகம் புரிய தயாராகுங்கள்'' என்றார்.

இங்கே ராமானுஜர் கூறியதில், 'வரும் நாட்களில் பெரும் சோதனை ஒன்று நடக்கப் போவது' போல் ஒரு அறிகுறியை காட்டியதை அங்கிருந்த சிலர் சற்று அதிர்ச்சியுடன் உணர்ந்தனர்.

**தொடரும்**

**இந்த தொடரின் ஆசிரியர்**
**இந்திரா சௌந்தர்ராஜன் எழுதிய புத்தகங்கள்**
**தெரிந்த பாரதம் தெரியாத பாத்திரம், கிருஷ்ண ஜாலம், கடவுளைக் கண்டவர்கள் பெற 1800 425 7700ல் தொடர்பு கொள்ளலாம்.**



# வரதா வரம்தா...

பக்தித்தொடர் 18

இந்திரா செளந்தர்ராஜன்



**ரா**மானுஜரின் கருத்தைக் கேட்டு அதிர்ந்தவர்களில் சிலர் அவரிடம் " சுவாமி! தாங்கள் பேசிய பேச்சு எங்களை சிந்திக்க வைக்கிறது. இம்மண்ணுக்கு சோதனைகள் வரக் கூடும் என்பதை தங்களின் ஞானத்தால் உணர்ந்து எச்சரிப்பதாகவே தோன்றுகிறது."

"ஆம்... காலம் எப்போதும் ஒன்று போல செல்வதில்லை. இந்த கலியுகத்தில் பக்தியும், ஒழுக்கமுமே ஒருவரை கரை சேர்க்கும். அதில் கறை ஏற்பட்டால் திரும்ப பிறப்பெடுத்து அல்லல்பட நேரிடும்"

" அப்படியானால் பக்திக்கும் ஒழுக்கத்திற்கும் சோதனை ஏற்படப் போகிறதா சுவாமி...? "

"என் எச்சரிக்கை பொதுவானது.... அதை எண்ணி கவலைப்படத் தேவையில்லை. எம்பெருமான் இருக்கிறான். இந்த தலமே விமோசனத்தலம் தானே? "

" உண்மை...எம்பெருமானோடு எங்களை நெறிப்படுத்தும் நீங்கள் உள்ளவரை கவலையில்லை. உங்கள் வடிவிலே அந்த வரதனைக் காண்கிறோம்" எனக் கண்ணீர் மல்கினர்.

"சீடர்களே! நான் இப்பகுதியில் பிறந்து வளர்ந்து வரதனால் ஆளான போதிலும், ஸ்ரீரங்கத்திலும் பணிகளை ஆற்ற வேண்டியுள்ளது. ராமபிரானே வணங்கிய அந்த மூர்த்தியும், ஆராதனைகளும் அனைவருக்கும் முக்கியம். சிறிது காலம் அங்கிருந்து தொண்டாற்ற அனுமதித்திட வேண்டும்"

" இப்படி சொல்லித் தான் அமுதனார் உங்களை அழைத்துச் சென்றார். இப்போதெல்லாம் வரதனை விடவும், அந்த அரங்கனே தங்களை அதிகம் ஆட்கொள்கிறான் போலும்" என ஒருவர் சளைத்துக் கொண்டார்.

"இவன் வேறு அவன் வேறு என எண்ணினால் நீங்கள் என் சீடர்களேயல்ல...அவனில் எங்கும் பேதமில்லை! அவன் படைப்பான நம்மிலும் பேதங்கள் இல்லை. அவரவர் கடமையை உணர்ந்து பணிபுரிந்தால் போதும்... எந்நாளும் குறைவுமில்லை"

"நீங்கள் என்ன தான் சொன்னாலும் தாயைக் பிரிந்த கன்றாக நாங்கள் கருதுகிறோம். அரங்கமும் காஞ்சியும் ஒரு ஆற்றின் இரு கரை சேர்ந்த ஊர்களாக இருக்கக்கூடாதா என எண்ணுகிறோம்"

" நல்ல கற்பனை!" என சிரித்த ராமானுஜர் "நான் ஒரு சன்னியாசி.... ஓரிடத்தில் மரம் போல் நிற்பது கூடாது. தல யாத்திரை புரிவதும், தீர்த்தங்களில் நீராடுவதும் என் கடமை. எனவே அரங்கவாசியானாலும் யாத்திரைக்காரனாகவும் இருப்பேன். வைணவ நெறியை பரப்புவதும், வளர்ப்பதுவுமே என் நோக்கம். நீங்கள் அதை உணர்ந்து ஒத்துழைப்பு தர வேண்டும்" என ஸ்ரீரங்கம் புறப்பட்டார்.

முன்னதாக, "எம்பெருமான் கருணை மிக்கவன். அவதாரம் எடுத்து வரும் அவன், நமக்காக அவதார புருஷர்களையும் அனுப்பித் தருவான். காஞ்சி மண் அது போல பலரைக் காணப்போகிறது" என்றார்.

அவர் வாக்கிற்கேற்ப அம்மண்ணில்



இந்த தொடரின் ஆசிரியர்
இந்திரா சௌந்தர்ராஜன் எழுதிய புத்தகங்கள்
**தெரிந்த பாரதம் தெரியாத பாத்திரம்,**
**கிருஷ்ண ஜாலம், கடவுளைக் கண்டவர்கள்** பெற
1800 425 7700ல் தொடர்பு கொள்ளலாம்.

ராமானுஜரின் அடியொற்றித் தோன்றியவரே வேதாந்த தேசிகர்.

ஸ்ரீரங்கம் சென்ற ராமானுஜர் 1057 முதல் 1096 வரை ஸ்ரீரங்கத்தில் தொண்டாற்றினார். பெரும் சோதனைக்கு ஆட்படக்கூடும் என்ற அவரது கருத்திற்கேற்ப, சோழ மன்னன் வைணவத்தை புரிந்து கொள்ளாததோடு, சைவமே பெரிது என பாகுபாட்டுடன் நடந்தான். ராமானுஜர் இருக்கும் வரை சைவம் வளராது எனக் கருதி அவரைக் கொல்லவும் துணிந்தான். ஆனாலும் எம்பெருமானின் கருணை, கூரத்தாழ்வான் வடிவில் ராமானுஜரை அங்கிருந்து வெளியேறச் செய்து, கர்நாடகம் திருநாராயணபுரத்தில் தொண்டாற்ற வழிவகுத்தது. இதனால் தான் பஞ்ச நாராயணர்கள் நமக்கு கிடைத்தனர்.

குருவாகிய ராமானுஜருக்காக சோழனிடம் தன்னை சிக்க வைத்துக் கொண்ட கூரநாராயணர் "உன் போன்ற சிறுமதி படைத்தவர்களை பார்ப்பது கூட பாவம்; அப்படி பார்த்த கண்களை தோண்டி எறிகிறேன்" எனச் செய்து சோழனை நடுங்கச் செய்தார். குருவுக்காக மட்டுமின்றி தாம் சார்ந்த கொள்கைக்காகவும் கண்களை இழந்து எம்பெருமானையே சிலிர்க்க செய்தார் கூரநாராயணர் !

அதை அறிந்து ராமானுஜர் வருந்தியதோடு சீடர்களை எண்ணி நெகிழ்ந்தார். கர்நாடகம் சென்ற போது, அந்நாட்டு ஹொய்சாள மன்னன் விட்டல தேவராயனை சமணத்தில் இருந்து வைணவத்திற்கு மாறச் செய்தார். அவன் விஷ்ணுவர்த்தன் என்றானான். அவன் உதவியோடு திருநாராயணபுரத்தில் கோயில் கட்டினார். அதுவே மேல்கோட்டை.

சோழன் மறைந்த பின், ஸ்ரீரங்கம் திரும்பிய ராமானுஜர் நூறு வயதைத் தொட்டார். சேவை மேலும் தொடர்ந்தது. 'நித்ய கிரந்தம், கீதா பாஷ்யம், ஸ்ரீபாஷ்யம், வேதாந்த சாரம், வேதாந்த தீபம், வேதாந்த சங்கிரகம், ஸ்ரீவைகுண்ட கத்யம், ஸ்ரீரங்க கத்யம், சரணாகதி கத்யம்' என ஒன்பது நூல்களை இயற்றினார். கி.பி.1137ல் திருநாடு அலங்கரித்தார்.

இவருக்கு பின் இவரின் கூற்றுப்படியே காஞ்சியை ஒட்டிய திருத்தண்கா அல்லது தூப்புல் என்னும் ஊரில் வேதாந்த தேசிகனைப் பிறப்பித்தான் எம்பெருமான்! 1268ம் ஆண்டு புரட்டாசி மாத திருவோண நட்சத்திர நாளில் பிறந்த இவரால் காஞ்சி வரதன் பெரிதும் ஆராதிக்கப்பட்டான்.

காஞ்சி என்றால் எப்படி ராமானுஜரை எண்ணாமல் இருக்க முடியாதோ, அப்படியே வேதாந்த தேசிகனையும் எண்ணாமல் இருக்க முடியாது. அனந்தசூரி என்ற வைஷ்ணவருக்கும், கோதா ரம்பைக்கும் பிறந்தவர் வேங்கடநாதன் என்னும் வேதாந்த தேசிகர்!

திருமலைக் கோயிலின் மணி அம்சமாய் பிறந்தவர். ஒருநாள் கனவில் கோதா ரம்பையை திருமலைக்கு வரவழைத்த எம்பெருமான் தனக்கான ஆராதனை மணியை கொடுத்து விழுங்கிடச் சொல்ல அவளும் விழுங்கினாள்! எல்லாம் கனவில்!

நிஜத்தில் திருவேங்கடமுடையான் சன்னதியில் ஆராதனை மணியும் காணாமல் போய் இருந்தது! ஜீயரின் கனவில் திருவேங்கடமுடையான் தோன்றி, 'கோதா ரம்பையிடம் கொடுத்து மணியை விழுங்கச் சொன்னேன். அதனால் அவள் பிள்ளைப் பேற்றுக்கு ஆளாவாள். அப்பிள்ளை வைணவத்தை பரப்பி அதிசயங்கள் நிகழ்த்துவான்' என்றான். ஜீயரும் தேசிகனின் வருகைக்கு தயாரானார்.

மணியை விழுங்கியதாக கனவு கண்ட அன்றே கருவுற்ற கோதா ரம்பையும் புரட்டாசி மாத திருவோண நட்சத்திரத்தில் குழந்தை பெற்றாள். 'திருவேங்கடநாதன்' என பெயரிட்டு மகிழ்ந்தனர். வைணவ சம்பிரதாயப்படி ஐந்து வயதிலேயே அட்சர அப்யாசம் செய்தனர். ஏழாம் வயதில் உபநயனம்!

தந்தையிடம் அவன் வேதம் கற்றான். நடாதூர் அம்மாளிடம் இதிகாசங்களோடு பதினெட்டு புராணங்களும் அறிந்தான். இருபது வயதில் பாண்டித்யம் பெற்றவனாகி திருமங்கை என்ற பெண்ணை மணந்தான். இந்நிலையில் அவனது மாமா அப்புள்ளார் ஒரு நற்செயல் புரிந்தார்.

ராமானுஜர் திருக்கோட்டியூர் சென்று உபதேசம் பெற்று திரும்பிய நிலையில் அணிந்திருந்த பாதுகைகளில் ஒன்று அப்புள்ளாரிடம் இருந்தது. அதை பெட்டியில் வைத்து தந்த அப்புள்ளார் "ராமானுஜ நெறியில் அவரை குருவாக வரித்துக் கொண்டு நீ உன் கடமைகளை செவ்வனே செய்வாயாக" என்றதோடு தான் அறிந்த கருட மந்திரத்தை உபதேசித்தார். கருடநதி பாய்ந்திடும் திருவஹீந்திரபுரம் சென்று அங்கிருந்த தேவநாதன் சமேத செங்கமல நாச்சியாரை வணங்கி, அருகிலுள்ள குன்றின் மீதுள்ள அரசமரத்தடியில் அமர்ந்து ஜபம் செய்தான் வேங்கடநாதன்!

இந்த எண்ணம் அவனுக்குள் ஏற்பட அத்திவரதனே காரணம்! மனைவியுடன் காஞ்சியில் வசித்த போது அத்திகிரி வரதனை தரிசித்த பிறகே உண்ணும் பழக்கம் கொண்டிருந்தான். ஒருநாள் எம்பெருமானுக்கு திரையிடப்பட்டு அலங்காரம் நடந்தது. அந்த நேரம் கருட விக்ரகத்தை பார்த்ததும், கருடமந்திரம் ஜபிக்க தொடங்கினான். அப்போது " வேங்கடநாதா.....திருவஹீந்திரபுரம் சென்று கோடி ஜபம் புரிவாயாக. கருட தரிசனமும், ஹயக்ரீவ மந்திர உபதேசமும் உனக்கு நிகழும். அது உன்னை ஞானச் சூரியனாக்கும். உன்னால் பல சாதனை நிகழவிருக்கிறது'' என ஒலித்த அசரீரிக் குரலே திருவஹீந்திரபுரத்தில் தேசிகனை ஜபம் செய்யத் தூண்டியது.

கோடி முறை ஜபிப்பது சாதாரண விஷயமல்ல. திருவுடையோர்க்கே அது சாத்தியம். வேங்கடநாதனுக்கும் அது சாத்தியமாயிற்று! நாட்கள் சென்ற வண்ணமிருக்க ஒரு மண்டலம் கழிந்தது. கோடி இலக்கை எட்டிய நிலையில், தாடி, மீசையுடன் அள்ளி முடிந்த சடையுமாக ஞானச்சூரியனாக பிரகாசித்த வேங்கடமுடையானை நோக்கி வானில் கருடனும் பறந்து வந்தான்!

**தொடரும்**



# வரதா வரம்தா...

பக்தித்தொடர் **19**

இந்திரா செளந்தர்ராஜன்



**விண்** மீது பறந்த கருடன், கோடி நாம ஜபத்தில் இருந்த வேங்கடநாதன் முன் ஒரு விக்ரகத்துடன் காட்சியளித்தான். கருடபட்சியாக வந்தவன் தரை தொட்ட மாத்திரத்தில் கிரீட குண்டலத்துடன் கருட ராஜனாக இரு கைகளும் ஹயக்ரீவ விக்ரகத்தை பற்றியிருந்த நிலையில், ''நாராயண... நாராயண'' என்றான்.

ஜபத்திற்காக கண்களை மூடியிருந்த வேங்கடநாதன் நாராயண நாமம் கேட்டு கண் திறக்கவும், எதிரில் கருடன் இருந்தான். அதுவும் கைகளில் ஹயக்ரீவ மூர்த்தியின் சுடர் விட்டு பிரகாசிக்கும் எழில் விக்ரகத்துடன்...!

கோடி ஜபம் முடிந்து பார்த்த முதல் காட்சியே எம்பெருமானின் வித்யா சொரூபம் தான்! சொரூபத்தை காட்டியபடியே கருடன்! வேங்கடநாதனின் கண்கள் இரண்டும் கசியத் தொடங்கின.

நெஞ்சிலும் விம்மிதம்! 'பட்சி ராஜனே.. பரம தயாளனே... உனக்காக தவத்தில் ஆழ்ந்த எனக்கு கருணை செய்ய வந்து விட்டாயா?'' எனக் கேட்டு உதடுகள் துடிதுடித்தன.

கருடனும் விக்ரகத்தை அருகிலுள்ள மேடை மீது வைத்தபடி, ''வேங்கடநாதனே! உன் ஜெபமானது வைகுண்டத்தைக் குடைந்து என் செவியில் புகுந்து இன்புறச் செய்தது. எம்பெருமானுக்கே ஆட்செய்யும் பரம பக்தனான நீ, எனக்காகவும் புரிந்த தவம் ஆச்சரியம் அளித்தது. தலை இருக்க வாலை அழைத்த உன் செயலின் நோக்கத்தைப் பூர்த்தி செய்ய வந்துள்ளேன்'' என்றான் கருடனும்.

''பட்சி ராஜனே! வைகுண்ட லோகத்தின் காவலன் நீ! எம்பெருமானை இமை போல காப்பவன் நீ! நம் எல்லோருக்கும் அவன் காவலன் என்பதே மெய்! அப்படிப்பட்ட எம்பெருமானுக்கே காவல் புரிவதும் ஒரு பாக்யம் அல்லவா?

அப்படிப்பட்ட பாக்கியசாலி உன்னருளால் உய்யவும், உன்னைப் போலவே எம்பெருமான் மீது தளராத பக்தியும் கொள்ளவே நான் உன்னை தியானித்தேன்'' என்றார் வேங்கடநாதன்.

''மகிழ்ச்சி... உன் விருப்பம் ஈடேறட்டும். கூடுதலாக வித்யா மற்றும் மேதா விலாச சொரூபமான ஹயக்ரீவ ரூபத்தை அளித்து ஹயக்ரீவ மூல மந்திரத்தையும் உபதேசிக்கிறேன். இந்த மந்திர உபாசனை ஆயகலைகள் அறுபத்து நான்குக்கும் அதிபனாக்கும்! சர்வ தந்திர சுதந்திரனாக இந்த மண்ணில் உன்னை உலகோர் அழைக்கும்படி செய்யும்''

இந்த தொடரின் ஆசிரியர்
இந்திரா செளந்தர்ராஜன் எழுதிய புத்தகங்கள்
**தெரிந்த பாரதம் தெரியாத பாத்திரம்,
கிருஷ்ண ஜாலம், கடவுளைக் கண்டவர்கள்** பெற
1800 425 7700 ல் தொடர்பு கொள்ளலாம்.

என்றபடியே விக்ரகத்தை அளித்து மந்திரத்தை வேங்கடநாதனின் காதில் உபதேசித்தான்.

வேங்கடநாதன் பூரித்தார். சிலகாலம் அங்கேயே ஹயக்ரீவருக்கு ஆராதனை நிகழ்த்தி, நேர் எதிரில் தேவநாதனாக கோயில் கொண்டிருக்கும் எம்பெருமானுக்கும் தொண்டாற்றினார். ஹயக்ரீவரின் வித்யாபலம் உலகத்தவருக்கு பூரணமாக கிடைக்க வழிசெய்தார்.

இதனால் வேதம் கற்போர் முதல் வித்தை கற்போர் வரை சகலருக்கும் உற்ற துணையானானர் ஹயக்ரீவர்! பின் தனது பிரேமைக்குரிய அத்திகிரிக்கும் திரும்பினார். அங்கு வரதனைக் கண்டதும் மெய்யுருகப் பல பாடல்கள் பாடினார். குறிப்பாக அத்திகிரி வரதன் காஞ்சியம்பதியின் எட்டுத் திக்குகளுக்கும் சென்று தன் திருமேனியைக் காட்டி அருள்வதில் நிகரற்றவன்.

அவ்வாறு அவன் விழாக்கோலம் பூணும் சமயத்தில் நாதஸ்வர இசை முழங்கும்! மேலும் டமாரம், எக்காளம், துந்துபி, கொம்பு என எல்லாக் கருவிகளும் இடத்திற்கேற்ப முழக்கமிடும்.

இவைகளின் நடுவில் திருச்சின்னம் என்றொரு வாத்தியம்!

பிரம்மன் யாகம் புரிந்து வேள்வியில் வரம் தரும் ராஜனாக, அதாவது வரத ராஜனாக எம்பெருமான் காட்சி தந்த போது, அக்காட்சி எல்லோருக்கும் கிடைத்திட வேண்டும் என பிரம்மன் விரும்பினான். அதனை உணர்ந்தே தேவலோக சிற்பியான மயனும், விஸ்வகர்மாவும் கூடி வரதராஜனை சிலையாக வடித்து அங்கேயே கோயிலும் உருவானது. அத்திகிரி மீது வரதனாக எம்பெருமான் கோயில் கொண்டான். அங்கு கோயில் தொடர்பான சகலமும் உண்டானது. அப்போது தேவர்கள் ஆளுக்கொரு நினைவுப் பரிசை வரதனுக்கு வழங்கினர். அதில் ஒன்று தான் நாதஸ்வரம் போலவே இருக்கும் திருச்சின்னக் கருவிகள்! இவை இரண்டையும் தொலைவில் இருந்து பார்க்கும் போது எம்பெருமானின் திருமண் காப்பு போலவும் தோற்றம் தரும். இதை இசைத்திட தனித்தெம்பு வேண்டும்.

எம்பெருமான் வீதியுலா புறப்படும் போது, அவன் வருகையை அறிவிக்க இந்த கருவியின் இசை பீறிடும். இதன் இசை கேட்போரை சிலிர்க்கச் செய்து மனதையும் ஒருமுகப்படுத்தும். திருவஹீந்திரபுரத்தில் இருந்து திரும்பிய நிலையில், இந்த கருவி இசை வேங்கடநாதனையும் கவர்ந்தது. இதன் ஒலி கேட்டதும் மனம் ஒருமைப்பட்டு எம்பெருமான் திருவடிகளை மனக்கண்களில் காட்சியாக தெரிந்தது! அதற்காக திருவஹீந்திரப் பெருமானின் பூரண அருள் இவருக்குள் பாடலாகப் பெருகத் தொடங்கியது.

*''ஈருலகை படைக்க எண்ணியிருந்தார்*
*வந்தாரெழின் மலரோன் தன்னையன்றே*
*ஈன்றார் வந்தார்...''*

*என நீண்டு சென்று இறுதியில்,*



• தங்கத்தை விட விலை அதிகம் தண்ணீருக்கு.
தண்ணீரை விட விலை அதிகம் நேரத்திற்கு!



***'அத்திகிரி அருளாளப் பெருமாள் வந்தார்***
***ஆனைபரி தேரின் மேல் அழகர் வந்தார்***
***கச்சி தனில் கண் கொடுக்கும் பெருமாள் வந்தார்***
***கருத வரம் தருதெய்வப் பெருமாள் வந்தார்***
***முத்திமழை பொழியும் முகில் வண்ணர் வந்தார்***
***மூலமென வோலமிட வல்லார் வந்தார்***
***உத்தர வேதிக்குள்ளே யுதித்தார் வந்தார்***
***உம்பர் தொழும் கழலுடையார் வந்தார் தாமே!''*** என முடிந்தது. பின் இதுவே திருச்சின்ன மாலை என்றானது.

வேங்கடநாதனின் பாடலைக் கேட்ட வரதன் உள்ளம் கனிந்தான். அன்றிரவே வேங்கடநாதன் கனவில் ஒரு திருச்சின்னக் கருவியை கொண்டு சென்று வேங்கடநாதா 'இது உனக்கு நான் தரும் பரிசு... நீ திருச்சின்ன மாலை பாடியமைக்கு நான் மனமுவந்து தரும் பரிசு' என்றான்.

கண்விழித்த வேங்கடநாதன் அருகில் திருச்சின்ன கருவி இருந்தது. ஆனால் கோயிலில் ஒன்று குறைந்து போனது. ஆலய ஸ்தானீகர் கனவில் தோன்றிய வரதன் ஒரு கருவி இல்லை என வருந்த வேண்டாம். அது வேங்கடநாதனின் அன்புப் பரிசாகி விட்டது. மீதமுள்ள ஒரு கருவியால் இசைத்தால் போதும். ஏன் இரு கருவிகள் இல்லை என பார்ப்போர் சிந்தித்தால், அவர்களுக்கு வேங்கடநாதனும், அவனது திருச்சின்ன மாலையும் ஞாபகம் வர வேண்டும். என் தரிசன வேளையில் இசையோடு கூடிய குருதரிசனமாய் வேங்கட நாதன் திகழவே யாம் இவ்வாறு செய்தோம்' என்றும் அருளி மறைந்தான்.

ஆலய ஸ்தானீகரும் கோயிலுக்கு சென்ற போது கோயிலில் ஒரு கருவியே இருந்தது. அப்போது அவன் பரிசாகத் தந்த கருவியோடு வந்த வேங்கடநாதன் பல பாடல்கள் பாடினார். 'மும்மணிக்கோவை, கந்துப்பா, கழற்பா, அம்மானை , ஊசற்பா, ஏசற்பா, நவரத்தினமாலை என அதன் பின் வேங்கடநாதன் பாடிய பாடல்களை இன்றும் வைணவ உலகம் கொண்டாடுகிறது.

இன்றும் வரதனின் சன்னதியில் ஒரு திருச்சின்னமே ஒலிக்கப்படுகிறது. வேங்கடநாதன் பரிசாக பெற்ற திருச்சின்னம் தூப்புல் தேசிகன் சன்னதியில் ஒலிக்கப்படுகிறது. இச்சம்பவத்திற்கு பின் வேங்கடநாதனின் பக்தியும், புகழும் ராமானுஜருக்கும் ஏற்பட்டது போலவே எங்கும் பரவியது.

வைணவ சித்தாந்தமான விசிஷ்டாத்வைதம் என்னும் ராமானுஜ சித்தாந்தத்திற்கு இந்நிலையில் ஒரு சோதனை ஏற்பட்டது. ஸ்ரீரங்கத்தில் இருந்த அத்வைத வித்வான்கள் சிலர் விசிஷ்டாத்வைத தத்துவத்தை விமர்சனம் செய்ததோடு, தங்களின் சித்தாந்தமே பெரிதென வாதம் செய்தனர்.

இந்நிலையில் எம்பெருமானே வேங்கடநாதனை ஸ்ரீரங்கம் வரப் பணித்து, மாற்றுக் கருத்துடையோருக்கு விளக்கம் அளிக்கச் செய்தான்.

முன்னதாக வேங்கடநாதனும் ராமானுஜர் மீது, 'யதிராஜ ஸப்தசதி' என்னும் ஸ்தோத்திரத்தை குருவழிபாடாக பாடினார். பின் ரங்கநாதரையும், ரங்கநாயகி தாயாரையும் சேவித்து தன் வாதத்தை முன் வைத்தார். வாதப் போர் எட்டு நாள் இடையின்றி தொடர்ந்தது. வாதம் செய்வோரின் கேள்விகளுக்கெல்லாம் பதில் அளித்த வேங்கடநாதன், பதிலுக்கு கேட்ட கேள்விகளுக்கு அத்வைதிகள் பதிலளிக்க முடியாமல் திணறினர். பின் வைணவர்களால் 'வேதாந்தாச்சார்யர்' என்ற பட்டத்திற்கும் உரியவரானார்.

ராமானுஜர் போலவே ஸ்ரீரங்கத்தையும் காஞ்சி போலவே கருதி பல ஆண்டுகள் தங்கி பல நூல்கள் இயற்றினார். இக்கால கட்டத்தில் ஸ்ரீரங்கத்தில் வாழ்ந்த சுதர்சன சூரி என்பவர் வேங்கடநாதன் என்ற வேதாந்தசார்யனுக்கு 'கவிதார்க்கிக சிம்மம்' என்ற பட்டத்தை அளித்தார். வேங்கடநாதன் வேதாந்த தேசிகன் என பெயர் பெற்றார். வேதாந்த தேசிகனால் வைணவம் கொடி கட்டிப் பறந்தது. காஞ்சி, ஸ்ரீரங்கம் கோயில்களில் திருவிழாக்கள் நடந்து மாதம் மும்மாரி பொழிந்தது.

காலம் இப்படியே சென்று விடுமா என்ன? இக்கால கட்டத்தில் சைவர், வைணவர் ஆகிய அனைவருக்கும் பெருஞ்சோதனை மாற்றுமத வழிமுறைகளை பின்பற்றும் மிலேச்சர்களால் ஏற்படத் தொடங்கியது.

அது...?

**தொடரும்**



# வரதா வரம்தா...

பக்தித்தொடர் 20

இந்திரா செளந்தர்ராஜன்



கி.பி.1323...

பாரதத்தின் தலைநகரான டெல்லியை துக்ளக் வம்சத்தைச் சேர்ந்த கியாசுதீன் ஆட்சி செய்த காலம். பாரசீக மொழியே அலுவல் மொழி. நான்கு வருடங்களே கியாசுதீன் துக்ளக்கின் ஆட்சி நடந்தது. அதன்பின் வந்த முகம்மது பின் துக்ளக் 1351 வரை 26 ஆண்டுகள் ஆட்சி செய்தார்.

இந்த சமயம் மாறவர்மன் குலசேகரன் மதுரையை தலைநகராக பாண்டிய நாட்டை ஆட்சி செய்தான். மகன்களான சுந்தர பாண்டியன், வீர பாண்டியன் இவனைத் தொடர்ந்து ஆட்சி செய்தனர். காஞ்சியம்பதி அப்போது வலுவிழந்த சோழர்களின் பிடியில் இருந்தது. ஆயினும் காஞ்சி வரதனின் கருணையால் மும்மாரிக்கு குறைவில்லை.

இந்த நிலையில் காஞ்சிக்கு ஒருநாள் மணப்பாக்கத்து நம்பி என்ற வைணவர் வந்தார். இவருக்கு வைணவ சம்பிரதாயங்களை அறிந்து தெளியும் ஆவல் இருந்தது. இந்த சம்பிரதாயங்கள் கலியின் மாயையால் இடர்பாட்டுக்கு உள்ளாகி, மக்கள் அறியாமல் தத்தளிக்கக் கூடும் என்ற அச்சமும் அவருக்கு இருந்தது.

அச்சம் தீர ஒரே வழி



“அவரிடம் போ... அவர் வேறு பெருமாள் வேறு இல்லை என ஊரே சொல்கிறதே? எனக்கு மணமாக ஆயிரம் பொன்னுக்கு மேல் வேண்டும். மகாலட்சுமியிடம் கேட்டு வாங்கித் தாருங்கள்.. எனச் சொல்!”



• தங்கத்தை விட விலை அதிகம் தண்ணீருக்கு. தண்ணீரை விட விலை அதிகம் நேரத்திற்கு!

காஞ்சிவரதனிடம் சரணடைவதே என எண்ணி அவன் சன்னதியை நாடினார். கண்ணீர் சிந்திய நிலையில் வரதராஜனிடம், "எம்பெருமானே... என் மரணகாலம் வரை வைணவ சம்பிரதாயங்களை அறிந்து தெளிவதோடு, அதை ஒரு நாளைக்கு ஒருவருக்காவது உபதேசிக்கவும் விரும்புகிறேன். நீ தான் வழிகாட்ட வேண்டும்" என பிரார்த்தித்தார்.

கண்ணயர்ந்த நம்பியின் கனவில், "நம்பி... உன் விருப்பம் ஈடேற ஸ்ரீரங்கம் செல். முன்னதாக வேதாந்த தேசிகனைக் கண்டு ஆசி பெறு. கேட்டது கிடைக்கும். ஸ்ரீரங்கத்தில் பிள்ளைலோகாசார்யன் என்பவன் வைணவமே மானிட உருவெடுத்தது போல வாழ்கிறான். அவன் நாவில் வெளிப்படும் அவ்வளவும் என் கூற்றே! இதை நீ உணர்வாய். அப்படியே ஒரு சோதனைக் காலம் வர உள்ளது என்று மட்டும் சொல்!" என்றான் காஞ்சிவரதன். கண் விழித்த நம்பி காஞ்சி நோக்கி நடக்கலானார்.

இதற்கு முன்னதாக அந்த சமயம் வேதாந்த தேசிகரின் புகழ் எங்கும் பரவியிருந்தது. அவரது இல்லம் பண்டிதர்கள், வேத விற்பன்னர்கள் சூழ்ந்த கலாசாலையாக விளங்கியது. தேசிகரின் மனைவியான திருமங்கை தேவியாரும் வருவோரை உபசரித்த வண்ணம் இருந்தாள்.

இந்நிலையில் தேசிகரின் புகழைக் கண்ட சிலருக்கு பொறாமைத் தீ எரிந்தது. அவர்கள் ஒன்று கூடி தேசிகரை மட்டம் தட்டிப் பேசி வந்தனர்.

"இந்த தேசிகன் சுத்த சுயம்பிரகாசராம்! அப்படி என்ன பெரிய பிரகாசத்தை அவர் கண்டு விட்டார் எனத் தெரியவில்லை" என ஒருவர் ஆரம்பிக்க மற்றவர்கள் நகைத்தனர்.

"சரியாகத் தான் கேட்டீர்... இரவில் அவரை தெருவில் நடக்கச் சொல்லி பார்க்க வேண்டும். இரவின் கடுமையில் காணாமல் போகிறாரா இல்லை... தீப்பந்தம் போல ஜிகுஜிகு என எரிகிறாரா என்று..."

"என்னவோ போங்கள்... அவரைப் பார்த்தாலே பாவம் போகும் என்றும், அவர் ஆசி கிடைத்தால் எல்லாம் கிடைத்து விட்டது என்றும் அர்த்தமாம். பேசாமல் கோயில்களை இழுத்து மூடி விட்டு தேசிகன் தான் இனி எல்லாம் என அறிவிக்கலாம்..."

இப்படி ஆளுக்கு ஆள் பேசிய போது தெருவில் சோகமாக நடந்து சென்றான் சாரங்கன் என்பவன்!

சாரங்கனுக்கு முப்பது வயது. தேக்கு மரம் போல உடம்பு.. தோற்றத்திலும் அழகன். மாநிறம்! ஆனால் மணமாக வில்லை!

அவனுக்கு தாய் மட்டும் இருக்கிறாள். வறுமையான குடும்பம்! அதனால் மெனக்கெட யாரும் இல்லை. பெண் பார்க்க வேண்டும் என்றால் முதலில் பொன் சேர்க்க வேண்டும்.

இந்த நாள் போல் இல்லை அன்று...!

ஆண் தான் பெண்ணைப் பெற்றவருக்கு பொன் தந்து பெண் கேட்க வேண்டும். ஒரு பெண்ணைப் பெற்று வளர்த்து அவர் ஆளாக்கியதற்கு தரும் சன்மானம் அது! பெண்ணின் அழகுக்கேற்ப பொன்னின் அளவும் அதிகரிக்கும். இப்படி ஒரு காலகட்டத்தில் பொன், பொருள் இன்றி ஏழையாகவும், கபடம் இல்லாதவனாகவும் இருந்தான் சாரங்கன்!

அவனைப் பார்த்த பொறாமைக்காரர்களுக்கு ஓர் எண்ணம் தோன்றியது!


**இந்த தொடரின் ஆசிரியர்**
**இந்திரா சௌந்தர்ராஜன் எழுதிய புத்தகங்கள்**
**தெரிந்த பாரதம் தெரியாத பாத்திரம்,**
**கிருஷ்ண ஜாலம், கடவுளைக் கண்டவர்கள் பெற**
1800 425 7700 **ல் தொடர்பு கொள்ளலாம்.**


"இவனைக் கொண்டு தேசிகரை சோதித்தால் என்ன?" என்றொரு கேள்வி.

"அடேய் சாரங்கா... வா இப்படி?"

"வந்தேன்... எதற்கு அழைத்தீர்கள்?"

"உன் வயது என்ன?"

"முப்பதுக்கும் மேல் என்பாள் என் அம்மா. சரியாகத் தெரியாது"

"வயது கூட தெரியவில்லை. நீ எல்லாம் எதற்கு வாழ்கிறாய்?"

"அதுதான் எனக்கும் தெரியவில்லை"

"போடா பைத்தியம். உனக்கு ரோஷமே இல்லையா? கோபமே வரமாட்டேன் என்கிறதே?"

"கோபப்பட்டு என்னாகப் போகிறது. என் அம்மா உங்களைப் போலத் தான் பேசுவாள். என் எதிர்காலத்தை நினைத்தால் பயமாக இருக்கிறது என்றும் கூறுவாள்"

"உண்மைதானே? உனக்கு மணமாகியிருந்தால் பல குழந்தைகளுக்குத் தகப்பனாகியிருப்பாய்"

"அப்படியா?"

"என்ன அப்படியா.. உனக்கு கல்யாண ஆசை கிடையாதா?"

"நிறையவே. என் மாமன் மகள் கோமளம் என்றால் உயிர். அவளை மணக்க நூறு பொன் வேண்டுமே.. என்னிடம் ஒரு பொற்காசும் இல்லையே.."

"இது தான் பிரச்னையா?"

"ஆமாம். அதனால் என் தாயும் பெருமாளிடம் தினமும் அழுகிறாள்"

"அப்படியா சங்கதி.. போகட்டும். நான் உனக்கு வழி காட்டுகிறேன்"

"என்ன அது?"

"உனக்கு வேதாந்த தேசிகரை தெரியும் தானே?"

"அவரைத் தெரியாதவரும் உண்டா... அவருக்கு என்ன?"

"அவரிடம் போ... அவர் வேறு பெருமாள் வேறு இல்லை என ஊரே சொல்கிறதே? எனக்கு மணமாக ஆயிரம் பொன்னுக்கு மேல் வேண்டும். எனவே மகாலட்சுமியிடம் கேட்டு வாங்கித் தாருங்கள்.. எனச் சொல்!"

" வாங்கித் தருவாரா?"

"அவர் தான் சுயம்பிரகாசர் ஆயிற்றே! அவர் கேட்டு மகாலட்சுமி மறுப்பாளா?"

"நிஜமாகவா.."

" நீ கேள். பிறகு தெரியும்! நாங்கள் அனுப்பி வைத்தோம் என்றும் சொல்"

"எனக்கு கோமளம் கிடைத்தால் போதும். இப்போதே செல்கிறேன்"

சாரங்கன் அவர்களின் சூது தெரியாமல் கள்ளம் இல்லாமல் வேதாந்த தேசிகனைத் தரிசித்து நடந்ததை தெரிவித்தான். அதைக் கேட்டதும் தேசிகருக்கு சூழ்ச்சி புரிந்தது.

அந்நிலையில் மணப்பாக்கத்து நம்பியும் தேசிகரை காண அங்கு நின்றார்!

**– தொடரும்**



# வரதா வரம்தா...

பக்தித்தொடர் 21

இந்திரா செளந்தர்ராஜன்



மணப்பாக்கத்து நம்பி ஒரு வேதாந்த தேசிகனை சந்திக்க வரும் போது தட்டு நிறைய மலைவாழை, மல்லி, முல்லை ஆகியவற்றை கொண்டு வந்திருந்தார்.

அப்போது வைணவப் பெருமக்களோடு காஞ்சிவாழ் மக்களும் அங்கிருந்தனர்.

தேசிகனின் வீட்டின் முன் பெரிய திண்ணை! தென்னங்கிடுகுகளால் வேயப்பட்ட பந்தலால் அவர் வீட்டு முகப்பு குளுமையாக இருந்தது. அதன் நிழலில் புத்த பிட்சு ஒருவரும் நின்றிருந்தார்! தேசிகனிடம் சிநேக பாவமும், உன்னத நோக்கமும் இருந்ததால் அவரைக் காண சமய பேதங்கள் இல்லை.

இந்நிலையில் தான் சாரங்கன் திருமணத்திற்காக பொன்



கேட்டு நின்றான்! எடுப்பார் கைப்பிள்ளையான அவனை, தேசிகர் மீது பொறாமை கொண்ட கும்பல் ஏவி விட்டுள்ளதை புரிந்து கொண்டனர். அவர்களில் ஒருவர் தேசிகரிடம் "சுவாமி.. சிலர் ஏவியதால் இவன் வந்திருக்கிறான். உங்களை அவமானப்படுத்துவது தான் அவர்களின் நோக்கம். இவனுக்காக எதுவும் செய்ய வேண்டாம்" என்றார்.

ஆனால் இன்னொருவரோ, "சுவாமி... பொறாமை கொண்டவர்களும் வெட்கும்படியாக நீங்கள் இவனுக்கு உதவ வேண்டும்" என்றார்.

வேதாந்த தேசிகனிடம் சலனம் இல்லை.

அமைதி காத்தார். மணப்பாக்கத்து நம்பியும், என்ன செய்யப் போகிறார் என்ற தவிப்போடு நின்றிருந்தார். சாரங்கனை அருகில் அழைத்தார் தேசிகர்.

" திருமணமானால் அத்தை மகளோடு சந்தோஷமாக வாழ்வாய் தானே?" எனக் கேட்டார்.

"ஆமாம் சுவாமி... ஆனால் அது உங்கள் கைகளில் அல்லவா உள்ளது?" என்றான்.

"கவலைப்படாதே... நூறு பொன்னுக்கு கோடி பொன்னே கிடைக்கப் போகிறது! மகாலட்சுமி அள்ளித் தர போகிறாள். அதைக் கொண்டு நல்ல விதமாக வாழ்வதோடு நற்செயல்களையும் நீ செய்திட வேண்டும்"

"தாராளமாகச் செய்கிறேன் சுவாமி"

"சரி.. என்ன நற்செயல்களைச் செய்வாய்?"

"அது...அது..."

"ஏன் தடுமாறுகிறாய்?"

"நற்செயல்கள் என்றால் என்ன? அதுவே எனக்குத் தெரியாதே?"

"பின்னர் எதை வைத்து செய்கிறேன் என்கிறாய்?"

"உங்களைக் கேட்டுத் தான்..."

அப்பாவியாக அவன் சொன்ன பதில் வேதாந்த தேசிகனை உருக்கியது.

"நீ தான் எத்தனை நல்லவன்!

''அம்மா... கருணா சாகரீ! பரம கல்யாணி!
திவ்ய மகாதேவி... நாராயணி... தாயே...தன்யனானேன்''
என மெய் சிலிர்த்தார். அன்று அவர் பாடியது தான்
'ஸ்ரீஸ்துதி' என்னும் மந்திர நூல்.



கபடம் உன்னிடம் இல்லை. சுத்தமான தங்கம் எப்படி நகையாகாதோ, அதுபோல மிக நல்லவனாலும் நினைத்ததை செய்ய முடியாது. வீரம், விவேகம், நுட்பம் என்ற உணர்வுகளும் ஆண்மகனுக்கு அவசியம். தீட்சையாக அவற்றை உனக்கு அளிக்கிறேன்.

அப்படியே என் தாயான திருமகளிடம் பொருளையும் யாசிக்கிறேன். எம்பெருமானே ஆதிபரம்பொருள் என்பது உண்மையானால், அவனின் ஆத்மபத்னி லட்சுமி தேவி என்பது உண்மையானால், என் யாசிப்பை ஏற்று அருள் புரிவாளாக'' என வேண்டி மகாலட்சுமி மீது பாடத் தொடங்கினார்.

தன்னை மறந்து விண்ணை நோக்கி கை கூப்பி பாடிய போது, பொன்மழை பொழிந்தது.

அதைக் கண்டவர்கள் சிலிர்த்து கூப்பிய கைகளும், பனித்த விழிகளுமாக வேதாந்த தேசிகரின் மேன்மை அறிந்து வணங்கினர்.

தேசிகருடைய விழிகளிலும் பனிப்பு!

''அம்மா... கருணா சாகரீ! பரம கல்யாணி! திவ்ய மகாதேவி... நாராயணி... தாயே... தன்யனானேன்'' என மெய் சிலிர்த்தார்.

அன்று அவர் பாடியது தான் 'ஸ்ரீஸ்துதி' என்னும் மந்திர நூல்.

ராஜாவுக்கு பிறந்த குழந்தை இளவரசனாகி பின் அவனே ராஜா ஆவது போல், கருட மந்திரத்தால் சித்தி பெற்ற தேசிகரிடம் பிறந்த இந்த மந்திரம் மகாலட்சுமியை வசீகரித்து வறுமையை விரட்டும் அருமருந்தானது.

அப்புறம் என்ன?

கேள்வி கேட்டவர்கள், பொறாமைப்பட்டவர்கள், சந்தேகப்பட்டவர்கள் வாயடைத்து நின்றனர். சாரங்கனுக்கு பொன்னை அள்ளிக் கொடுத்தார் தேசிகன்!

வறுமை மட்டுமல்ல, வெகுளித்தனம், அறியாமை என எல்லாம் அவனை விட்டுப் போனது. அவனும் பொன்னானவன் ஆனான்.

எல்லாவற்றையும் பார்த்தபடி எம்பெருமானாக கருதி தேசிகனின் காலில் விழுந்து வணங்கினார் மணப்பாக்கத்து நம்பி.

தேசிகனும் ஆட்கொண்டார்.

''சுவாமியை நான் அறியலாமா?''

''அடியேன் மணப்பாக்கத்தை சேர்ந்த நம்பி''

''நம்பி என்ற பெயரே எதையும் நம்பு – அதற்கான எதிரான சிந்தனைகளை துளியும் கொள்ளாதே என்ற நேர்மறை எண்ணத்தின் விளைவு தான். அப்பெயரை தாங்கள் கொண்டிருப்பதும் நன்றே!''

''செரிவான விளக்கம்! எம்பெருமான் தரிசனம் பெற காஞ்சிக்கு வந்தேன். எம்பெருமானிடம் ஒரு பிரார்த்தனையை முன் வைத்தேன்.

கலிமாயை உலகை ஆட்டிப் படைக்கிறது. எது நல்லது,கெட்டது என்ற தெளிவின்றி மக்கள் பல வழிகளில் செல்கின்றனர். அரிதான மனிதப் பிறவியின் நோக்கமே மீண்டும் பிறவாத நிலை கண்டு எம்பெருமானைச் சேர்வதே... தவறான வழியால் பிறப்பை வீணாக்காமல் வைணவ நெறியை போதித்து அவர்களை எம்பெருமானின் திருவடியில் சேர்ப்பதே லட்சியம்!''

''அருமையான லட்சியம். உயர்வான நோக்கு. எம்பெருமான் உம்மை வழி நடத்தட்டும்''

''அவனருள் மட்டும் போதாது. கலியில் கடைத்தேற்றம் ஆச்சார்ய புருஷர்களால் தான் தங்களின் ஆசியும், உபதேசமும் முக்கியம்''

''என் ஆசி எப்போதும் உண்டு''

''ஆச்சார்ய புருஷரே.. தங்களிடம் மேலும் சில கருத்துக்களை பகிர விரும்புகிறேன்''

''கூறுங்கள்''

''கலிமாயை என முன்பே சொன்னேன். அதன் விளைவு இன்று நம் மண்ணில் பலவழிப் போக்குகள். வேதங்களை கண்களாக கருதும் நிலையில், அவை வெறும் ஏடுகள் என்பாரும் உண்டு. இந்த மண்ணைச் சாராத அந்நியர்கள் இமயம் வரை வந்து பாரதத்தின் வடபகுதியை கட்டுக்குள் கொண்டு வந்து விட்டனர். புண்ணிய பூமியின் தென்பகுதி சற்று பாதுகாப்பாக இருந்தாலும் அதற்கும் ஆபத்து நேரும் எனத் தோன்றுகிறது''

''எனக்கும் அந்த எண்ணம் இருக்கிறது''

''அதற்காக நாம் ஏதாவது செய்ய வேண்டுமே?''

''நிச்சயமாக''

'' ஒரு முடிவு செய்துள்ளேன். வைணவ சித்தாந்தத்தை கற்றுத் தெளிந்து அதன் மறைவுபொருளை பிறருக்கு போதிக்கவும், அதற்காக உயிரை இழக்கவும் சித்தமாயுள்ளேன்!''

''மேலான எண்ணம். முயற்சி சிறக்கட்டும்''

''இதற்காக நான் ஸ்ரீரங்கம் புறப்பட்டேன். அங்கு பிள்ளைலோகாச்சாரியர் என் குறை தீர்ப்பார் என்பது வரதன் இட்ட கட்டளை! தங்களை கண்டதும் உங்களாலேயே குறை தீரும் என மனதிற்குப் படுகிறது''

மணப்பாக்கம் நம்பி சொன்னதைக் கேட்டு வேதாந்த தேசிகனிடம் ஒரு சலனம்!

தொடரும்

இந்த தொடரின் ஆசிரியர்
இந்திரா சௌந்தர்ராஜன் எழுதிய புத்தகங்கள்
தெரிந்த பாரதம் தெரியாத பாத்திரம்,
கிருஷ்ண ஜாலம், கடவுளைக் கண்டவர்கள் பெற
1800 425 7700 ல் தொடர்பு கொள்ளலாம்.



# வரதா வரம்தா...

பக்தித்தொடர் 22



இந்திரா சௌந்தர்ராஜன்

**வே**தாந்த தேசிகன் முகத்தில் பரவிய சலனம் மணப்பாக்கத்து நம்பியை சிந்திக்க வைத்தது.

"சுவாமி... நான் தவறாக பேசி விட்டேனா?"

"ஆம்...தவறாகத் தான் பேசி விட்டீர்"

வேதாந்த தேசிகன் அதிர்ச்சியளித்தார்.

"அது என்ன என்று என்னை உணரச் செய்வீரா?"

"சற்று பின்னோக்கி சிந்தித்தால் தங்களுக்கே தெரிய வருமே?"

"பின்னோக்கிச் சிந்திப்பதா... புரியவில்லை சுவாமி"

"என்னைக் காண வரும் முன் எங்கு சென்றதாகக் கூறினீர்?"

"அத்திகிரி எம்பெருமான் கோயிலுக்கு..."

"அங்கே வரதன் இட்ட கட்டளை என்ன?"

"ஸ்ரீரங்கம் சென்று பிள்ளைலோகாச்சார்யாரிடம் குறையை தீர்த்துக் கொள்ள கட்டளையிட்டார்"

"அவர் எப்படிப்பட்டவர் என அறிவீரோ?"

"அந்த பெயரையே எம்பெருமான் மூலம் தான் கேள்விப்பட்டிருக்கிறேன். நான் எப்படி அறிந்திருக்க முடியும்?"

"இப்படியிருக்கும் நிலையில், மறைபொருள் உள்ளிட்ட சகலத்தையும் என்னிடம் அறிய விரும்புவது சரியா?"

"உங்கள் அருள்திறத்தைத்தான் நேரிலேயே கண்டேனே..."

"இந்த உலகம் புறச்செயல்பாடுகளை பார்த்து மயங்குகிறது. அகச்செயல்பாடுகள் தான் முக்கியம் என்பதை தாங்கள் அறியவில்லையோ?"

"தாங்கள் என்ன கூற வருகிறீர்கள்?"

"பிள்ளைலோகாச்சார்யார் அவதார புருஷர். காஞ்சி வரதனின் மானுட ஜென்மம்"

"தாங்கள் அவரை இந்தளவுக்கு அறிந்திருப்பது எனக்கு தெரியாது என்னை மன்னியுங்கள்..."

"மன்னிக்க ஒன்றுமில்லை. வைணவன் ஒரே குறியாய் ஒரே போக்கில் செல்ல வேண்டும். ஒரு தெய்வம் – ஒரு போக்கு – ஒரே பிறப்பு இதுவே வைணவனின் லட்சணங்கள்!"

"ஒரு தெய்வம் சரி – அதை நோக்கிய ஒரே போக்கும் சரி – ஒரே பிறப்பு என்பது புரியவில்லையே..."

"வைணவனுக்கும் ஒரு பிறப்பு தான்... பல பாதை – பல போக்கு கிடையாது. கூடவும் கூடாது. ஒரு தெய்வத்தை மனதில் நிறுத்தி ஒரே பாதையில் சென்று எம்பெருமான் திருவடிகளை அடைந்து விடுவாருக்கு ஒரு பிறப்பு தானே?"

"ஆகா...அற்புதமான விளக்கம். இப்போது நான் என்ன செய்ய வேண்டும்"

"ஒன்றுமில்லை. எம்பெருமான் சொற்படி ஸ்ரீரங்கம் சென்று பிள்ளைலோகாச்சார்யாரிடம் உங்களை ஒப்படையுங்கள். மற்றதை அவர் பார்த்துக் கொள்வார்"



''தங்களுக்கு தங்க மனசு! அதனால் தான் நான் தங்களை ஆச்சார்ய வந்தனம் செய்ய விரும்பிய போதும், தாங்கள் என்னை மடைமாற்றம் செய்து லோகாச்சார்யாரை நோக்கி செலுத்துகிறீர்கள். அவர் எம்பெருமானின் மறுவடிவம் என்பதை புரிய வைத்தீர்கள்..''

''நல்லது! ஸ்ரீரங்கம் புறப்படுங்கள். காலம் தாழ்த்துவது சரியல்ல. என் பூரண ஆசிகள்''

வேதாந்த தேசிகர் அட்சதை தூவி வாழ்த்தி விட்டு, ''பிள்ளைலோகாச்சார்யாரை நான் நலம் விசாரித்ததாக சொல்லுங்கள். அப்படியே சோதனை காலம் நெருங்க உள்ளது, அப்போது வைணவ நெறிக்கு பங்கமின்றி பொறுப்புடன் நடப்பது அவசியம்'' என்றும் சொல்லுங்கள்.

''சுவாமி! பரிட்சைக்காலம் என்றால்...''

''அவர் புரிந்து கொள்வார்''

''நான் அறியக் கூடாதா?''

''அந்நிய நாட்டவர் குறித்து வருந்தினீரே?''

''ஆம்''

''அவர்கள் இங்கு வரக் கூடும் அல்லவா?''

''நிச்சயமாக..''

''அதைத் தான் பரிட்சை காலம் என்றேன்''

''அது கொடிய காலம் ஆயிற்றே. அது எப்படி பரிட்சைக்காலமாகும்?''

''அது எந்தக் கோணத்தில் இருந்து பார்க்கிறோம் என்பதை பொறுத்தது''

''என் கோணம் அப்படியாயின் தவறா?''

''ஆம் மிலேச்சர்களின் மார்க்கமும், வழிமுறைகளும் வேறு. நம் நெறிமுறைகள் அவர்களுக்கு ஏற்புடையதாகவும் இருக்காது.''

''என்ன சொல்ல வருகிறீர்கள்... புரியவில்லையே''

''கோபமோ, வெறுப்போ தேவையில்லை. அவர்கள் நம்பிக்கை அவர்களுக்கு! நம் நம்பிக்கை நமக்கு! நம் நெறி விட்டு விலகாமலும், நம்பிக்கை இழக்காமலும் திகழ வேண்டும் என்று மட்டும் கூறுங்கள்!''

''நிச்சயம் சொல்கிறேன். ஆனாலும் பூடகமாக ஏதோ கூறுவது போல் தான் தோன்றுகிறது''

''ஆம்.. ஆனால் நடக்க நடக்க எல்லாம் தெரிய வரும்''

''ஒன்று மட்டும் புரிகிறது. பெரும் சோதனை காத்திருக்கிறது என்று''

''நான் பரிட்சை என்றேன். நீங்கள் சோதனை என்கிறீர்கள். ஒன்றும் வேறுபாடு இல்லை. எம்பெருமான் நமக்காக அவதாரம் எடுத்து, சோதனைகளையும் சந்தித்திருக்கிறான். நாமோ அதை மனித வாழ்வின் வேறு வடிவில் சந்திக்கப் போகிறோம்.. அவ்வளவு தான்!''

''பயமாக உள்ளது சுவாமி!''

''சுதர்சன சக்கரத்தை தியானியுங்கள். பயம் ஓடி விடும். அனுமனைப் பின் தொடருங்கள். துணிவும், அறிவுத் தெளிவும் உருவாகும்''

வேதாந்த தேசிகர் பொடி வைத்தே பேசினார். அதை அசை போட்டபடியே மணப்பாக்கத்து

> சுதர்சன சக்கரத்தை தியானியுங்கள். பயம் ஓடி விடும். அனுமனைப் பின் தொடருங்கள். துணிவும், அறிவுத் தெளிவும் உருவாகும்''

நம்பியும் புறப்பட்டு ஸ்ரீரங்கம் அடைந்தார்.

ஸ்ரீரங்கம் காட்டழகிய சிங்கரின் சன்னதி. கல் மண்டபம் ஒன்றில் பிள்ளைலோகாச்சார்யார் சீடர்களுக்கு பாடம் நடத்தியபடி இருந்தார். மணப்பாக்கத்து நம்பி வந்திருப்பதை யாரும் கவனிக்கவில்லை.

''சீடர்களே! எம்பெருமான் மீது பக்தி செய்யவே பிறப்பு அருளப்பட்டுள்ளது. ஆறாவது அறிவு என்பது மனிதருக்கு மட்டுமே! பெருகிப் பாயும் நதியை 'ஆறு' என்போம். ஆறு நிலைப்பாட்டை உடையது என்பதால் காரணப் பெயராக ஆறு என்கிறோம். கடல்நீர் ஆவியாதல் முதல் நிலை, மேகமாதல் இரண்டாம் நிலை, மேகம் சூல் கொள்ளுதல் மூன்றாம் நிலை, மேகம் மழையாக பொழிந்து அருவியாக பாய்வது ஐந்தாம் நிலை, பாய்ந்த நீர் கடலில் கலப்பது ஆறாம் நிலை...

இந்த ஆறு நிலை கொண்டதால் அது ஆறு எனப்படுகிறது. இதில் நீராடுவது மேலான செயலாக கருதப்பட காரணம் சமுத்திர சங்கமமே! ஆற்றில் நாம் நிற்கும் சமயம் வலப்புறம் மலையும், இடப்புறமும் கடலும் இருப்பதாக பொருள். ஒன்று உயர்ந்தது. இன்னொன்று ஆழமானது.

நடுவில் உள்ள ஓட்டம் சமநிலையைச் சொல்வது. ஆறு தன்னுள் இப்படி மூன்று நிலைகளைக் கொண்டுள்ளது. நமக்கும் அந்த நிலை பற்றிய அறிவும், புரிதலும் வேண்டும். அதை ஒரு ஆறு மறைவாக உணர்த்துகிறது.

அது எப்படி கடலை அடைகிறதோ, அதை போல ஆறு அறிவு கொண்ட மனிதர்களான நாமும் கடலை இருப்பிடமாகக் கொண்ட எம்பெருமானை அடைய வேண்டும். அதற்கே இந்த வாழ்வு... இப்படிப்பட்ட வாழ்வை நாம் வீணில் கழித்து, உடம்புக்கு அடிமைப்பட்டு உண்டும் உறங்கியும் கழிக்கலாமா?'' பிள்ளைலோகாச்சார்யார் கேட்ட கேள்வி மணப்பாக்கத்து நம்பியை சிந்திக்க வைத்தது.

''ஆகா.. எளிய விளக்கம். ஆற்றை தொட்டு கடலிடம் சென்று பின் அதை பாற்கடலில் பள்ளி கொண்ட எம்பெருமானோடு தொடர்புபடுத்திச் சொன்ன விளக்கம் தான் என்னே!''

வியந்தார் மணப்பாக்கத்து நம்பி. அப்போது குதிரைகள் ஓடும் குளம்படிச் சத்தம்.. குதிரைகளின் கனைப்புச் சப்தமும் கேட்டது ஏதோ அசம்பாவிதம்...?

தொடரும்

இந்த தொடரின் ஆசிரியர்
இந்திரா சௌந்தர்ராஜன் எழுதிய புத்தகங்கள்
**தெரிந்த பாரதம் தெரியாத பாத்திரம், கிருஷ்ண ஜாலம், கடவுளைக் கண்டவர்கள்** பெற
1800 425 7700ல் தொடர்பு கொள்ளலாம்.



# வரதா வரம்தா...

பக்தித்தொடர் **23**



இந்திரா சௌந்தர்ராஜன்

**கு**திரைகளின் கனைப்புச் சத்தம் கேட்ட நிலையில் எல்லோரது கவனமும் சிதறியது. மெல்லிய பதட்டமும் உருவானது. மணப்பாக்கத்து நம்பி என்ன நடக்கிறது என காணச் சென்றார்.

நான்கு குதிரைகளின் மீது இடுப்பில் நீண்ட வாளுடன் வீரர்கள் நின்றிருந்தனர். அவர்களில் ஒருவன் மணப்பாக்கத்து நம்பியை அருகில் அழைத்தான். நம்பியும் நெருங்கிய போது கேலியாக சிரித்தான். நைந்த தமிழில் ''யார் நீ?'' எனக் கேட்டான்.

நம்பி பதிலுக்கு, ''இது நான் கேட்க வேண்டிய கேள்வி'' என்றார்.

அவன் திகைத்தான்.

''என்னைப் பார்த்தா யார் எனக் கேட்கிறாய்.? பார்த்தால் தெரியவில்லை! தேவகிரி எனப்படும் தவுலதாபாத் சக்கரவர்த்தியின் படைக்காவலன். மதுரையில் இருந்து கொண்டு இந்த நாட்டை காவல் காப்பவன். முதலில் எனக்கு சலாம் போடு. அப்புறம் பேசு!'' என அழுத்தமுடன் பேசினான்.

மணப்பாக்கத்து நம்பி சற்றும் அசரவில்லை.

''நானொரு ஸ்ரீவைணவன். எம்பெருமானை அன்றி மற்றவரை வணங்கத் தேவையில்லாதவன். இது அகந்தை எண்ணம் அல்ல. இதுவே என் மார்கம்.

ஏதோ காவல் காக்க வந்திருப்பதாகச் சொன்னாய். என் போன்ற வைணவருக்கு எல்லாம் ஒரே காவல்காரன் அரங்கப்பெருமான் மட்டுமே'' என்றார். இந்த பேச்சு உள்ளே இருந்த பிள்ளைலோகாச்சார்யாரின் காதுகளிலும் விழுந்தது. அவரது முகத்தில் பெருமிதம். மற்றவர்கள் முகங்களிலோ அச்சம் வெளிப்பட்டது.

வெளியே பேச்சு தொடர்ந்தது.

''நீ அதிகம் பேசுகிறாய்...நாங்கள் இந்த நாட்டை ஆள்பவர்கள். நீ குடிமகன் என்றால் காவல் காப்போரிடம் பணிவாக பேச வேண்டும்''

''இந்த நாட்டை ஆள்பவர்களா? பார்த்தால் தெரியவில்லையே! ஒருபுறம் பாண்டிய மண்டலம், மறுபுறம் சோழ மண்டலம். இடையில் திருவரங்கம்! உன்னைப் போல பேசுபவரையோ, தோற்றம் கொண்டவரையோ நாங்கள் பார்த்ததில்லையே?''

''நான் எவ்வளவு சொல்லியும் பணிவில்லாமல் பேசுகிறாயே! உன் போல பேசிக் கொண்டிருக்க மாட்டேன். இனி என் வாள் பேசும். கபர்தார்!'' என எச்சரித்தபடி குதிரையில் புறப்பட்டான். மற்ற வீரர்களும் நம்பியை முறைத்தபடி பின்தொடர்ந்தனர்.

நம்பியிடம் லேசான சலனம்!

அதற்குள் பிள்ளைலோகாச்சாரியாரின் சீடர்கள் நம்பியை சூழ்ந்தனர்.

'தாங்கள் யார் என அறியலாமோ?'' எனத் தொடங்கினார் ஒருவர்.

அடியேன் திருநாமம் நம்பி; மணப்பாக்கம் சொந்தஊர். என்னை மணப்பாக்கத்து நம்பி என அழைப்பர்''

''சந்தோஷம்... துணிச்சலுடன் பேசினீர்கள். உங்களைக் கண்டு வியக்கிறோம்''

''தங்களை ஆச்சார்யன் அழைக்கிறார்.

மணப்பாக்கத்து நம்பியும் பிள்ளைலோகாச்சாரியாரின் முன்னர் விழுந்து வணங்கினார். பின் எழுந்து 'அபிவாதே' கூறத் தொடங்கினார். அதில் அவரது குலம், கோத்ரம் முதல் எல்லாம் வெளிப்படவும் பிள்ளைலோகாச்சார்யாரின் முகம் மகிழ்ச்சியில் பிரகாசித்தது.

''அமரப்பா...''

''இருக்கட்டும் சுவாமி''

''நீ நின்றால் என் கால் வலிக்கும்''

''அப்படியாயின் அமர்கிறேன். உங்கள் மீது துரும்பு கூட விழக் கூடாது''

''அடேயப்பபா... என் மீது உனக்கு எத்தனை பக்தி, பரிவு! நான் உனக்கு எதுவுமே செய்யவில்லையே?''

''எம்பெருமானுக்குச் செய்கிறீர்களே... ஸ்ரீவைஷ்ணவத்துக்கு செய்கிறீர்களே... சீடர்களுக்குச் செய்கிறீர்களே... அது போதாதா?''

''உம்... நீ சராசரி மனிதன் இல்லை; நன்றாகப் பேசுகிறாய்! யார் உனது குரு?''

''அதற்காகவே தங்களிடம் வந்துள்ளேன்''

''உன் வசிப்பிடம்...?''

''காஞ்சிக்கு அருகிலுள்ள மணப்பாக்கம்''

''ஓ.... நீ நம்மவனோ?''



www.magzstamil

பிள்ளைலோகாச்சாரியார் அப்படிச் சொல்வதைக் கேட்ட சீடர்கள் வியந்தனர். எதை வைத்து சொல்கிறார் என்று... ஆனால் நம்பிக்கு அந்த ஒரு சொல் ஓராயிரம் பொருளைத் தந்து விட்டது. எம்பெருமானின் வரம் தரும் சொரூபம் வரதராஜம்! அந்த வரதராஜனின் அம்சமே பிள்ளைலோகம்! அதை வைத்தே அவர் 'நம்மவனோ' என்றார் என்பதை புரிந்து கொண்ட நம்பி தான் வேதாந்த தேசிகரைச் சந்தித்து ஆசி பெற்றது முதல், அவர் தன்னை அனுப்பித் வைத்ததோடு, தன் வணக்கங்களையும் சொல்லச் சொன்னதையும் அறிந்து பிள்ளைலோகாச்சாரியாரிடம் ஒரே பரவசம்.

''காஞ்சியின் வைணவ ஒளியாய் திகழ்கிறார் வேதாந்த தேசிகர்! அவர் எனக்குச் சொன்ன செய்திகளையும் விளங்கிக் கொண்டேன். மிலேச்சர்(அந்நியர்) குறித்த அவர் அச்சத்திற்கு சாட்சியாகத் தான் அவர்களில் சிலர் இப்போது வந்து பார்த்து விட்டுச் சென்றுள்ளனர். நீ அவர்களிடம் காட்டிய தீரத்தையும் கண்டேன். சோதனைக் காலம் வந்து விட்டது''

என பிள்ளைலோகாச்சாரியார் வருத்தம் பொங்கச் சொன்னதோடு நேரே காட்டழகிய சிங்கரின் சன்னதி முன் சென்று நின்றவராக ''எம்பெருமானே! நரசிம்மனே... இந்த சோதனையான காலத்தில் நீ தானப்பா துணை''

''என் பெருமான் இருக்க எவரைப் பற்றியும் நினைத்து வருந்தத் தேவையில்லை சுவாமி''

''நீ என்ன சொல்ல வருகிறாயப்பா?''

''வருந்த வேண்டாம். எல்லாம் நல்ல விதமாக முடியும் என கூற விரும்புகிறேன். நரசிம்ம சுவாமி வழி காண முடியாத இடத்திலும் வழி காண்பவர் என தாங்களே கூறியுள்ளீர்களே சுவாமி''

''உண்மை தான்! நான் வருந்துவது சுயநலத்திற்காக அல்ல...சாமான்ய மனிதர்கள் மற்றும் அவர்களின் நெறிமுறைகள் என்னாகும்? அத்துடன் இக்கோயில் என்னாகும்? என எண்ண வேண்டியுள்ளது''

''கலங்காதீர்கள்...அப்படியே என்னை தங்களின் சீடனாக ஏற்க மறுக்காதீர்கள்'' என்றார் நம்பி.

''உன்னை நான் பார்த்ததும், நீ என் சீடனாகி விட்டாய். கவலை வேண்டாம். நமக்கு பல கடமைகள் உள்ளன. அதை மறக்க வேண்டாம்''

''தன்யனானேன் சுவாமி! தன்யனானேன்''

நம்பி மீண்டும் வணக்கம் சொன்ன போது பிள்ளைலோகாச்சாரியாரின் சகோதரர் அழகிய மணவாளப் பெருமாள் அங்கு வந்தார்!

''வா மணவாளா... இதோ இவர் மணப்பாக்கத்து நம்பி! எனக்காக காஞ்சியில் இருந்து வந்திருக்கிறார். வைணவ சம்பிரதாயத்தை கற்க விரும்புகிறார்''

''மகிழ்ச்சி... வைணவனாக திகழ காஞ்சியில் இருந்து வந்ததை எண்ணி மகிழ்கிறேன் என் ஆசிகள்'' என்றார் அழகிய மணவாளப் பெருமாள்.

''என் விருப்பம் இவ்வளவு எளிதாக நிறைவேறும் என எண்ணவில்லை. எம்பெருமானின் கருணையே கருணை'' என்றார் நம்பியும். அப்போது அலறியபடி ஓடி வந்தார் ஒரு வைணவர்.

''சுவாமி...சுவாமி... ஆபத்து... ஆபத்து!'' என்பது அவரின் அச்சக்குரலாக ஒலித்தது.

**தொடரும்**



இந்த தொடரின் ஆசிரியர்
இந்திரா சௌந்தர்ராஜன் எழுதிய புத்தகங்கள்
**தெரிந்த பாரதம் தெரியாத பாத்திரம், கிருஷ்ணா ஜாலம், கடவுளைக் கண்டவர்கள்** பெற 1800 425 7700ல் தொடர்பு கொள்ளலாம்.



# வரதா வரம்தா...

பக்தித்தொடர் 24



இந்திரா சௌந்தர்ராஜன்

**அ**ந்த வைணவரின் குரல் கேட்டு பிள்ளைலோகாச்சார்யாரும், மணப்பாக்கத்து நம்பியும் ஏறிட்டு பார்த்தனர்.

''சுவாமி... காவிரிக் கரையிலும், கொள்ளிடக் கரையிலும், டெல்லி சுல்தானின் படைகள் முகாமிட்டுள்ளன. புனிதக் காவிரியில் அவர்கள் குதிரைகளை குளிப்பாட்டி சுத்தப் படுத்துகின்றனர். கேள்வி கேட்டால் சிகையை வாளால் வெட்டுவதோடு, உயிரையும் பறிப்போம் என எச்சரிக்கின்றனர்'' என்றார். பிள்ளைலோகாச்சார்யார் மனம் சலனம் அடைந்தது. அப்போது தான் வேதாந்த தேசிகன் எச்சரிக்கை செய்த விஷயம் மணப்பாக்கத்து நம்பியின் நினைவுக்கு வந்தது.

அதுவரை அமைதியாக இருந்த சத்சங்கம், அந்த நொடி முதல் சஞ்சலம் மிக்கதாக மாறியது.

சுல்தானின் படைகள் முகாமிட்டதை கூறிய வைணவர் மேலும் தொடர்ந்தார்.

''சுவாமி...மலைக்கோட்டையை சுற்றிலும் கூட சுல்தான் படை வீரர்களின் நடமாட்டம் தானாம். சுற்றுவட்டாரத்தில் இருந்து வருவோர் சுங்கம் செலுத்தி விட்டுத் தான் ஊருக்குள் நுழைய முடியும்! நாம் பயணத்திற்காக எல்லை தாண்டினால் கூட சுங்கம் செலுத்த வேண்டுமாம்...

இப்படி இருந்தால் எப்படி குணசீலம், கும்பகோணம், தஞ்சாவூருக்கு நாம் போக முடியும்? எனக் கேட்டார்.

மணப்பாக்கத்து நம்பி உணர்ச்சிப்பிழம்பாகி வெடித்தார்.

''இது அநியாயம், அக்கிரமம்... இவர்கள் யார் நமக்கு வரி விதிக்க?''

''இந்த பரத கண்டம் இனி அவர்களின் வசமாம். இதன் அரசன் எவ்வழியோ அவ்வழி குடிகள் செல்ல வேண்டுமாம்...''

''அவன் வழி எதுவென்றே நமக்கு தெரியாதே?''

''அவன் சொல்வதுபடி நடந்தால் போதுமாம் அந்த வழி தெரிந்து விடுமாம்''

''கேட்காவிட்டால் கசையடி, உணவும் கிடைக்காது பட்டினியால் இறக்க நேரிடும்''

''பிச்சை கேட்டு வாழ்வதற்கு இறப்பது மேல்''

''இது என்ன கேட்பார் இல்லாத தேசமா?''

அங்கே பெரும் விவாதம் எழுந்தது.

பிள்ளைலோகாச்சார்யார் அரங்கன் சன்னதி நோக்கி நடந்தார். நம்பி பின்தொடர்ந்தார்.

வழியில் பேச முயன்ற போது நம்பியைத் தடுத்த பிள்ளைலோகாச்சார்யார் உதட்டில் கைவைத்து 'மவுனமாக வா' என்றார்.

ஸ்ரீரங்கத் தெருக்களில் அமைதி நிலவியது.

பல்லக்குகள், தேர்கள், காளைகள் பூட்டிய திறப்பு வண்டிகள் என பலவும் போய் வந்த வண்ணம் இருக்கும்! சத்திரங்களுக்கு வெளியில் தர்மம் பெற பலரும் காத்திருப்பர். அங்கு



பயணிகள் தங்கியிருப்பர். ஒட்டகங்கள் கண்ணில் பட்டால் வடமேற்கில் இருந்து வந்திருப்போர் அதிகம் என்று பொருள். அலங்கரிக்கப்பட்ட காளைகளோடு, சித்திரவேலைப்பாடு கெண்ட துணிகளால் ஆன தொங்கு குழாய்களும், கொடிகளும் கண்ணில் பட்டால் தென்மேற்கில் இருந்து வந்திருப்பவர்கள் என்று பொருள்.

இவர்களுக்கு நடுவில் மொழி பெயர்க்கும் துபாஷிகள் பயணிகளுக்கு வழிகாட்ட காத்திருப்பர். ஊர்க்காவல் படைவீரர்கள், வேத விற்பன்னர்கள் என ஊரே திமிலோகப்படும்.

ஆனால் இன்றோ ஊரே வெறிச்சோடி இருந்தது. சுல்தானின் படைவீரர்கள் சிலர் குதிரைகளில் விரைந்து சென்றனர். சிலர் முறைத்த படியும், காலால் எட்டி உதைப்பதுமாக அராஜகத்திலும் ஈடுபட்டனர்.

பிள்ளைலோகாச்சார்யார் அதை பார்த்தபடி நடந்தார். நம்பிக்கு ரத்தம் கொதித்தது. வடக்கு கோபுர வாசல் வழியாக நுழைந்த போது அங்கு ஆட்கள் இல்லை.

பிள்ளைலோகாச்சார்யார் அரங்கன் சன்னதி மூன் நின்றார்.

வாயிலில் அர்ச்சகர் மட்டும் சோகமாக நின்றிருந்தார்.

''அர்ச்சகரே..யாரும் வரவில்லையே என்ற ஆத்திரமா? இல்லை ஆதங்கமா?''

''எதிர்காலத்தை எண்ணிய கலக்கம்... சுவாமி''

"கலக்கமா... அரங்கனிடம் பணியாற்றுபவருக்கா?"

''நானும் மனிதன் தானே? மூற்றிலும் நம் வழிபாட்டை தன் வழிபாடாக மாற்ற நினைத்திடும் காலமாக அல்லவா உள்ளது''

'' நீங்களே துவண்டால் அரங்கன் ஆபத்துக்கு உதவ மாட்டான் என்றாகாதா?''

''நீங்கள் சொல்வது உண்மை. எங்கே அவன் உதவினான்? அவன் உதவியிருந்தால் அந்நியர் கூட்டம் வந்திருப்பார்களா?''

'' நம்பிக்கை இழந்து விட்டீர்களா?''

'' அந்த பொருளில் சொல்லவில்லை... ஏதாவது அதிசயம் நடக்காதா, இவர்கள் துரத்தப்பட மாட்டார்களா என தவித்துக் கொண்டிருக்கிறேன்''

''அதிசயம் ஏதும் நடக்காது.... அதை நாம் எதிர்பார்ப்பது கூட சரியில்லை. அமைதியாக இருங்கள். இதுவரை நடந்த எல்லாமும் நன்றாகவே நடந்தது. இனி நடப்பதும் அப்படியே! பயம் வேண்டாம்''

இந்த தொடரின் ஆசிரியர்
இந்திரா சௌந்தர்ராஜன் எழுதிய புத்தகங்கள்
**தெரிந்த பாரதம் தெரியாத பாத்திரம், கிருஷ்ண ஜாலம், கடவுளைக் கண்டவர்கள்** பெற
1800 425 7700 ல் தொடர்பு கொள்ளலாம்.

''எந்த நம்பிக்கையில் இப்படி சொல்கிறீர்கள்? மதுரையில் பாண்டிய அமைச்சரவையை சேர்ந்தவர்கள் ஒருவர் கூட இல்லை. கொல்லப்பட்டார்களா இல்லை, உயிருக்கு பயந்து ஓடி விட்டார்களா தெரியவில்லை. சோழத்திலும் அதே நிலை தான்! புதிய கொடி, புதிய ஆட்சி, புதிய நிர்வாகம், புதிய கொள்கைகள் என ஊரெங்கும் இதே பேச்சு தான்.''

'' பேசட்டுமே? நெருப்பு என்று சொன்னால் வாய் வெந்து விடுமா?''

'' உங்களுக்கு நடப்பு காலத்தின் மீது எந்த வருத்தமும் இல்லையா...?''

"நிறைய இருக்கிறது. எம்பெருமான் கைவிட மாட்டான் என்ற நம்பிக்கையும் உள்ளது...''

''கைவிடமாட்டானா... அப்படியானால் இப்போது நடப்பதெல்லாம் என்ன?''

''பெரிதாக என்ன நடந்து விட்டது?''

''வடக்கில் பெரும் கொலையும், கொள்ளையும் சாதாரணமாக நடக்கிறதாம்... கோயில்கள் இடிக்கப்படுகின்றன! கோயில் சொத்துக்கள் சூறையாடப்படுகின்றன! சிலைகள் உடைக்கப்படுகின்றன! புகழ் பெற்ற கோயில்கள் அழிக்கப்பட்டு விட்டன. அங்கே தொடங்கிய இந்த அழிவு இங்கும் வந்து விட்டது. இப்போது படை மட்டும் வந்துள்ளது.

அதிகார மட்டத்தில் உள்ளவர்கள் இன்னும் வரவில்லை. அவர்கள் வந்தபடி இருக்கிறார்களாம். அப்படி அவர்கள் வந்தால் என்னாகும் என்றே என்னால் கற்பனை செய்ய முடியவில்லை''

''எதுவும் ஆகாது.. நாம் பக்தி, ஒற்றுமையால் சகலத்தையும் வெற்றி கொள்வோம். கவலை வேண்டாம்''

''எப்படி கவலைப்படாமல் இருக்க முடியும்? உயிருக்கு பயந்து தினமும் கோயிலுக்கு வருபவர்கள் கூட வரவில்லை''

பிள்ளைலோகாச்சார்யார் சிறிதும் தளரவில்லை.

**தொடரும்**

நம்பர் 1 ஆன்மிக இணையதளம்
**temple.dinamalar.com**
தினமலர்
உண்மையின் உரைகல்
சைவ சித்தாந்தம் ▪ சிவ ஆகம குறிப்புகள் ▪
இலக்கியங்கள் ▪ 64 திருவிளையாடல் ▪
64 சிவ வடிவங்கள் ▪ உத்திர காமிக ஆகமம் ▪
இன்னும் ஏராளமான ஆன்மிக தகவல்களுடன்...

தொடர்புக்கு :
**temple@dinamalar.in**
இந்த QR CODE ஐ ஸ்கேன் செய்து ஆன்மிக இணையதளத்தை பார்க்கலாம்.



# வரதா வரம்தா...

பக்தித்தொடர் 25

இந்திரா சௌந்தர்ராஜன்



மன உறுதியுடன் ஸ்ரீரங்கப்பெருமானின் சன்னதியில்வழிபட்டார்பிள்ளைலோகாச்சார்யார். கண்ணீரைத் துடைத்துக் கொண்டு நிமிர்ந்த பிள்ளைலோகாச்சார்யாரின் எதிரில் மணப்பாக்கத்து நம்பி நின்றிருந்தார்.

''சுவாமி....''

''சொல்லப்பா...ஏதோ கேட்க நினைக்கிறாய்?''

''எம்பெருமான் என்ன சொன்னான் சுவாமி?''

''அப்படியானால் அவன் இப்போது என்னிடம் பேசினான் எனக் கருதுகிறாயா நீ?''

''அதில் எனக்கு சந்தேகமில்லை...'' நம்பியின் பதில் கேட்டு சிரித்தார் பிள்ளைலோகாச்சார்யார்.

''உங்கள் சிரிப்பில் பல பொருள் தெரிகிறது.''

''புத்திசாலி...முகக்குறிப்பை நன்றாக புரிந்து கொள்கிறாய்! வாழ்க நீ?''

''வாழ வழி இருக்கிறதா சுவாமி?'' நம்பியின் கேள்வி சற்று இடிக்கவே செய்தது. நடந்தபடியே தான் பேசினார். எதிரில் கிளி மண்டபம்! அங்கும் பேரமைதி! அவைகளுக்கும் சோதனையான கால கட்டம் என்பது தெரிந்ததோ என்னவோ?

''நம்பி... வாழ வழி இருக்கிறதா என்றா கேட்டாய்?''

''ஆம் சுவாமி! இந்த சூழல் அப்படி கேட்கச் செய்கிறது.''

''இது ஒன்றும் உலகிற்கு புதிய சூழல் இல்லையே நம்பி...''

''என்ன சொல்கிறீர்கள்.''

''எந்த கஷ்டமும் இன்றி வாழ்ந்தவர் என ஒருவரும் உலகில் இல்லை என்பது உனக்கு தெரியாதா?''

''அது தெரியும்! ஆனால்...''

''நீ என்ன சொல்ல வருகிறாய் என்பது புரிகிறது. தனி மனிதனுக்கு கஷ்டம் வருவதற்கும், சமூகத்திற்கே கஷ்டம் வருவதற்கும் வேற்றுமை உண்டு. ஆனாலும் வைணவனுக்கு இது ஒன்றும் புதியதல்ல...''

''எப்படி சுவாமி?''

''நம்மில் இருந்து தோன்றிய ஹிரண்யனை விடவா இப்போதுள்ள அந்நியர்கள் கொடியவர்கள்? நம்மில் இருந்து தோன்றிய ஒரு கம்சன், மது கைடபர், கேசி என அவ்வளவு பேரையும் எம்பெருமான் அழித்து நம்மைக் காத்ததை எண்ணிப் பார்...''

''அப்படியானால் அசுரர்களை அழிக்க அவதாரம் எடுத்தது போல் இப்போதும் வருவாரா?''

நம்பி கேட்கவும் மீண்டும் சிரித்தார்.

''நான் தவறாக ஏதும் கேட்டு விட்டேனா?''

''நீ எங்கே கேட்டாய்.... இப்படி கேட்கச் செய்வது தான் கலியின் தன்மை...''

''என்ன சொல்கிறீர்கள்?''

''எம்பெருமான் வருவாரா என கேட்டதில் தொனித்த சந்தேகத்தை சொல்கிறேன்''

''சந்தேகமா... இல்லை சுவாமி! என்னை அறியாமல் பேசி விட்டேன்.''

''இந்த அறியாமல் என்ற பதத்திற்கே. கலியில் சக்தி அதிகம். அறியாமல் தான் எல்லோருமே தவறு செய்கின்றனர். அதாவது அவனை(எம்பெருமானை) அறியாமல்... அறிந்து விட்டால் மாறி விடுவர்!''

''உங்கள் கருத்து நமக்கு பொருந்தும். அந்நியர்களுக்கு பொருந்துமா?''

''அவர்கள் என்ன தான்தோன்றிகளா...? அவர்களையும் அவன் தானே படைத்தான்?''

''சுவாமி''

''என் கேள்விக்கு பதில் சொல்...''

''உங்கள் கருத்தை அவர்கள் ஏற்பரா.... உருவ





• மது, புகை உடலுக்கு கேடு

வழிபாடே தவறு என்பதல்லவா அவர்களின் சித்தாந்தம்?''

''இருக்கும் ஒன்றே இல்லாமலும் போக முடியும். இல்லாத ஒன்றை ஒருவர் நினைக்கவே முடியாது சரி தானே?''

''நீங்கள் என்ன சொல்ல வருகிறீர்கள்?''

''அது ஒரு மாற்றுச் சிந்தனை... இறைவனை அவர்கள் மறுக்கவில்லையே...?''

''அப்படியானால்?''

''நம் பக்திக்கும், அதன் தெளிவிற்கும். உறுதிக்கும் அவர்களின் வடிவில் சோதனை வந்துள்ளது. நாம் நம்வழியில் கடமையை செய்தால் போதும், நடப்பது நலமாக அமையும்.''

''நாம் எப்போது செய்யத் தவறினோம்? உண்பது போல் உறங்குவது போல் அது நம் கடமையல்லவா?''

''இப்போது சொன்னதை அப்படியே அதே உறுதியோடு பின்பற்று. நடப்பவை எல்லாம் தானாக நலமாகவே நடக்கும்...''

''வருத்தம், கோபம் என எதுவுமின்றி தாங்கள் இயல்பாக பேசி நம்பிக்கையோடு இருப்பது ஆச்சரியத்தை தருகிறது. என்னால் அவ்வாறு இருக்க முடியவில்லையே''

''பழகிக்கொள். எம்பெருமானின் பரம கருணையை சந்தேகிக்காதே. நாம் அவனிடம் ஒப்படைத்து சரணாகதி அடைந்தவர்கள். நாம் அவன் சொத்து. அந்த சொத்தை படைத்தவனும் அவனே... எனவே அவன் பாதுகாத்துக் கொள்வான்.''

பிள்ளைலோகாச்சார்யாரின் இதமான ஆழமான பேச்சு மணப்பாக்கம் நம்பிக்கும் ஒரு மருந்தாக இருந்தது. அவரோடு கோயிலை விட்டு நீங்கும் போது நம்பிக்குள் காஞ்சி குறித்த சிந்தனை!

இங்கு இருப்பது போலத்தானே அங்கும் சூழல் மாறியிருக்கும்? மனதுக்குள் கேள்வி எழுந்தது.

காஞ்சி நகரிலும் சுல்தானின் படை வீரர்கள்! எல்லைப்புறங்களில் சுங்கச் சாவடிகள். அங்கும் ஒரே சலசலப்பு. பலர் வரி கட்ட மறுக்க வாக்கு வாதங்களில் ஈடுபட்டனர்.

''நீங்கள் யார்... நாங்கள் ஏன் உங்களுக்கு வரி கட்ட வேண்டும்?''

''நாங்கள் யாரா? நாங்களே இந்த காஞ்சி நகரின் ராஜாங்க ஊழியர்கள். நீங்கள் எங்களுக்கு கட்டுப்பட்டவர்கள்...''

''இது அநியாயம்... அக்கிரமம்.....''

''அரசாங்கம் வரி விதிப்பது அநியாயமா... ஏன் உங்கள் முந்தைய ஆட்சியில் வரி விதிப்பு கிடையாதா?''

''உண்டு... ஆனால் இது போல் ஊருக்குள் நுழைவதற்கெல்லாம் வரி இல்லை.''

''விரைவில் உள்நாட்டு நிர்வாகம் செயல்படத் தொடங்கும். அப்போது இக்குறை நீங்கும்''

''நீங்கள் யார் எங்களை ஆட்சி செய்ய! இது புனிதமான நகரம். இதை ஆள்பவன் இம்மண்ணை சேர்ந்தவனாகத்தான் இருக்க

**எம்பெருமானின் பரம கருணையை சந்தேகிக்காதே. நாம் அவனிடம் ஒப்படைத்து சரணாகதி அடைந்தவர்கள். நாம் அவன் சொத்து. அந்த சொத்தை படைத்தவனும் அவனே... எனவே அவன் பாதுகாத்துக் கொள்வான்.**

வேண்டும்.''

''தலைமைக்கு கட்டுப்படத் தயார் என்றால் உங்கள் மண்ணைச் சேர்ந்தவரே ஆள்வர். ஆனால் டில்லி பாதுஷாவுக்கு கப்பம் கட்ட மறக்கக் கூடாது.''

இப்படி வாக்குவாதங்கள் தொடர்ந்து கொண்டே இருந்தன. இந்த வாக்கு வாதங்களை எல்லாம் கேட்டபடியே தான் சென்றார் வேதாந்த தேசிகன். அவரிடம் ஆட்சி மாற்றம், கலாசார மாற்றம் குறித்து சீடர்கள் கேள்வி கேட்டனர்.

''சுவாமி... இச்சோதனையை நாம் எப்படி எதிர் கொள்வோமோ தெரியவில்லையே....''

''கலக்கம் வேண்டாம். நாம் நாமாக இருப்போம். எம்பெருமான் காத்தருள்வான்...''

'' இக்காஞ்சியில் தாங்கள் இருப்பது எங்களுக்கு உறுதுணையாக உள்ளது.''

''எம்பெருமான் கருணைக்கு ஆளான உங்களிடம் ஒரு கேள்வி. இந்த அந்நியர்களும் அவன் படைப்பு என்றால் எம்பெருமான் இவர்களை எல்லாம் ஏன் படைக்க வேண்டும்? பின் இவர்களிடம் ஏன் போராட வேண்டும்? இந்த உலகமே வைணவமாக இருந்தால் எவ்வளவு நன்றாக இருக்கும்?''

''இப்படிப்பட்ட கேள்வியை இந்த உலகில் பல முறைகளில் நாம் சிந்திக்கலாம். பூவைப் படைத்தவன் ஏன் முள்ளைப் படைக்க வேண்டும்? இனிப்பை படைத்தவன் கசப்பை ஏன் தர வேண்டும்? அமிர்தத்தை படைத்தவன் விஷத்தை ஏன் வைக்க வேண்டும்? இப்படி எழுப்பிக் கொண்டே போகலாம். நல்லதன் அருமை தீயது என ஒன்று இருந்தாலே தெரிய வரும். காரணமில்லாத காரியமில்லை.''

''இப்படி தத்துவமாக பதில் சொன்னால் எப்படி? பொன்னையும், பொருளையும் இழக்க நேர்ந்தால் ஒருநாள் திரும்ப சம்பாதிக்க முடியும். ஆனால் எம்பெருமான் இங்கே கோயில் கொண்டிருப்பது என்பது காலத்தால் நிகழ்ந்த அதிசயம். அதற்கே அழிவு வந்து விட்டால்?''

''நடக்காது. நடக்கவே நடக்காது... எம்பெருமானை எவரும் நெருங்க முடியாது. அப்படி நிகழும் பட்சத்தில் அதற்கேற்ப அவதார புருஷர்கள் தோன்றுவர். இது கலியுகம்... அவதார புருஷர்களாலேயே கலியை வெற்றி கொள்ள இயலும். இது அவர்களுக்கான சோதனை...''என்று சொல்லி வேதாந்த தேசிகன் கண்களை மூடி தியானித்த போது, அத்திகிரி கோயில் ஸ்தானீகர் ஒருவர் மூச்சிரைக்க வந்து '' சுவாமி...என் கனவில் நம்பெருமாள் வந்தார்...'' என்றார்.

**தொடரும்**

இந்த தொடரின் ஆசிரியர்
இந்திரா சௌந்தர்ராஜன் எழுதிய புத்தகங்கள்
தெரிந்த பாரதம் தெரியாத பாத்திரம்,
கிருஷ்ண ஜாலம், கடவுளைக் கண்டவர்கள் பெற
1800 425 7700 ல் தொடர்பு கொள்ளலாம்.



# வரதா வரம்தா...

பக்தித்தொடர் 26

இந்திரா சௌந்தர்ராஜன்



ஓடி வந்த கோயில் ஸ்தானீகரின் முகத்தில் தென்பட்ட பரவசமே அவர் அதிசய கனவு கண்டதை வேதாந்த தேசிகருக்கும் உணர்த்தியது. அதை கேள்வியாகவே கேட்டார் அந்த சீடர்.

''அப்படி என்ன கனவு கண்டீர்?''

''அதை நான் சொன்னால் நீங்கள் நம்புவீர்களோ மாட்டீர்களோ?''

''இவ்வளவு தூரம் வந்து விட்டு இப்படி சொன்னால் எப்படி?''

''நான் என்ன செய்வேன். கண்ட கனவு அப்படி?''

''எதுவானாலும் கூறுங்கள். நீங்கள் தானே இசைக்கருவியான திருச்சின்னத்தை எம்பெருமான் தேசிகரிடம் தரச் சொன்னதாகச் சொல்லி வழங்கியவர்?''

''ஆம்... அப்போது போலவே இப்போதும் கனவில் வந்த எம்பெருமான் கருவறை விட்டு வெளியேறினான்''

''என்ன சொல்கிறீர்... வெளியேறினானா?''

''ஆம்..சங்கு சக்கரதாரியாக காஞ்சி வரதன் சென்றதைக் கண்டு நான் பின்தொடர்ந்தேன். வாசல் கடந்து சென்றவன், கோயில் குளமான அனந்தசரசினை அடைந்ததும் பின்தொடர்ந்து வந்து என்னைக் கண்டு புன்னகைத்தான். எனக்கு ஒன்றும் புரியவில்லை. மெல்ல குளத்தில் இறங்கியவன் அப்படியே மூழ்கினான்.

அந்தக் காட்சியை இப்போது நினைத்தாலும் உடம்பு புல்லரிக்கிறது!''

அதைக் கேட்டு வேதாந்த தேசிகர் ஆழ்ந்த சிந்தனையுடன் சற்றே நிமிந்து நீலவானத்தைப் பார்த்தார். உடனிருந்த சீடர் வருத்தமுடன், ''இது கனவா.. இல்லை நிஜமா... நீங்கள் சொல்வதைப் பார்த்தால் கனவு போல தெரியவில்லை'' என்றார்.

''கனவுதான்... நான் இப்போது வீட்டில் இருந்தே வருகிறேன். அதுவும் பகல் கனவு! உங்களுக்கெல்லாம் நான் ஒன்றைக் கூறியாக வேண்டும். என் வாழ்நாளில் நான் பகலில் தூங்கியதே இல்லை''

''அப்படியானால் இன்று நீங்களாக தூங்கவில்லையா?''

''ஆம்... என்னை அறியாமல் அமர்ந்த நிலையில் கண்ணயர்ந்தேன். அதில்தான் இப்படி ஒரு கனவு''

''சுவாமி! இதற்கு பொருள் உண்டா?'' என சீடர் கேட்டார்.

தேசிகரும் திருவாய் மலர்ந்தார்.

''எம்பெருமான் இவரது கனவு மூலம் நமக்கு ஒரு செய்தியைக் கூறியுள்ளான். சன்னதியில் சிலை வடிவில் நிற்பவன் குளத்து நீருக்குள் மூழ்கிக் கிடக்க விரும்பியது போல் தெரிகிறது''

''இது என்ன விந்தை?''

''நமக்கு அது விந்தை. அவனுக்கோ இக்குளம் பாற்கடல்! வரும் நாட்களில் இது குளமாக மட்டுமின்றி பெரிய அளவில் சிந்திக்கப்படவும் வாய்ப்பு உள்ளது''

''இதனால் கோயிலின் சான்னித்யம் குறைவு படாது தானே?''

''அது என்றும் நிகழாது. நிகழவும் கூடாது''

''இப்போதுள்ள நிலையை எண்ணிப் பாருங்கள். அந்நியர்கள் உள்புகுந்ததால் நான் இங்கிருக்க விரும்பவில்லை என்றும் கொள்ளலாம் தானே?''

''நமக்குத் தான் அந்த பாகுபாடுகள். அவனுக்கு அதெல்லாம் ஏது? அவன் சர்வ வியாபி. உயிர்கள் எல்லாம் அவன் படைப்பு தானே?''

''உங்களால் மட்டும் தான் இப்படி சிந்திக்க இயலும். எனக்கு என்ன தோன்றுகிறது என்றால் எம்பெருமான் நீருக்குள் மறைந்து அந்நியரால் வரும் ஆபத்தை தவிர்ப்பது போலத் தோன்றுகிறது!''

''ஆம்... குளத்தில் போடுங்கள் என அவன் சொல்லாமல் சொல்வது போலத் தான் எனக்கும் தோன்றுகிறது''



இந்த தொடரின் ஆசிரியர் இந்திரா சௌந்தர்ராஜன்
எழுதிய புத்தகங்கள் **தெரிந்த பாரதம் தெரியாத பாத்திரம், கிருஷ்ண ஜாலம், கடவுளைக் கண்டவர்கள்** பெற
1800 425 7700 ல் தொடர்பு கொள்ளலாம்.

அந்த கருத்துக்கு அழுத்தம் கொடுத்தார் ஸ்தானீகர்.

''இதன் முழுமையான பொருளை உணர நான் தியானத்தில் ஈடுபடப் போகிறேன். நிச்சயம் அவன் பதிலளிப்பான்'' என்றார் வேதாந்த தேசிகர்!

இதற்கிடையில் ஸ்ரீரங்கத்தில் ஒருநாள்!

காவிரியாற்றில் நீராடச் சென்றார் பிள்ளைலோகாச்சார்யார். மறுகரையில் சுல்தான் படையின் கூடாரங்களும், குதிரைகளும் தென்பட்டன. சிலர் ஆற்றை துவம்சம் செய்து கொண்டிருந்தனர். அக்காட்சி அவருக்குள் பல எண்ணங்களை உருவாக்கியது. அப்போது ஆற்றில் ஒரு பரிசல் வந்தது. அதில் ஸ்ரீரங்கத்தை சேர்ந்த ஒரு குடும்பத்தினர் மூடை, முடிச்சுடன் ஏற வந்தனர். ஊரை விட்டே அவர்கள் போகிறார்கள் என்பது புரிந்தது. அதில் வயதில் மூத்தவர் பிள்ளைலோகாச்சார்யார் அருகில் வந்தார்.

''தாங்கள் கோபால தாசர் தானே? இது என்ன கோலம்.. எங்கே செல்கிறீர்கள்?''

''இனி இங்கு வாழ முடியும் எனத் தோன்றவில்லை. பல சுல்தானிய வீரர்கள், தளபதிகள் ஸ்ரீரங்கத்திற்குள் புகுந்து வீடுகளை ஆக்ரமிக்க தொடங்கி விட்டனர்.''

''இது தற்காலிகம் தான்! போகப் போகச் சரியாகி விடும்...''

''நம்பிக்கை இல்லை. இனி நோடே சுல்தானின் வசப்பட்டது போலத் தெரிகிறது. கிழக்கில் கர்நாடகத்தில் வித்யாரண்யர் என்ற மகான் மட்டும் காப்பாற்றி வருகிறார் எனக் கேள்வி. ஹரிஹர புக்கர்களின் வாரிசுகள் நம்மைக் காக்க இவ்வளவு தூரம் வர வேண்டுமே?''

அவருக்கு ஓரளவு வரலாறு தெரிந்திருந்தது.

''ஸ்ரீரங்கத்தின் தலையாரிகள் யாரும் அந்நியர்களைத் தடுக்கவில்லையா?''

''இருந்தால் அல்லவா தடுப்பதற்கு? தலையாரிகளை கைது செய்து விட்டனர். காவல் படை வீரர்களை செயல் இழக்கச் செய்து விட்டனர்.

உறையூர் ராஜ்ய அதிகாரி தருமசேகர வல்லபர், மதுரை மன்னர் சுந்தர பாண்டியரின் உதவியை நாடி சென்றிருப்பதாக தெரிகிறது. அவரையும் வழியில் விராலிமலையிலேயே சுல்தானின் தளபதிகள் வளைத்து விட்டதாக தெரிகிறது...''

கோபாலதாசரின் பேச்சால் பிள்ளைலோகாச்சார்யாருக்கு கண்ணீர் பெருகியது. துடைத்துக் கொண்டு நிமிர்ந்த போது, பரிசலில் கோபாலதாசர் வெகுதூரம் போய் விட்டார்.

இவர் ஒரு தொடக்கமே!

நாம் இப்படி சற்று அயர்ந்தால் ஒரு கட்டத்தில் ஊரே காலி செய்து விடும். அதன் பின் பக்தர் நடமாடிய பூமி எத்தர் நடமாடும் பூமியாகி விடும் இப்படியே விடக் கூடாது என்ற முடிவுக்கு வந்தார். ஆற்றில் நீராட வரும் போது தோளில் கிளி ஒன்று அமர்ந்தது. அதன் வலது காதில் ஒரு சிமிழ்! அதைப் பார்த்ததும் காஞ்சியிலுள்ள விஜயாபதி என்பவனின் நினைவு எழுந்தது. அவன் தான் கிளியை தூது விட்டிருக்க வேண்டும். சிமிழுக்குள் ஒரு ஓலைச்சுருள்! அதில் எறும்பு ஊர்வது போன்ற எழுத்தில் ஒரு செய்தி!

''காஞ்சிபுரத்தில் ஒரு அதிசயம்! ஸ்தானீகர் கனவில் வரதன் குளத்தில் மூழ்கி மறைந்தானாம். மூலவரைக் காப்பாற்ற அனைவரும் துணிந்து விட்டோம். இந்நிலையில், தெளிவும், பலமும் பெற வேண்டி வேதாந்த தேசிகன் தவத்தில் ஆழ்ந்துள்ளார். முன்னதாக ஸ்ரீரங்கம் குறித்தும் கவலை கொண்டார். அநேகமாக தேசிகர் ஸ்ரீரங்கம் வரக் கூடும்'' என விஜயாபதி எழுதியிருந்ததை வாசித்தார். வேதாந்த தேசிகரே ஸ்ரீரங்கம் வருவதை அறிந்து தனக்கு உதவிட அரங்கன் தயாராகி விட்டதை எண்ணி மகிழ்ந்தார்.

**தொடரும்**



## 33 அடி உயர ஆஞ்சநேயர் கோயில் கும்பாபிஷேகம்

திருவாரூர் மாவட்டம் ஆலங்குடிக்கு அருகிலுள்ள ஞானபுரியில் சங்கடஹர மங்கள மாருதி ஆஞ்சநேயர் கோயில் கும்பாபிஷேகம் பிப்.7ல் நடக்கிறது.

இந்த ஆஞ்சநேயர் 33 அடி உயரம் கொண்டவர். இவரை தரிசனம் செய்தால் நோய், சங்கடம் தீரும். 108 அடி உயர பஞ்சதள விமானம், பிரம்மாண்டமான அர்த்த மண்டபம், லட்சுமி நரசிம்மர், கோதண்டராமர் சன்னதிகள் இங்கு கட்டப்பட்டுள்ளன. பிப்.7 வரை காலை, மாலையில் யாகசாலை பூஜை, பிப்.7 காலை 9:00 – 10:00 மணிக்குள் பதரி ஆச்சார்ய சுவாமிகள் தலைமையில் கும்பாபிஷேகம் நடக்கிறது.

தொடர்புக்கு
93621 32275, 86101 28308



# வரதா வரம்தா...

பக்தித்தொடர் 27

இந்திரா சௌந்தர்ராஜன்



**வே**தாந்த தேசிகன் ஸ்ரீரங்கம் வரப் போவதை அறிந்து, காவிரி ஆற்றங்கரையில் இருந்து வீட்டை நோக்கி நடந்த லோகாச்சார்யாரிடம் மனதில் நம்பிக்கை பிறந்தது.

வழியில் ஆள் நடமாட்டமே இல்லை. படித்துறையில் துணி வெளுக்கும் சப்தம் கேட்கும்.

ஆனால் அதற்கான சுவடே இல்லை.

சோர்வுடன் தொடர்ந்து நடந்தவர் முன் ஆடுகள் செருமியபடி சென்றன. ஸ்ரீரங்கத்தில் பசுக்கள், காளைகள் செல்வது சகஜம். ஆனால் மாமிசத் தேவைக்கான.ஆடுகளின் தேவை இல்லாத ஊர் அது.

சுல்தானிய வீரர்களின் உணவுத் தேவைக்கே அவ்வளவு ஆடுகளும் சென்ற வண்ணமிருந்தன.

லோகாச்சார்யாருக்கு கண்ணீர் சுரந்தது.

வீட்டு வாசலில் பக்தர்கள் பலர் காத்திருந்தனர். அவர்களின் முகத்தில் இருள் அப்பிக் கிடந்தது.

வீட்டிற்குள் ஒரு ஓரமாக இருந்தார் லோகாச்சார்யாரின் தந்தை வடக்கு திருவீதிப்பிள்ளை. அருகில் தாய் அம்மி இருந்தார். அவர்களுக்கு உணவிட்டபடி இருந்த மணவாளப் பெருமாள் என்னும் லோகாச்சார்யாரின் தம்பி ஏறிட்டுப் பார்த்தார்.

''தம்பி...''

''அண்ணா...''

''பெற்றோருடன் ஸ்ரீரங்கத்தை விட்டுப் புறப்படு. மணமேல்குடியில் இருக்கும் உறவினர் வீட்டுக்குச் செல். இவர்கள் இங்கிருப்பது எனக்கு சரியாகப் படவில்லை'' என்றார்.

''ஏன் இந்த முடிவு! வாழ்வும், முடிவும் ஸ்ரீரங்கத்தில் என்பது தானே நம் விருப்பம்''

''ஆனால் அதற்குரியதாக காலம் இல்லையே... என்ன செய்ய?''

'' நம்பிக்கைக்குரிய நீங்களே மனம் தளர்ந்தால் எப்படி அண்ணா?''

''தவிர்க்க முடியவில்லை தம்பி... நாம் சோதனைக்கு ஆளாகியுள்ளோம்''

''சோதனையைச் சாதனையாக மாற்றுவோம்''

'' முயற்சிக்காமல் இல்லை''

''அண்ணா...''

''தயவு செய்து சொன்னதைக் கேள். பெற்றோர் சிரமப்படக் கூடாது. அவர்கள் அரங்கன் திருவடிகளை அடையும் வரை விழிப்புடன் இருக்க வேண்டும்''

''சரி அண்ணா...'' என்ற மணவாளப்பெருமாள் பெற்றோருடன் ஸ்ரீரங்கத்தை விட்டு புறப்பட தயாரானார்.

தனக்காக காத்திருக்கும் பக்தர்களை காண வந்தார் லோகாச்சார்யார். கலக்கமுடன் நின்ற அவர்களில் மணப்பாக்கத்து நம்பியும் ஒருவர்.

'' பிறந்து வளர்ந்த இந்த ஊரை விட்டு போக நேருமோ என அச்சமாக உள்ளது'' என்றார் அவர்களில் ஒருவர்.

''பயப்படாதீர்கள்! அரங்கன் அருளால் எதுவும் நேராது''

''அப்படியானால் தங்களின் பெற்றோரை அனுப்பக் காரணம்?''

''அவர்கள் முதுமை அடைந்து விட்டனர். எதிர்பாராமல் ஏதாவது நடந்தால் அதிர்ச்சியிலேயே உயிர் பிரிய நேரிடும். அவர்கள் நடப்பை அறியாமல்



இந்த தொடரின் ஆசிரியர்
இந்திரா சௌந்தர்ராஜன் எழுதிய புத்தகங்கள்
**தெரிந்த பாரதம் தெரியாத பாத்திரம், கிருஷ்ண ஜாலம், கடவுளைக் கண்டவர்கள்** பெற 1800 425 7700 ல் தொடர்பு கொள்ளலாம்.

இருப்பதே நல்லது எனக் கருதுகிறேன்''

''அப்படியானால்... எதிர்பாராதது ஏதும் நடக்கப்போகிறதோ?''

''அப்படி நடப்பது தானே வாழ்க்கை''

''விதிவசம் நடப்பதற்கும், இப்படி மனித சதியால் நடப்பதற்கும் வேற்றுமை உள்ளதே?''

'' எப்படி கேட்டாலும் சரி. பதில் இதுதான். அரங்கன் அருள் நமக்கு துணை நிற்கும்''

லோகாச்சார்யார் உறுதிபடச் சொன்ன அந்த நொடி, குதிரை மீது வந்த சோழவீரன் ஒருவன், ''ஆச்சார்யரே! நீங்களும் இப்படி பேசுவதனாலேயே ஆபத்து உருவாகி விட்டதை அறிவீர்களா?'' எனக் கேட்டான்.

''என்னப்பா அது?'' எனத் திருப்பிக் கேட்டார்.

''அந்நியர்கள் முதலில் அழிக்க எண்ணியிருப்பது நம் மன்னரின் குடும்பங்களையோ, அரண்மனைகளையோ அல்ல''

எல்லோரும் அவனையே பார்த்தனர். மேலும் தொடர்ந்தான்.

''அவர்களின் குறி கோயில்கள் மீது தான் எனத் தகவல் வந்துள்ளது. நம்முடைய பலமே பக்தி தான். அதை உடைப்பதே அவர்களின் நோக்கம். எனவே கோயில்களைத் தகர்ப்பது, அங்கு நகைகளை கொள்ளையடிப்பது தான் அவர்களின் திட்டம்'' அதைக் கேட்ட லோகாச்சார்யார், ''நானும் இதை அறிவேன். இது தான் எதிரிகளின் போக்கு. யாருக்கு எது பலமோ அதை குலைக்க முயல்வர். பக்தி, கலாசாரம் தானே நம் பலம்?''

''இதை எப்படி எதிர்கொள்வது?''

''பக்தி, நம்பிக்கையோடும் தான்''

''சொல்வது சுலபம். அதை பின்பற்றுவது கடினம் அல்லவா?''

''கஷ்டப்பட்டால் தானே சுகப்பட முடியும்''

''சரி. தங்களின் திட்டம்...''

''இப்போது கூற முடியாது. காஞ்சிபுரத்தில் இருந்து வேதாந்த தேசிகன், ஸ்ரீரங்கம் வருவதாக செய்தி வந்துள்ளது. அவரது வருகை நமக்கு பலம்தான்! அவர் இங்கு வரட்டும்''

''அவரும் நம்மைப் போல ஒருவர் தானே! அவரால் என்ன முடியும்?''

'' அப்படி கருதாதீர்! அவர் எம்பெருமானின் பூஜை மணியின் அம்சமாக அவதரித்தவர். யந்திர, மந்திர, தந்திரங்களில் வல்லவர்''

''அப்படி என்றால்?''

''அவ்வளவும் அருள் சார்ந்தவை. இதற்கு மேல் இப்போது விவாதம் வேண்டாம். பொறுமையாக இருப்போம். எல்லாம் நலமாக அமையும்'' என அந்த வீரனுக்கு விளக்கம் தந்த லோகாச்சார்யார், வீட்டிற்குள் வந்தார். அங்கிருந்த மரப்பெட்டி ஒன்றை திறந்தார். மணப்பாக்கத்து நம்பியும் காத்திருந்தார்.

உள்ளே கட்டுக் கட்டாக சுவடிகள்!

அவற்றில், 'ரஹஸ்ய த்ரயம்' 'தத்வ த்ரயம்' என்னும் சமஸ்கிருத ஏடுகள், நம்மாழ்வாரின் திருவாய்மொழிப் பாடல்கள் என கட்டாக இருந்திட அதை எடுத்து கண்களில் ஒற்றினார். அதை உற்றுப் பார்த்த நிலையில் மீண்டும் பெட்டிக்குள் வைத்து பூட்டினார்.

அதை எடுத்து எம்பெருமானின் கொலு ரூபம் அருகில் வைத்தார். பள்ளி கொண்ட அரங்கநாத ரூபத்தை அப்படியே தூக்கி பெட்டி மீது வைத்தவராக, ''இந்த பொக்கிஷங்களுக்கு காவல் நீயே!'' என மனதிற்குள் பிரார்த்தித்தார்.

திரும்பிப் பார்த்த போது வெயில் உச்சிக் காலத்தை நினைவூட்டியது. உச்சிக்கால பூஜைக்கான மணிச்சப்தம் காதில் விழுமே! ஆனால் விழவில்லையே!. சுல்தானியர்கள் அதற்கும் தடை விதித்து விட்டார்களா?'' என்ற சந்தேகமுடன் கோயிலுக்கு புறப்பட்டார். மணிப்பாக்கத்து நம்பியும் கூட வந்தார்.

ஸ்ரீரங்கம் போலவே காஞ்சிபுரம் அத்திவரதன் கோயிலிலும் உச்சிக்கால பூஜைக்கான மணி ஒலிக்கவில்லை. லோகாச்சார்யார் போல தேசிகனும் கோயிலை நோக்கி நடந்தார். வழி எங்கும் பல மாறுதல்கள். சமணத்துறவிகள் பலர் மவுனமாக ஊரை விட்டே சென்று கொண்டிருந்தனர். குதிரை பூட்டிய தேர்கள் குறுக்கும், நெடுக்குமாக சென்றன. தேசிகன் மனதிற்குள் கருட மந்திரத்தை உச்சரித்தபடி நடக்க, அவர் தலையின் மீது ஒரு கருடன் நிழல் விழும்படி பறந்தது. இதைக் கண்ட சிலர் ஆச்சரியப்பட்டனர்.

தொடரும்



## முதல் இழுவை ரயில்

இந்தியாவின் மலைக் கோயில்களில் முதன் முதலாக இழுவை ரயில் ஓடியது பழநியில் தான். 1966ல் காமராஜர் ஆட்சியின் போது அமைச்சரவையில் இருந்த பக்தவச்சலம் இப்பாதை உருவாக காரணமாக இருந்தார். 1981ல் மற்றொரு இழுவை ரயில் பாதை அமைக்கப்பட்டது. இதில் பயணித்தால் எட்டு நிமிடத்தில் மலையேறி விடலாம். அதிகாலை 5:00 மணிக்கு துவங்கும் சேவை இரவு 9:00 மணிக்கு முடியும். விழாக்காலத்தில் நேரம் மாறுபடும்.

## குளத்தை சீர் செய்த சட்டிச்சாமி

சட்டிச்சாமி என்ற துறவி பிச்சை எடுத்த பணத்தில் பழநி மலை அடிவாரத்திலுள்ள சரவணப்பொய்கை குளத்தைச் சீரமைத்தார். இக்குளத்தில் கற்கள் நிறைந்து கிடந்ததால் 'கல் கிணறு' என்றே பெயர் இருந்தது. சீரமைத்த பின் மக்கள் நீராடும் பொய்கையாக உருவெடுத்தது. வையாபுரி குளம், சண்முகா நதி ஆகிய தீர்த்தங்களும் இங்குள்ளன.



# வரதா வரம்தா...

பக்தித்தொடர் 28

இந்திரா சௌந்தர்ராஜன்



**அ**த்திவரதன் கோயில் நோக்கி வேதாந்த தேசிகன் நடந்த போது, அவருக்கு மேலே கருடன் நிழல் விழுமாறு பறந்த காட்சி பலரை வியக்கச் செய்தது. அதே நேரம் அமணர்கள் சிலர் பொறாமையால் வேறு விதமாகவும் சிந்தித்தனர்.

''இந்த தேசிகன் ஒரு மாயாவி.... சித்து வேலையால் ஏமாற்றப் பார்க்கிறார். தான் ஒரு ஞானி என உலகம் நினைக்க வேண்டும் என்பதற்காகவே, கருட வசியத்தால் நிழல் தரும்படி பறக்கச் செய்கிறார்'' என பேசிக் கொண்டனர்.

வேறு சிலர் தங்களுக்குள், ''சுல்தானியர்களால் நாட்டுக்கே ஆபத்து நேர உள்ளது. இவர் தெய்வீகமானவர் என்றால் அவர்களை காஞ்சிபுரத்திற்குள் நுழைய விட்டிருக்க கூடாதல்லவா?''

''தேசிகர் தற்பெருமை பேசியதில்லையே... அப்படியிருக்க எதற்காக இப்படி ஒரு கேள்வி?''

''அதை விடுங்கள். கோயில் ஸ்தானீகர் ஒருவரின் கனவில் வரதன் தோன்றி குளத்தில் மூழ்கிப் போனானாமே... அதற்கு என்ன பொருள் என்று கேட்ட போது தியானத்தில் விடை தேடுகிறேன் என சொன்னாராமே! அதன் பிறகு என்ன விடை கூறினார். யாருக்காவது தெரியுமா?''

இப்படி தேசிகனைக் கண்டவர்களின் மனதில் பலப்பல எண்ணங்கள், கேள்விகள் எழுந்தன.

அத்தி வரதனால் புகழடைந்த காஞ்சியில் இன்று பலவிதமான ஆன்மிக மார்க்கங்கள்!

ஒருபுறம் காமாட்சி, மறுபுறம் ஏகம்பன், இன்னொரு புறத்தில் கு ம ர க் கோ ட் ட ம் . . . இடையே அமணர்களின் பிரம்மக் கோட்டம். இப்போது பாலைவனப் பகுதி கடந்து உள்ளே புகுந்திருக்கும் புதிய மறை மார்க்கம்! இவற்றில் நற்கதி தரவல்லது எது என நாத்திகம் பேசுவோரும் கேட்கத் தொடங்கி விட்டனர். நகரம் என்றால் நாலுமிருக்கும் என்பதற்கு உதாரணமாகி விட்டது காஞ்சி!

இத்தனைக்கும் நடுவில் தான் தேசிகர் கோயிலுக்குள் நுழைந்தார். வெளியில் நல்ல வெயில்! வெற்று காலுடன் படிகளில் ஏறி சன்னதி நோக்கிச் செல்வதற்குள் பொத்துப் போகும் அளவிற்கு வெயில் தாக்கியது.

தேசிகனைக் கண்ட பலரும் அவரைச் சூழ்ந்தனர். வரதன் குளத்தில் இறங்குவது போல கனவு கண்ட ஸ்தானீகரும் அங்கிருந்தார்.

வேதாந்த தேசிகனோ, ''ஏன் உச்சிக்காலத்து பூஜை மணி ஒலிக்கவில்லை'' எனக் கேள்வி எழுப்பினார்.

''காரணமாகத் தான் சுவாமி! இது வரை எந்த அந்நியனும் கோயிலுக்குள் வரவில்லை. கோபுரத்திற்கு வெளியே நின்று பார்த்தபடி போய் விட்டனர். மணிச்சப்தத்தை கவனித்தால் அவர்கள் உள்ளே வரத் தோன்றலாம், எதற்கு வம்பு என்றே கிண்டாமணி இல்லாமல் சன்னதியில் கைப்பிடி மணி ஒலித்து பூஜைகள் நடந்தன'' என்றார்.

''தவறு.. இதைச் சொல்வதில் இருந்தே உமக்குள் பயம் இருப்பது தெளிவாகிறது. எச்சரிக்கை என்னும் பெயரில் நம் வழிமுறைகளை மாற்றத் தேவையில்லை. ஒன்றை மனதில் வையுங்கள்! என்றும் எங்கும் அவன் தான் நம்மைக்





• மது, புகை உடலுக்கு கேடு

இந்த தொடரின் ஆசிரியர் இந்திரா சௌந்தர்ராஜன் எழுதிய புத்தகங்கள் **தெரிந்த பாரதம் தெரியாத பாத்திரம், கிருஷ்ண ஜாலம், கடவுளைக் கண்டவர்கள்** பெற 1800 425 7700 ல் தொடர்பு கொள்ளலாம்.

காத்து வருகிறான். நாம் அல்ல! அவனருள் இல்லாவிட்டால் நம்மால் நம்மைக் கூட காக்க இயலாது!

உரத்த குரலில் தெரிவித்தார் தேசிகன்.

''மன்னிக்க வேண்டும். காதில் விழுந்த செய்திகள் தாங்கள் கூறுவதற்கு எதிராகவே உள்ளன. விஜயநகரம் அல்லாத பாகங்களைக் கைப்பற்றிய அந்நியர்கள் தங்களின் வழிமுறைகளைப் பின்பற்றச் செய்து வருகிறார்கள் என்பதே உண்மை. விஜய நகரத்தையும் அவர்கள் வீழ்த்தப் போகிறார்களாம். சுல்தானியர்களின் நோக்கம் ஏக பாரதம்! நாட்டின் பல பாகங்கள் அவர்களின் வசமாகி விட்டன. உண்மையைப் பளிச்சென சொல்ல வேண்டும் என்றால் காசி விஸ்வநாதர் கோயில் நம் கையை விட்டு போனதாக தகவல்!''

''இதை எல்லாம் யாமும் அறிவோம். நாடு பிடிப்பது என்பதும், தன் கொடியை அங்கங்கே பறக்க விடுவதும் சக்கரவர்த்திகளின் விருப்பம். சேர, சோழ, பாண்டியர்கள் எல்லாம் கூட இமயம் வரை படையெடுத்து சென்று வடநாட்டை கைப்பற்றிய போது கொடியைத் தான் அங்கு பறக்க விட்டனர். குறிப்பாக சேரன் செங்குட்டுவன் வடநாட்டு மன்னர்களான கனக, விஜயர் தலையில் இமயத்தில் எடுத்த கற்களைச் சுமக்கச் செய்து, அவற்றைக் கங்கையில் நீராட்டி, பின் தலைநகரான கருவூருக்கு சுமந்து சென்று கண்ணகிக்கு சிலையெடுத்த வரலாறு நாம் அறிந்தது தானே?''

''இருந்தாலும் இதெல்லாம் நம் நாட்டுக்குள் தானே நிகழ்ந்தது. கண்டம் விட்டுக் கண்டம் சென்றா நம்மவர்கள் நாடு பிடித்தனர்?''

''வாய்ப்பு இருந்தால் அப்படியும் நடந்திருக்கும். சகரன் என்பவன் பாலைவனத்தை எல்லாம் கடந்து சென்றிருக்கிறான். எனவே, ஆட்சி மாற்றத்தை நடக்கக் கூடாத செயலாக கருதுவதை விடுங்கள். நாம் எப்படி இருத்தல் வேண்டும் என்பதே நமக்கு முக்கியம்''

''தங்கள் பேச்சு கேட்க நன்றாக உள்ளது. ஆனால்...?''

''என்னை நீங்கள் குரு ஸ்தானத்தில் வைத்திருப்பது உண்மையானால் என் பேச்சைக் கேட்டு நடப்பதே சரியாகும். அப்படி நடப்பதாக இருந்தால் தான் பேசுவேன். இல்லாவிட்டால் பேச நான் தயாரில்லை''

வேதாந்த தேசிகரின் பேச்சு அனைவரையும் மவுனத்தில் ஆழ்த்தியது.

''எங்கே நம் கலாசாரம் அழியுமோ என்ற எண்ணமே பயத்திற்கு காரணம்'' என்றார் வைணவர் ஒருவர்.

''அழியாது. எவராலும் அழிக்கவும் முடியாது. பிரம்மன் இதன் ஆதிமூலம்? சூரியன் பின்வழி மூலம்! அவனுக்குப்பின் வைவஸ்த மனுவில் தொடங்கி இட்சவாகு என்பவனால் விண்ணில் இருந்து மண்ணுக்கு கொண்டு வரப்பட்ட நெறி நம் நெறி! பின் அவன் அவதாரமான ராமாவதாரத்தின் போதே விபீஷணர் மூலம் தென்பகுதிக்கும் வந்தது. அதுவே ஸ்ரீரங்கம் என்றானது. இந்த அத்திகிரியும் பிரம்மனால் வந்தது தானே? இது நம் நெறியின் இதயபாகம் போன்றது''

இதைக் கேட்ட ஒருவர், ''சுவாமி! தங்களின் விளக்கம் புத்துணர்ச்சி அளிக்கிறது. அதே நேரம் ஸ்தானீகர் கண்ட கனவிற்காக தியானத்தில் ஆழ்வதாகச் சொன்னீரே! அது என்னாயிற்று? எம்பெருமான் உம் போன்ற ஆச்சார்ய புருஷர்களின் வடிவில் தான் எம்மோடு பேசி வருகிறான். அவன் ஏதும் கூறினானா? அறிய ஆவலாக உள்ளோம்'' என்றார்.

'' ஸ்ரீரங்கம் செல்லக் கட்டளையிட்டிருக்கிறான். அவன் திருவுள்ளம் பற்றி நானும் பயணிக்க உள்ளேன்''

''அப்படியானால் ஸ்தானீகர் கண்ட கனவின் பொருள்...?''

''காலத்தால் அது தெரிய வரும். ஒன்று மட்டும் உறுதி! இக்குளம் இன்று நாமறிந்த ஒன்றாக உள்ளது. நடக்க வேண்டியவைகள் நடந்தால் உலகம் அறிந்த ஒன்றாக மாறும். இது சத்தியமான உண்மை.''

என்றபடியே வேதாந்த தேசிகர் குளக்கரைக்கு சென்றார். சூரியக்கதிர் பட்டதால் குளத்தில் வெள்ளிக் குழம்பு போல நீர்த்திவலைகள். சுற்றியிருந்த அத்தி மரங்களின் ஊடே வளைய வரும் தென்றல் தேசிகனின் மேனியைத் தழுவி அந்த மரங்களைக் காணச் செய்தது.

குளத்தை உற்று நோக்கியவர் மெல்ல நடந்தார். ஒரு அத்தி மரத்தின் நிழலில் புகுந்து அண்ணாந்து மரக்கிளையைப் பார்த்தார். தேசிகனே கிளைகளைப் பார்த்தார். சீடர்களோ அவரைப் பார்த்தபடி நின்றனர்.

''சுவாமி! இன்று தாங்கள் மவுனமாகச் செய்யும் செயல்கள் வியப்பைத் தருகிறது. காரணத்தை அறியலாமா?'' எனக் கேட்டார் வைணவப் பெரியவர் ஒருவர்.

''இந்த அத்திகிரியானின் மூலம் இந்த மரங்களும் கூட.. உண்மையில் ஹஸ்தம் என்ற யானை தான் இதன் மூலம்! இந்த அத்தி மரங்கள் நானும் இந்த மூலங்களில் ஒன்று எனச் சொல்வது போல் தோன்றுகிறது!''

'' தாங்கள் தமிழ், சமஸ்கிருதத்தில் பாண்டித்யம் பெற்றவர். நம்மாழ்வாரின் திருவாய்மொழியை தினமும் ஒரு வைணவன் வாய்மொழியாக ஒரு பாடலையாவது பாட வேண்டும் என உபதேசித்தவர். தாங்கள் 'ஹஸ்தி, அத்தி' என சமஸ்கிருதமும், தமிழுமாக உங்களின் ஞானத்துடன் கூடி, இவை எல்லாமும் நினைவுக்கு வருகிறது'' என்றார் அந்தப் பெரியவர்.

வேதாந்த தேசிகன் அவரை அருகில் அழைத்தார். அவரது தலையின் மீது தன் கையை வைத்தவர் கண்கள் பனிக்க கண்டார்.

''சுவாமி! தங்களின் நெகிழ்வுக்கு காரணம் அறியலாமா?'' எனக் கேட்டார்.

''ஹஸ்தி, அத்தி' என்னும் சொற்களை சொன்ன மாத்திரத்தில் என்னை நம்மாழ்வார் வரை நினைக்கச் செய்து விட்டீர்கள். கூடுதலாக அவரைத் தொட்டு நான் கூறிய கருத்துகளை எல்லாமும் நினைவூட்டி மகிழ்ச்சியில் ஆழ்த்தினீர்கள். ராமானுஜர், நாதமுனிகள், திருக்குருகைப் பிரான் பிள்ளான், மதுரகவியாழ்வார் அப்புள்ளார் என சகலரையும் நினைக்கச் செய்து விட்டீர்கள். வாழ்க நீர் பல்லாண்டு'' என்றார்.

**தொடரும்**



# வரதா வரம்தா...

பக்தித்தொடர் 29

இந்திரா சௌந்தர்ராஜன்



அந்த வைணவ அன்பரை வாழ்க பல்லாண்டு என வாழ்த்திய நிலையில், வரதனின் சன்னதி நோக்கி நடந்த வேதாந்த தேசிகர் கம்பீரமாக காட்சியளித்த வரதனை உருக்கமாக வணங்கினார். சன்னதியின் கைங்கர்யபரர்கள் தீர்த்தம், துளசி அளித்து விட்டு, வரதனுக்கு சூட்டிய மாலை ஒன்றையும் அணிவித்தனர்.

எப்போதும் கழுத்தில் மாலை விழுந்தால் உடனே அகற்றிடக் கூடாது. கண்ணேறு விழாமல் தடுப்பதிலும் அவை நிகரில்லாததாகும். எனவே அணிவிக்கப்பட்ட மாலையோடு புறப்பட்டார் தேசிகர்.

என்ன தோன்றியதோ?

திரும்ப வந்து வரதனை சேவித்தார். அவரின் செயல் அங்கிருப்பவருக்கு வியப்பைத் தந்தது.

"சுவாமி... வரதனைப் பிரிவது போல பலமுறை தரிசிக்கிறீர்களே... அப்படி ஏதும் திட்டம் உள்ளதா" என்றார் ஒரு கைங்கர்யபரர்.

ஆம்... சிலகாலம் வரதனை பிரியத்தான் போகிறேன். அதனாலேயே திரும்ப தரிசிக்கத் தோன்றுகிறது"

"அப்படியாயின் எங்கு செல்வதாக உத்தேசம்?"

"அரங்கன் என்னை அழைக்கின்றான். அங்கே மிக மிக சலனமான ஒரு கால நிலை..."

"நாங்களும் அதை அறிந்தோம்... அப்படி ஒரு நிலை தானே இங்கேயும்?"

"நாடு முழுக்க இப்போது சலனமான நிலைதான். நமது பண்பாடு, பாரம்பரியம், தொன்மை இவைகளுக்கு சோதனைக் காலம் என்பதில் சந்தேகமில்லை."

"அப்படியானால் காஞ்சியில் பிறந்து வளர்ந்த தாங்கள் இங்கல்லவா இருக்க வேண்டும். இங்கிருந்து இப்போது செல்வது சரியா?"

"உங்கள் கேள்வி சரிதான். ஆனாலும் அழைப்பவன் அரங்கன் என்னும் போது மறுக்க நான் யார்?"

"இப்படி ஒரு பதிலா? ஒருபுறம் உங்களுக்கு அழைப்பு! மறுபுறம் ஸ்தானீகர் கனவில் வரதன் குளத்தில் மூழ்கி மறைகிறான். இதை நாங்கள் எப்படி எடுத்துக் கொள்வது... தெரியவில்லையே?"

"இவன் வேறு அவன் வேறு இல்லை... அவனுக்கு ஆயிரம் நாமங்கள். அதில் ஒன்று வரதன். மற்றொன்று அரங்கன். இங்கே நின்று வரம் தருகிறான். அங்கே பாம்பணை மீது துயின்று சேவை சாதிக்கிறான். நின்றபடி இருப்பதால் இங்கோர் விழிப்பு நிலை இருப்பதாக கொள்ளலாம். அங்கே சயன கோலத்தில் தாமச உறக்கத்தில் அல்லவா இருக்கிறான்? எனவே அங்கே எதிர்ப்பு சக்திகள் அதிகம் நடமாடக் கூடும். அவைகளை எதிர்கொள்ள அவன் என்னை பணிக்கப் போகிறானோ என்னவோ?"

"தங்கள் விளக்கம் கேட்கச் சரியாக உள்ளது. அதே சமயம் இங்கே உத்பாதம் நிகழ்ந்து விட்டால் என்ன செய்வது என்கிற அச்சம் எங்களுக்குள் எழுகிறதே?"

"அஞ்சாதீர்கள்!

ஒரு வைணவன் எதற்குமே அஞ்சக் கூடாது? அவனது இரு தோளிலும் சங்கு, சக்கரம் இருந்து அவனுக்கு துணையாக திரும்பும் என பறை சாற்றுகின்றன. இந்த வேளை உங்களுக்கு நான் பிரகலாத பிரபுவை உதாரணம் காட்ட விரும்புகின்றேன். பெற்ற தந்தையாலேயே





• மது, புகை உடலுக்கு கேடு

இந்த தொடரின் ஆசிரியர் இந்திரா சௌந்தர்ராஜன் எழுதிய புத்தகங்கள் **தெரிந்த பாரதம் தெரியாத பாத்திரம், கிருஷ்ண ஜாலம், கடவுளைக் கண்டவர்கள்** பெற 1800 425 7700ல் தொடர்பு கொள்ளலாம்.

துன்பத்திற்கு ஆளான நிலையை எண்ணுங்கள். நெருப்பில் இட்ட போதும், நீரில் இட்ட போதும், யானையை ஏவி மிதிக்கப் பார்த்த போதும், மலையில் இருந்து உருட்டிய போதும், அவன் சிறிதும் அஞ்சவில்லை. 'ஓம் நமோ நாராயணா' என்ற நாமத்தை சொல்லியே துன்பம் நீங்கப் பெற்றதை எண்ணிப் பாருங்கள். அவனுக்கு மட்டுமா துன்பம் நேரிட்டது? மடுவில் முதலை வாயில் அகப்பட்ட கஜேந்திர யானையின் பிளிறல் கேட்டு, கருடன் மீது பறந்தே வந்து துயர் போக்கியதை எண்ணுங்கள். நாம் எண்ணும் முன் நம் முன்னால் விஸ்வரூபம் எடுத்து விடுபவன் அவன். அப்படி ஒரு பரமபுருஷன் நமக்கு துணையிருக்கும் போது எதற்கு வீண் பயம்?''

வேதாந்த தேசிகனின் பதிலால் சற்றே அமைதி கண்ட அவர்கள் ''ஸ்ரீரங்கம் சென்று விரைந்து வாருங்கள். தங்களுக்காக வரதன் காத்திருக்கிறான் என்பதை மறவாதீர்கள்'' என்றார் ஒரு வைணவர்.

''என் மீதுள்ள அன்பால் தாங்கள் இப்படி மிகைபட பேசிடக் கூடாது. எனக்காக வரதன் காத்திருப்பதா? இது உணர்ச்சிப்பிழை! அவன் எப்போதும் காத்து நிற்பவன். அவனுக்காக நாம் காத்திருக்கலாம். நமக்காக அவன் காத்திருத்தல் என்பது அகம்பாவம் என்றாகி விடும். எனவே வார்த்தைகளை கவனித்து பேசுங்கள்'' என உணர்ச்சி மிகுதியோடு பேசிய வைணவரை திருத்தி விட்டு புறப்பட்டார் வேதாந்த தேசிகன்.

ஆலய வெளியில் ஒருவர் தேசிகனை தூரத்தில் இருந்து கவனித்தபடி இருந்தார். அவரது பார்வையே சரியில்லை. மெல்ல அங்கிருந்து விலகிச் சென்றவர், வேகவதி ஆற்றின் கரையை அடைந்தார்.

அங்கே மரநிழலில் சிலர் அமர்ந்திருந்தனர். கோயிலில் இருந்து வந்த மனிதரைக் காணவும் அவர்கள் எழுந்து நின்று பார்த்தனர். ஒருவர் பேச்சை ஆரம்பித்தார்.

''என்னய்யா... போன விஷயம் என்னாச்சு?''

''அந்த தேசிகனை தனியே சந்திக்கும் சூழல் ஏற்படவில்லை''

''அப்படியானால் அவரைக் கொல்ல இம்முறையும் முடியவில்லை என்று சொல்''

''ஆம்... என்னால் மட்டுமல்ல... யாராலும் அவரை எதுவும் செய்ய முடியாது. அவரை அந்த வைணவர்கள் கொண்டாடுவதில் அர்த்தம் நிறைய இருக்கிறது''

''இது என்ன உளறல்? அவன் உன்னையும் ஏதாவது வசியம் செய்து விட்டானா?''

''அப்படி செய்திருந்தால் அவர் பின்னால் அல்லவா சென்றிருப்பேன்? இப்படியா இங்கே திரும்ப உங்களை நாடி வருவேன்?''

''அப்படி இல்லை என்றால் எதை வைத்து அவனை நீயும் பெருமைப்படுத்தி பேசுகிறாய்?''

''அவர் நாம் நினைப்பது போல அற்பமான வித்தை கற்ற மாயாவி அல்ல.. பொன் பொருளுக்கு மயங்கும் சராசரி மனிதரும் அல்ல! அவர் நிஜமாகவே இறையருள் மிகுந்தவர். அவரை திருமலை வேங்கடவன் அம்சமாக வைணவர்கள் கருதுவதில் தவறில்லை''

''அப்படியானால் அவர் பாடிய ஸ்ரீஸ்துதி என்னும் பாடலுக்கு மகிழ்ந்து அந்த மகாலட்சுமியே வந்து பொன்பொருளை குவித்தாளா?''

''ஆம்... அது தான் உண்மை''

''இல்லை... அது குட்டிச்சாத்தான் செயல்''

''அது உன் கருத்து. நான் நம்பத் தயாரில்லை! அவர் பவித்ரமானவர். அந்த பெருமாளின் அம்சம் என்பதில் சந்தேகமில்லை. அதனால் தான் அவரை அரங்கனே அழைத்திருக்கிறான்''

''இது என்ன புதுக்கதை?''

''கதையல்ல... நிஜம்!''

''அரங்கப் பெருமான் இவனை அழைத்தாரா? நம்ப முடியவில்லையே?''

''நாம் எதைத் தான் நம்பினோம். இதை நம்புவதற்கு?''

''நீ இப்படி மாறுவாய் என நாங்கள் எண்ணவில்லை''

''இதை நான் நல்ல மாற்றமாய் கருதுகிறேன். அந்நியர்களை எண்ணி எல்லோரும் பயந்தபடி இருக்க, அவரிடம் மட்டும் துளியும் அச்சமில்லை. எம்பெருமான் நாம் எண்ணி முடிக்குமுன் நம் முன் நிற்பான் என தீர்க்கமாக நம்புகிறார். ஒரு மகத்தான முனிவருக்கே இது சாத்தியம்!''

வெயிலில் அவர் நடந்த போது கருடன் அவர் மீது நிழல் விழும்படி பறக்கிறது. இதுவே அவர் ஒரு முனிவர் என்பதற்கு சாட்சியாக விளங்குகிறது. எனவே நம் வழிமுறைகளுக்கு அவரால் ஆபத்து நேரும் என நாம் அஞ்சத் தேவையில்லை.

நம்மிடம் இருப்பது பொறாமை மட்டுமே! ஆனால் அவரிடமோ ஞானமும், அறிவும் கொட்டிக் கிடக்கிறது. அது அவர் முகத்தில் தேஜசாய் ஒளிர்கிறது!''

கோயிலில் வேதாந்த தேசிகனை உற்று கவனித்த அந்த மனிதர் திரும்பி வந்து இத்தனை தூரம் பேசுவார் என அவர்கள் எதிர்பார்க்கவில்லை. பேசிய மனிதரும் இறுதியாக, ''நான் இனி உங்களைப் போல் பொறாமை கொண்டு அவர் அழிந்திட விரும்பவில்லை. என் வழியும் இனி அவர் வழியே..! அதிலும் நம் நாட்டை அந்நியர்கள் கைப்பற்றத் துடிக்கும் இந்த நேரத்தில் நமக்குள்ளேயே பிரிந்து கிடப்பது சரியில்லை. இறுதியாக ஒன்றை சொல்கிறேன். அவரை அழிக்க நினைப்பது மடத்தனம். அவரை அழிக்கவும் இயலாது. அவராலேயே நம் நம்பிக்கைகளும், தத்துவங்களும் வாழ்ந்திடும். இதை மறவாதீர்கள்'' என கூறி விட்டு புறப்பட்டார்.

அப்போது அவர்களில் ஒருவன் உரத்த குரலில், ''அடேய் துக்கிரி! நான் சொல்லப் போவதை கேட்டு விட்டுச் செல். நீ பயந்து விட்டாய். கருடன், நிழல் என ஏதேதோ உளறுகிறாய். அந்த தேசிகன் ஸ்ரீரங்கத்திற்கு அரங்கன் அழைத்தெல்லாம் செல்லவில்லை. இங்கே நம்மை எல்லாம் மந்திர தந்திரங்களால் கட்டிப் போட்டது போல அங்கேயும் வித்தை காட்ட எண்ணுகிறான். நான் விட மாட்டேன். அவனை அழித்துக் காட்டுகிறேன். அந்நியர்களை விட இவன் ஆபத்தானவன். இவனை நான் அழிப்பேன்... இவன் அழிந்த செய்தி உனக்கும் வரும். அதன் பின் இந்த காஞ்சியில் நான் சொல்வதே வேதம்! நீயும் என் காலில் வந்து விழுவாய் பார்'' என அவன் கத்தியது வேகவதி ஆற்றின் கரை எங்கும் எதிரொலித்தது.

**தொடரும்**



# வரதா வரம்தா...

பக்தித்தொடர் 30



இந்திரா செளந்தர்ராஜன்

**தே**சிகனின் இல்லம் சுகந்த வாசம் கமழ்ந்திட காட்சியளித்தது!

திருமண் காப்புடன் கூடிய சங்கு, சக்கர சின்னம் பலகை ஒன்றும் இருந்தது.

வாசலில் ஓங்கி உயர்ந்த வேப்ப மரங்களுடன், பன்னீர் புஷ்ப மரங்களும் இருந்தன. உச்சிக் கதிரவன் மேற்கு திசையில் சரியத் தொடங்கினாலும் வெயில் உக்கிரமாக இருந்தது! மர நிழலில் இரு குதிரைகள் பூட்டப்பட்ட கூண்டு வண்டி ஒன்று நின்றிருந்தது. உள்ளே ஏறி அமர்ந்து திரைச்சீலையிட்டுக் கொண்டால் வெளியே யாருக்கும் தெரியாது.

இந்த கூண்டு வண்டியில் தான், திருமலை முதல் விஜயநகரம் வரை தேசிகன் சென்று வந்திருந்தார். வண்டிக்காரன் பெயர் கிருஷ்ண பாண்டன். தேருக்கு நிகரான அந்த வண்டியை இயக்குவதில் அவன் சமர்த்தன். நெற்றியில் பெரிய திருமண் காப்புடன் கூடிய தலைப்பாகை தரித்தவனாக திருவரங்கப் புறப்பாட்டிற்காக தயாராகிக் கொண்டிருந்தான்.

தேசிகன் நித்ய கடமைகள் தவறாதவர்!

அதற்காக செல்லும் வழியில் தங்கித் தான் செல்வார். அப்படி தங்கும் போது நீராடல் முதல் சந்தியாவந்தனம் வரை சகலமும் முடித்து, நித்ய ஆராதனையும் செய்வார். அதற்கென வெள்ளிப்பேழை ஒன்றும் இருந்தது. அதற்குள் சாளகிராம வடிவில் எம்பெருமான் சேவை சாதிக்கிறான். கூடுதலாக கிருஷ்ண பாதங்கள், சுதர்சன யந்திர தகடு, குளோபாத்ரம், சிறிய பட்டு வஸ்திரம், உத்ருணி போன்ற பூஜை பொருட்கள் எல்லாம் இருந்தன. அவைகளை எழுந்தருளப் பண்ணி அபிஷேக, ஆராதனை செய்து நைவேத்யமும் சாதித்து, அதை பாகவதோத்தமர்களுக்கு கொடுத்து, தானும் உண்ட பிறகே அவருக்கு நாள் தொடங்கும்.

யாத்திரை காலத்தில் ஆராதனை வழியிலுள்ள மரத்தடி, குளக்கரையிலோ நிகழும். தனக்கான உணவைத் தானே சமைத்துக் கொள்வார் 'பரண்யாசம்' என்ற நியதிக்கு ஆட்பட்டு விட்டதால் சுயம்பாகம் தான்! வீட்டில் மனைவி அல்லது தாயின் கையால் சமைத்த உணவை உண்ணலாம். இதன் காரணமாக வெளியே சாப்பிடும் வாய்ப்பே ஏற்படாது. பழம், நீருக்கு தோஷமில்லாததால் அதை எங்கும் எப்போதும் சாப்பிடலாம். இதனடிப்படையில் கிருஷ்ண பாண்டனும் அந்த கூண்டு வண்டிக்குள் சமையல் பாத்திரங்கள், சிறிய கும்முட்டி அடுப்பு, வெள்ளிப்பேழை ஆகியவற்றை எடுத்து



இந்த தொடரின் ஆசிரியர் இந்திரா சௌந்தர்ராஜன் எழுதிய புத்தகங்கள் **தெரிந்த பாரதம் தெரியாத பாத்திரம், கிருஷ்ண ஜாலம், கடவுளைக் கண்டவர்கள்** பெற 1800 425 7700 ல் தொடர்பு கொள்ளலாம்.

வைத்தான்.

காஞ்சிபுர மக்களும், தேசிகன் அவதரித்த திருத்தண்காவில் இருந்து வந்தோரும், தேசிகன் திருவரங்கம் புறப்படுவதை சோகமாக பார்த்தபடி இருந்தனர்.

உள்ளே மனைவி திருமங்கை கொடுத்த பாலை குடித்தார் தேசிகன். திருமங்கை முகத்தில் இருள் கப்பியது போல ஒரு சோகம். தன்னோடு திருமங்கை வரத் தேவையில்லை என தேசிகன் கூறியது தான் காரணம். அது அவளது முகத்தில் கலக்கம் தென்பட்டது.

''மங்கை..''

''ம்..ம்''

''இன்னமும் உன் வருத்தம் தீரவில்லையா?''

''அது என்ன உடனே தீரும் விஷயமா? நீங்கள் மீண்டும் காணும் வரை அது தீராது சுவாமி''

''இப்படி நினைப்பதும் பேசுவதும் தவறு. புன்னகையுடன் வழியனுப்பினால் அல்லவா என் பயணம் இனிதாகும்''

''முடியாது சுவாமி. அதிலும் அந்நியர் என்னும் இருள் சூழ்ந்திருக்கும் நேரத்தில் தாங்கள் என்னை விட்டுச் செல்வதை ஜீரணிக்க இயலவில்லை.''

'' நான் உன்னை விட்டுச் செல்லவில்லை. உற்றார், உறவினரோடு வரதனின் மேலான கண்காணிப்பில் தான் விட்டுச் செல்கிறேன். எனவே பயமின்றி இரு''

''பயமில்லை. உங்களைப் பிரியப் போகும் துயரம் தான் என் உபாதை''

''எல்லாம் சரியாகும். திருவரங்கத்தில் பள்ளி கொண்டிருக்கும் அரங்கனை தரிசிக்கப் போகிறேன். விண்ணகரத்தில் பிரம்ம தேவனே பூஜித்த மூர்த்தி, பின் மண்ணகரத்தில் ஸ்ரீராம பிரான் பூஜித்த மூர்த்தி. அப்படி ஒரு திருமூர்த்தத்தை தரிசிக்கப் போகிறேன். இது எத்தனை பாக்கியம்?''

இப்படி மனைவியிடம் பேசிய தேசிகன் இறுதியாக எல்லோரிடமும் சொல்லிக் கொண்டு கூண்டு வண்டியில் ஏறிக் கொள்ள கிருஷ்ண பாண்டனும் ஆகாயம் நோக்கி வணங்கி விட்டு குதிரைகளைத் தூண்டினான்.

அந்த குதிரை திருவரங்கம் நோக்கி விரையலாயிற்று. எல்லோரும் சோகமாக விடை கொடுத்தனர்.

அந்த மயானத்தில் சில பிணங்கள் எரிந்து கொண்டிருக்க, அந்த பகுதி முழுக்க பிணப்புகையின் மூட்டம்! சற்றுத் தள்ளி ஒரு சிதைந்த கல் மண்டபம். அதில் தான் இறந்தவருக்காக கர்ம காரியங்களைச் செய்வார்கள். அதன் காரணமாய் அங்கங்கே மரச் சிப்பங்கள், கூடைகள், எள் துளிகள், வாய்க்கரிசிப் பருக்கைகள் என அந்த இடமே ஒரு மாதிரியாக இருந்தது. அந்த மண்டபத்தில் கரிய உருவம் கொண்ட ஒருவன் தோளில் பெரும் மூட்டைச் சுமையுடன் நின்றிருந்தான். கருப்பு நிறத் தலைப்பாகை தரித்து நெற்றியிலும், கருப்பு மசியால் பொட்டு வைத்திருந்தான்.

அவன் யாருக்கோ காத்திருந்த அந்த வேளையில், வெள்ளை நிறக்குதிரை மீது அங்கே அந்த கல்மண்டபம் முன் ஒருவன் வந்தான். குதிரையை விட்டு இறங்கி அந்த குரூரமான மனிதனையும் பார்த்தான்.

''உனக்காகத்தான் காத்துக்கொண்டிருக்கிறேன். இப்படியா தாமதம் செய்வாய்? அவன் குரலும் கர்ண கொடூரமாக இருந்தது.

''நான் தாமதிக்கவில்லை. அந்த தேசிகன் புறப்படத் தாமதமாகி விட்டது. அவன் புறப்படவும் நானும் புறப்பட்டு வந்தேன்''

''அப்படியானால் இப்போது அந்த தேசிகன் காஞ்சிபுரம் எல்லையைத் தாண்டியிருப்பானா?''

''தாராளமாக... நிச்சயமாக இரவில் தேசிகன் பயணிக்க மாட்டார். செல்லும் வழியில் ஸ்ரீமுஷ்ணத்தில் இரவு அவர் தங்குவதாக அறிந்தேன்''

''அது போதும் எனக்கு! நாளை பொழுது விடியும் போது அவன் பிணத்தை உலகம் காணும்''

''உன் வார்த்தைகளை நம்பலாம் தானே?''

''அதில் சந்தேகம் வேண்டாம்''

''காரணமாகத் தான் கேட்கிறேன். தேசிகர் பெரும் மந்திர தந்திர யந்திரர்!

அவர் கூப்பிட்டால் மகாலட்சுமியே வருகிறாள் என்றால் பார்த்துக் கொள்ளேன்''

நான் கூப்பிட்டால் அந்த பத்ரகாளி வருவாள். வர வைக்கட்டுமா?

''தேவையில்லை. கொடூர மாந்திரீகன் எனத் தெரிந்து தானே தேசிகனைக் கொல்ல ஏற்பாடு செய்துள்ளேன்''

''நான் மாந்திரீகன் மட்டுமல்ல; சர்ப்ப வித்தைக்காரனும் கூட. அந்த தேசிகனுக்கு பாடம் கற்றுத் தர விரும்பும் பலருள் ஒருவன். அவன் இருக்கும் வரை என்னை நாடி யாரும் வர மாட்டார்கள். அவனையே கடவுளாக வழிபடத் தொடங்கி விடுவர். அதைத் தடுக்க அவனைக் கொன்றாக வேண்டும்''

''கோபத்தை செயலில் காட்டு. ஆமாம்! எப்படி கொல்லப் போகிறாய்?''

''அதை செய்முறையாகவே காட்டுகிறேன் பார்'' என்ற அந்த மாந்திரீகன், தோளில் சுமந்தபடி இருந்த மூட்டையை இறக்கி விட்டு, வாளை எடுத்தவனாக சற்று தொலைவில் நின்ற வாழை மரத்தை வெட்டி, அதன் தண்டை தண்டு பாகத்தை சுமந்து வந்தான். அதன் மீது வேட்டியைச் சுற்றி தரையில் பிணம் போல கிடத்தினான்.

ஒரு சட்டியை மனிதமுகம் போல, வாழைத்தண்டின் தலைப்பகுதியில் வைத்தான். அருகில் கிடந்த ஒரு மாலையை அணிவித்தான். தூர இருந்து பார்த்தால் பிணம் போலவே தோன்றியது.

குதிரை மீது ஏறி வந்தவனுக்கும் அப்படித் தான் தோன்றியது. பின் அந்த மாந்திரீகன் தன் மூடையை அவிழ்க்கவும், உள்ளே பல மூங்கில் பெட்டிகள். அதில் பருமனான கருநாகம் ஒன்று சீறியபடி எழுந்தது. மந்திரம் சொல்லி அதன் மீது பொடியைத் தூவவும், அந்த பாம்பு அந்த வாழைத்தண்டை உடலாகக் கருதி ஆவேசமுடன் கொத்தியது.

இளம் பச்சையான வாழைத்தண்டு கருநீலமாக மாற ஆரம்பித்தது!

**தொடரும்**



# வரதா வரம்தா...

பக்தித்தொடர் **31**



இந்திரா சௌந்தர்ராஜன்

மொத்த வாழைத்தண்டும், அதில் கட்டப்பட்ட வேட்டியும் நீலமாக மாறத் தொடங்கியது. இதைக் கண்ட குதிரைவீரனின் கண்கள் வியப்பால் விரிந்தன.

"மாந்திரீகா...பலே! பலே!" என வாய் விட்டு உற்சாகமாக அந்த மாந்திரீகனைப் புகழ்ந்தான். அந்த கருநாகம் அப்படியே படம் விரித்தபடி நின்றிருந்தது. மாந்திரீகன் ஒரு மந்திரம் கூறவும், கூடையில் சுருண்டு அடங்கியது. பின்னர் அதை மூடி தன் மூடைக்குள் வைத்துக் கட்டிக் கொண்டான். நிமிர்ந்து குதிரை வீரனைப் பார்த்தவன், " அந்த தேசிகன் தங்கப் போகும் இடத்திற்கு அருகில் என்னை விட்டு விடு! மற்றதை பார்த்துக் கொள்கிறேன்" என்றான்.

"அதற்கு முன் உன்னிடம் சில கேள்விகள்.."

"தாராளமாகக் கேள்.."

"இந்த பாம்பு உனக்கு கட்டுப்பட்டதா?"

"இது மந்திர நாகம். என் அடிமைகளில் ஒன்று! மந்திரத்துக்கே இது கட்டுப்படும்"

"ஒரு பாம்பை இப்படி விருப்பத்திற்கு ஆட்டி வைக்க முடியுமா?"

"நான் ஆட்டி வைப்பதைத் தான் பார்த்தாயே... இன்னுமா சந்தேகம்?"

"அதற்கில்லை.. இதை இப்போது கூட என்னால் நம்ப முடியவில்லை"

"உன் போல சராசரி மனிதர்களே எப்போதும் இப்படித்தான்... இப்போது எதையும் நம்ப வேண்டாம். அந்த தேசிகனை சங்கபாலன் கடித்து, அவனது உயிர் பிரிந்த பிறகு நம்பு"

"சங்கபாலனா.. பாம்பிற்கு இப்படி ஒரு பெயரா?"

"பாம்பு என்று சாதாரண ஜந்து போல இதை சொல்லாதே. நாகலோகத்தைச் சேர்ந்த இது பூலோகத்திலுள்ள அனந்த சரஸ் என்னும் வரதன் கோயில் குளத்தில் நீராட வந்தது. அப்போது என் மந்திர சக்தியால் பிடித்தேன்"

"என்ன சொல்கிறாய்? இது நாகலோகத்தைச் சேர்ந்ததா?"

"ஆமாம். உடனே அது எங்கே இருக்கிறது எனக் கேட்காதே. மொத்தம் பதினான்கு உலகங்கள் உள்ளன. அதில் ஒன்றே நாகலோகம்!"

"அதெல்லாம் புராண கதைகளில் தான் வரும்! பவுராணிகர்கள் ஏதோ சொல்வார்கள். நான் அதை நம்பியதில்லை"

"அதனால் நஷ்டம் யாருக்குமில்லை"

"அது சரி! அது எதற்கு அத்திகிரி கோயில் குளத்துக்கு வர வேண்டும்?"

"அந்த குளம் கங்கைக்கு இணையானது. அதில் நீராடினால் கொடிய பாவமும் நீங்கும்! நாகர்கள் புனித குளங்களில் மூழ்கி வழிபடுவார்கள். இதனால் முக்தி கிடைத்து பரமபதத்தையும் அடைவார்கள்"

"அது எப்படி உனக்குத் தெரியும்?"

"அப்பனே! நான் அதர்வண வேதத்தை கரைத்துக் குடித்தவன். கூடவே புராண கதைகளும் எனக்கு தெரியும்"

"இந்த சங்கபாலன் அனந்தசரசுக்கு வருவது உனக்கு எப்படி தெரியும்? இதையே நான் கேட்டேன்"

"பவுர்ணமியன்று இரவில் புனிதமான குளங்கள், கங்காநதி நோக்கியும் கந்தர்வர்கள், யவ்வனர்கள், நாகர்கள் வருவார்கள் என என் குருநாதர் மூலம் அறிந்திருக்கிறேன்"

"அப்படி நீராட வந்த நாகத்தை எதற்கு பிடித்தாய்? அது உனக்கு என்ன தீங்கு செய்தது?"

"நான் இப்போது உன்னை கேட்கிறேன். இந்த வேதாந்த தேசிகரை ஒழித்துக் கட்ட மட்டும் ஏன் துடிக்கிறீர்கள். இவர் என்ன தீங்கு செய்தார்?"

"ஒருவர் தீங்கு செய்தால் தான் கொல்ல வேண்டுமா? நம் முன்னேற்றத்துக்கு தடையாக இருந்தாலும் போதுமே?"

"உனக்கு இப்படி ஒரு காரணம் என்றால், எனக்கு மகாமந்திரவாதியாக திகழ வேண்டும்



என்று விருப்பம். என் ஆணைக்கு தேவர்கள், நாகர்கள், கந்தர்வர்கள் என பலரும் கட்டுப்பட்டு நடக்க வேண்டும். நான் இடும் கட்டளையை ஈடேற்ற வேண்டும்''

''உன் எண்ணம் ஆச்சரியம் அளிக்கிறது. உன்னை நான் பொன், பொருளுக்காக எதையும் செய்பவன் என்றே எண்ணியிருந்தேன்''

''யாருக்கு வேண்டும் உன் பொன் பொருள்! என் யட்சிணியிடம் கூறினால் மலையாக குவித்து விடுவாள். பார்க்கிறாயா?''

''அப்படியா?''

''என்ன அப்படியா... உனக்கு இப்போது என்ன வேண்டுமோ கேள். என் யட்சினி தருவாள்''

''ஆச்சர்யமாக உள்ளதே... அப்படியானால் எங்கே உண்ண பால்சோறும், பழரசமும் கிடைக்குமா இப்போது?''

''இவ்வளவு தானா... ஜெய் நிசும்பினி! ஜெய் பிடாரிணி! பால் சோறும், பழரசமும் க்ஷண நேரத்தில் வரட்டும்''

மாந்திரீகனின் கட்டளைக்கு ஏற்ப அழகான இளம்பெண் வெள்ளித்தட்டில் பால் சோறும், கூஜாவில் பழரசமும கொண்டு வரலானாள்.

அந்த குதிரை வீரன் விக்கித்துப் போனான்.

அவளும் வைத்து விட்டு மறைந்தாள். அவனோ காண்பது கனவா இல்லை நிஜமா என்பது போல கண்களை கசக்கினான்.

''உம் சாப்பிடு''

''இது...இது...''

''என்ன தயக்கம்?''

''நிஜம் தானா இதெல்லாம்?''

''சாப்பிட்டு பார்த்துச் சொல்''

''அவசியமில்லை. இது உண்மை என்றால் உன்னை விட சக்தி படைத்தவர் யாருமில்லை. ஆனால் நீயோ ஏவலாளி போல இருக்கிறாயே... எதனால்?''

''ஏணிகள் எப்போதும் பலரை ஏற்றி விடும். ஆனால் அது அப்படியே தானிருக்கும். நாங்களும் அப்படித்தான்''

''சரி...இறுதியாக ஒரு கேள்வி. இத்தனை சக்தி படைத்த நீ, பொன்னுக்காக இல்லாமல் வேறு எதற்காக எங்கள் விரோதியான அந்த தேசிகனைக் கொல்ல நினைக்கிறாய்?''

''இப்போது நான் ஒரு பெரும் உண்மையை சொல்கிறேன். அவர் இருக்குமிடத்தில் அவரைத் தவிர யாரும் புகழ் பெற முடியாது. குறிப்பாக காஞ்சியில் அவர் இருந்தால் என் போன்றவர்கள் இருக்குமிடம் தெரியாமலே இருப்போம்.

எனக்கு எந்திர, மந்திர, தந்திரங்களே தெரியும். அவருக்கோ அவை சாதாரணம். அவர் மகாயோக சித்தி உடையவர். அவர் முயன்றால் கடவுளை அழைத்து கடவுளோடு சாதாரணமாகப் பேசலாம்''

''அப்படியா... நாங்கள் கேள்விப்பட்டதெல்லாம் நிஜம் தானா?''

''சத்யமான நிஜம்''

''இவ்வளவு சொல்கிறாயே! நீ சொல்வதை பார்த்தால் அவரை யாராலும் அழிக்க முடியாது என்றல்லவா தோன்றுகிறது?''

''ஆம்...அது இயலாத செயல் தான். இருப்பினும் முயன்று பார்ப்பதில் தவறில்லையே?''

''என்ன நீ இப்படியும் பேசுகிறாய்.. அப்படியும் பேசுகிறாய்?''

இந்த தொடரின் ஆசிரியர் இந்திரா சௌந்தர்ராஜன் எழுதிய புத்தகங்கள் **தெரிந்த பாரதம் தெரியாத பாத்திரம், கிருஷ்ண ஜாலம், கடவுளைக் கண்டவர்கள்** பெற 1800 425 7700ல் தொடர்பு கொள்ளலாம்.

''நான் எங்கே பேசுகிறேன்... அவரே பேசச் செய்கிறார்''

''வித்தியாசமான பதில். உன் மூலம் நான் நிறைய தெரிந்து கொண்டேன். உன் சக்தியை அந்நியர்களுக்கும் காட்டுவாய் தானே?''

''சந்தேகமே வேண்டாம். காஞ்சியில் நானிருக்கும் வரை அவர்கள் வாலாட்ட முடியாது''

''இப்போதைக்கு அது போதும். நாமும் நிறைய பேசி விட்டோம். புறப்படு. உன்னை அவர் தங்கியிருக்கும் இடத்தில் விட்டு விடுகிறேன்''

அந்த குதிரை வீரன் மாந்திரீகனோடு வேகமாக புறப்பட்டான்.

..............

இதற்கிடையில் வராக க்ஷேத்திரமான ஸ்ரீமுஷ்ணத்தில் ஒருநாள் மாலைநேரம்!

குளத்தங்கரையில் நித்ய அனுஷ்டானங்களை முடித்துக் கொண்ட வேதாந்த தேசிகர், வராகப் பெருமான் சன்னதியில் வழிபட்டார். அவர் வருகையை அறிந்து ஏராளமான வைணவர்கள் திரண்டனர்.

கோயில் ஸ்தானீகர் சிறப்பு வழிபாடு செய்து கோயில் முழுவதும் அவர் நடந்து செல்லும் சமயம் கூடவே சென்றார்.

''இரண்யாட்சன் என்னும் அசுரனை வதம் செய்து, பூமிதேவியைக் காப்பாற்றிய திருமால், வராகமூர்த்தியாக கோயில் கொண்ட தலமே ஸ்ரீமுஷ்ணம்!

இங்கு வழிபடுவோரை எமனால் நெருங்க முடியாது. எமனைக் கட்டுப்படுத்தும் கடமையை இங்குள்ள ஆதிசேஷனுக்கு வழங்கியிருக்கிறார் எம்பெருமான்.

அப்படி ஒரு அரிதான சன்னதியில் வழிபாட்டை நிகழ்த்தியவரிடம், வைணவர்கள் பலரும் தங்களின் பயத்தை வெளிக்காட்டினர்.

''சுவாமி... எம்பெருமான் நம்மை கைவிட்டு விட மாட்டான் தானே?''

''தைரியமாக இருங்கள். முன்பை விட கூடுதலான பக்தியுடன் செயல்படுங்கள். அவன் நம்மை கைவிடமாட்டான்''

''இது கலியுகம் என்பதால் கடவுளுக்கே சோதனையும், வேதனையும் வரும் என்பது உண்மையா?''

''உண்மையே! இதுவே கலியின் தன்மை!''

''அதனால் தான் ஸ்ரீரங்கத்திலும் சிக்கல் உருவாகி தாங்கள் அங்கு செல்கிறீர்களா?''

''இருக்கலாம்''

''பதட்டமே இல்லாமல் பதில் கூற உங்களால் எப்படி முடிகிறது?''

''என்னுள் அவநம்பிக்கை ஏதும் கிடையாது. அதனால் தான் முடிகிறது''

இப்படி உரையாடல் நடந்த போது மாந்திரீகனும் அங்கு வந்தான். தொலைவில் ஒரு யாத்ரீகன் போல முகத்தை மறைத்துக் கொண்டு கூர்மையாக வேதாந்த தேசிகரை பார்த்தபடியும் நின்றான்.

தொடரும்



# வரதா வரம்தா...



பக்தித்தொடர் 32

இந்திரா செளந்தர்ராஜன்



**அ**ந்த மாந்திரீகனை பெரிதாக யாரும் பார்த்தது போலத் தெரியவில்லை. அவன் தன் புருவத்தின் மீது மாயாஞ்சனம் என்னும் மை பூசியிருந்தான். அப்படி பூசியவர்கள் எங்கு வேண்டுமானாலும் செல்வர். ஆனால் அவர்களை மற்றவர்கள் பார்க்க முடியாது. அதனால் அவன் துணிச்சலுடன் தேசிகனைச் சுற்றி நிற்போருடன் சேர்ந்து கொண்டான். அவன் சுமந்து வந்திருந்த சங்கபாலன் என்னும் பாம்பும் பத்திரமாக ஒரு புதருக்குள் மறைந்து நின்றது.

அந்நியப் படையெடுப்பை பிரதானப்படுத்தி அங்கிருப்போர் பேசியதை மாற்ற எண்ணிய தேசிகன், "எம்பெருமானுடைய அவதாரங்களில் ஒன்றான வராக அவதாரம் குறித்து கேளுங்கள். இத்தலத்தின் மகிமை பற்றி கேளுங்கள். இப்போது நமக்கு தேவைப்படுவது அவன் மீதான பக்தி ஒன்றே. நம் மனதிற்குள் அவனை நிரப்பினால் பயம் எல்லாம் பறந்தோடும்" என்றார்.

அப்படியானால் திருக்கண்ணில் எழுந்தருளி எங்களுக்கு உபதேசிக்கலாமே" என்றார் அடியவர் ஒருவர்.

"அதற்கென்ன... செய்தால் போயிற்று" என அருகிலுள்ள உற்ஸவ மூர்த்தி எழுந்தருளும் திருக்கண் மண்டபத்திற்கு சென்று அமர்ந்தார். அதற்குள் இருட்டி விட்டதால் தீப்பந்தம் கொளுத்தப்பட்டு அவருக்கு அருகில் நான்கு பேர் நின்றனர். அன்றைக்கு கோயிலுக்கு வந்தவர்களுக்கெல்லாம் கொடுப்பினை. ஒருபுறம் எம்பெருமான் தரிசனம், மறுபுறத்தில் ஆச்சார்ய வைபவம்!

தேசிகனின் உபன்யாசம் தொடங்கியது. நம்மாழ்வாரின் பாசுரம் ஒன்றை சொல்லி பேச்சை தொடங்கினார்.

***"உயர்வு அற உயர்நலம் உடையவன் எவன்? அவன்***
***மயர்வு அற மதிநலம் அருளினன் எவன்? அவன்***
***அயர்வு அறும் அமரர்கள் அதிபதி எவன்? அவன்***
***துயர் அறு சுடர் அடி தொழுது எழு என் மனனே!"***

தொடர்ந்து வராக மூர்த்தியின் வரலாறு தொடங்கியது.

"எம்பெருமானுடைய மகத்தான வல்லமையை காட்டுவது இந்த வராக அவதாரம். இரண்யாட்சன் இந்த பூமியை ஒரு பந்து போல தூக்கிச் சென்று பாற்கடலுக்குள் மறைத்தான். அப்படியென்றால் அவனது வலிமையை கற்பனை செய்து பாருங்கள். அவனுக்கு அந்த வலிமையை கொடுத்தவர் யார் என்றால் அதுவும் எம்பெருமானே! அசுர சக்தி இப்படி அதர்மமாக நடந்தால் எம்பெருமானும் தன் சக்தியை காட்டி அவன் கொட்டத்தை அடக்குவான். எம்பெருமானும் வராகமாகி தன் கொம்புகளால் பூமியை தூக்கியதோடு, வான்வெளியில் மிதக்கச் செய்தான். பஞ்சபூத சேர்க்கையை உருவாக்கி பூமியைச் சுழலச் செய்து உயிர்களையும் படைத்தான்!

இதை எல்லாம் செய்ய எவ்வளவு ஆற்றல் வேண்டும்? இந்த பூமியை கடலில் ஒளித்து வைக்கும் ஆற்றல் கொண்ட ஒருவனும் இருந்தால் அல்லவா, எம்பெருமானும் தன் சக்தியை காட்ட முடியும்?

அப்படி ஒருவனை படைத்ததும் அவனே... அவன் செயலை முறியடித்து விஸ்வரூபம் எடுத்ததும் அவனே! அப்படிப்பட்ட லோக நிர்மாணியின் திவ்ய ஸ்தலம் தான் ஸ்ரீமுஷ்ணம். இந்த பெருமாளின் மகிமையை உணர்ந்து சேவிக்க வேண்டும். இவனோடு சேர்ந்தே இருப்பவள் மகாலட்சுமிதாயார்! ஒரு பக்கம் லட்சுமின்னா மறுபக்கம் பூமாதேவி!

இந்த பூமாதேவியின் மகன் தான் பவுமன் என்னும் நரகாசுரன். அதாவது எம்பெருமானின் மகன்! நரகாசுரன் விஷ்ணுபுத்திரன் என்பது ஆச்சரியமான விஷயம்!

கருணை வடிவானவன் எம்பெருமான். ஆனால் அவன் மகனிடம் அது சிறிதும் இல்லை! நான் என்ற ஆணவமும், தன்னை வெல்ல எவருமில்லை என்ற திமிரும் அதிகம் இருந்தது. இதுவும் ஆச்சரியம் தானே? ஆனால்


• மது, புகை உடலுக்கு கேடு

இந்த தொடரின் ஆசிரியர் இந்திரா சௌந்தர்ராஜன் எழுதிய புத்தகங்கள் **தெரிந்த பாரதம் தெரியாத பாத்திரம், கிருஷ்ண ஜாலம், கடவுளைக் கண்டவர்கள்** பெற 1800 425 7700 ல் தொடர்பு கொள்ளலாம்.

தன் மகனுக்காக எம்பெருமான் சலுகை காட்டவில்லை. கிருஷ்ணராக வந்து அவனை சம்ஹாரம் செய்தான். இந்த சந்தர்ப்பத்தில் பூமாதேவி எம்பெருமானிடம் ஒரு வரம் கேட்டாள். கடைசி வரை தவறாகவே வாழ்ந்து விட்ட தன் மகனின் இறப்பு, உலகிற்கு ஒரு சந்தோஷமான விஷயம். இதை உலகத்தவர் கொண்டாட வேண்டும். அப்போது அவனை நினைப்பதோடு, தவறு செய்தால் தண்டனை உண்டு என்பதும் மக்களின் மனதில் பதியும். இத்துடன் கடவுள் பாரபட்சம் அற்றவர் என்பதும் புரியும் என்றாள். இதையே தீபாவளியாக கொண்டாடுகிறோம். அந்த நாளில் தண்ணீர் எல்லாம் புனித கங்கையாக மாறுகிறது. கங்கையில் நீராடினால் பாவம் மறையும். திருந்திய நரகாசுரன் பிராயசித்தமாக இப்படி கேட்க, கங்கையும் அதை ஏற்றாள்.

நம்மை எல்லாம் புண்ணியர்களாக ஆக்கிட பூமாதேவி செய்த ஏற்பாடு இது. பூமாதேவியே இத்தலத்தில் அம்புஜவல்லித் தாயாராக இருக்கிறாள்!'

இங்கு வருவோருக்கு ஆணவம், பாவம், எமபயம் நீங்கும். தேசிகன் இப்படி பூவராக சுவாமியின் பெருமையைக் கூறியபடி சகலரையும் பார்த்தார். அவர்களில் மாந்திரீகனும் இருந்தான்! அவன் யார் கண்களுக்கும் தெரியவில்லை. ஆனால் தேசிகனின் கண்களுக்கு மட்டும் பளிச்செனத் தெரிந்தான். அவனைப் பார்த்து தேசிகன் சிரிக்கவும் வெலவெலத்து போனான். தேசிகனும் பேசி முடித்ததும் சன்னதி பட்டரிடம் எல்லோருக்கும் தீர்த்தம் கொடுக்கச் செய்தார். மாந்திரீகன் தீர்த்தம் பெறாமல் அங்கிருந்து நகர்ந்தான். சிறிது தூரத்தில் திரும்பிப் பார்த்த போது தேசிகன் அழைப்பது போலிருந்தது.

தன் உருவம் மற்றவருக்கு தெரியாத நிலையில் தேசிகனுக்கு மட்டும் எப்படி தெரிந்தது? தன் அஞ்சனக்கட்டு பலிக்கவில்லையே என யோசித்தவன் ஒரு முடிவுக்கு வந்தான். இரவு முழுவதும் மகாசண்டியை தியானித்து, ஊரை விட்டு தேசிகன் செல்லும் நேரத்தில் சங்கபாலன் பாம்பை ஏவி தன் திட்டத்தை நிறைவேற்றலாம் என நம்பினான்.

இதற்கிடையில் அரங்கப்பெருமான் அருள்புரியும் ஸ்ரீரங்கத்தில் அதே இரவு நேரம்!

பிள்ளைலோகாசார்யார் வடக்கு கோபுர வாசல் வழியாக கோயிலுக்குள் வந்தவர் முதலில் அரங்கநாதரை தரிசிக்காமல் தாயாரின் சன்னதி நோக்கி நடந்தார். சீடர்கள் அதைக் கண்டு ஆச்சரியப்பட்டனர். ஒரு வைணவன் கோயிலில் பின்பற்ற வேண்டிய வழிமுறைகள் சில உள்ளன. ராமானுஜர் அவற்றை உபதேசித்ததோடு தானும் பின்பற்றி வழிகாட்டியுள்ளார். அதன்படி கால்களை கழுவிக் கொண்டும், தலையின் மீது தீர்த்தத்தை புரோட்சித்துக் கொண்டும் (தெளித்துக் கொண்டு) தான் கோபுர வாசலை கடக்க வேண்டும். அப்படி வரும் போது மனதிற்குள் நாராயண நாமத்தை ஜபிக்க வேண்டும்.

அப்படி ஒருவனை படைத்ததும் அவனே... அவன் செயலை முறியடித்து விஸ்வரூபம் எடுத்ததும் அவனே! அப்படிப்பட்ட லோக நிர்மாணியின் திவ்ய ஸ்தலம் தான் ஸ்ரீமுஷ்ணம்.

இல்லாவிட்டால் ஸ்தோத்திரங்கள் சொல்லலாம்.

கொடிமரம் முன் வடக்கு திசை பார்த்து விழுந்து வணங்க வேண்டும். அப்போது நெற்றி தரையில் பட்டு, தூசி இருக்குமாயின் அது ஒட்ட வேண்டும். இது உடம்பின் மற்ற பாகங்களுக்கும் பொருந்தும். **கோயில் தூசிக்கும், பசுவின் குளம்படி தூசிக்கும் 'பவித்ர தூசி' என்று பெயர். அடியவர்கள் காலடியும், பசுவின் காலடியும் மிக உயர்ந்தவை. அது நம் மீது பட்டால் ஆணவத்தை போக்குவதோடு, பக்தியில் உருக்கமும் சேர்க்கும்.** இதன் பிறகு பிரதான பெருமாளை தரிசித்து பிறகு தாயார், உபசன்னதிகளை தரிசிக்க வேண்டும். இறுதியாக ஓரிடத்தில் அமர்ந்து தியானிக்க வேண்டும். அதன்பின் நேராக வீட்டிற்கு வந்து பிரசாதத்தை எல்லோருக்கும் தந்து உண்ணச் செய்ய வேண்டும். இதுவே கோயில் வழிபாட்டில் பின்பற்ற வேண்டியவை. இந்த ஒழுங்கினை உருவாக்கிய ராமானுஜர் தானும் பின்பற்றி வாழ்ந்தார். அவர் வழியில் நடக்கும் பிள்ளைலோகாசார்யார் அதை விடுத்து, தாயார் சன்னதி நோக்கி நடக்கவே சீடர்களின் மனதில் குழப்பம் எழுந்தது.

''சுவாமி! என்ன விநோதம்! எப்போதும் அரங்கநாதப் பெருமானை தரிசித்த பிறகல்லவா... தாயாரை சேவிக்கச் செல்வீர்கள். இன்றென்ன தலைகீழாக?'' என மணப்பாக்கத்து நம்பி கேட்டார்.

''யாராவது இப்படி கேட்பீர்கள் என்று தெரியும். என்னவோ தெரியவில்லை. உள்ளுணர்வில் தவறு நடக்கப் போவது போல் ஒரு உணர்வு''

''ஒரு தவறா... அதுதான் பல தவறுகள் நடந்து விட்டதே சுவாமி?''

''அந்நியர்களையும், ஆட்சியாளர்களையும் மனதில் வைத்து சொல்கிறீர்கள். இந்த பூமி அந்த வகை தவறுகளை பல இடங்களில் பலமுறை கண்டுள்ளது! இன்று இந்த பூமியில் நமக்கு தான் சிக்கல். புராண காலத்தில் பூமிதேவிக்கே சிக்கல் வந்தது. அவளைத் தூக்கிச் சென்று கடலுக்குள் ஒளித்து வைத்து விட்டான் இரண்யாட்சன் என்ற அசுரன்! எம்பெருமான் வராக அவதாரம் எடுத்து வந்து பூமியைத் திரும்ப வானில் நிலைபெறச் செய்தான்.

நான் நம் க்ஷேத்திரத்திற்கு மாசு ஏற்பட்டு வருவதற்காக மட்டும் வருந்தவில்லை. இது அதையும் கடந்த ஒன்று. என் மிக விருப்பமான யாருக்கோ பெரிதாக தீங்கு நேரப் போவது போல் ஒரு உள்ளுணர்வு. அதனால் தான் அதை தாயாரின் காதில் சொல்ல முதலில் வந்தேன்''

''ஆச்சரியம்... எம்பெருமானிடம் முதலில் சொல்லாமல் தாயாரிடம் முதலில் சொல்வதா?'' என்றார் ஒருவர்.

**தொடரும்**



# வரதா வரம்தா...

பக்தித்தொடர் 33

இந்திரா சௌந்தர்ராஜன்



**கே**ள்வி கேட்டவரை புன்னகையுடன் பார்த்த பிள்ளைலோகாச்சார்யார், ''ஒரு நல்ல வைணவன் எதற்காகவும் பெருமாளிடம் அதைக் கொடு இதைக் கொடு என பிரார்த்திக்கக்கூடாது. அப்படிக் கேட்பது அவனைச் சிறுமைப்படுத்துவதாகும். நமக்கொரு தாய் தந்தையை தந்து, உற்றார், உறவினர் தந்து, வசிக்க மனை தந்து, ஊர் தந்து, உலகு தந்து, உணவு தந்து, பேச மொழி தந்து, பார்க்க விழி தந்து, கேட்க காதுகளைத் தந்து என்று எல்லாவற்றையும் நாம் கேட்காமலே நமக்கு தந்த பேரருளாளனுக்கு நமக்கு எதை எப்போது தர வேண்டும் எனத் தெரியாதா என்ன? எனவே நாம் சரணாகதி அடைந்த நிலையில் நம் கடமையைச் செய்தபடி போய்க் கொண்டே இருக்க வேண்டும். மற்றதை அவன் பார்த்துக் கொள்வான்'' என ஒரு நீண்ட விளக்கம் அளித்தார்.

ஆனால் அந்த விளக்கத்திற்கும், கேட்ட கேள்விக்கும் தொடர்பு இருப்பதாக கேட்டவருக்கு புரியவில்லை.

''சுவாமி... தாயார் சன்னதிக்கு முதலில் செல்வதற்கும், இந்த விளக்கத்திற்கும் தொடர்பு இருப்பதாகத் தெரியவில்லையே?'' என்றார்.

''இருக்கிறது! நான் இன்னமும் முடிக்கவில்லை. தொடர்ந்து கேளுங்கள். எம்பெருமானிடம் இப்படி நமக்கென எதையும் கேட்கத் தேவையில்லை தான்.

ஆனால் சில சமயத்தில் பிறர் நலனுக்காக பிரார்த்தனை புரியும் அவசியம் ஏற்பட்டு விடுகிறது. அதிலும் நாடும், ஊரும் இருக்கும் நிலையில் அவன் கருணை பெரிதும் தேவைப்படுகிறதே?''

''உண்மைதான்... ஆனாலும் தாயாரிடம் செல்லக் காரணம்?''

''தாயார் தயை மிகுந்தவள்! அவளிடம் பிரார்த்தனை வைத்தால் போதும். அதன் பிறகு அவள் பார்த்துக் கொள்வாள். எம்பெருமான் மார்பிலேயே இருப்பதால், மிக வேகமாக எம்பெருமானிடம் சொல்லி தீர்த்து வைப்பாள். அதற்காகவே தாயாரிடம் செல்கிறேன்''

''எம்பெருமானிடம் பிரார்த்தித்தால் செவி மடுக்க மாட்டானா அவன்?''

''சொல்லத் தேவையே இல்லையே. அவன் சர்வக்ஞன்! அவன் அறிந்திராத ஒன்று தான் ஏது உலகில்? அவனிடம் நேரில் பிரார்த்திக்கும் போது அவன் அறிந்திராதவன் போல் நாம் கருதுவதாக ஆகி விடுகிறதே? இதுவே அவனை சிறுமைப்படுத்தும் செயல் என தொடக்கத்தில் கூறினேன். எனவே தான் அவனிடம் செல்லாமல் தாயாரிடம் போகிறேன். இது அவனறிந்த ஒன்றைத் தூண்டுவது போன்ற செயல்''

''சற்று முன் யாருக்கோ தீங்கு நேரப் போவதாக கூறினீர்களே... அது யாருக்கு?''

''யார் எனத் தெரிந்தால் இப்படியா பேசிக் கொண்டிருப்பேன். இது என் உள்ளுணர்வு! யாராக இருப்பினும் அந்த தீங்கு தவிர்க்கப்பட வேண்டும்''

ரங்கநாயகித் தாயாரின் சன்னதி கொடிமரம் கடந்து இரு கல்யானைகளைக் கொண்ட படிகள் மீதேறி, ஊஞ்சல் மண்டபத்தில் நடந்தபடியே பிள்ளைலோகாச்சார்யார் பேசிய பேச்சு, தாயார் சன்னதி வரவும் நின்றது.

எதிரில் ஒன்றுக்கு மூன்றாக தாயாரின் திவ்ய மங்கள ஸ்வரூபங்கள்! வைதீக பிராம்மணர் பிள்ளைலோகாச்சார்யார் வரவும் தீபம் காட்டி தீர்த்தம் தந்து துளசியோடு மஞ்சள் காப்பும் தந்தார்.

இட்டுக் கொண்டு கண்கள் கலங்க நின்ற போது எதிரில் புதிதாக ஒருவன்! பதினாறு முழ வஸ்திரத்தை உடல் முழுக்க சுற்றிக் கொண்டு தலையையும் முக்காடிட்டு மறைத்தவனாக எதிரில் நின்று பிள்ளைலோகாச்சார்யாரை வெறித்தான். அவனுக்கு பூனை விழிகள்! அரிவாள் போல புருவம்! குறுந்தாடி வேறு... முதல் பார்வையிலேயே அவனொரு அந்நியன் என்பது தெரிந்தது.

பிள்ளைலோகாச்சார்யார் தாயார் பக்கம் திரும்பி, ''அம்மா தாயே... தயாபரி'' என பிரார்த்தித்து திரும்பினால் அவனில்லை.

சன்னதி வைதீகரிடமும் ஒருவித படபடப்பு.

''சுவாமி... இப்படி அடிக்கடி சிலர் உற்று



இந்த தொடரின் ஆசிரியர் இந்திரா சௌந்தர்ராஜன் எழுதிய புத்தகங்கள் **தெரிந்த பாரதம் தெரியாத பாத்திரம், கிருஷ்ண ஜாலம், கடவுளைக் கண்டவர்கள்** பெற 1800 425 7700ல் தொடர்பு கொள்ளலாம்.

பார்க்கின்றனர். மிக அச்சமாக உள்ளது'' என்றார் வைதீக பிராம்மணர்.

''இவர்கள் அந்நிய ஒற்றர்கள். எல்லாவற்றையும் நோட்டமிட்டு அதன்பின் திட்டம் தீட்டி அழிக்க முனைபவர்கள். பல ஆண்டுகளுக்கு முன்னும் இப்படித் தான் வந்தனர். பெருமாளின் திருமேனி முதல் சேரகுலவல்லித் தாயாரின் திருமேனி வரை சகலத்தையும் அள்ளிச் சென்றனர்.

பின் எம்பெருமானின் திருமேனி டில்லீஸ்வரன் புத்திரிக்கு பிடித்தமான ஒன்றாக மாறியது. அதை மீட்கப்பட்ட பாடு பெரும் பாடு! இது அந்நியர்களின் அடுத்த கட்டம். இம்முறை கோயிலை முழுவதுமாக தரை மட்டமாக்கிடக் கூட முனைவர்''

''பயமுறுத்துகிறீர்களே... அடுத்து நாம் என்ன செய்திட?''

''அதற்காகவே வேதாந்த தேசிகரின் வருகையை எதிர்நோக்கி உள்ளேன். யந்த்ர, மந்த்ர, தந்த்ரமாக மட்டுமே பெரும் உத்பாதங்களைத் தடுக்கவும், தவிர்க்கவும் முடியும்! அவர் ஒரு சர்வ சுதந்திரர்! சுத்த சுயம்பிரகாசர்!''

''அவர் எப்போது வருவார்?''

''வந்தபடியே தான் இருக்கிறார்! வழியில் ஸ்ரீமுஷ்ணம், திருக்கோவிலூர் திவ்ய தேசங்களை தரிசித்து வரக் கூடும். எப்படியும் நாலைந்து நாளாகலாம்''

''அதற்குள் இங்கே ஏதாவது உத்பாதம் ஏற்பட்டால்?''

''ஆகாது. தாயாரிடம் பிரார்த்தனை செய்தாயிற்று. அவள் பார்த்துக் கொள்வாள். அதே சமயம் நம் உயிரைப் பொருட்படுத்தாமல் இந்த கோயில்களை காப்பாற்றிட துளியும் தயங்கக் கூடாது''

பிள்ளைலோகாச்சார்யார் சன்னதி வைதீக பிராம்மணருக்கு தைரியம் அளித்தவராக தன்னோடு வந்த அன்பருடன் அடுத்து நேராக அரங்கநாதப் பெருமான் சன்னதி நோக்கி நடந்தார்.

................

இரவு நேரம்!

அங்கங்கே செருகப்பட்டிருந்த தீவட்டிகள் அணைவது போல் எரிந்தன. தீவட்டிக்காரர்கள் வேப்பெண்ணெய்யுடன் வந்து எரியும் நெருப்பினை தழைத்து பின் எண்ணெய்ச்சட்டியில் மூக்கி எடுத்து திரும்ப தீ மூட்டுவர். அதன்பின் ஐந்து நாழிகை அது எரியும். நடை சாற்றும் சமயம் அணைத்து விட்டுச் செல்வர். பிள்ளைலோகாச்சார்யார் அவர்கள் செயலைப் பார்த்து வேகமாக நடக்கலானார்.

ஆனாலும் பயனில்லை. அரங்கன் சன்னதி நடை சாற்றப்பட்டு விட்டிருந்தது. வெளிக்கதவையும் மூடியாயிற்று. எந்த நிலையிலும் மூடிய கதவை திறக்க மாட்டார்கள். இனி விடியற்காலை பிரம்ம முகூர்த்த வேளையில் தான் திறப்பார்கள்.

இவை பின்பற்ற வேண்டிய நெறிகள். அதை போதித்திடும் பிள்ளைலோகாச்சார்யாரே மீறுவாரா என்ன?

வருத்தமுடன் திரும்பினார். அரங்க தரிசனம் என்பது அவருக்கு அன்றாட கடமை. அன்று அது நடவாது போனதில் இனம் புரியாத வேதனை!

எப்போதும் இப்படி ஆனதேயில்லை.

இது கூட கெட்ட நேரத்தின் அறிகுறி தானோ?

பிள்ளைலோகாச்சார்யாரின் மனதிற்குள் கேள்வியின் குடைசல். எம்பெருமானே பெரிதாக ஏதோ கேடு நடக்க உள்ளது. அதனால் தான் இங்கேயும் தரிசனம் வாய்க்கவில்லை. நல்ல வேளையாக தாயாரை வணங்க முடிந்ததே! இனி அவள் கைகளில் தான் நம் நெறிப்பாடே உள்ளது.

''தாயே கருணை செய். தேசிகன் விரைவாகவும், நலமுடனும் திரும்ப கருணை செய்'' என பலமான பிரார்த்தனை!

....................

நள்ளிரவு!

ஸ்ரீமுஷ்ணம் அருகிலுள்ள சுடுகாட்டில் அந்த மாந்திரீகன் பூஜையில் இருந்தான். அவன் முன்னால் பெரிதாக நெருப்பு வளையம். அதிலும் அவ்வப்போது பூக்களைப் போட்டு வளையத்துக்குள் தான் எல்லாம் உள்ளது போல நடந்தான். அதன் கிழக்கு பாகத்தில் நாக உருவம் வரையப்பட்டு அதன் மீது சங்கபாலன் அடங்கியிருக்கும் கூடையும் இருந்தது. இவன் மந்திரம் சொல்லிப் போட்ட பூக்களால் அது மூழ்கிப் போனது.

அவன் நெற்றியிலும் ரத்தப் பொட்டு! கருப்பு ஆடை உடுத்திக் கொண்டு கடும்பூஜையில் இருந்தான். இவன் இங்கே பூக்களைப் போடப் போட பிரம்புக்கூடை அசைந்தது. ஒரு கட்டத்தில் அதன் மூடி திறக்க சட்டென படம் எடுத்து சீற்றத்தோடு அந்த பாம்பு பார்த்தது. அவனோ பூக்களைப் போட்டபடி இருந்தான். சர்ப க்ரூர மந்திர பூஜை! அதன் விளைவாக மயானத்தில் சுற்றித் திரியும் பாம்புகள் கூட அவனைச் சுற்றி வட்டமாக எரியும் நெருப்பு வளையத்தை ஒட்டி படம் விரித்தாடி நிற்கத் தொடங்கின. அதைக் கண்டதும் அவனிடம் பெரும் உற்சாகம்!

பூஜை இப்படி நடக்கும் போது, ஸ்ரீமுஷ்ணம் கோயில் நித்திரை மண்டபத்தில் தேசிகன் தங்கயிருந்தார்.

அங்கே தான் அவருக்கான உறக்கம்! வண்டிக்காரன் கிருஷ்ண பாண்டன் மண்டப வாசலில் உட்கார்ந்தபடி தூங்கினான். காலை ஐந்து மணிக்கு கோயில் மணி மூன்று முறை ஒலித்தது. தீப்பந்தம் அவிந்து அடங்கி, புகை பிரிந்தபடி இருந்தது. தேசிகனும் கண் மலர்ந்தவராக தன் இரு கைகளையும் தேய்த்து விட்டு உற்றுப் பார்த்தார். அதன்பின் காலைக்கடனை முடித்து குளத்தில் நீராடி கோபுரத்தை தரிசித்தார்.

அப்போது கோபுரத்தில் இரு கருடன்கள் கலசத்தை மையமிட்டபடி பறந்தன.

அப்போது தான் எதிர்பாராத சம்பவம் நடந்தது. மாந்திரீகனின் பூஜையில் இருந்து விடுபட்டு சீறி வந்த பன்னிரண்டு அடி நீள பாம்பான சங்கபாலன் தாமதியாமல் கிருஷ்ண பாண்டனின் காலில் கொத்தியது.

விஷம் தலைக்கேறியதால் சுருண்டு விழத் தொடங்கினான். அடுத்தபடியாக தேசிகனின் முன்னால் சீற்றமுடன் கடிக்க தயாரானது. இந்த நேரத்தில் சூரியனும் கிழக்கில் உதயமாகிக் கொண்டிருந்தது.

**தொடரும்**



# வரதா வரம்தா...

பக்தித்தொடர் **34**



இந்திரா சௌந்தர்ராஜன்

**ப**டம் விரித்தாடிய சங்கபாலன் என்ற அந்த பாம்பு, தேசிகனை கடிக்க முயன்ற போது, மந்திர சக்தியால் அதை உற்று நோக்கி ஸ்தம்பிக்கச் செய்தார். மென்மையான அவர் முகத்தில் கோபக்கனல் வீசத் தொடங்கியது!

சங்கபாலனும் கொத்த இயலாததால் சீற மட்டும் செய்தது. இதையடுத்து கிருஷ்ண பாண்டன் அருகில் தான் சென்றார் தேசிகன். அவனது உடல் நீலமாகி விட்ட நிலையில் கண்கள் செருக தரையில் கிடந்தான்.

நடப்பதை எல்லாம் தொலைவில் நின்று பார்த்தான் மாந்திரீகன். தேசிகர் தாமதியமால் சற்று தள்ளி நின்றிருந்த குதிரை வண்டியின் சக்கரத்திலுள்ள கடையாணியைப் பிடுங்கி, அதன் கூரிய பாகத்தால் காலில் பாம்பு கடித்த பகுதியை லேசாகக் குத்திக் கிழித்து ரத்தம் கசியச் செய்தார். பின் வண்டியில் இருந்த மயிற்பீலி விசிறியை எடுத்து வந்து கிருஷ்ண பாண்டன் மீது வருடியபடி மந்திரங்களை ஜபித்தார். கிருஷ்ண பாண்டன் உடம்பின் நீலநிறம் மெல்ல மாறத் தொடங்கியது. அவனும் சிறிது நேரத்தில் கண் திறந்தான்!



தேசிகனும் பக்தியுடன் அண்ணாந்து பார்த்து கண்களை மூடி கைகளைக் கூப்பினார். இதற்குள் பலர் அவரை சூழ்ந்து கொண்டனர். குறிப்பாக கோயில் ஸ்தானீகரும், கைங்கர்ய கர்த்தாவும் நடந்ததைப் பார்த்து மிரண்டனர்.

தேசிகனும் கிருஷ்ண பாண்டனிடம் இருந்த திரும்பி வந்தவராக கோபமாய் சங்கபாலனைப் பார்த்து கர்ஜித்தார்.

''ஏ சர்ப்பமே! எவனுக்கு ஏவலாக இங்கு வந்தாய்? மானிடப் பிறப்பெடுக்க வேண்டிய நீ, நாகமாக பிறந்த நிலையில் இப்படியா ஒரு கேடும் அறியாத என் பணியாளனைத் தீண்டுவாய். இதனால் பெரும் பாவியாகி விட்டதை அறிவாயா? உன்னை இப்படியே விட்டு வைத்தால் நீ உன் நாவால் பல உயிர்களை போக்கி விடுவாய். நீயும் பாவத்திற்கு ஆளாவாய்.

எம்பெருமானின் சயனத்திற்குரிய ஆதிசேடனின் மரபில் வந்ததால் உன்னை நான் சபிக்கவில்லை. ஆயினும் உன்னை நான் விடப் போவதில்லை'' என்றவர் உக்ரமாய் கருட தண்டகம் என்னும் மந்திரத்தை பாராயணம் செய்யத் தொடங்கினார். அதுவரை கோயில் கோபுரத்தின் மீது வானில் வட்டமிட்டபடியிருந்த கருடபட்சி, தேசிகனின் பாராயணத்தை தொடர்ந்து தாழ்ந்து பறந்து வந்ததோடு அப்படியே அந்த சங்கபாலன் என்ற ஏவல் நாகத்தை தன் கால்களால் தூக்கிச் சென்றது. கருட தண்டகத்தினுடைய சக்தியை கூடியிருந்த அனைவரும் பிரமித்து பார்த்தனர்.

நடப்பதை எல்லாம் பார்த்த மாந்திரீகன், தேசிகரின் ஆவேசத்தை கண்டதோடு, கருடன் தூக்கிச் செல்வதை காணவும் ஓடி வந்து மன்னிப்பு கோரினான். இல்லாவிட்டால் அடுத்த குறி தனக்குத் தான் என்பதும் அவனுக்கு புரிந்தது.

''சுவாமி... மன்னியுங்கள். நான் தான் அந்த பாம்பை ஏவிய பாவி! உங்கள் மீதுள்ள பொறாமையால் அற்ப மந்திர சக்தியை பயன்படுத்தி இவ்வாறு நடந்தேன். அந்த பாம்பு இந்த மண் மீது பிறந்த கர்மப்பிறப்பு இல்லை. இது நாகலோகத்து பிறப்பு. அதை என் வசப்படுத்தி ஆட்டி வைத்தேன். அதன் மீது பிழையில்லை. எல்லாம் என் தவறே! இதற்கு தண்டனையாக நீங்கள் என்ன சொன்னாலும் ஏற்கிறேன். மன்னியுங்கள்'' எனக் கதறினான்.

தேசிகனும் மனமிரங்கி கருடன் திரும்பி வர பிரார்த்தித்தார். கருடனும் திரும்ப வந்து அந்த நாகத்தை உதிர்த்தான். சங்கபாலனும் மானுட வடிவம் பெற்று வணங்கி நின்றான்!

''சங்கபாலா! இதில் உன் பிழை ஏதுமில்லை.

இந்த தொடரின் ஆசிரியர் இந்திரா சௌந்தர்ராஜன் எழுதிய புத்தகங்கள் **தெரிந்த பாரதம் தெரியாத பாத்திரம், கிருஷ்ண ஜாலம், கடவுளைக் கண்டவர்கள்** பெற 1800 425 7700 ல் தொடர்பு கொள்ளலாம்.

நாக வம்சத்தவரான நீ இந்த மாந்திரீகன் வசமானதால் தான் ஏவல் சக்தியானாய்! ஏவியவன் மன்னிப்பு கோரியதால் விடுதலையும் பெற்றாய். சில காலம் கட்டுண்டு கிடந்ததால் உன் கர்மமும் தீர்ந்தது. நீ நாகலோகம் சென்று உன் இனத்தாருடன் கூடி வாழ்வாயாக'' என வாழ்த்தவும் சங்கபாலனும் கண்ணீர் மல்க விடை பெற்றான். மாந்திரீகன் தேசிகனை கூப்பிய கைகளுடன் பார்த்த வண்ணமிருந்தான்.

''மாந்திரீகனே!

இந்த மந்திர தந்திரங்களை மலிவாகப் பயன்படுத்தாதே! கூரிய கத்திதான் தச்சு வேலைக்கும் பயன்படுகிறது. நச்சு வேலைக்கும் பயன்படுகிறது. தச்சு ஒரு பொருளைத் தருகிறது. நச்சோ ஒன்றை அழித்து விடுகிறது.

ஆக்குவது பெரிதா... அழிப்பது பெரிதா.. என்று யோசி. கத்தியை தச்சுக்குப் பயன்படுத்துவது போன்றதே மந்திரங்களும். அவற்றை ஆக்க சக்தியாக மட்டுமே பயன்படுத்த வேண்டும். **மந்திரங்களால் மனம் உருக வேண்டும். மந்திரங்களால் நலம் பெருக வேண்டும். மந்திரங்கள் பலம் சேர்க்க வேண்டும்.** ஒருக்காலும் அச்சமூட்டி அழிப்பதாக இருப்பது கூடாது'' என்று அவனுக்கும் உபதேசித்தார். அவன் அங்கேயே அப்போதே தன் ஆடைகளைக் களைந்து எறிந்து விட்டு ஒரு வேட்டியை மட்டும் கட்டிக் கொண்டான். ''இன்று முதல் நான் தங்களின் அடிமை. நீங்கள் காட்டும் வழியில் நடப்பவன்'' என்றான்.

பார்த்துக் கொண்டிருந்த சகலரும் பரவசத்தில் நெகிழ்ந்து தேசிகரின் திருவடிகளில் விழுந்து வணங்கினர். ஸ்ரீமுஷ்ணம் கோயிலின் கைங்கர்யபரர் தேசிகனிடம், ''சுவாமி... கருடனையே பணிந்து வரச் செய்த தங்களின் மந்திர சித்தியை கண்ணாரக் கண்டோம். அதை எங்களுக்கும் உபதேசிக்க வேண்டும்'' என வேண்டினார். தேசிகனும் உருக்கமாக கருட தண்டகத்தை அங்கே அருளிச் செய்தார். மறு ஜென்மம் எடுத்த கிருஷ்ண பாண்டனும் அதன்பின் அங்கிருந்து ஸ்ரீரங்கம் நோக்கி அவருடன் புறப்பட்டான்!

குதிரைகள் பூட்டிய தேரும் உருளத் தொடங்கியது.

.....................

ஸ்ரீரங்கம்

பிள்ளைலோகாச்சார்யார் இல்லம்!

அதிகாலையில் கண்விழித்தவர் அப்போதே காவிரிக்கரையில் நீராடப் புறப்பட்டார். பொதுவாக சாலை அந்த நேரத்தில் காவிரிக்குச் செல்லும் கூட்டம் ஒரு புறமும், காவிரியில் இருந்து அரங்கன் கோயில் நோக்கிச் செல்லும் கூட்டமும் மிகவே இருக்கும். ஆனால் அன்றைய காலை நேரத்தில் பிள்ளைலோகாச்சார்யார் மட்டுமே இருந்தார்.

வீதியில் ஒரு மயான அமைதி!

வாசல் தெளிப்பும், கோலம் போடுவதுமாய் பெண்கள் இருப்பர். அவர்களில் பலர் குடத்து நீரை பிள்ளைலோகாச்சார்யாரின் கால்களில் விட்டு நடுவீதி என்றும் பாராமல் விழுந்து வணங்குவர். இன்று அவர்கள் யாரும் எழுந்திருக்கவே இல்லை. எல்லாமே அந்நியரின் மீதுள்ள பயத்தால் வந்த வினை! வடக்கு வீதியில் இருந்து வலது பக்கமாய் கொள்ளிடம் நோக்கி அவர் கால்கள் நடக்கத் தொடங்கவும் ஓரிடத்தில் குளிருக்காக தீமூட்டி குளிர் காய்ந்தபடி இருந்தனர் காவல் வீரர்கள் சிலர்!

அவர்களில் நரசிங்கன் என்பவன் பிள்ளைலோகாச்சார்யார் வரவும் பணிந்து வணங்கினான். நெருப்பில் அவனது முகம் நன்கு தெரிந்தது.

''யார் நரசிங்கனா?''

''ஆமாம் சாமி... வழக்கம் போல நீராடப் புறப்பட்டு விட்டீர்கள் போலிருக்கிறதே?''

''ஆம்... இன்றைய காவலில் எந்த பிரச்னையும் இல்லையே?''

''அப்படி சொல்ல முடியாது. இரவில் தான் அந்நியர்கள் அத்துமீறுகிறார்கள். குறிப்பாக ஆனைக்காவில் பெண்கள் பலரைத் தூக்கிச் சென்று விட்டனர்''

''நாராயணா... இது என்ன கொடுமை?''

''கொடுமை தான்! சுற்று வட்டார கோயில்களை ஒவ்வொன்றாக சூறையாடி வருகின்றனர். பஞ்சலோக சிலைகளை அழிக்காமல் எடுத்து வைத்துக் கொள்கின்றனர். கல்லால் ஆன சிற்பங்களை உடைக்கின்றனர். அப்படியே டெல்லி சுல்தான் பெயரைச் சொல்லி அரபி மொழியில் வாழ்த்து சொல்லச் சொல்வதாகவும் கேள்வி''

''அன்று அசுரர்கள் செய்ததை கலியில் இவர்கள் செய்கின்றனர்''

''பெரும்படை பலத்துடன் இருப்பதால் எவராலும் எதிர்க்க முடியவில்லை. நிச்சயமாகச் சொல்கிறேன் நம் ஆலயமும் சூறையாடப்படப் போவது உறுதி''

''அதிகாலை வேளையிலேயே என் மனதில் கொள்ளி வைக்கிறாயே நரசிங்கா''

''கொள்ளி வைக்கவில்லை. சொல்லி வைக்கிறேன்! எம்பெருமானை எப்பாடுபட்டாவது காப்பாற்ற வேண்டும். இதற்கு என்ன வழி?''

''யோசிப்போம். காஞ்சியில் இருந்து வேதாந்த தேசிகர் வருகிறார். அவருடன் ஆலோசித்து முடிவுக்கு வர உத்தேசம்''

''தாமதம் செய்யாதீர்கள். உங்களுக்கு உறையூர் தளபதி அனந்த சேகரனோ, திருவரங்கத் தலையாரி முடிகொண்டானோ உதவப் போவதில்லை. அவ்வளவு பேரும் இப்போது மிலேச்ச தளபதி மாலிக்காபூரின் பிடியில் சீராப்பள்ளி கோட்டை மைதானக் கொட்டடிக் காவலில் வைக்கப்பட்டுள்ளனர்.

அங்குள்ள குதிரைகளை கழுவிக் குளிப்பாட்டுவதும், லாயத்தை சுத்தம் செய்வதும் தான் அவர்கள் பணியாம்!''

நரசிங்கன் சொன்ன தகவல்கள் பிள்ளைலோகாச்சார்யாரை அதிரச் செய்து, அது அப்படியே தீர்க்க பக்தியாகி நடுச்சாலையிலேயே உக்கிரமாய் ஒரு ஸ்லோகத்தை சொல்லி வழிபடத் தூண்டி விட்டது! பொழுது விடிந்து சூரியனும் தெரிந்த நிலையில் புறா ஒன்று அவரது தோள் மீது வந்து அமர்ந்தது.

**தொடரும்**



# வரதா வரம்தா...



பக்தித்தொடர் 35

இந்திரா சௌந்தர்ராஜன்

பிள்ளைலோகாச்சார்யாரை தேடி வந்து அவரது தோள் மீது அமர்ந்த அந்த புறா, கிருஷ்ண பாண்டனால் அனுப்பப்பட்டிருந்தது. அதன் காலில் உள்ள குப்பியில், 'தேசிகன் வரும் வெள்ளிக்கிழமையன்று திருவரங்கம் சேர்வார். அவரை எதிர்கொள்ள தயாராகவும்' என்ற செய்தி இருந்தது. அந்த செய்தி பிள்ளைலோகாச்சார்யாரை உற்சாகம் கொள்ளச் செய்தது.

''நரசிங்கா இன்றைய பொழுது நல்ல சேதியோடு தான் விடிந்துள்ளது. தேசிகர் நாளை திருவரங்கம் வந்து விடுவார்''

''வழியில் அவரை மிலேச்சர்கள் பார்க்க நேர்ந்தால்?''

''நீ என்ன சொல்ல வருகிறாய்?''

''நம் மண்ணைச் சேர்ந்த தனவந்தர்களே இப்போது கோச்சு ரதங்களை உபயோகிப்பதில்லை''

''காரணம்?''

குதிரையோடு வரும் கோச்சு ரதங்களை பிடுங்கிக் கொண்டு அடித்து விரட்டி விடுகின்றனர்''

''எம்பெருமானே... இது அநியாயம்''

''இதுவே இப்போது நியாயம்''

''அப்படியானால் வரும் வழியில் தேசிகருக்கும் துன்பம் நேரிடுமோ?''

''நிச்சயமாக... அவரை ஒரு தேசாந்திரி போல நடந்து வரச் சொல்லுங்கள். அவர் தோற்றத்தை வைத்தே மதகுரு என உணர்ந்து மிலேச்சன் தன் இருப்பிடத்திற்கு இழுத்துச் சென்று விடுவான்.''

பிள்ளைலோகாச்சார்யார் வயிற்றில் புளியைக் கரைத்தான் நரசிங்கன். இருந்தும் நம்பிக்கை இழக்காதவராக, ''அவருக்கு எந்த தீங்கும் ஏற்படாது. எம்பெருமான் துணை நிற்பான். இது சத்தியம்'' என கூறியவராக கொள்ளிடம் நோக்கிச் சென்றார்.

இதற்கிடையில்...

வேதாந்த தேசிகன் வழியில் எண்ணாயிரம் என்ற ஊரில் தேரை விட்டு இறங்கி மண்ணை ஒரு சிட்டிகை எடுத்து தலைமீது தூவினார். பன்னிரு திருமண் காப்புடன் துளசி மாலையோடு பளிச்சென காட்சியளித்த அவரை ஊரார் சிலர் பணிந்தனர். அனைவரும் வைணவர்கள். அவர்களில் புண்டரீகாட்சன் என்பவர் பூர்ண கும்பமுடன் வந்து விட்டார். தேசிகனும் அதைக் கண்டு வியந்தார்.

''வர வேண்டும் வர வேண்டும்... வேதாந்த தேசிகரே வர வேண்டும். தங்கள் திருப்பாதங்கள் இந்த மண்ணில் பட நாங்கள் புண்ணியம் செய்திருக்க வேண்டும்.''

''மிக்க மகிழ்ச்சி. தாங்கள் யார்?''

''நான் ஒரு பரம வைணவன். ராமானுஜரால் ஆட்கொள்ளப்பட்டவன். என் பெயர் புண்டரீகாட்சன்''

''அப்படியா... இந்த எண்ணாயிரம் அவரது வாதப்பிரதி வாதத்திற்கு கட்டியம் கூறிய ஊர் அல்லவா?''

''ஆம்... நீங்கள் வந்த இதே வழியில் தான் அவரும் வந்தார். எங்கள் பாட்டன்மார்கள் எல்லாம் அப்போது அமணர்களாயிருந்தோம். ஒருவர் அல்ல இருவர் அல்ல... நாங்கள் எண்ணாயிரவர்கள்! எங்களைத் தன்



விசிஷ்டாத்வைத சித்தாந்தத்தால் ஆட்கொண்டு அமணச்சார்பு வாதங்களை தவிடு பொடியாக்கிட, எங்கள் முன்னோர்கள் எண்ணாயிரவரும் நிபந்தனைப்படி கழுவேறத் தயாரானோம்.

தோற்றவர்கள் கழுவேற வேண்டும் என்பதே போட்டி விதி! ஆனால் என் முன்னோர்கள் கழுவிலேறி அபானம் பிளந்து உயிர் விடுவதை பெரும் பாவமாக கருதினார் ராமானுஜர். அதனால் கழுவேறாமல் தடுத்ததோடு எங்களுக்கு யாக்கை தந்து எங்களை வைணவம் தழுவச் செய்தார். அப்படி தழுவிய தலைமுறையில் நான் நான்காவது தலைமுறை. மவுரியப் பேரரசரான சந்திர குப்தனின் ஆட்சியில் வடக்கில் வாழ்ந்த என் முன்னோர் இப்போது அஷ்ட சகஸ்ரம் என்னும் பிரிவினராய் இங்கே அடையாளம் காணப்படுகிறோம்'' என்றார் புண்டரீகாட்சன்.

''தங்களின் வரலாற்றை அறிந்ததில்

தினமலர் இணைப்பாக வெள்ளிக்கிழமை வெளிவருவது ஆன்மிக மலர். படைப்புகளை சுருக்கவும், திருத்தவும் தினமலர் நாளிதழுக்கு உரிமை உண்டு. படைப்புகளை அனுப்பும் போது, அதற்குரிய தலைப்பை முகவரியில் எழுதவும்.

அலைபேசி: 98940 09478 அலுவலக நேரம்: காலை 10:30 – இரவு 7:00 மணி ஞாயிறு விடுமுறை
மின்னஞ்சல்: aanmigamalar@dinamalar.in

இந்த தொடரின் ஆசிரியர்
இந்திரா சௌந்தர்ராஜன் எழுதிய புத்தகங்கள்
**தெரிந்த பாரதம் தெரியாத பாத்திரம், கிருஷ்ண ஜாலம், கடவுளைக் கண்டவர்கள்** பெற
1800 425 7700ல் தொடர்பு கொள்ளலாம்.

மகிழ்ச்சி. ராமானுஜ சாகித்யத்தை பிறர் சொல்ல கேட்டிருக்கிறேன். இன்று உங்கள் மூலம் நேரில் காண்கிறேன். அவர் உங்களை ஆட்கொண்ட இம்மண் மீது நான் நிற்பதே பெருமை''

''தாங்கள் எதற்காக இங்கு வந்துள்ளீர்கள் என அறியலாமா?''

''ஸ்ரீரங்கம் சென்றபடி இருக்கிறேன். வழித்தடத்தில் திவ்ய தேசங்களை வழிபடாமல் எப்படி செல்ல இயலும்?''

''தாங்கள் எங்கள் இல்லம் வந்து உணவருந்த வேண்டும். எண்ணாயிரவருக்கும் ராமானுஜர் யாக்கை வழங்கிய திருமண்பாடு என்னும் இடத்தையும் கண்டு மகிழ வேண்டும்''

''தவறாக எண்ண வேண்டாம். மிலேச்ச பயத்தால் நாடே தடுமாற்றத்தில் உள்ளது. திருமண்பாடு என்னும் இடத்தைச் கண்டு வணங்கிச் செல்கிறேன்'' தேசிகரின் விருப்பப்படியே அங்கு அஷ்ட சகஸ்ரர்களால் வழிபடப்படும் நரசிங்கப் பெருமாள் கோயிலுக்கு வேதாந்த தேசிகரை அழைத்துச் சென்ற புண்டரீகாட்சரும், அவரைச் சார்ந்தவர்களும் கோயிலுக்கு புறத்தில் இருந்த அரசமரத்தின் கீழுள்ள கல் மேடையைக் காட்டினர். அதன் முகப்பில் பெரிதாக திருமண் காப்பு இட்டிருக்க அரசமரத் தண்டிலும் திருமண் காப்பு.

''இங்கே இந்த இடத்தில் அமர்ந்தே எங்களை ஆட்கொண்டு எங்களுக்கு மந்திர உபதேசம் செய்தார் ராமானுஜர்'' என்றார் புண்டரீகாட்சர். அந்த மேடையை வணங்கிய வேதாந்த தேசிகர் அனைவருக்கும் பிரசாதம் வழங்கிவிட்டு புறப்படத் தயாரானார்.

அப்போது எதிரில் வந்த கிராம அதிகாரி தேசிகனை கவனமாக செல்லும்படி கூறியதோடு, உதவிக்கு வீரர்கள் சிலரை அனுப்புவதாகவும் தெரிவித்தார்.

''உங்களுக்கு சிரமம் வேண்டாம். எனக்கு எம்பெருமான் துணைநிற்பான்'' என்றபடியே புறப்பட்டார் வேதாந்த தேசிகர்.

அவர்களின் குதிரை ரதம் சீறிக் கொண்டு ஓடத் தொடங்கியது. சீரில்லாத பாதைகள்... வழித்தடங்களில் மிருகங்களின் உபாதை வேறு. ஓரிடத்தில் யானைகள் கூட்டமாக நின்றன. கிருஷ்ண பாண்டன் தேரை நிறுத்தி தேசிகரை ஏறிட்டான். அவரும் அதன் பொருளைப் புரிந்து கொண்டார்.

''என்ன பாண்டா யானைகள் மறித்து நிற்கிறதா?''

''ஆம் சுவாமி... காட்டு யானைகள் – குணம் கெட்டு நம்மை அழிக்கவும் முயலலாம். அச்சமாக உள்ளது''

''பயம் வேண்டாம்! அச்சம் துளிர்க்கும் போது நரசிம்மப் பெருமானைத் துதிக்க வேண்டும் என உன்னிடம் பலமுறை கூறியுள்ளேனே''

''அதை ஒட்டியே எனக்குள் இப்போது ஒரு கேள்வி?''

''தாராளமாக கேள்''

''நரசிம்மத்தை துதித்தால் இந்த யானைகள் தான் வழிவிடுமா? மிலேச்சர்கள் விட மாட்டார்களா?''

''அவர்கள் மதயானைகள்! நம் பக்திச்சிறப்பை சோதிக்க வந்தவர்கள் என வைத்துக் கொள்''

''அப்படியானால் திருவரங்கப் பெருமானுக்கு ஆபத்து நேராதல்லவா?''

''உன் கவலை இப்போது திருவரங்கம் மீதா?''

''நாம் இவ்வளவு தூரம் அவர்கள் கண்களில் படாமல் வந்ததையே பெரும் வெற்றியாக கருதுகிறேன். நமக்கு மட்டும் எதனால் இத்தனை துன்பங்கள்?''

''காய்த்த மரமே கல்லடிபடும் என அறியாதவனா நீ?''

''எல்லா கேள்விக்கும் எளிதாக பதில் சொல்கிறீர்களே... நிஜமாக உங்களுக்குள் பதைப்பில்லையா?''

''அச்சம், அவநம்பிக்கை, சுயநலம், குறுகிய பார்வை – இதில் எது இருந்தாலும் பதைப்பு தோன்றும். இது இல்லாதவர்களுக்கு பதைப்போ, பதட்டமோ ஏற்படாது. அவர்கள் எது நடந்தாலும் நன்மைக்கே என நினைப்பர். உண்மையும் அது தான்!''

''இதெல்லாம் உங்களைப் போன்ற தெய்வப் பிறவிகளுக்கே சாத்தியம். என் போன்றோர் அல்லவா உலகில் மிகுதி?''

''எல்லோருமே தெய்வப் பிறப்பு தான்... இதில் மனிதன் மட்டுமே அறிவால் யானையையும் அடக்க வல்லவனாக திகழ்கிறான். இந்த ஆற்றலே அகம்பாவமாகி அசுர குணத்துக்கும் காரணமாகி விடுகிறது. இதுவும் ஒருவித இயற்கை தான் கிருஷ்ண பாண்டா. இதை நாம் உணர வேண்டும் என்றே அப்படிப்பட்ட அசுரர்களை அழிக்க அவனே அவதாரம் எடுத்து வந்தான்!''

''அப்படியானால் இப்போது அது போல அவதாரம் நிகழுமா?''

''இது கலியுகம்! இதில் அவதாரம் எடுக்க வேண்டும் என்றால் அது கணக்கின்றிச் செல்லும். அவதார தேவையை பூர்த்தி செய்யவே ராமானுஜர் போன்ற ஆச்சார்ய புருஷர்கள் தோன்றி வழிகாட்டினர். அவ்வழியில் தான் இப்போது நான் நடக்கிறேன்''

''அப்படியானால் எம்பெருமானை நேரில் காண முடியாதா?''

''கலியின் முடிவில் கல்கியாய் அவன் வரவிருக்கிறான். அதற்கு காலம் மிகவே உள்ளது. இப்போதைய மிலேச்சப்பிடி மிக தற்காலிகமானது. கவலைப்படாதே. மிலேச்சர்களிலும் பரம புருஷர்கள் இருக்கிறார்கள். அவர்கள் எம்பெருமானின் கருணைக்கு ஆட்படும் பட்சத்தில் எல்லாமே தலைகீழாக மாறும். ஒரு நல்லது கற்பிக்கும் பாடத்தை விட அல்லது கற்பிக்கும் பாடம் மிக வலிமையானது''

இப்படி பேசிக் கொண்டே நின்ற தருணத்தில் யானைகள் விலகி வழிவிட்டன. அந்த கோச்சு வண்டியும் திரும்ப புறப்பட்டது. வண்டியை செலுத்தியபடியே கிருஷ்ண பாண்டனும் இறுதியாக ஒரு கேள்வி என்றான்.

''கேள்''

''காஞ்சியும் திருவரங்கம் போல் ஒரு தலம் தானே! காஞ்சிக்கு எந்த பாதகமும் நேராதா? திருவரங்கம் மீது மட்டும் உங்களுக்கு ஏன் இத்தனை கரிசனம்?''

கிருஷ்ண பாண்டன் சரியான கேள்வியைத் தான் கேட்டான்.

**தொடரும்**



# வரதா வரம்தா...

பக்தித்தொடர் 36



இந்திரா சௌந்தர்ராஜன்

கிருஷ்ண பாண்டனின் கேள்விக்கு சற்று மவுனம் காத்த வேதாந்த தேசிகன் பின்னர் பதிலளித்தார்.

''பாண்டா... இப்படி ஒரு கேள்வியை நீ கேட்பாய் என எதிர்பார்க்கவில்லை. முதலில் காஞ்சிக்கும், திருவரங்கத்திற்கும் உள்ள வேற்றுமையை தெரிந்து கொள். எம்பெருமானின் திவ்யமங்கள திருமேனி விண்ணில் இருந்தே மண்ணிற்கு வந்தது திருவரங்கத்திற்குத் தான்...!

அதாவது பிரம்மன் பூஜித்த மூர்த்தி அவர். ஆனால் பிரம்மன் வேள்வி செய்து பெற்ற மூர்த்தி தான் காஞ்சி வரதராஜ மூர்த்தம்! இதில் திருவரங்கம் முன்பு ஒருமுறை கொள்ளைக்கு ஆட்பட்ட தலம்!

12 ஆண்டுகளுக்கு முன்பு திருவரங்கம் இதே மிலேச்ச கூட்டத்தால் கொள்ளைக்கு ஆளானது. அப்போது அழகிய மணவாளப் பெருமாளையும், சேரகுல வல்லித் தாயாரையும் ஒரு கலைப்பொருளாக எண்ணி கடத்திச் சென்றனர். அப்போதைய டெல்லி சுல்தானின் மகள், பெருமாளைத் தன் உயிருக்கும் மேலாக கருதி காதல்வயப்பட்டாள்! மார்கமும், வழிமுறைகளும் வேறாயினும் எம்பெருமானின் அழகும், கருணையும் சுல்தான் மகளை ஈர்த்து விட்டது. அதன்பின் அந்த விக்ரகங்கள் திருவரங்கம் திரும்பிய விதமே ஆச்சரியமான வரலாறு! அந்த சமயம் மூலவிக்ரகங்கள் பெரிதும் முனைப்போடு காப்பாற்றப்பட்டன. பிள்ளைலோகாச்சார்யாரே அப்போதும் போராடினார். இப்போதும் பேராடுகிறார்.

எதனாலோ சுல்தானின் படை காஞ்சிக்குள் நுழைந்து இது போல் அப்போது நடக்கவில்லை. அது மட்டுமல்ல அங்கே திசைக்கொரு தேவக்கட்டு உள்ளது. அப்படி ஒரு மந்திரக்கட்டை திருவரங்கத்திலும் ஏற்படுத்தி எதிரிகள் வென்றிடாதபடி செய்ய வேண்டும் என்றே பிள்ளைலோகம் என்னை அழைத்திருக்கிறார்.

எனக்கு தலங்களில் பேதமில்லை! ஆயினும் திவ்ய தேசங்களில் முதலாவதான திருவரங்கம் காக்கப்பட்டால் மற்றவை தானாக காக்கப் பெறும்.

கவலைப்படாதே... காஞ்சியம்பதிக்கு இதுபோல் சோதனை வராது. எனக்கு அந்த நம்பிக்கை மிகவே உள்ளது'' என நெடிய விளக்கம் அளித்தார் வேதாந்த தேசிகன்!

கிருஷ்ண பாண்டனுக்கே அப்போது தான் திருவரங்கம் ஏற்கனவே கொள்ளைக்கு ஆட்பட்ட விஷயமே தெரிந்தது. ''சுவாமி! என்னை மன்னியுங்கள்! திருவரங்க வரலாறு நீங்கள் சொன்ன பிறகே புரிகிறது'' என்றான்.

அதன்பின் தன் ரதத்தை சீராகவும், அதேசமயம் வேகத்துடனும் இயக்கி திருவரங்கத்தை நெருங்கினான். நல்லவேலை வழியில் மிலேச்ச கூட்டம் மறிக்கவில்லை. காவலுக்கு வருவது போல் ஒரு கருடன் வானில் பறந்தபடியே இருந்தது!

................

திருவரங்கம்!

காட்டழகிய சிங்கரின் சன்னதி புற மண்டபம். இரவு நேரமானதால் தீப்பந்தங்கள் ஒளிர்ந்தது. அப்போது ஒரு மரப்பெட்டி பூட்டு போடப்பட்ட நிலையில் சிலரால் எடுத்து வரப்பட்டது! கூடவே சில தச்சர்களும் வந்தனர். அவர்கள் தங்களின் தலைமீது நிறைய பலகைகளை துணியால் சுற்றி எடுத்து வந்தனர்.

அவர்களோடு மணப்பாக்கத்து நம்பியும் இருந்தார். அவர் பிள்ளைலோகத்திடம் சென்று அவர்களையும் முன்நிறுத்தினார். பிள்ளைலோகம் நம்பியின் காதில் ஏதோ கூறவும், அவர்கள் பலகைகளை கீழே வைத்து விட்டு, நம்பியோடு திருவரங்கம் ஆலயம் நோக்கி புறப்பட்டனர். அவர்களின் கைகளில் அளவுக்கழியும்,





• மது, புகை உடலுக்கு கேடு

இந்த தொடரின் ஆசிரியர் இந்திரா சௌந்தர்ராஜன் எழுதிய புத்தகங்கள் **தெரிந்த பாரதம் தெரியாத பாத்திரம், கிருஷ்ண ஜாலம், கடவுளைக் கண்டவர்கள்** பெற 1800 425 7700ல் தொடர்பு கொள்ளலாம்.

சுற்றுநூலும், செந்தூரக் குப்பியும் இருந்தன.

அதன்பின் சிலர் பிள்ளைலோகாச்சார்யாரிடம், ''சுவாமி... தச்சர்களோடு நம்பி எங்கு செல்கிறார்?''

''வேறு எங்கு... திருக்கோயிலுக்குத் தான்...''

''இவர்கள் என்ன செய்யப் போகிறார்கள்?''

''உற்சவ மூர்த்திகளின் அளவுகளை குறித்து வரப் போகின்றனர்''

''எதற்கு சுவாமி?''

''அதற்கேற்ப பெட்டி செய்யத்தான்...''

''பெட்டியா?''

''ஆம்... பெட்டியே தான்...''

''கோயிலுக்குள்ளேயே திருப்பண்டாரத்தில் தான் இருக்கிறதே?''

''அவை கோயில் நகைகளுக்கானவை. ஆனால் செய்யப் போவதோ விக்ரகங்களுக்காக...''

''அப்படியானால்...''

''இன்னும் சில நாட்களே எம்பெருமானை இங்கு தரிசிக்கலாம்... அதன்பின்...''

பிள்ளைலோகாச்சார்யார் கண்களில் கண்ணீர் சுரந்தது.

''இது என்ன விபரீத முடிவு?''

''ஒருமுறை களவு போய் திரும்ப வரப்பட்ட பாடு எனக்கே தெரியும். இம்முறை எம்பெருமானுக்கு ஏதும் நேரிடக் கூடாது. அவன் கலைப்பொருள் அல்ல. கலைக்கே அவன் தான் பொருள்''

அப்போது அங்கே அழுதபடி சிலர் வந்தனர். அவர்களில் ஒருவனுக்கு கண்களில் கட்டு போட்டிருந்தது. கட்டுக்கு மேல் ரத்தக்கசிவும் தெரிந்தது.

அவன் பெயர் ஸ்ரீவத்சன்!

''வா வத்சா'' என்றார் பிள்ளைலோகாச்சார்யார்.

''சுவாமி... தாங்கள் சொன்ன மருத்துவர் மூலிகை மருந்திட்டார். ஆனாலும் பார்வை வருவது சந்தேகமே என்றார்'' என்றான் அந்த ஸ்ரீவத்சன்.

''கவலைப்படாதே... மருந்துக்கெல்லாம் மருந்தாக வேதாந்த தேசிகர் வருகிறார். அவர் பார்வையைத் தருவார்'' என்றார் தேசிகன்.

''அது சரி... இவருக்கு எப்படி பார்வை போனது?'' என இடையிட்டார் ஒருவர்!

''எல்லாம் சுல்தானிய படையின் கொடூரச் செயல்''

''ஐயோ...அப்படியா?''

''ஆம்... உறையூர் கோயிலின் பண்டாரக் காப்பாளன் இவன்! இவனிடம் பண்டாரத்தின் சாவியைக் கேட்டு துன்புறுத்திய போது, இவன் அவர்களை திசை திருப்ப அவர்களின் கண்களில் மிளகுப்பொடி தூவி விட்டான். பதிலுக்கு அவர்கள் இவன் கண்களையே பிடுங்கி விட்டனர். ஆயினும் எதிர்த்துப் போராடி தப்பி விட்டான்.''

பிள்ளைலோகாச்சார்யார் சொன்னதைக் கேட்டு அந்த ஸ்ரீவத்சனை எல்லோரும் பரிதாபமாக பார்த்தனர். சிலருக்கு முகத்தில் பீதி பரவியது.

''சுவாமி... எதிர்காலத்தை நினைத்தால் அச்சமாக உள்ளது'' என்றார் ஒருவர்.

''ஆம்... இது சோதனைக்காலம்! அதுவும் கடவுளுக்கே சோதனைக் காலம்'' என்றார் இன்னொருவர்.

''தங்களின் திட்டம் தான் என்ன... நாளை திருவரங்கத்துக்குள் சுல்தானியப் படைகள் உள்புகுந்து ஆலயத்துக்குள் தங்கப் போவதாக செய்தி வருகிறதே...உண்மையா?''

இப்படி மாறி மாறி எல்லோரும் பேச பிள்ளைலோகாச்சார்யார் தீர்க்கமான முடிவுடன், ''நன்றாக கேட்டுக் கொள்ளுங்கள்! எம்பெருமானின் திருமேனியை மிலேச்சர்கள் பார்க்கவோ, தீண்டவோ கூடாது. அதை நான் என் வசப்படுத்தப் போகிறேன்''

''வசப்படுத்தி?''

''அதை திருவரங்கம் விட்டே கொண்டு சென்று விட உத்தேசித்துள்ளேன்''

''இது என்ன விந்தை? அரங்கன் இல்லாத ஊர் எப்படி திருவரங்கம் என்றாகும்?''

''அரங்கன் எங்கு இல்லை? நாம் மையமிட்டு வணங்கும் சிலாரூபம் தான் இடம் மாறப் போகிறது. மற்றபடி அங்கே ஒரு மண்ணால் ஆன ரூபத்தைச் செய்து வைத்து மிலேச்சர்கள் அழிக்க நினைத்தால் அதை அழிக்க வகை செய்வதே திட்டம்''

''வேறு வழி இல்லையா?''

''துணை நிற்க வேண்டிய பாண்டியர், சோழர், ஹொய்சாளர்கள் அவர்களின் பிடியில் நாட்டையே இழந்து நிற்கும் நிலையில் சாமான்யப்பட்ட நம்மால் முடிவது இது தானே?''

''அப்படியானால் அரங்கனின் உற்சவ மூர்த்தி விக்ரகம் உங்கள் இல்லத்தில் தான் இருக்குமா?''

''திருவரங்கத்திலேயே இருக்கப் போவதில்லை என்னும் போது எனது இல்லத்திலா என்று கேட்டால் என்ன சொல்ல?''

''எங்கு எடுத்துச் செல்ல உத்தேசம்?''

'' வேதாந்த தேசிகர் வரவும் தீர்மானம் செய்வேன். ஒன்று மட்டும் உறுதி. அவனுக்கான பூஜைகள் குறைவுபடாது. அர்ச்சனைகள் நிற்காது. நைவேத்யம் நடக்கும். மிலேச்சர் நோக்கமே நம் வழிபாட்டை நிர்மூலமாக்குவது தான். ஆனால் அதற்கு இடம் தரப் போவதில்லை.''

தீர்க்கமாகவும், உறுதியாகவும் பிள்ளை லோகாச்சார்யார் கூறிய அந்த இடைவேளையில் புறத்தில் கோயில் வாசலில் வேதாந்த தேசிகரின் தேர் வந்து நின்றது!

அதை அறிந்து ஆவலுடன் ஓடிச் சென்றார் பிள்ளைலோகாச்சார்யார். கிருஷ்ண பாண்டன் திரைச்சீலையை விலக்கி தேசிகன் திருவரங்கமண்ணில் கால் பதித்திட வழிசெய்தான். அவரது பாதங்களும் மண்ணில் பட்டன!

எவ்வளவோ முறை வந்திருக்கிறார்!

ஆனால் எப்போதும் இல்லாதது போல் இப்போது கனத்த சூழல்! அவர் மண் மீது நிற்கவும், அவரை வணங்க முற்பட்ட பிள்ளைலோகாச்சார்யாரை தேசிகன் தடுத்தார். ''அடியேன் தான் தங்களை வணங்க வேண்டும். தாங்கள் என் மண்ணின் தேவர் அல்லவோ?'' என அவரது கைகளைப் பற்றி ஒற்றிய போது பிள்ளைலோகாச்சார்யார் திருமேனியே வரதராஜரின் திருமேனியாக ஒரு வினாடி காட்சியளித்தது. வேதாந்த தேசிகனின் கண்கள் பனித்து, 'எம்பெருமானே' என பக்தியோடு துடித்தன அவரது உதடுகள்!

**தொடரும்**



# வரதா வரம்தா...

பக்தித்தொடர் 37

இந்திரா சௌந்தர்ராஜன்



**பி**ள்ளைலோகாச்சார்யார் அந்த வரதராஜனாக காட்சி தந்ததை அங்குள்ளோர் உணரவில்லை. அது பாக்கியம் சார்ந்த ஒன்றல்லவா?

வேதாந்த தேசிகனை பிள்ளைலோகாசார்யாரும் கோயில் மண்டபத்துக்குள் அழைத்துச் சென்றார். தீப்பந்த ஒளியின் நடுவே ஆசனம் ஒன்றை காட்டி அதில் அமரப் பணித்தார். முன்னதாக தேசிகன் காட்டழகிய சிங்கப் பெருமானை தரிசித்து முடித்தார். பிறகே ஆசனத்தில் அமர்ந்தார்.

சுற்றிலும் பிள்ளைலோகாச்சார்யாரின் கட்டளைக்கு கட்டுப்பட்ட வைணவ தாசர்கள். அவர்கள் மேனி மீது பன்னிரு திருமண் காப்பு. அனேகம்பேர் இருந்த போதிலும் பேரமைதி நிலவியது.

அதை தேசிகன் உடைக்கலானார்.

''எல்லோரும் நலம் தானே?''

''...............''

''உங்களின் மவுனமே பதிலாகி விட்டது. ஆயினும் நலமற்ற நிலையிலும் நலமுடன் இருப்பதாக நம்பிக்கையோடு கூறுவதே உண்மையில் நலம் பயக்கும் செயல்''

''உண்மை தான். அவ்வாறு கூற முடியாதபடி அடி மேல் அடிபட்டவர்களாக இருக்கிறோம் சுவாமி''

''நான் அதை அறியாமல் இல்லை. எல்லாம் மாறும்! தைரியமாக இருங்கள்''

''இதை தான் பிள்ளைலோகாச்சார்யாரும் கூறி வருகிறார். ஆனால் நாளுக்கு நாள் நிலை மோசமாகிறதே. திருவரங்கமே இப்போது நம் கைகளில் இல்லை. சீராப்பள்ளி மலைக்கோட்டை சுல்தானின் ஆயுதக் கிடங்காகி விட்டது. தாயுமானவர் சன்னதிக்குள் வெடி மருந்துகளை சேமித்து வைத்துள்ளார்கள். அதை அறிந்ததில் இருந்து மனம் பதறுகிறது''

''இதை விட பதட்டமான தருணங்களை நம் முன்னோர்கள் பார்த்துள்ளனர். கம்சன், நரகாசுரனால் நேர்ந்த கொடுமைகளை தாங்கள் யாரும் உணரவில்லை போலும். அரசர்கள் அவ்வளவு பேரையும் சிறைப்படுத்தி, தினமும் கசையடி தந்து அவர்கள் கதறுவதைக் கேட்டு மகிழ்ந்தான் நரகாசுரன். அந்நிலையில் கிருஷ்ணர் பாமாவுடன் சென்று வதம் செய்தார். அந்த அருள் ஒளியே தீபாவளியாக கொண்டாடப்படுகிறது. தீபாவளி குதூகலமான நாள் மட்டுமல்ல. கொடூரமான நாளும் அது தான்! கொடூரம் தான் பின்னாளில் குதூகலம் தந்தது. அதுபோல இங்கும் கொடிய செயல்கள் விரைவில் நன்மையில் தான் முடிந்திடும் – கவலை வேண்டாம்''

வேதாந்த தேசிகரின் செரிவான பதிலை யாரும் ரசித்ததாக தெரியவில்லை. இந்த வேளை பிள்ளைலோகம் இடையிட்டார்.

''தேசிகரே... நான் தங்களை எதிர்நோக்கியிருந்த காரணத்தை சொல்கிறேன். எம்பெருமானின் திருமேனியை காத்திடும் வல்லமை ஒருவருக்குமில்லை. எனவே அத்திருமேனியை சிறிது காலம் நான் என் நேரடிப் பார்வையில் வைத்து பூஜைகள் குறைவின்றி நடக்க வழி காண விரும்புகிறேன்''

''நல்லெண்ணமே! தங்களால் மட்டுமே இதைச் செய்திட இயலும்''

''அந்த பிரம்மன் வணங்கிய மூர்த்தம். அதன்பின் சூரியனும், வைவஸ்வத மனுவும், அதன் தொடர்ச்சியில் இக்ஷுவாகுவும், பின் தசரதனும், ராமச்சந்திர மூர்த்தியுமே வணங்கிய இந்த மூர்த்தியை எப்பாடு பட்டேனும் காத்திட வேண்டியது நம் கடமையல்லவா?''

''சந்தேகமே இல்லை, சிலாரூபங்களுக்கு பாதகம் நேர்வது உறுதி எனக் கருதினால் நித்ய ஆராதனைக்கு குறைவின்றி எம்பெருமானை நாம் இடப்பெயர்ச்சி செய்வது என்பது சரியானதே!''

''இதை நம் ஆச்சார்ய புருஷர்கள் எவரும் குறை கூற நேருமோ?''

''இம்மட்டில் ஆக வேண்டியதைச் செய்யுங்கள்''



இந்த தொடரின் ஆசிரியர் இந்திரா சௌந்தர்ராஜன் எழுதிய புத்தகங்கள் **தெரிந்த பாரதம் தெரியாத பாத்திரம், கிருஷ்ண ஜாலம், கடவுளைக் கண்டவர்கள்** பெற 1800 425 7700ல் தொடர்பு கொள்ளலாம்.

''அப்படியாயின் தங்களின் யந்திர, மந்திர, தந்திர ஆற்றலால் மிலேச்சர்களுக்கு புலப்படாத பல்லக்கு ஒன்றைச் செய்து தாங்கள் அதை மனப்பூர்வமாக வழங்க வேண்டும்''

''அச்சம் வேண்டாம். பல்லக்கு தயாராக இருக்கிறதா?''

''பல்லக்கு மட்டுமல்ல, எம்பெருமானை பாதுகாப்பாக வைத்து பூட்ட மரப்பெட்டி, இடைவழியில் பூஜிக்க தோதாக பீடங்கள் என்று எல்லாமும் தயாராகி வருகின்றன''

''அப்படியாயின் யாருக்கும் குறை இருக்காது. நமக்கு இப்போது தேவைப்படுவது துணிச்சலான மனநிலை. அதை அருளவல்ல 'அபீத ஸ்தவம்' என்ற ஸ்தோத்திரத்தை நான் இப்போது உபதேசிக்கிறேன் – அதை உச்சரிப்பு பிசகாமல் சொல்வீர்களா?''

''இந்த நேரத்திலா?''

''ஆம் காலம், மனதும் இருண்டு கிடக்கும் இந்த தருணத்தில் அதை துதித்திட உகந்தநேரம் இது. எனவே நான் சொல்வதை அப்படியே திருப்பிச் சொன்னால் போதும்...''

தேசிகனின் அபீதஸ்தவத்தை காட்டழகிய சிங்கரின் சன்னதிக்குள் சொல்லத் தொடங்கவும், எல்லோரும் அப்படியே திருப்பிக் கூறினர். குருஉபதேசத்தையும் அந்தச்சாக்கில் அடைந்தனர். சிலருக்கு அப்போதே பயம் விலகி, உடம்பானது ஆர்த்தெழத் தொடங்கி விட்டது. பிள்ளைலோகாச்சார்யார் கண்களில் ஆனந்தக் கண்ணீர்!

..............

மறுநாள்!

அதிகாலையே கண் விழித்து விட்டார் தேசிகர். அவருக்கு உறுதுணையாக சுதர்சனசூரி என்ற பட்டர்பிரான். விடிய விடிய தேசிகரின் சயன அறைக்கு காவலாக இருந்த அவரைக் காணவும் தேசிகனிடம் நெகிழ்ச்சி!

அவரை அருகில் அழைத்த தேசிகன், ''தாங்கள் உறங்கவில்லையா?''

''தங்களுக்கு காவல் காக்கும்படி எனக்கு குருபிரான் உத்தரவு''

''தங்களின் திருநாமம்?''

''ஸ்ரீசுதர்சன சூரி''

''உங்களை மிக சிரமப்படுத்தி விட்டேன்''

''இல்லை.. எனக்கு பெரும் பாக்யத்தை அளித்துள்ளீர்! யாருக்கு கிடைக்கும் இந்த வாய்ப்பு?''

''உயர்ந்த உள்ளம் உங்களுக்குத் தான்... இது பிரம்ம முகூர்த்த நேரம். காவிரியில் நீராடுவது சிறப்பு. சென்று வர இயலுமா?''

''என்ன அப்படி கேட்டீர்கள்? தாங்கள் எது கேட்டாலும் தர உத்தரவு''

''இரவில் குதிரைகளின் கனைப்புச் சப்தம் கேட்டதே... அருகில் லாயம் ஏதும் உள்ளதா?''

''இல்லை... மிலேச்சப் படை தான் இரவில் ஊருக்குள் நுழைந்து குதிரைகளை கனைக்கச் செய்து பீதியை உருவாக்கி வருகின்றனர்''

''அப்படியானால் காவிரிக்கு செல்லும் வழியில் அவர்களைக் காண நேருமோ?''

''நேரலாம்... அவர்களால் நமக்கு பாதகமும் நிகழலாம்''

''அதையும் பார்ப்போம்... புறப்படுங்கள்''

''சுதர்சன சூரியோடு தேசிகர் காவிரி நோக்கி புறப்பட்டார். அதிகாலை வேளை... சில்லென்ற காற்று... ஆயினும் மயான அமைதி.. தெருவில் நடக்கும் போது பலவீட்டு வாசல்களில் குதிரைகள் தென்பட்டு அந்த வீடுகளை மிலேச்சர்கள் வசப்படுத்தியது நன்கு தெரிந்தது.

''இவ்வேளை இங்கே குதிரைகள் இருக்காது. மாறாக பசுக்களின் பால்கறப்பு நிகழும். ஆனால் இப்போது எல்லாம் தலைகீழாகி விட்டது.'' என்றார் சுதர்சனசூரி. தேசிகன் அமைதியாக நடந்தார். காவிரியாற்றின் கரையை அடையவும் ஆற்றின் வெள்ளப் பெருக்கில் காற்றின் சிலுசிலுப்பு கூடுதலாக இருந்தது. காவிரி மெல்லப் பாய்ந்து கொண்டிருந்தாள்.

உடன் வந்த சுதர்சன சூரிக்கு காவிரியைக் காண அழுகை வந்தது.

''ஏன் அழுகிறீர்?''

''இனி காவிரி நீராட்டு அரங்கனுக்கு இல்லையே?''

''நம் போன்றவருக்கே இது போன்ற வருத்தங்கள். அரங்கன் நினைத்தால் அவன் கால்படும் இடமெல்லாம் பொய்கைகள் உருவாகும். கண்படும் இடமெல்லாம் அருவி தோன்றும்''

''எங்கே நினைக்கிறான்..மிலேச்சர்களைக் கூட ஏதும் செய்யாமல் எனக்கென்ன என உறக்கத்தில் அல்லவா கிடக்கிறான்?''

''தாமச உறக்கம் என்பது பெரும் விழிப்பு நிலைக்கு இணையானது சுதர்சனரே... உறக்கத்தில் தான் உடலானது பெரும் வலிமை பெறுகிறது. அந்த வலிமையே விழிப்பின் போது செயல்களில் செலவாகிறது''

''இதை நானும் அறிவேன். ஆனால் இப்போது நமக்கு எங்கே உள்ளது வலிமை?''

''வலிமை என்பது ஆயுதம் ஏந்தி போராடுவதல்ல. மனதை அடக்கி அமைதி காப்பதில் தான் அதிகம் உள்ளது''

'' அமைதியாக இருப்பது அடங்கிப் போவதாக ஆகாதா? கோழைத்தனம் இல்லையா?''

''அமைதியாக இருக்கத் தான் சொன்னேன். அமைதியாக இருந்தபடி செயல்களைச் செய்ய வேண்டாம் என எங்கே சொன்னேன்?''

''அப்படியானால் தாங்கள் என்ன சொல்ல வருகிறீர்கள்?''

''போகப் போக பாருங்கள். நம் தர்மத்தை துளியும் இழக்காமல் எந்த செயலையும் செய்திட வேண்டும். அதுவே முக்கியம்''

'' புரிகிறது. எதிரி வாளுடன் மோத வந்தாலும் பதிலுக்கு நாம் வாளெடுத்து எதிர்கொள்ளக் கூடாது அப்படித்தானே?''

''தவறு... நமக்காக ஒரு ஷத்திரியனை முன்நிறுத்தி போரிடச் செய்த நிலையில், நம் அடுத்த கடமையைச் செய்திட வேண்டும்''

''நம்மில் ஷத்திரியர்களுக்கு எங்கு செல்ல?''

''வருவார்கள். காண்பீர்கள். இனி ஒவ்வொரு நொடியும் அதிசயம் நிகழ்வதை காண்பீர்கள்''

புதிர் போல பேசிய தேசிகன், காவிரியில் மூழ்கி எழுந்தவராக கிழக்கில் உதிக்கும் சூரியனை நோக்கி சந்தியாவந்தனம் செய்யத் தொடங்கினார்.

**தொடரும்**



# வரதா வரம்தா...

பக்தித்தொடர் 38



இந்திரா சௌந்தர்ராஜன்

சூரிய உதயத்திற்கு நேரம் இருந்தது. கிழக்கு வானில் சலித்தெடுத்தது போல வெளிச்சம்! ஓடும் காவிரி ஆற்றில் இடுப்பளவு நீரில் நின்று கொண்டு தேசிகன் சந்தியாவந்தனம் செய்வதை பார்த்த சுதர்சன சூரி, சந்தி முடிக்கும் வரை ஓரமாக அமர்ந்திருக்கலாம் என கொள்ளிடக்கரை மண்டபம் நோக்கி நடந்தார்.

மண்டபத்துக்கு இடது புறத்தில் பாடுவாந்துறை மயானம் இருந்து. அதில் சடலங்கள் எரிந்து புகை வந்தது. அதைப் பார்த்தபடி அமர்ந்தார்.

பார்க்க சற்று அச்சமாகவும் இருந்தது. அந்த சடலங்கள் மிலேச்சர்களை எதிர்க்கப் போய் கொல்லப்பட்டவர்கள்! நாளையே தன் சடலமும் இது போல் எரியக் கூடுமோ என்ற கேள்வி சுதர்சன சூரிக்குள் எழுந்தது.

''கவலை வேண்டாம்... தாங்கள் பெருவாழ்வு வாழ்ந்து வரலாற்றில் இடம் பிடிக்கப் போகிறீர்'' என குரல் ஒலிக்கவும் திரும்பிப் பார்த்தார். தேசிகன் தான் நின்றிருந்தார். சூரியனும் உதித்து பளிச்சென காட்சிகள் தெரிந்தன. தேசிகனை பளிச்சென நீராடிய கோலத்தில் கண்ட சுதர்சன சூரிக்கு பரவசமாக இருந்தது.

''சந்தியா வந்தனம் முடிந்ததா?'' என சுதர்சனசூரி கேட்டார்.

''முடிந்தது... ஆமாம் தாங்கள் சந்தி செய்யவில்லையா? என்றார் தேசிகர்.

''இப்படி நீங்கள் கேட்பீர்கள் என்று தெரியும். ஏனோ மனம் வரவில்லை''

''அது எப்படி வராமல் போகும்? மனம் உங்களுக்கு கட்டுப்பட்டதா? இல்லை நீங்கள் அதற்கு கட்டுப்பட்டவரா?''

''நான் என்ன உங்களைப் போல ஞானியா...? சாமான்யன் தானே?''

''எதற்கு இந்த பதில்?''

''உங்களைப் போல மனதை அடக்கியாள முடியாதவன் என்பதற்காக சொன்னேன்''

''மிகத் தவறு... ஒரு பிராமணன் எக்காலத்திலும் எதன் பொருட்டும் இப்படி பேசக் கூடாது''

''நீங்கள் என்ன சொல்கிறீர்கள்?'' அதிர்ந்தார் சுதர்சனசூரி.

''உண்பது, உறங்குவது எப்படி அன்றாடமோ அப்படிப்பட்டதே சந்தியாவந்தனமும்! ஒரு பிராமணன் அதை கைவிடுவது வாழ்வாகாது. பெரும் பாவமுமாகி விடும்''

''பூணூல் போடும் போது வைதீகர் இப்படித் தான் சொன்னார். ஆனால் உற்சாகமும், நம்பிக்கையும் இருந்தால் அல்லவா இதை எல்லாம் செய்ய முடியும்?''

''சந்தியாவந்தன கடமையை தவறாமல் செய்யுங்கள். உற்சாகம், நம்பிக்கை எல்லாம் பொங்கி வரும். உங்களுக்கு வழங்கப்பட்ட பெரும் கவசம் காயத்ரி! நீங்கள் செய்ய வேண்டிய பெரும் கடமை சந்தியா வந்தனம்!

மிலேச்சர்கள் இங்கே அட்டகாசம் புரிந்திட உங்களைப் போன்றோர் இக்கடமையை மறந்ததும் ஒரு காரணம். சந்தியாவந்தன கடமையை சரியாகச் செய்யும் சமூகத்தில் எதிரிகள் உருவாக மாட்டார்கள். அமைதி நிலவும்! மன அமைதி, உடல்நலம் என்று எல்லாம் நல்லபடியாக இருக்கும்''

''அப்படியா... இதன் பின்புலத்தில் இவ்வளவு விஷயம் இருப்பதை அறியாமல் போனேனே''

''இன்னமும் அறிய வேண்டியவை பல உள்ளன. உலக உயிர்களில் பிராமணனாக



பிறப்பவன் மட்டும் பெரும் கடன்காரன் என்பதை அறிவீராக. கோடீஸ்வர பிராமணன் வயிற்றில் ஒருவன் பிறந்திருந்தாலும் அவன் கடன்காரனே! சொல்லப்போனால் கடன்காரர்கள் மட்டுமே பிராமணராக பிறப்பர்!''

''அது எப்படி? பிராமணப் பிறப்பை உயர்வாக அல்லவா வேதங்கள் கூறுகின்றன''

''வேதம் கூறுவதால் அவர்கள் உயர்ந்தவர்களே! ஆனால் தனிப்பட்ட முறையில் ஒரு கடனாளிக்கே பிராமணப் பிறப்பு வாய்க்கும்!''

''யாரிடம் பட்ட கடன்?''

''இப்பிறப்பில் ஒருவருக்கொருவர் வாழ்வின் தேவைக்காக வாங்கும் கடனை சொல்லவில்லை! முன்பு எடுத்த பிறவிகளில் உருவான கடன் இது. இக்கடன் மூவகைப்படும்! முதலாவது ரிஷிகடன்! அடுத்து தேவ கடன்! மூன்றாவது பித்ரு கடன்!''

''அப்படியா?''

''ஆம்... தேவர்கள், ரிஷிகள், பித்ருக்கள் மூவருக்கும் சந்தியாவந்தன வேளையில் விடும் அர்க்யமே நாம் கட்டும் கடன்... பதிலுக்கு அவர்கள் அதனை மழையாக்கியும், தெளிந்த மனம் நமக்கு ஏற்படும்படியும் அருள்கின்றனர்''

''அரிய செய்தி... யாரும் இதுவரை கூறாதது''

''வேதம் சொல்வதையே நான் சொல்கிறேன்''

''எவ்வளவு காலம் சந்தி புரிய வேண்டும்?''

'' உயிர் பிரியும் வரை!''

''செய்யத் தவறினால்?''

''திருத்திக் கொண்டு உடனே தொடங்க வேண்டும். சந்தியா வந்தன கடமையை ஒரு தலைமுறையில் விட்டவன் பிறப்பால் மட்டுமே பிராமணன். இரு தலைமுறை விட்டவர்கள் பிராமணனாக பிறந்தாலும் பிராமணரே இல்லை!''

''போகட்டும்... மனிதன் பாவியாகத் தானே இருக்கக் கூடாது? பிராமணனாக இல்லாவிட்டால் என்ன தவறு?''

''பிராமணனாக பிறந்து கடமையை மறப்பவர்களும் பாவிகளே! சாதாரண பாவிகள் அல்ல...பெரும் பாவிகள்!''

''யாருக்கும் தீங்கு செய்யாத நிலையில், சந்தி செய்யாததால் மட்டும் எப்படி பாவியாவேன்?''

''ஒரு பிராமணன் சந்தி செய்வது தனக்காக இல்லை. சமூகத்திற்காக, தன் குடும்பத்திற்காக என்பதை உணர்வீராக! எனவே அக்கடமை மூலம் சமூக நன்மை புரியாமல் விடுவது பாவம் தானே?''

''அடேயப்பா... சந்தியாவந்தனம் செய்வதில் இவ்வளவு சூட்சுமம் உள்ளதா?''

''இன்னமும் உள்ளது. ஆனால் இது போதனைக் காலம் அல்லவே?''

''மன்னியுங்கள் தேசிகரே... நான் இனி தவறாமல் சந்தி செய்வேன்''

''நீர் மட்டும் செய்தால் போதாது. திருவரங்கத்து பிராமணர்கள் ஒவ்வொருவரும் செய்ய வேண்டும். செய்யத் தவறிய பாவமே மிலேச்ச வடிவில் வந்து நின்றுள்ளது''

''அப்படியானால் எல்லோரும் செய்யத் தொடங்கினால் பிரச்னை தீருமா?''

''நிச்சயமாக! மந்திர பலமுள்ள இடங்களுக்கு எந்த பகைவனாலும் செல்ல முடியாது!''

''நல்லது. நான் இதை எல்லோரிடமும் வற்புறுத்தி அனைவரையும் செய்யும்படி செய்கிறேன்''

பொலபொல என பொழுது விடிந்த நிலையில்

இந்த தொடரின் ஆசிரியர் இந்திரா சௌந்தர்ராஜன் எழுதிய புத்தகங்கள் தெரிந்த பாரதம் தெரியாத பாத்திரம், கிருஷ்ண ஜாலம், கடவுளைக் கண்டவர்கள் பெற 1800 425 7700ல் தொடர்பு கொள்ளலாம்.

பிள்ளைலோகாச்சார்யாரின் விருந்தினர் மாளிகை நோக்கி நடந்தபடியே இருவரும் பேசிக் கொண்டனர். தெருக்களில் ஈ காக்கை இல்லை! இதுவே மற்ற நாளாக இருந்தால் வீட்டுக்கு வீடு தேசிகருக்கு ஆரத்தி எடுத்திருப்பர். பாத நமஸ்காரம் புரிந்திருப்பர்!

மிலேச்சர்கள் தான் குதிரைகளில் குறுக்கும் நெடுக்கும் சென்ற வண்ணமிருந்தனர். அதில் ஒருவன் தேசிகனை நெருங்கியவனாக, ''ஏய் யார் நீ? இது என்ன ஈரக்கோலம்?'' என்று கர்ஜித்தான்.

''ஆற்றில் நீராடி விட்டு வருகிறேன். இது ஈரக்கோலம் மட்டுமல்ல... திவ்ய திருக்கோலமும் கூட!'' என்றார் வேதாந்த தேசிகர். அவன் பதிலுக்கு வேகமாக எதையோ சொல்ல முயற்சித்ததும், அவனை உற்று நோக்கினார் தேசிகர்.

அவன் எதுவும் கேட்காமல் திரும்பிச் செல்லத் தொடங்கினான். சுதர்சனசூரி அதைக் கண்டு ஆச்சர்யம் கொண்டார்.

''அவன் எப்படி திரும்பிச் சென்றான்?'' என்றும் கேட்டார்.

''அவன் மட்டுமல்ல... இந்த திருவரங்கத்தை விட்டு எம்பெருமானை பிள்ளைலோகாச்சார்யார் கொண்டு செல்லும்வரை எவரும் உள் வரமாட்டார்கள். எல்லோரும் திரும்பியே செல்வர்''

''எப்படி?''

''அது தான் ஆத்மசக்தியின் பலம். இதற்கு மேல் எதையும் கேட்க வேண்டாம். நான் எனது யந்திர, மந்திர, தந்திர ஆற்றல் அவ்வளவையும் பயன்படுத்தப் போகிறேன்... எது எனக்காக அல்ல... எம்பெருமானுக்காக!''

தேசிகர் சொல்லி முடிக்கவும், விருந்தினர் மாளிகை வரவும் சரியாக இருந்தது. வெளியே சிலர் காத்திருந்தனர். பலர் பூர்ண கலசமுடன் வேதம் சொல்லியபடி இருந்தனர்.

தேசிகர் வரவும் அவரை எதிர்கொண்டு வரவேற்று சாலை என்றும் பாராமல் விழுந்து வணங்கினர். தேசிகரும் அதை ஏற்று ஆசீர்வதித்த போது, பார்வை இழந்த நிலையில் புண்ணாகி விட்ட கோர தோற்றமுடன் ஸ்ரீவத்சன் என்பவனும், பிள்ளைலோகாச்சார்யாரும் தேசிகன் எதிரில் வந்தனர். ஸ்ரீவத்சன் தடுமாறியபடியே வேதாந்த தேசிகன் காலில் விழலானான்.

அவனைத் தொட்டுத் தூக்கிய தேசிகர் அவனது ரத்தம் கசியும் கண்களைப் பார்த்தார்.

''மகாத்மாவே... இவன் அரங்கனுக்காக கண்களை இழந்தவன். இவனைத் தாங்கள் ரட்சிப்பதோடு இன்றிரவு இந்த திருவரங்கம் விட்டு எம்பெருமானோடு நான் வெளியேறிட தாங்கள் சகாயம் செய்திட வேண்டும்'' என்றார் பிள்ளைலோகாச்சார்யார்.

''நல்லது.. சுதர்சன மகா ஹோமத்துக்கு ஏற்பாடு செய்யுங்கள். மற்றதெல்லாம் தானாய் நடக்கும்'' என்றார் தேசிகர்.

தொடரும்



# வரதா வரம்தா...

பக்தித்தொடர் **39**

இந்திரா சௌந்தர்ராஜன்



**வே**தாந்த தேசிகர் சுதர்சன ஹோமத்துக்கு ஏற்பாடு செய்யச் சொல்லவும், எல்லோருமே தயங்கினர்.

"என்ன தயக்கம்?"

"தயங்காமல் என்ன செய்வது? மிலேச்சப் படை அவ்வப்போது ஊருக்குள் வந்து வந்து செல்கிறது. நெற்றித் திருமண்ணைக் கண்டாலே எட்டி உதைத்து அழிக்கச் சொல்கின்றனர். இதில் உரத்த குரலில் மந்திரங்களைச் சொல்லி எப்படி ஹோமம் வளர்ப்பது?"

"ஹோமம் முடியும் வரை எவரும் வர மாட்டார்கள்... போதுமா?"

"எப்படி?"

"நம்பிக்கையோடு செயல்படுங்கள். நடக்க நடக்க அறிந்து கொள்வீர்கள்"

தேசிகர் உரத்த குரலில் சொல்ல அமைதியாயினர். கண்களை இழந்த ஸ்ரீவத்சன் நின்றபடி இருந்தான். அவனது கைகளைப் பற்றினார் தேசிகர்.

அவனிடம் ஒரு பரவச உணர்வு ஏற்பட்டது.

அதுவரை நிலவிய வலியும், வேதனையும் காணாமல் போனது போல உணர்ந்தான்.

"ஸ்ரீவத்சா... கவலைப்படாதே! குணமாவாய். பார்வையை திரும்பப் பெறுவாய். இங்கு நடக்கும் ஹோமம் உனக்காகத் தான்! எம்பெருமான் துயர் தீர்க்கும் சுதர்சனமாய் வந்து தீவினைகளை அறுத்தெறிந்து கண்ணொளி தருவான். நம்பிக்கையோடு இரு" என ஆறுதல் அளித்தார்.

பிள்ளைலோகாச்சார்யாரும் பரவசப்பட்டார். அப்படியே "அரங்கதரிசனம் புரிய வேண்டாமா?" என மெல்லிய குரலில் கேட்டார்.

"இது என்ன கேள்வி... என் உயிர்க்கூடு அதற்காகவே துடித்துக் கொண்டிருக்கிறது" என்றார் தேசிகர்.



"அப்படியானால் தாக சாந்தி செய்து விட்டு சன்னதி செல்வோமா?"

"சன்னதி திறந்திருக்கிறதா?"

"இல்லை. மூடியும் மூடாமல் உங்களுக்காக எல்லோரும் காத்திருக்கின்றனர்"

"இது என்ன விசித்ரம்?"

"ஆம் பலப்பல நாட்களாக சப்தமின்றியே பணிகள் நடக்கின்றன. எப்போதும் பூஜைகளுடன் வைணவ கோஷ்டியார் பிரபந்தம் பாடும் நிலையில் இன்று அதற்கெல்லாம் இடமில்லை. சன்னதி முன் ரகசியமாக செங்கற்களைக் கொண்டு சென்று இறக்கி சுவர் எடுக்கவே தீர்மானித்து விட்டோம்"

"இதை எல்லாம் கேட்கும் போது மனம் பதைக்கிறது. சரி.. சரி...புறப்படுங்கள்"

தேசிகர் வேகமானார்.

"தாக சாந்தி..?"

"முதலில் நயன சாந்தி... அதாவது கண்களால் அரங்க தரிசனம் – பிறகே திரேகம் சார்ந்த எல்லாம்"

தேசிகரின் பதிலில் அவரது பக்தி மட்டுமல்ல, அதன் தெளிவும் துணிவும் பளிச்சிட்டது.

"சரி... நாங்கள் சென்று வருகிறோம். நீங்கள் ஹோமத்துக்கான ஏற்பாட்டைச் செய்யுங்கள்" என பிள்ளைலோகாச்சார்யார் தேசிகனுடன் புறப்பட்டார். சுதர்சன சூரியும் இன்னும் சிலரும் கூட செல்லத் தலைப்பட்டனர்.

வாசலில் கிருஷ்ண பாண்டன் தன் கோச்சு வண்டியை தயாராக வைத்திருந்தான். அதில் இருவரும் ஏறியதும், வண்டி புறப்பட்டது. சட்டென வண்டியை நிறுத்தச் சொன்ன தேசிகர் பின்னால் நடந்து வரும் சுதர்சன சூரி உள்ளிட்ட மற்றவர்களோடு நடக்கத் தொடங்கினார்.

எங்களுக்காக தாங்கள் நடக்க வேண்டுமா?"

"இந்த பூலோக வைகுண்டத்தில் நடக்க கொடுத்து வைத்திருக்க வேண்டும்"

"மிலேச்சர்கள் எதிர்ப் பட்டால்?"

"எதிர்ப்பட மாட்டார்கள்..."

தேசிகன் உறுதியான குரலில் சொன்னதோடு தெருவில் நம்மாழ்வார் பாசுரங்களை பாடத் தொடங்கினார். மற்றவர்கள் எதிரொலித்தனர். சப்தம் கேட்டு வீடுகளில் அடங்கியிருந்தோர் எட்டிப் பார்த்தனர். தேசிகனின் திருமுக தரிசனம் கிடைத்ததில் நின்ற இடத்தில் கைகூப்பி வணங்கினர்.

பலருக்கு ஆனந்தக் கண்ணீர். சிலரிடம் துக்கக் கண்ணீர். அவரோடு உடன் சேர்ந்து செல்ல விரும்பியும் இயலாத



• மது, புகை உடலுக்கு கேடு

இந்த தொடரின் ஆசிரியர் இந்திரா சௌந்தர்ராஜன் எழுதிய புத்தகங்கள் **தெரிந்த பாரதம் தெரியாத பாத்திரம், கிருஷ்ண ஜாலம், கடவுளைக் கண்டவர்கள்** பெற 1800 425 7700 ல் தொடர்பு கொள்ளலாம்.

நிலையை எண்ணிக் கலங்கினர்.

திடும்மென்று ஒற்றைக் குதிரையுடன் தேர் ஒன்று மிக வேகமாக எதிர்திசையில் வந்தது. மிலேச்சன் தான் வந்து கொண்டிருந்தான். எல்லோரிடமும் பயம் துளிர்க்க ஆரம்பித்தது. ஆனால் வந்தவனோ தேரை நிறுத்தி தேசிகனையும், மற்றவர்களையும் உற்றுப் பார்த்தான். என்ன நினைத்தானோ? திரும்பிச் செலுத்த தொடங்கினான்.

அக்காட்சி எல்லோரையும் வியப்பில் ஆழ்த்தியது. தேசிகரைப் பார்த்தனர்... அவரோ கண்களை மூடி தியானத்தில் இருந்தார். அவ்வளவு பேருக்கும் ஒரு நம்பிக்கை அந்த நொடியே பிறக்கலாயிற்று.

''சுவாமி... தங்களின் எண்ண வலிமை சிலிர்க்கச் செய்கிறது. இந்த வலிமையால் மிலேச்சர்களை நாட்டை விட்டு விரட்டலாமே?'' எனக் கேட்டார் ஒருவர். அப்படி அவர் கேட்பார் என யாரும் எதிர்பாக்கவில்லை. பிள்ளைலோகாச்சார்யாருக்கு அக்கேள்வி சரியாகவும் தோன்றியது. தவறாகவும் தோன்றியது.

தேசிகரோ மென்மையாக புன்னகைத்தபடி பதில் தரலானார்.

''அன்பரே... அவரவருக்கென ஒரு ஆத்ம சக்தி உள்ளது. அதை பலமடங்காக்கி கொள்வதும், சிறுதுளி ஆக்குவதும் அவரவர் செயல்பாடுகளே! என் ஆத்ம பலத்தால் ஒரு தற்கால தீர்வைத் தான் தர இயலும். எல்லோருடைய பலமும் ஒன்றிணைந்தால் தான் அற்புதங்கள் நிகழும். அதை மறைமுகமாக உணர்த்தவே தேர்த்திருவிழாக்களை நடத்துகிறோம். நாம் ஒன்றுபட்டால் கடவுளையும் தேரில் வைத்து இழுத்து ஊரையும் கோயிலாக்க முடியும்.

என்னைப் பார்த்து நீங்கள் அறிய வேண்டியது ஒன்று தான்... ஆத்ம சக்தி வலியது. அதை பெருக்க வேண்டும். அந்த சக்தியை பிறர் நலனுக்கே பயன்படுத்தவும் வேண்டும் என்பதே அது!''

தேசிகரின் அந்த உபதேசம் பிள்ளை லோகாச்சார்யாருக்கு பெருமாளே வந்து உபதேசம் செய்தது போலிருந்தது.

கோயில் கதவருகே வரவும் அதன் திட்டிவாசல் கதவுகள் திறந்திருக்க அதன் வழியாக உள்நுழைந்தனர்.

தேசிகர் வடக்கு கோபுர வாசல் கடந்த நிலையில் நேர் எதிரில் தெரிந்த மேட்டழகிய சிங்கர் சன்னதியை நோக்கி விழுந்து வணங்கினார். எல்லோரும் பின்தொடர்ந்து வணங்கினர்.

கோயிலுக்குள் பெரும் நிசப்தம்! இடது புறமாக சென்று வேடுபரி நடக்கும் மணல் வெளியில் நடக்கும் போது சூரிய உஷ்ணம் மண்ணில் எதிரொலித்தது.

''மற்ற நாட்களில் இங்கே இவ்வேளையில் கூட்டம் வரிசை கட்டி நிற்கும். இன்று பாருங்கள் எங்கள் நிலையை...''என்றார் ஒருவர்!

சன்னதியை அடைந்தபோது ஒருபுறம் மலை போல் செங்கற்கள். கூடவே அக்கற்களைக் கொண்டு சுவர் எழுப்பக் காத்திருக்கும் கட்டுமானப் பணியாளர்கள். சுண்ணாம்பு, பூச்சாங்கொட்டை வடிநீர், விளாம்பழக் கூழ் என பூச்சுப் பொருட்கள் தயாராக இருந்தன. அதைக் காணவே கண்கள் கூசியது.

அரங்கன் சன்னதியை கதவு கொண்டு அடைத்தால் கூட பாதுகாப்பில்லை. சுவர் எழுப்பினாலே வருங்கால தலைமுறைக்கு வழி பிறக்கும் என்ற பிள்ளைலோகாச்சார்யார் திட்டத்தை செயல்படுத்தப் போகும் நேரம் அது.

தேசிகன் அவர்களை புன்னகையோடு பார்த்து ஆசீர்வதித்தார். அவர்களில் ஒருவர் வேகமாய் முன்வந்து, ''சாமி... நாங்க சாமிக்கு கோபுரம் கட்ட ஆசைப்படறோம். ஆனா அவரையே மூடி சுவர் கட்டப்போற கொடுமையை நினைச்சா மனசு பதைக்குது சாமி'' என்றார்.

''இதுவும் கோபுரத் திருப்பணி போல் தான்... எம்பெருமான் உங்களைக் கொண்டு இங்கே தன் சிலாமேனியை பாதுகாக்க எண்ணுகிறான். எனவே இதையும் அவன் செயல் என்றே எண்ணுங்கள். காலத்தால் இது தகர்க்கப்பட்டு பின் எக்காலத்திலும் இது போன்ற இடைஞ்சல் இன்றி எம்பெருமானும் அருளாட்சி புரிவான்''

என்று சொல்லி துவார பாலகர்களைக் கடந்து உள்சென்று அரங்கனின் பள்ளி கொண்ட கோலத்தை உருக்கமாக வழிபட்டார். அப்போது கற்பூர ஆரத்தியும் காட்டப்பட்டது. தேசிகரிடம் ஒரு மலர் மாலை தரவும் அதை எம்பெருமான் கழுத்தில் கிடத்தினார். அப்படியே மார்பில் கோரோசனையை பூசி மணம் கிளப்பினார். குங்கிலியமும் போடப்பட்டது. 'ரங்கா ரங்கா' என்ற கோஷம் இதமான குரலில் ஒலித்து அடங்கியது. அப்படியே உற்ஸவர்களை சிலர் வெளியே எடுத்து வந்த நிலையில், திரும்பவும் பள்ளி கொண்ட கோலத்தை அனைவரும் ஒரு பார்வை பார்த்திட கதவு அடைக்கப்பட்டது. அதன்முன் கதவு இருந்த தடயம் தெரியாதபடி சுவர் எழுப்பும் பணி தொடங்கியது.

தேசிகரிடம் சலனம் ஏதுமில்லை. எல்லாமே லீலைகள் தான்! ஒரு லீலை என்பது எப்போதும் மகிழ்ச்சி தருவதாகத் தான் இருக்க வேண்டும் என்ற கட்டாயமா என்ன? அது துக்கம் தருவதாகவும் இருக்கலாம். அதனால் கிடைக்கும் படிப்பினை தானே முக்கியம்? ஞானியருக்கு எல்லாமே ஒன்று தானே?

உற்ஸவ விக்ரகங்களை வைக்க ஏதுவாக தச்சர்கள் பெட்டியை தயாரித்திருக்க அதில் விக்ரகமும் வைக்கப்பட்டு பூட்டப்பட்டது.

பிள்ளைலோகாச்சார்யார் கலங்கிய விழிகளுடன் தேசிகரைப் பார்த்தார்.

''கலக்கம் வேண்டாம். இத்துடன் நீங்கள் ஒரு பல்லக்கில் வழக்கமான வழிகளில் செல்லாமல், குறுக்குவழிகளில் மதுரை நோக்கிச் செல்லுங்கள். அங்கு யானைமலையை ஒட்டியுள்ள கொடிக்குளம் என்னும் ஊர், அரங்கனுக்காக தயாராக உள்ளது. இவனும் நாடெங்கும் நகர்ந்து திரிந்து அருளப் போகிறான்.

சத்யலோகத்து விக்ரகம் பாண்டிய மண்டலத்துக்குச் செல்லப் போகிறது'' என பிள்ளைலோகாச்சார்யாருக்கு வழியையும் காட்டினார். அப்படியே சுதர்சன ஹோமம் நடைபெற வேண்டிய இடம் நோக்கி திரும்பத் தொடங்கினர்.

**தொடரும்**



# வரதா வரம்தா...



பக்தித்தொடர் 40

இந்திரா செளந்தர்ராஜன்



தேசிகர் தங்க வைக்கப்பட்டிருந்த மனையில் சுதர்சன மகா ஹோமத்துக்கான ஏற்பாடுகள் நடந்து முடிந்தன. 1008 ஆஹுதிகள். அதற்காக நான்கு வேத பிராமணர்கள் தயாராக இருந்தனர். சுதர்சன மந்திரத்தை சொல்லி வேள்வித்தீயில் இடுவதற்காக வெண்கடுகு முதல் நாயுருவி வேர் வரை சகலமும் தயாராக இருந்தன.

வேள்விக் குண்டம் சதுரமாக மாக்கோலமிட்டு காவிக்கரை மிளிர காட்சி தந்தது. அந்த இடமும் மாவிலைத் தோரணங்களால் அலங்கரிக்கப்பட்டு மங்கலமாக காட்சி தந்தது. வேதாந்த தேசிகர் சகலத்தையும் கண்டார். இவ்வேளை சுதர்சன சூரி தன் இரு பிள்ளைகளான மாலோலன், அனந்தனை அழைத்து வந்து தேசிகருக்கு அறிமுகப்படுத்தினான். அவர்களும் விழுந்து வணங்கி 'அபிவாதே' சொல்லி வணங்கினர். இருவருக்கும் வாலிப வயது! உபநயனம் ஆகியிருந்தது. நெற்றியில் திருமண் காப்புடன் திவ்யமாக காட்சி தந்தனர்.

"சுவாமி... இவர்கள் இருவரையும் உங்களிடம் ஒப்படைக்கிறேன். இனி திருவரங்கத்தில் நாங்கள் வாழ்வதில் பயனில்லை. எம்பெருமான் இருக்குமிடத்தில் தான் பிள்ளைலோகாச்சார்யார் இருப்பார். அவர் இருக்குமிடத்தில் தான் நானும் இருப்பேன். என் பிள்ளைகள் என்னோடு வந்து போராட்ட வாழ்வு வாழ்வதற்கு, உங்களோடு காஞ்சிபுரம் வந்து வரதனின் திருமுக தரிசனம் கண்டு உங்களின் சீடர்களாகி நல்ல வைணவ திலகங்களாக ஜொலிக்க வேண்டும் என்பதே என் விருப்பம்" என உருக்கமாய் பேசி முடித்தார். தேசிகனும் மறுக்காமல், "உங்கள் விருப்பப்படியே நடக்கும்" என்றார். அப்போது சுதர்சனசூரி தான் சிரமப்பட்டு எழுதிய 'ச்ருத பரகாசிகை' என்ற நூலை ஒப்படைத்து, "இது ராமானுஜரின் ஸ்ரீபாஷ்யத்தின் நுட்பங்கள் குறித்து எழுதியதாகும். இதன் மதிப்பு, இதைப் போல பல நூல்களை எழுதிய தங்களுக்கே தெரியும். எனவே இதையும் பாதுகாக்க வேண்டும்" என்றார்.

" தங்களிடம் இருப்பது தானே சிறப்பு?" தேசிகன் திருப்பிக் கேட்டார்.

"என் உயிரே எவ்வளவு நாள் இருக்கும் என தெரியாத நிலை. அரங்கப பெருமானோடு மதுரை கொடிக்குளம் நோக்கி செல்லும் சமயம் மிலேச்சர்களால் எதுவும் நடக்கலாம். பாதுகாப்பில்லாத என்னிடம் இருப்பதை விட தங்களிடம் இருப்பது நல்லது"

சுதர்சனசூரியின் பேச்சு தேசிகருக்கு வருத்தம் அளித்தது.

"சுவாமி ஏதாவது தவறாக கூறி விட்டேனா?"

"சுதர்சனசூரி பதறத் தொடங்கினார்.

"எதனால் இத்தனை அவநம்பிக்கை. நான் தான் சொன்னேனே.... கொடிக்குளம் சேரும் வரை எந்த தீங்கும் நேராமல் இருக்க, நான் இங்கே உபாசனையில் இருப்பேன். எனது கருட உபாசனை துணையாக இருக்கும். கருடன் வானில் நிழலாக கூடவே வருவான்! அதோடு எம்பெருமானை எடுத்துச் செல்லும் போது துணைபுரியாமல் போவானா?"

"ஆகா... அது போதும். உங்களின் வலிமை தெரியாமல் பேசி விட்டேன்"

"பேசியது போதும்... ஹோமம் தொடங்கட்டும்"

என்ற தேசிகர், மகாசுதர்சன ஹோமத்தை ஒரிடத்தில் அமர்ந்து காணத் தொடங்கினார்.

ஒருபுறம் ஹோமத்தின் தொடக்கம் – மறுபுறம் எம்பெருமான் அடங்கியுள்ள மரப்பெட்டியை பாதுகாப்பாக எப்படி எடுத்துச் செல்வது என்ற எதிர்பார்ப்பின் தொடக்கம். சுதர்சன சூரியே அதற்கும் முடிவு கண்டார்.

"ஒரு மாட்டு வண்டியில் அரிசி மூட்டைகளை ஏற்றி அதன் நடுவில் பெட்டியை மறைத்து வைத்து யாருக்கும் சந்தேகம் வராதபடி செல்வோமா?" என்றார்.

"இல்லை... இல்லை... அரிசி மூடைகளை கள்ளர்கள் களவாடக் கூடும். அதற்கு பதிலாக பஞ்சு மூடைகளை வைத்து அதனிடையே பெட்டியை மறைத்து வைப்பதே உசிதமானது. பஞ்சைக் கொள்ளையடிக்க யாரும் விரும்ப மாட்டார்கள். அதனால் உடனடியான பலன் இல்லை. அதைப் பக்குவப்படுத்தி நூலாக்கினால் தான் பயன்படும்" என்றார் ஒருவர்.

"அது சரி... பஞ்சு மூடைக்கு எங்கே செல்வது? காவிரி பாயும் இப்பகுதியில் பருத்திக்கொல்லைக்கு ஏது இடம்.. எல்லாமே நன்செய் கழனியாச்சே? அவர்களின் விவாதத்தின் போது, அந்த விருந்தினர்



மது, புகை உடலுக்கு கேடு

**இந்த தொடரின் ஆசிரியர் இந்திரா சௌந்தர்ராஜன் எழுதிய புத்தகங்கள் தெரிந்த பாரதம் தெரியாத பாத்திரம், கிருஷ்ண ஜாலம், கடவுளைக் கண்டவர்கள்** பெற 1800 425 7700 ல் தொடர்பு கொள்ளலாம்.

மாளிகையின் ஒரு பகுதியில் ஏராளமான நெல் மூடைகள் இருந்தன. அமைதியாக ஹோமத்தைப் பார்த்தபடி இருந்த தேசிகரின் காதில் இந்த பேச்சு கேட்டிருக்க வேண்டும். அதனால் அவர்களில் ஒருவரை அழைத்து, ''நெல் மூடைகள் இருக்கும் அறைக்கு போய் பாருங்கள். அங்கே பஞ்சு மூடைகளும் இருக்கும்'' என்றார்.

ஆனால் அந்த நபரோ, ''எனக்கு நன்றாக தெரியும். அங்கே பஞ்சு மூடைகள் இல்லை'' என்றார்.

உடனே எழுந்த தேசிகர், ''வா என்னோடு...'' என அழைத்துச் சென்று மூடைகளை தொட்டுப் பார்க்கச் சொன்னார். மூடைகளில் பஞ்சு தான் இருந்தது.

அவர் திகைத்தார்... பின் புரிந்து கொண்டார். ''சுவாமி... தங்களை சர்வ தந்திர சுதந்திரர் எனக் கேள்விப்பட்டுள்ளேன். இப்போது நேரிலேயே பார்த்தேன். தங்கள் கருணை உள்ளவரை தீங்கேதும் நேராது'' என்றார்.

சிறிது நேரத்தில் ஹோமத்தில் ஆஹுதிப் பொருட்கள் தீயில் சேர்க்கப்பட்டன. அப்போது சீந்தல் கொடி எனப்படும் தாவரத்தை தேசிகரின் ஏற்பாட்டில் ஒருவர் கொண்டு வந்திருந்தார். சீந்தல்கொடி வேலியில் சகஜமாக வளரக் கூடிய ஒன்று. மருத்துவ குணம் கொண்டது. மிருத்யுஞ்சய ஹோமத்தில் சீந்தல் கொடி தான் பிரதானம். அதன் பச்சை இலைகள், தண்டு பாகங்கள் எரியும் போது வேதிமாற்றம் ஏற்பட்டு புகை உருவாகும். அது வாயு வடிவில் ரத்தத்தில் கலந்து கிருமிகளைக் கொன்று நோயாளியைக் குணப்படுத்தும். சுதர்சன ஹோமத்தில் வெண்கடுகிற்கு பிரத்யேகமான இடம். அப்படியிருக்க சீந்தல் கொடியைக் கிள்ளி தீயில் இட்டதும், குபுகுபுவென புகை மூளத் தொடங்கியது. ஒருவரை ஒருவர் பார்த்துக் கொள்வது கூட இயலாமல் கண்கள் எரிய ஆரம்பித்தது. அக்கூட்டத்தில் ஸ்ரீவத்ஸனும் இருந்தான். அவனது புண்பட்ட கண்கள். இப்போது புகையால் எரிய ஆரம்பித்தது.

வேதாந்த தேசிகன் அப்போது கை கூப்பி தியானத்தில் இருந்தார். எல்லாம் சிலநொடிகள் தான்! ஸ்ரீவத்ஸன் உணர்ச்சிப் பெருக்குடன், 'எனக்கு பார்வை தெரிகிறது – என்னால் பார்க்க முடிகிறது'' என பலத்த குரலில் கூறவும். அவ்வளவு பேரும் ஆங்காங்கே நின்றனர். புகை அடங்கியதும், ஸ்ரீவத்ஸன் ஓடி வந்து தேசிகரின் கால்களில் விழுந்து, ''மகாத்மா... உங்களால் பார்வை பெற்றேன். கோடானு கோடி நன்றிகள்'' என அழுதான்.

''ஸ்ரீவத்ஸா...இது சுதர்சனத்தின் மகிமை – நான் இங்கே வெறும் கருவி. உன் நன்றிகள் எம்பெருமானைச் சேரட்டும்'' என்றார். எல்லோரும் விழுந்து வணங்கினர். தேசிகரும் மந்திர அட்சதை தூவி வாழ்த்தினார். ஆசார்ய அனுக்ரஹம் எப்போதும் மந்திர அட்சதை வடிவில் தான் வெளிப்படும். எனவே எல்லோரும் மந்திர அட்சதையை எடுத்து வைத்துக் கொண்டனர். ஸ்ரீவத்ஸன் பிள்ளைலோகாச்சார்யாரிடம் தானும் மதுரை கொடிக்குளம் வருவதாக கூறி அவரோடு சேர்ந்து கொண்டான். அதன்பின் எல்லோருக்கும் மதிய உணவு! சம்பா சாதம், பசு நெய், வேப்பம்பூ ரசம், மாங்காய் பச்சடி, அப்பம், வடை, வாழைக்காய் கறி, பின் தயிர் என சாப்பாடு திவ்யமாக இருந்தது!

அதன்பின் சற்று ஓய்வுக்குப் பின் மாட்டு வண்டியில் பெட்டியை வைத்து அதன் மீது பஞ்சு மூடைகளை அடுக்கி மூடிய நிலையில் வண்டி புறப்பட்டது. வண்டி முகப்பில் பிள்ளைலோகாச்சார்யார் விவசாயி போல ஆக்கிக் கொண்டு புறப்பட்டனர்.

பிள்ளைலோகாச்சார்யாருடன் அவரது சகோதரர் அழகிய மணவாளப் பெருமாளுடன் இன்னும் பலர் சேர்ந்து கொள்ள மாட்டுவண்டிக்கு முன்னால் ஒரு கூட்டமும், பின்னால் சுதர்சன சூரி தலைமையில் ஒரு கூட்டமும் புறப்பட்டது. எல்லோருமே தங்களின் அடையாளங்களை அழித்துக் கொண்டு விவசாயிகள் போல வேடமிட்டு கையில் வேல்கம்பும், வழியில் இளைப்பாற உண்பதற்காக சோளக் கருதுகளுடன், கம்பஞ்சாத உருண்டைகள், வாழைப்பழங்கள், நாரத்தை ஊறுகாய் போன்ற உணவுப் பண்டங்களும் வைத்திருந்தனர்.

அப்போது சூரியன் அஸ்தமிக்க தொடங்கியது. வேதாந்த தேசிகன் சந்தி முடித்து வந்தார். அவரது கால்களில் அனைவரும் விழுந்து வணங்கிய நிலையில் இருள் சூழவும் புறப்பட்டனர். தேசிகர் ஆசீர்வதித்ததோடு, ''ஸ்ரீகருடன் கடைசி வரை துணை வருவான்! தைரியமாகச் செல்லுங்கள். எந்த பாதகமும் ஏற்படாது'' என்றார்.

''காலம் நம்மை திரும்ப ஒன்று சேர்த்திட எம்பெருமான் துணை புரியட்டும். எங்களுக்காக காஞ்சியில் இருந்து வந்திருந்து தாங்கள் செய்திருக்கும் உதவிகளை நாங்கள் மட்டுமல்ல வருங்காலமும் மறவாது'' என்றபடியே பிள்ளைலோகாச்சார்யார் தேசிகனின் கைகளைப் பிடித்து கண்களில் ஒற்றிக் கொண்டவராகப் புறப்பட்டார்.

அன்றைய இரவு திருவரங்கத்தை பொறுத்தவரை ஒரு வினோதமான இரவு. சொல்லப்போனால் அரங்கன் இல்லாத நிலையில் அது திருவரங்கமே அல்ல என்றே சொல்லலாம். கோயிலும் மூடப்பட்டு எம்பெருமானும் வெளியேறி விட்ட நிலையில், இனி அங்கு வாழ்வதில் பயனுண்டா?

இக்கேள்வி தேவதாசி குலத்தில் வந்த வெள்ளையம்மாள் என்பவளுக்கு ஏற்பட்டது. இதற்கெல்லாம் காரணமான மிலேச்சர்களில் சிலரையாவது கொல்ல வேண்டும் என்ற வெறியும் வந்தது. இரவில் தூக்கம் வராமல் புண்டு படுத்த வெள்ளையம்மாள் மனம் துணிந்தாள். அந்த நேரத்தில் சீராப்பள்ளி எல்லை கடந்து தெற்கு நோக்கிய மதுரைச் சாலையில் மணப்பாறையை நெருங்கி விட்டிருந்த பிள்ளைலோகாச்சார்யாரின் கூட்டத்தை கள்ளர் கூட்டத்தை சேர்ந்த ஒருவன் பார்த்து விட்டான்! வண்டியில் இருந்த மூடைகள் அவனை கொள்ளைக்கு தூண்டின. உடனே தன் சகாக்களை சேர்த்துக் கொண்டு விடிவதற்குள் கொள்ளையடிக்க சபதம் எடுத்தான்.

**தொடரும்**

• மது, புகை உடலுக்கு கேடு

# வரதா வரம்தா...

பக்தித்தொடர் – 41



இந்திரா சௌந்தர்ராஜன்

நல்ல இரவு நேரம்!

எம்பெருமானின் திருமேனியோடு பஞ்சு மூடைகள் கொண்ட வண்டியை கள்ளர்கள் காட்டுவழியில் ஓரிடத்தில் மறித்தனர்.

வண்டியை ஒட்டியும், வண்டிக்கு முன்னும் பின்னுமாக பலர் இருந்தனர். அவர்களில் பிள்ளைலோகாச்சார்யாரும், சுதர்சன சூரியும் பிரதானமாக வண்டியை தொட்டு நடந்தபடி இருந்தனர். அவ்வளவு பேரையும் கள்ளர்கள் சுற்றி வளைத்தனர். முகத்தை மூக்குவரை துணியால் மறைத்து கட்டியிருந்தனர். கள்ளர்களில் சிலர் மூடையை வாளால் குத்தினர். பஞ்சு இருப்பது தெரியவும் பெரும் ஏமாற்றம்.

''இந்த பஞ்சு மூடைகளோடு எதற்காக நள்ளிரவில் பயணிக்கிறீர்கள்?'' என்றான் கள்ளர் தலைவன்.

''மிலேச்சர்கள் பார்த்தால் ஆபத்து. அவர்கள் இப்பஞ்சுக்கு தீயிடக்கூடும். அதனால்தான்...''



என்றார் சுதர்சனசூரி!

''மிலேச்சர்கள்...! அந்த அயல்நாட்டு கொடியவர்களால் இந்த நாடே சூறையாடப் பட்டு விட்டது. நாங்கள் கூட பசிக்கு கொள்ளையடிப்பவர்கள் மட்டுமே. ஆனால் அவர்களோ அதிகாரத் திமிரோடு தாங்கள் மட்டுமே வாழ வேண்டும் என்ற நோக்கோடு கொள்ளையிடுகின்றனர். இவர்களை அழிக்க எங்கள் குலதெய்வமான பதினெட்டாம்படி கருப்பன் தான் துணை நிற்க வேண்டும்'' என்று ஒருவன் கூறவும், பிள்ளைலோகாச்சார்யார் அவனிடம் கடவுள் நம்பிக்கை இருப்பது போலத் தெரிகிறதே'' என்றார்.

''என்ன அப்படி சொல்லி விட்டீர்கள். நாங்கள் அழகர்மலைக் கருப்பனை குலதெய்வமாகக் கொண்டவர்கள்''

''அப்படியானால் அந்த அழகர்மலையான்....''

''அவன் எங்கள் தெய்வத்துக்கே தெய்வம்''

''நாங்கள் அந்த அழகர்மலையானின் மூதல் கோயிலான அரங்கன் ஆலய சேவகர்களப்பா...''

''அப்படியானால் திருவரங்கத்தில் இருந்து வருகிறீர்களா?''

''ஆம்''

''பார்த்தால் விவசாயிகள் போல் தெரிகிறீர்களே?''

''இது வேடம்...எம்பெருமானை காப்பாற்றப் போட்டிருக்கும் வேடம்''

''அப்படியென்றால் எம்பெருமான்?''

''பத்திரமாக மூடைகளின் நடுவில் உள்ளாரப்பா!''

''என்ன... அரங்கப் பெருமான் இப்போது இங்கே உள்ளாரா?''

''ஆம்... பெருமான் இப்போது மிலேச்சர் வசப்படாதிருக்க, எங்கள் வசப்பட்டுள்ளாரப்பா.... பெருமான் மட்டுமல்ல... உபய நாச்சிமார்களும்''

''என்ன விந்தை? உலகைக் காக்கும் எம்பெருமானுக்கே சோதனையா?''

''அது தானப்பா கலியின் விந்தை''

''விசித்திரம்!''

''ஆம்...விசித்திரம் தான். மிலேச்சனுக்கு ஆயுதபலம் என்றால் நமக்கு ஆன்மபலம்! இப்போது இரண்டுக்கும் ஒரு யுத்தம் நடக்கிறது. ஆயுதபலம் எப்போதும் தற்காலிக வெற்றி பெற்றிடும். அதோடு பெரும் பாவங்களைச் சேர்த்து அதற்கேற்ப பிறவிகளை எடுக்கச் செய்யும். எடுக்கும் பிறப்பும் இன்பம் தராது.

ஆன்மபலம் அப்படியல்ல!

அது பொறுமையோடும், நுண்ணறிவோடும் நடந்து கடவுளின் திருவடி நிழலை அடைந்து மீண்டும் பிறவாத நித்ய இன்பத்தை அடையச் செய்யும்''

''அருமையான விளக்கம். கொள்ளையிடவே வந்தோம். ஆனால் உங்கள் கருத்துக்களால் தெளிந்தோம். எம்பெருமானைக் காத்திடும் உங்களுக்கு துணை நிற்க விரும்புகிறோம்.''

• மின்னல், மழை நேரத்தில் அலைபேசி, 'டிவி' வேண்டாம்

இந்த தொடரின் ஆசிரியர் இந்திரா சௌந்தர்ராஜன் எழுதிய புத்தகங்கள் **தெரிந்த பாரதம் தெரியாத பாத்திரம், கிருஷ்ண ஜாலம், கடவுளைக் கண்டவர்கள்** பெற 1800 425 7700ல் தொடர்பு கொள்ளலாம்.

''இது அந்த கள்ளழகன் கருணை! கள்ளனாகிய நீலனையே மங்கை மன்னனாக ஆக்கியவனாயிற்றே?''

நள்ளிரவில் கொள்ளையிட வந்தவர்கள் நண்பர்களாகி துணைவர்களாகவும் ஆகி விட்டனர்.

பிள்ளைலோகாச்சார்யார் வானம் பார்த்து நெகிழ்வுடன் வணங்கினார்.

''எம்பெருமானை இப்படி மூடி எடுத்துச் செல்ல வேண்டாம். பல்லக்கு கொண்டு வந்து அதில் அரசனைப் போல அமர்த்தி சுமந்து செல்வோம். எம்பெருமானின் திருப்பார்வை செல்லும் வழியெங்கும் பட்டபடி இருக்கட்டும்'' என்றான் கள்ளர்தலைவன்.

''நாங்கள் போய் பல்லக்குடன் வருகிறோம்'' என்று ஒரு கூட்டம் புறப்பட்டது.

நெடுந்தூரம் நடந்த களைப்பில் எல்லோரும் ஒரு உகந்த இடமாகப் பார்த்து அமர்ந்திட, கள்ளர்களும் அவர்கள் உண்ண கனிவகைகள் கொண்டு வரச் சென்றனர்.

இதற்கிடையே திருவரங்கத்தில்...

பொழுது விடியும் போதே பெரும் மிலேச்சப்படை தெற்கு கோபுர வாசல் வழியாக திபுதிபுவென்று உள்புகத் தொடங்கியது. ஆயிரம் குதிரைகளாவது இருக்கும்.

வந்தவர்கள் நாலாபுறமும் வாளைச் சுழற்றியபடி முன்னேறினர். அவர்கள் இலக்கு ஆலயத்துக்குள் புகுந்து கிடப்பதையெல்லாம் அள்ளிச் செல்வது என்பதாகத் தான் இருந்தது.

படை புகுந்ததைக் கண்ட பெண்கள் தங்கள் வீடுகளுக்குள் புகுந்து கொண்டு கதவைத் தாழிட்டனர். அந்த காலை வேளை இப்படி ஒரு ரணகள பொழுதாக விடியும் என எவரும் எதிர்பார்க்கவில்லை.

உள்ளே கோயிலுக்குள் ஒரு சாரார் வராகர் சன்னதியில், எம்பெருமான் திருவரங்கம் விட்டு வெளியேறியது தெரியாதவர்களாகவே இருந்தனர். அத்தனை சாதுர்யமாக சலசலப்பின்றி லோகாச்சார்யார் எம்பெருமானோடு சென்று விட, எம்பெருமானுக்கான பல்லக்கு மட்டும் திருச்சன்னதி முன் இருந்து, அங்குள்ளோர் நம்பும்படிச் செய்து விட்டது.

இப்படி ஒரு தருணத்தில் மிலேச்சப்படை உட்புகுந்தால் என்னாகும்?

ஊருக்குள் படை புகவுமே ஆயிரக்கணக்கான ஆண்கள் நாற்புர கோயில் வாசல் வழியாகவும் கோயிலுக்குள் புகுந்து சன்னதிக்குள் மிலேச்சன் நுழைந்து விடக் கூடாது என்பதில் கவனமாயிருந்தனர்.

இந்த நாளில் பல அரிய செயல்கள் நடந்ததை திருவரங்க ஆலய கோயிலொழுகு நமக்கு எடுத்துக் காட்டுகிறது. குறிப்பாக சுவர் எழுப்பி மூடப்பட்ட மூலவர் சன்னதிக்கும், உள்ளிருக்கும் பள்ளி கொண்ட அரங்கப் பெருமான் ரூபத்துக்கும் யாதொரு தீங்கும் நேர்ந்து விடக் கூடாது என்பதில் திருவரங்கத்து கோயில் தாசியான வெள்ளையம்மாள் என்பவள் இந்த சமயத்தில் பெரும் திட்டமிட்டாள். வெள்ளையம்மாளுக்கு எம்பெருமான் மீது அடாத பக்தி. தினமும் காலை தரிசனம் முடித்த பிறகே பச்சைத் தண்ணீர் கூட அருந்துவாள். அதேபோல விழாநாட்களில் கருட மண்டபத்திலும், மங்கை மன்னன் மண்டபத்திலும் இவள் ஆடும் நாட்டியம் அவ்வளவு அற்புதமாயிருக்கும். இவள் தன் ஆத்மபலத்தால் ஒரு பெருஞ்செயல் செய்யத் தயாரானாள்.

சிவப்புக்கரையும், வெள்ளைப்பட்டுமாக புடவை உடுத்தி கூந்தலை அள்ளிக்கட்டி அதில் ஏராளமான மலர்களைச் சூடிய நிலையில் அடர்வான மைவிழிகளோடு, கிரக்கும் அழகுடன் கோயிலில் உள்ள ஆர்யபட்டாள் வாயிலில் இவள் அக்கால வேளையில் காத்திருந்தாள்.

மிலேச்சப்படையும் உள்ளே நுழைந்தது. முகப்பில் படைத்தளபதி மிடுக்காய் நடந்து வர, ஒருவன் அவனுக்கு குடைபிடித்தபடி உடன் வந்தான். பின்னால் கையில் வாளுடன் பெரும் கூட்டம். சிலர் குதிரை மீதும், சிலர் தரைப்பரப்பிலுமாக நின்றபடி இருக்க, தான் உள்நுழைய வேண்டிய இடத்தில் ஒரு பெண் தைரியமாக நிற்பது அந்த மிலேச்ச தளபதிக்கு ஆச்சரியமாகவும், அதிர்ச்சியாகவும் கூட இருந்தது.

தன் சேவகனிடம் அந்த தளபதி, ''யார் இவள்? எதற்காக இங்கு நிற்கிறாள்?'' எனக் கேட்டான். அதற்கு அந்த தாசியே பதிலளித்தாள்.

''ஹுசூர்..! நேராக என்னிடம் கேளுங்கள். சொல்லி விடுகிறேன். நான் ஒரு நடன மாது. ஆடிப்பாடி மகிழ்விப்பது என் செயல்'' என்றாள் கம்பீரமான குரலில். தளபதியிடம் மேலும் ஆச்சர்யம்.

''உனக்கு மிகவே தைரியம். ஊருக்குள் நுழையவும் எல்லாப் பெண்களுமே ஒளிந்து கொண்டனர். நீயோ என் முன் தைரியமாக பேசுகிறாய். பலே!'' என்றான் அந்த துண்டுத் தாடியும், பூனைக் கண்களுமான தளபதி.

''தைரியம் என்னுடன் சேர்ந்து பிறந்த ஒன்று. நான் சாதாரணமானவர்களுக்கெல்லாம் கட்டுப்படவும் மாட்டேன். உங்களைப் போல மாவீர தளபதிகளுக்கென்றால் எதையும் செய்வேன்'' என்றாள்.

''அப்படியா?''

''என்ன அப்படியா... என்ன செய்ய வேண்டும் சொல்லுங்கள். செய்கிறேன்''

'' நான் மிக பொல்லாதவன். என்னை ஏமாற்ற நினைத்தால் உன் உடலில் உன் தலை ஒட்டி இருக்காது''

''எதற்கு இந்த மிரட்டல் பேச்சு? உங்களுக்கு நான் இப்போது என்ன செய்ய வேண்டும்?''

''இந்த கோயிலின் கஜானா எங்கிருக்கிறது? எல்லாவற்றுக்கும் மேலாக விழுந்து விழுந்து நீங்கள் வணங்கும் அந்த மூலச்சிலை ரூபம் எங்கே உள்ளது?''

''தெரியும். நீங்கள் இதைத்தான் கேட்பீர்கள் என்று... அதை உங்களுக்கு காட்டத் தான் நானும் காத்துக் கொண்டிருக்கிறேன்'' என்று இன்ப அதிர்ச்சியளித்தாள் தாசி வெள்ளையம்மாள்!

**தொடரும்**

பக்தித்தொடர்

இந்திரா சௌந்தர்ராஜன்



வரதா வரம்தா – 42

# துணிவே துணை

தாசி வெள்ளையம்மாள் சொன்ன பதில் அந்த மிலேச்ச தளபதிக்கு பிரமிப்பை அளித்தது. அவனது பூனை விழிகள் அதை எதிரொலித்தன.

''என்ன ஹுசூர்... நான் சொல்வதை நம்பவில்லையா... இப்படி பார்க்கிறீர்கள்?''

''எல்லோரும் ஒளியும் போது நீ துணிச்சலுடன் வந்து எவ்வித மறுப்பும் இன்றி இடத்தை காட்டுகிறேன் என்பது எனக்கு ஆச்சர்யம் தருகிறது. சந்தேகத்தை உருவாக்குகிறது''

''அப்படியானால் விட்டு விடுங்கள். உங்கள் வழியில் நீங்கள் போங்கள். என் வழியில் நான் போகிறேன். ஒன்று மட்டும் உறுதி. உங்களால் இந்த கோயிலின் கல்தூண் சிலைகளை வேண்டுமானால் உடைக்க முடியும். கஜானாவையோ வழிபாட்டு விக்ரஹங்களையோ நெருங்கவும் முடியாது! உங்கள் வருகையறிந்து அதை மறைத்து விட்டனர்''

வெள்ளையம்மாள் அந்த தளபதி தன் வழிக்கு வர வேண்டும் என்பது போல் நடந்தாள். தன் துண்டுத் தாடியை தடவிய மிலேச்ச தளபதி சற்று யோசித்தபடி, ''சரி... இடத்தை காட்டு'' என்றான்.

''காட்டுகிறேன்... பதிலுக்கு என்ன கிடைக்கும்?'' வெள்ளையம்மாள் அப்படிக் கேட்கவும் தளபதிக்கு மேலும் ஆச்சர்யம்.

''என்ன வேண்டும் நீயே சொல்'' என்றான்

''உங்கள் வீரர்களை கோயிலுக்கு வெளியே முதலில் போகச் சொல்லுங்கள்''

''ஏன் செல்ல வேண்டும்?''

''அவர்கள் வெளியேறாவிட்டாலும் பரவாயில்லை. உள்ளே நுழையக் கூடாது. அவர்களின் பாதங்கள் சன்னதியில் படுவதை நான் விரும்பவில்லை''

''உன் பேச்சும், செயலும் விசித்ரமாக உள்ளது. காட்டிக் கொடுக்க முன் வந்த நீ கட்டிக் காப்பவள் போல் பேசுவது பெரிய முரண்''

''ஹுசூர்.... நான் ஆபரணங்களைத் தான் காட்டப் போகிறேன். உங்களுக்கு தேவையும் அதுதான். வழிபாட்டுச் சிலைகள் இப்போது இந்த ஊருக்குள்ளேயே இல்லை. அதை முதலில் தெரிந்து கொள்ளுங்கள்''

''சிலை இல்லாத கோயிலுக்குள் யார் போனால் உனக்கென்ன?''

''சிலை என்பது எங்கள் வரையில் ஒரு மையப்புள்ளி. மற்றபடி கடவுள் என்பவர் தூணிலும் இருக்கிறார். துரும்பிலும் இருக்கிறார். அவ்வளவு ஏன் உன்னிலும் அவர் இருக்கிறார்''

''எனக்குள்ளுமா... நான் அழிக்க வந்திருப்பவன்...?''

''அது அவன் தொழில்களில் ஒன்று''

''நீ என்ன... நான் என்ன சொன்னாலும் அதற்கேற்ப பதில் சொல்கிறாய்''

''கேட்கும் போது பதில் சொல்லத் தானே வேண்டும்?''

''தைரியசாலி மட்டுமல்ல. மிக புத்திசாலி. உன்னிடம் எச்சரிக்கையாக இருக்க வேண்டும்''

''இதை நான் தான் கூற வேண்டும். நீங்கள் ஆயிரம் பேர்! நான் ஒருத்தி. நான்தானே எச்சரிக்கையாக இருக்க வேண்டும்?''

''இதற்கும் ஒரு பதிலா... சரி கஜானா இருக்கும் இடத்தைக் காட்டும்''

''என் கோரிக்கையை மறந்தால் எப்படி?''

''சரி... இப்போதே உத்தரவிடுகிறேன். யாரும் இந்த கோட்டைத் தாண்ட மாட்டார்கள். போதுமா?''

''இன்னொன்றும் உள்ளது?''

''என்ன அது?''

''நீங்கள் மட்டுமே என்னுடன் வர வேண்டும்''

''புரிகிறது தனியாக அழைத்துச் சென்று கொல்லத் திட்டமிடுகிறாய் என்று சொல்''

''அப்படியே வைத்துக் கொள்ளுங்களேன்''

''என்ன நெஞ்சழுத்தம். இப்போதே உன் தலையை துண்டாக்குகிறேன் பார்''



மது, புகை உடலுக்கு கேடு

**''கடவுள் என்பவர் தூணிலும் இருக்கிறார். துரும்பிலும் இருக்கிறார். அவ்வளவு ஏன் உன்னிலும் அவர் இருக்கிறார்''**

அந்த தளபதி வாளை உருவி வெட்டத் தயாரானான். வெள்ளையம்மாளோ கலங்காமல் சிரித்தாள்.

''எதற்கு சிரிக்கிறாய்?''

''நீங்கள் இப்படி கோழையாக இருப்பீர்கள் என நினைக்கவில்லை. நான் தனியே அழைத்தது கஜானாவைக் காட்ட மட்டுமல்ல. என்னையே உங்களுக்கு வழங்கத்தான்! அது புரியாமல் வாளை உருவினால் எப்படி?''

பேச்சின் முடிவில் சிணுங்கினாள். அதனால் கோபம் போய் கிளர்ச்சியை உண்டு பண்ணியது. குடை நிழலில் நின்று பேசியவன் அதன்பின் அவளோடு தனியே செல்லத் தயாரானான்.

வெள்ளையம்மாளோ மிலேச்ச தளபதியின் கையைப் பிடித்தபடி கிழக்கு கோபுரம் நோக்கி நடந்தாள்.

''இந்த பக்கமாக எங்கே செல்கிறாய்?''

''அதோ அந்த கோபுரத்திற்கு...''

''அங்கு எதற்கு?''

''நான் உச்சியில் இருந்து பார்த்தால்தான் கஜானா அறை நன்கு தெரியும். இப்போது பார்த்துக் கொள்ளுங்கள். பிறகு உரிய பெட்டிகளோடு வந்து அனைத்தையும் அள்ளிச் செல்லுங்கள்''

கொஞ்சும் குரலோடு கோபுரத்தை நெருங்கி அதன் உள்கூட்டில் இருக்கும் படிகள் வழியாக ஏறத் தொடங்கினாள்.

அவன் வாளை உருவிக் கொண்டு பின் தொடர்ந்தான். அவளோ அசரவில்லை. ஒருவழியாக அதன் உச்சி கலச பாகம் வந்தது.

''எங்கே அந்த கஜானா அறை?'' எனக் கேட்டான்.

''அதோ பாருங்கள்...உண்மையில் நீங்கள் கொடுத்து வைத்தவர். எங்கள் அரங்கனின் பரவாசுதேவ ரூபத்தை காண கொடுத்து வைத்திருக்க வேண்டும். மிலேச்சர்களில் உங்களுக்கு அந்த பாக்கியம் இருக்கிறது'' என இருபொருள் பட திருவரங்க மூலச் சன்னதியின் கோபுரத்தைக் காட்டினாள்.

''என்ன நீ....அறை என்று சொல்லி எதையோ காட்டுகிறாய்?'' என்று அவன் கோபுரத்தை பார்த்தபடி கேட்ட போது, கோபுர விளிம்பில் இருந்தான். அவள் சற்றும் தாமதிக்காமல் அவனைக் கீழே தள்ளினாள். அவ்வளவு தான்... அவன் கீழே விழுந்தபோது தெரித்துப் போனது தலை!

பாதுகாப்புக்காக வந்த சிலர் அவனைப் பின்தொடர்ந்து வந்து கீழே நின்றனர்.

அவர்களைப் பார்த்த வெள்ளையம்மாள் அரங்கனின் பரவாசு தேவ கோலத்தைக் கண்கலங்க வழிபட்டவளாய், ''எம்பெருமானே! என்னை ஏற்றுக் கொள். என்னால் ஆனதைச் செய்து விட்டேன். எனவே எனக்கு நானே தண்டனை அளித்துக் கொள்கிறேன்'' என்றபடி கீழே குதித்தாள்.

ஒளிந்திருந்து பார்த்த பலரும் ஓடி வரத் தொடங்கினர். தளபதி இறந்து விட்டான் எனவும் எல்லோரிடமும் ஒரு ஆவேசம். இதுதான் சாக்கு என்று ஒரு பெரும் யுத்தமே மூளத் தொடங்கியது.

இதனிடையே உயிருக்கு போராடிய வெள்ளையம்மாள் உடலை சிலர் காப்பாற்றுவதற்காக தூக்கிச் சென்றனர். அதே சமயம் கோயிலுக்குள் ஒளிந்திருந்தோர் வெளிப்பட்டனர். வெள்ளையம்மாளின் தீரம் அவர்களையும் போரிடத் தூண்டியது.

இச்சம்பவத்தை பன்னீராயிரவர் முடி திருத்திய பன்றியாழ்வான் மேட்டுக்கலகம் என்று கோயிலொழுகு குறிப்பிடுகிறது. எம்பெருமானுக்காக 12,000 பேர் தங்களின் இன்னுயிரை விட்டதாக தெரிகிறது. சில வரலாற்று ஆய்வாளர்கள் இந்த எண்ணிக்கை தவறானது, மிகையானது என்றும் கூறியுள்ளனர். எது எப்படியோ வெள்ளையம்மாளின் துணிவு மிலேச்சர்களுக்கு பாடம் கற்பித்து பயத்தையும் உண்டு பண்ணியது.

வெள்ளையம்மாள் சாகும் தறுவாயில் தனக்கு கோயிலின் மடைப்பள்ளி நெருப்பும், தீர்த்தப் பிரசாதமும், பெருமாள் மாலையும் சாற்றப்பட்டு தன்னை எரிக்க வேண்டும் என்று வேண்டியவள், இது தனக்கு மட்டுமல்ல தன்னைப் போல பெருமாளுக்கு தங்களையே ஒப்புக் கொடுத்து விட்ட தாசிகள் சகலருக்கும் அவர்களின்
இறப்பின் போது இந்த மரியாதை அளிக்கப்பட வேண்டும் என்று தன் இறுதி விருப்பத்தைக் கூறியபடியே உயிரை விட்டாள். அவள் விருப்பம் தாசிகள் உள்ளவரை தொடர்ந்தது.

ஒருபுறம் இவ்வாறு போர் நிகழ்ந்தபடி இருக்க, மறுபுறத்தில் வேதாந்த தேசிகன், சுதர்சன சூரியின் புத்திரர்கள் இருவருடன் காஞ்சிக்கு புறப்படத் தயாரானார்.

பிள்ளைலோகாச்சார்யாரின் முனைப்பில் பல்லக்கு வந்து சேர, அதில் அழகிய மணவாளனும், உபய நாச்சிமார்களும் மதுரையை நெருங்கி விட்டிருந்தனர். களவாட வந்த கள்ளர்களே பெரும் துணையாக உடன் வந்திருந்தனர்!

மதுரை ஆனைமலையை ஒட்டியுள்ள திருமோகூர் கோயிலும், அழகிய மணவாளனின் வருகையை உத்தேசித்து மூடிய கோயிலுக்குள் பல வீர வைணவர்களுடன் எம்பெருமானை வரவேற்று ஆராதிக்க காத்திருந்தது.

**தொடரும்**

இந்த தொடரின் ஆசிரியர் இந்திரா சௌந்தர்ராஜன் எழுதிய புத்தகங்கள் **தெரிந்த பாரதம் தெரியாத பாத்திரம், கிருஷ்ண ஜாலம், கடவுளைக் கண்டவர்கள்** பெற 1800 425 7700 ல் தொடர்பு கொள்ளலாம்.

பக்தித்தொடர்

இந்திரா சௌந்தர்ராஜன்



வரதா வரம்தா – 43

# திருமோகூர்!

மோகினியூர், மோகியூர், மோகன க்ஷேத்திரம் என்னும் பெயர்களால் அழைக்கப்பட்ட விசேஷமான தலம்! யுகம் யுகமாக இருந்து வரும் கோயிலும் கூட. இதன் பின்னணியில் சுவாரஸ்யமான சம்பவம் ஒன்று இருக்கிறது.

பாற்கடலில் கிடைத்த அமிர்தத்தை பங்கிட்டுக் கொள்ள அசுரர்கள், தேவர்கள் இடையே போட்டி நேரிட்ட போது அதை தடுப்பதற்காக எம்பெருமான் மோகினி அவதாரம் எடுத்து வந்தான். அவ்வாறு மோகினி அவதாரம் எடுக்க விழைந்தது இங்கு தான்! இதனாலேயே இத்தலத்தில் பிரம்மனும் தவமியற்றியுள்ளான்.

நெடிய வரலாறும், கீர்த்தியும் உடைய இக்கோயிலில் எம்பெருமான் காளமேகப்பெருமாளாக காட்சி தருகிறான்.

இப்படி பெருமை மிக்க இங்கு தான் பிள்ளைலோகாச்சார்யாருடன் எம்பெருமான் அழகிய மணவாளனாக எழுந்தருளினான்.

வேதாந்த தேசிகரின் அருள்வாக்கு பலித்து விட்டது. வரும்வழியில் கொள்ளையடிக்க வந்த கள்ளர்கள் எம்பெருமானால் கொள்ளை கொள்ளப்பட்டு பரம பக்தர்களாக மாறினர். மிலேச்சர்களின் பார்வையும் படவில்லை. விண்ணில் ஒரு கருடனும் உடன் வந்து வைகுண்டத்து கருணையை அனைவருக்கும் புரியச் செய்தது.

திருமோகூருக்கு அருகிலுள்ள யானைமலை சரிவில் உள்ளது கொடிக்குளம் என்னும் ஜோதிஷக்குடி. ஜோதி விருட்சம் என்னும் மரங்கள் நிறைந்த பகுதி என்பதால் ஜோதிஷக்குடி என்றானது. திருமோகூர் கோயிலில் எழுந்தருளி பூஜைகளைக் கண்ட அழகிய மணவாளர் என்னும் திருவரங்கப்பெருமான் அடுத்து அங்கிருந்து கொடிக்குளம் நோக்கித் தான் பயணமானான்.

கொடிக்குளத்தில் சில காலம் எம்பெருமான் தங்கியிருக்க பிள்ளைலோகாச்சார்யாரும் பரமபதம் அடைந்தார். மாபெரும் சாதனையைப் படைத்து, இப்படி எல்லோரும் பக்தி புரிய முடியும் என்று தன் 120வது வயதில் நிரூபிக்க அந்த வைணவச் சிம்மம், எம்பெருமான் திருவடி நிழலை அடைந்த அந்த நேரம், எம்பெருமானும் கொடிக்குளத்திலேயே தங்கி விடாமல் அழகர்மலை, எட்டயபுரம், ஆழ்வார் திருநகரி, நாகர்கோவில், திருவனந்தபுரம், கொல்லம், கோழிக்கோடு, மேல்கோட்டை, சத்தியமங்கலம் திரும்பவும் மேல்கோட்டை, பின் அங்கிருந்து திருமலை என்று ஒரு நெடும் பயணம் மேற்கொண்டான். அவன் சென்ற இடமெல்லாம் அவன் பாதம் பட்டதால் தோஷங்கள் விலகின. தெய்வாம்சம் மீண்டும் பொலியத் தொடங்கியது.

இதெல்லாம் ஒரு நாளிலோ, ஒரு வருடத்திலோ நடக்கவில்லை. ஏறத்தாழ 48 முதல் 60 ஆண்டுகள் தேவைப்பட்டன. உலகைப் படைத்து அதில் உயிர்களைப் படைத்து அனைவரையும் ஆட்டுவிக்கும் அருளாளன், நமக்காக தன்னையும் ஆட்டுவித்துக் கொண்டான்.

இடர் என்பது பஞ்ச பூதங்களால் தான் ஏற்படும் என்றில்லை. தான் படைத்த மானிடர்களாலும் ஏற்படக் கூடும். அப்போது எப்படி பக்தி செலுத்த வேண்டும் என்பதற்கு சான்றாக மாறியது இக்கால கட்டங்கள்! சூரியன் உதிப்பதும், அஸ்தமிப்பதுமான அன்றாட பொழுதுகள் வரலாறாவதில்லை. சோதனையும், வேதனையுமான பொழுதுகளே வரலாறாகின்றன. காலத்தால் நினைக்கவும் படுகின்றன. இதில் இன்பமாக இருந்த நாட்களுக்குக் கூட வரலாற்றில் இடமில்லை. துன்பமே நினைக்கப்படுகிறது. இன்பமான நாட்களை நாம் உணர பெரும் காரணமாகவும் ஆகிறது.

திருவரங்கப் பெருமானின் போக்கு இப்படி இருக்க, காஞ்சி வரதனின் திருவடிகளை நாடி வேதாந்த தேசிகனும் திருவரங்கத்தில் இருந்து காஞ்சி திரும்பினார். மிலேச்ச பயம் இருந்த போதிலும், திருவரங்கத்தை சிதைக்க மிலேச்சன் முற்பட்டது போல இங்கே அவன் முற்படவில்லை என்றே கூற வேண்டும்.

வேதாந்த தேசிகன் சுதர்சன சூரியின்



இந்த தொடரின் ஆசிரியர் இந்திரா சௌந்தர்ராஜன் எழுதிய புத்தகங்கள் **தெரிந்த பாரதம் தெரியாத பாத்திரம், கிருஷ்ண ஜாலம், கடவுளை க் கண்டவர்கள்** பெற 1800 425 7700ல் தொடர்பு கொள்ளலாம்.

**அவன் படைத்த ஒன்றுக்குள் அவனே சிக்கி பாடுகளை அனுபவிக்கிறான். அவனது அந்த நடுநிலை அசாத்தியமான ஒன்றல்லவா.**

இரு புத்திரகளோடு காஞ்சியை அடைந்து, சன்னதிக்கும் சென்று நெஞ்சம் விம்மிட வழிபடலானார். மனதுக்குள் வரதனிடம் முறையீடு!

"பெருமானே! உன் லீலா வினோதங்களை அறியும் வல்லமை எங்களுக்கு ஏது? உன் முதல் கோயில் இன்று மூடப்பட்டதாகி விட்டதே? இங்கும் அப்படி ஒரு நிலை வந்து விடாதபடி நீயே அருள்புரிய வேண்டும். உன் முதல் கோயிலான திருவரங்கம் பிரம்மன் வணங்கிய கோயில் என்றால், இது அவனே கட்டிய கோயில் அல்லவா? அங்கே கிடந்த நிலையில் இருக்கும் நீ இங்கே நின்ற நிலையில் வரம் தருபவனாக அல்லவா விளங்குகிறாய்?

கேட்காமலே வரம் அளிக்கும் எம்பிரானே! இப்போது நான் கேட்கும் வரத்தை தர வேண்டும். உன் பூஜைகள் தடைபடக் கூடாது. உன் உற்ஸவத்துக்கும் (அதாவது பிரம்ம யாகத்தில் தீயில் தோன்றிய ஐம்பொன் மேனிச் சிலைக்கு) பங்கம் வரக் கூடாது. அதற்கு நீ வரமளிக்க வேண்டும்" என கண்ணீர் மல்கினார்.

தேசிகன் நெடுநேரம் சன்னதிக்குள் பிரார்த்தனை புரிந்ததை கோயில் பட்டர்களும், ஸ்தானீகர்களும் ஆச்சர்யமுடனும், கவலையுடனும் கவனித்தனர்.

பிரார்த்தனை முடித்து திரும்பிய போது தேசிகனின் கன்னங்களில் கண்ணீர் தடயங்கள்! அதைக் கண்டு விக்கித்துப் போய்,

"சுவாமி... தாங்களா கண்ணீர் வடிப்பது?"

"ஆம்... நான் அழக் கூடாதா?"

"பொன்மேனி தங்களுக்கு. அதில் வைரம் பாய்ந்த நெஞ்சம். அந்த நெஞ்சும் கூட அழுமா?"

"என் மீது தான் உங்களுக்கு எத்தனை அன்பு. பொன்மேனி, வைர நெஞ்சம் என்ற உங்களின் புரிதல்களுக்காக மகிழ்கிறேன்.



அதேசமயம் உறுதியான நெஞ்சம் இருப்பதால் கண்ணீர் சிந்தக்கூடாது என்றில்லை.

கண்ணீர் மன உருக்கத்தின் வடிவம். உருகாத மனதால் ஒரு பயனுமில்லை! அசுர மனம் கூட ஏதோ ஒரு இடத்தில் உருகுவதாகவே இருக்கும்!"

"அரிய விளக்கம்...உருக்கத்திற்கான காரணத்தை அறியலாமா?"

"திருவரங்க கோயில் மூடப்பட்டு விட்டது. எம்பெருமானின் திருமேனி தேச சஞ்சாரத்திற்கு ஆட்பட்டு விட்டது. உபய நாச்சிமார்களும் உடன் சென்ற நிலையில் எம்பிராட்டியை அங்கு வில்வ மரத்தடியில் பிறர் அறியாதபடி புதைக்கும்படி ஆகி விட்டது. அப்படியே கலியுகம் தனில் கலிமாயை எம்பெருமானையே அலைக்கழிப்பதை எண்ணினேன். அவன் படைத்த ஒன்றுக்குள் அவனே சிக்கி பாடுகளை அனுபவிக்கிறான். அவனது அந்த நடுநிலை அசாத்தியமான ஒன்றல்லவா?"

"தாங்கள் சொல்வதைக் கேட்டால் அச்சமே ஏற்படுகிறது. எதற்காக இந்த சோதனை? அங்கு நடந்த விபரீதம் இங்கும் நடக்க வாய்ப்புள்ளதா?"

"உள்ளது. ஆதிசங்கரர் வகுத்த ஷண்மதமும் அல்லவா கோயில் கொண்டுள்ளது. ஆயினும் பரம பவித்ரமுடன் வைகுண்ட தீர்க்கமும், பிரம்மனின் சத்யலோக தீர்க்கமும் மிகுந்ததும் உகந்ததும் ஹஸ்திகிரியான இங்கே தான்! எனவே தான் வரதனிடமே அவனுக்காக வரம் கேட்டேன்"

"அது என்னவென்று நாங்கள் அறியலாமா?"

"தாராளமாக....பெரிய கோயில் மூடப்பட்டது போல் ஒரு நிலை இங்கு ஏற்படக் கூடாது. அவனுக்கான பூஜைகளில் தடையோ குறையோ வரக் கூடாது. இதுவே என் பிரார்த்தனை – வரம்"

"வரதனிடம் நீங்கள் கேட்ட இந்த வரம் சிலாக்கியமானது. விசித்திரமானதும் கூட...."

"நீங்கள் அதை எப்படி வேண்டுமானால் உணர்ந்து கொள்ளலாம். ஆனால் ஒன்று... இந்த வரதன் நான் கேட்ட வரத்தை தரப் போவது மட்டுமல்ல. பக்தி மார்க்கத்தில் பெரும் புரட்சியை செய்பவனாகவும், நாக மாணிக்கம் போல் அரிதானவனாகவும், ஒட்டு மொத்த உலகையே ஈர்ப்பவனாகவும் கால காலத்திற்கும் திகழப் போகிறான்" என்றார். பேசியபடியே அவரும் மற்றவர்களும் அனந்த சரஸ் என்னும் குளக்கரை பக்கம் வந்த போது குளத்தில் ஒரு அன்னப்பட்சி மூழ்கிக் குளித்த கையோடு சிறகுகளில் நீர் படபடக்க, விண்நோக்கி பறக்கத் தொடங்கியிருந்தது. விண்ணில் ஏறிய சில நொடிகளில் பெரும் வெளிச்சமாக மாறி மறைந்து போனது!

இது என்ன மாயம்?

**தொடரும்**

**கோபத்தால் பிறருக்கு மட்டுமின்றி நமக்கும் தீமையே செய்கிறோம்.**

பக்தித்தொடர்

இந்திரா சௌந்தர்ராஜன்



வரதா வரம்தா – 44

# நீரின் மகத்துவம்

'இது என்ன மாயம்?' என்ற கேள்வியிலும் வியப்பிலும் எல்லோரும் திகைத்து நிற்க, தேசிகன் கைகளைக் குவித்து வணங்கியபடியே பரவசமானார். அவர் வணங்கவும் எல்லோரும் வணங்கினர். அப்படியே சென்று அனந்த சரஸ் என்னும் குளத்து நீரை கைகளில் அள்ளி தலையில் தெளித்தார்.

''சுவாமி... தங்கள் வணக்கத்திற்கும், இந்த தெளிப்பிற்குமான காரணம் அறியலாமா?'' எனக் கேட்டார் ஒருவர்.

''சொல்கிறேன். நான் பார்த்த அந்த அன்னம் ஒரு கந்தர்வன்! அனந்த சரசில் மூழ்கி எழுந்த பயனாக சாப விமோசனம் அவனுக்கு கிடைத்துள்ளது. இக்குளம் நம் போன்ற மனிதர்களுக்கானது மட்டுமல்ல, தேவர்களுக்குமானது. சர்வ பாவ நிவாரணி என்று கூறலாம்''

''அதனால் தான் என் கனவில் இக்குளத்தில் இருந்து எழுந்து ஈரம் சொட்ட எம்பெருமான் வந்தாரா?''

''இதுவும் நான் உறைகின்ற ஒரு இடம் என அவன் கூறுவதாக பொருள் கொள்ள வேண்டும்''

''எம்பெருமானின் இருப்பிடமாக கருதும் அளவுக்கு இது அத்தனை உயர்வானதா?''

''பஞ்சபூதங்களில் நீரை பற்றி தெரிந்து கொள்ளுங்கள். பூமிப்பிராட்டியை நாரம் எனப்படும் நீரால், நான்கில் மூன்று பங்காக அணைந்து கிடப்பவன் என்னும் பொருளிலேயே நாரணன் என்ற பெயர் உருவானது. இங்கு மட்டுமல்ல...பாற்கடலிலும் இதுவே அவன் நிலை! ஏனைய பூதங்களிலும் நீரே முதன்மையானது. பிறப்பு முதல் இறப்பு வரை நீர் தொடர்கிறது. தாயின் கருப்பையில் நீர்க்குடத்தினுள் தான் பாதுகாப்பாக வடிவாகிறோம். வாழ்வின் முடிவில் அஸ்தியாகி நீரில் கரைந்து மறைகிறோம். இடைக்காலத்தில் நீரே சகல புனிதங்களுக்கும் காரணமாக இருக்கிறது. தேகம் குளிர்வதும் நீரால் தான். தாகம் குளிர்வதும் நீரால் தான்... இந்த நீர் குளமாக இருக்கையில் மூழ்கி அருள் பெறுகிறோம். இதே நீர் ஆறாகும் போது அதில் மூழ்கி நம் பாவங்களை நினைத்து வருந்திட, அது ஆற்றோடு போகிறது. ஒன்றில் பெறுகிறோம், இன்னொன்றில் விடுகிறோம்.

கடலில் மூழ்கும் போது கடலோடு சேரும் நதிகள் போல, நாமும் அந்த நாரணனுடன் சேர்ந்தவர்களாகிறோம். இதனால் தான் புனித நீராடல் எனும் சடங்கு நம் சமயத்தில் பிரதானமானது. கடல் நீராட்டில் நாம் அருளை அடைகிறோம். நமக்கெல்லாம் வழிகாட்டிட மகாபாரதத்தில் அர்ஜுனனும், கிருஷ்ணனும் நதிகள், குளங்களில் நீராடி தீர்த்த யாத்திரை செய்து அதை சமயக்கடமை என உணர்த்தினர்.

பூதங்களில் ஒன்றான நீருக்கு மேலான ஆற்றல் உண்டு. அது சப்தத்தை கிரகித்து அதற்கேற்ப தன்னை ஆக்கிக் கொள்ளும்.

நீரை விரலால் தொட்டுக் கொண்டு மந்திரம் சொல்லும் போது மந்திர சப்தம் விரல்வழி நீரில் சேர்ந்து அதன் அணுக்களில் மாற்றங்கள் நிகழும்.

நீரை அமிர்தமாக்கி உயிரைக் காக்கலாம். நீரை விஷமாக்கி உயிரை அழிக்கலாம்! நீரை எப்படி பயன்படுத்துகிறோம் என்பதில் தான் எல்லாம் உள்ளது.

சன்னதிக்குள் அர்ச்சிக்கப்படும் போது சொல்லும் மந்திரங்களை, எம்பெருமான் முன் உள்ள பாத்திர நீர், கிரகித்துக் கொள்கிறது. அதை பிரசாதமாக பக்தர்களைச் சேர்கிறது. தலையில் தெளித்துக் கொள்ள உடலே சுத்தியாகிறது. நீர் இப்படி நமக்கு எல்லா வகையிலும் பயன்படுகிறது.''

வேதாந்த தேசிகன் பேச்சால் அங்கிருந்தோர் சிலிர்ப்பு அடைந்தனர். அவரும் தொடர்ந்தார்.

கோயில், குளங்கள் இருப்பதன் நோக்கத்தை



## நீரை அமிர்தமாக்கி உயிரைக் காக்கலாம். நீரை விஷமாக்கி உயிரை அழிக்கலாம்!

அனைவரும் உணர வேண்டும். அதிலும் அனந்த சரசின், அதாவது அமைதிப் பொய்கையின் சிறப்பை காஞ்சிவாழ் மக்கள் கட்டாயம் உணர வேண்டும். இது வடிவத்தில் குளமாக தோன்றலாம். ஆனால் இதற்கு பாற்கடலின் குணம் உண்டு. கூடுதலாக நாம் சொல்லும் பிரபந்தம், பாசுரம், மந்திரங்களின் சப்த அலைகளை இது கிரகித்து தனக்குள் கொள்கிறது. இதில் ஒருவர் பக்தியுடன் நீராடும் போது தோஷங்கள் நீங்கும்.

தோஷம் நீங்கிய பிறகு சன்னதியில் வணங்கும் போது பெருமாள் அருளால் நல்லெண்ணம், கருணை, உதவும் தன்மை போன்ற நற்குணங்கள் உண்டாகும்.

ஒரு ஊரின் கோயிலும், அதன் குளமும் அந்த ஊருக்கே பெரும் பொக்கிஷமாகும். எனவே இரண்டையும் தூய்மையாகவும், எம்பெருமானின் மாற்று சொரூபமாகவும் கருதி பக்தியோடு பாதுகாக்க வேண்டும். அதிலும் இந்த அனந்த சரஸ் சாதாரண புகழ் கொண்டதல்ல. உலகிலுள்ள குளங்களுக்கு எல்லாம் தாய் போன்றது'' என்றார். எல்லோரும் பிரமிப்புடன் பார்த்தனர். ஒருவர் மட்டும் செருமியபடி, ''சுவாமி...'' என்றார்.

''சொல்லுங்கள்''

''குளங்களுக்கு எல்லாம் தாயாக விளங்குகிறது என்றால் இப்போது அப்படி இல்லை என்று பொருளா?''

அவரைப் பார்த்த தேசிகன், ''நுட்பமாய் கேட்டுள்ளீர்...பலே!'' என்றார். பின் குளத்தைப் பார்த்தவர், ''ஒரு வகையில் அதுவே உண்மை. இனி தான் இக்குளம் உலகத்தவரால் பார்க்கப்படப் போகிறது'' என்றார்.

''எப்படி என்று முடியுமா?''

''அதை காலமே கூறிடும். நான் கூறக் கூடாது. ஒன்று மட்டும் உறுதி. இக்குளமும், இதில் நீரும் உள்ளவரை இக்கலியில் பெரும் தீமை ஏற்படாது.''

''சுவாமி...திருவரங்கம் போல் சன்னதியை மூடும் நிலை இங்கு வராது தானே?''

''வரக் கூடாது... அதுவே வரதனிடம் நான் கோரியுள்ள வரம்''

''என்றால் எம்பெருமான் கல்கியாக அவதாரம் எடுத்து வந்து எதிரிகளை வெல்வான் எனக் கொள்ளலாமா?''

''அப்படியானால் நம்மால் எதுவும் இயலாது என்பது உங்கள் எண்ணமா?''

தேசிகன் கேள்வி கேட்டவரையே மடக்கினார். ''நீங்கள் என்ன சொல்கிறீர்கள்?''

''எதிரியும் ஒரு மனிதன் – நாமும் மனிதர்கள் தானே?''

முட்ட வரும் மாட்டை பிடித்துக் கட்டினால் அது அடங்கிடாதா?''

''பதிலுக்கு போர் செய்யச் சொல்கிறீர்களா?''

''ஆம்...ஆனால் இது ரத்தம் சிந்தாத அகிம்சைப் போர். புத்திப்போர்''

''சற்று விளக்கமாக சொல்லுங்களேன்''

''பொதுவாக போர் என்பது நாட்டுக்கானதாக இருக்கும். உலகை ஒரு குடையின் கீழ் ஆள்வதே விருப்பமாக இருக்கும். இப்போதைய நமக்கானது நாடு பிடிக்கும் போர் மட்டுமல்ல, நாட்டையே மாற்றப் பார்க்கும் போரும் கூட அதாவது கலாசார யுத்தம்...!''

''உண்மை''

''இதில் நம் கலாசாரம் மாறிவிட அனுமதிக்க கூடாது. இது நமக்கான சோதனை. நம் கலாசாரம் அன்பு, கருணை, விடாமுயற்சி, பக்தி, தியாகம் போன்ற அருங்குணங்களால் ஆனது. இவைகளில் இருந்து விலகிடக் கூடாது.''

''இன்னமும் விளக்கமாக கூறுங்கள்''

''ஈ எறும்புக்கு கூட துரோகம் இழைக்க கூடாது என்பது நம் தர்மம். அதே சமயம் உயிர் போவதாயினும் தர்மத்தை நாம் விட்டு விடலாகாது. எனவே நமக்கு எது நேர்ந்தாலும் எம்பெருமானின் திருவடிகளை விட்டு விடக் கூடாது. நம் வாழ்வு என்பது நாம் க்ஷேமமாக வாழ்வதில் மட்டுமில்லை. பிறர் க்ஷேமத்துக்காக வாழ்வதிலும் உள்ளது. அப்படி வாழும்போது உயிர் பிரிய நேரலாம். அந்த உயிர் அவன் திருவடிகளைத் தான் சென்று சேரும்.

கலியில் இதுவே நியதி! கலியில் தெய்வம் மனித வடிவில் தான் வரும்.''

''அப்படியானால் அவன் வர மாட்டான். நாமே நம்மை தற்காத்துக் கொள்ள வேண்டும் என்கிறீர்களா?''

''தவறு... நம் ஆன்ம சக்தியே அவன் தந்தது தானே? அதை வலிமைப்படுத்துங்கள். அசைக்க முடியாதது நம் சுதர்மம் என்பதை நிரூபியுங்கள். பிரகலாதனை மனதில் கொள்ளுங்கள். அணுத்துகள் அளவு கூட அவனிடம் அவநம்பிக்கை இல்லை. அந்த நம்பிக்கை நம்மிடம் இருந்தால் போதும். எதிரி தோற்று தன் வழிக்கு சென்று விடுவான். வெற்றி கொண்ட வரலாறு நமக்கு மிஞ்சும். அது தான் வரும் தலைமுறைக்கும் தேவை''

தேசிகனின் உபதேசம் அங்குள்ளோரை தெளியச் செய்தது. அப்படியே அந்த குளம் எந்த வகையில் உலகப் பிரசித்தயடையப் போகிறது என்ற கேள்வியும் அவர்களுக்குள் எழும்பியது.

காலச் சக்கரமும் அதை நோக்கிச் சுழன்றது. அவர்களுக்கு தெரியாது உள்ளே எம்பெருமான் ஒரு மோன உறக்க நிலையில் துயில் கொண்டிருப்பது....!

தொடரும்

இந்த தொடரின் ஆசிரியர் இந்திரா சௌந்தர்ராஜன் எழுதிய புத்தகங்கள் **தெரிந்த பாரதம் தெரியாத பாத்திரம், கிருஷ்ணா ஜாலம், கடவுளைக் கண்டவர்கள்** பெற 1800 425 7700 ல் தொடர்பு கொள்ளலாம்.

பக்தித்தொடர்

இந்திரா செளந்தர்ராஜன்



வரதா வரம்தா – 45

# பிச்சையல்ல... பிட்சை!

திருவரங்கத்து சுதர்சன சூரியின் இரு பிள்ளைகளும் அவரின் சீடராகி வேதாந்த தேசிகருக்கு உறுதுணையாக இருந்ததோடு மனித வாழ்வின் தாத்பரியங்களை அறிந்து கொள்ளவும் செய்தனர். தேசிகனின் தர்மபத்னியான திருமங்கையும், தேசிகனின் மனம் கோணாமல் அவர் காட்டும் வழியில் நடப்பவளாகத் திகழ்ந்தாள்.

தேசிகன் விசேஷ நாட்களில் உஞ்சவிருத்தி செய்வது வழக்கம். கடவுளின் திருநாமங்களைச் சொல்லிக் கொண்டும், சப்பள இசை எழுப்பிக் கொண்டும் மக்களிடம் உஞ்சவிருத்தி பெற்று அமுது செய்து அதைப் பிறர் உண்ணச் செய்து பின் தானும் உண்டு அந்த விசேஷ நாளை சான்னித்யம் மிகுந்ததாக ஆக்குவதே இதன் நோக்கம்.

உஞ்ச விருத்தி என்பதற்குள் நுட்பமான பொருள் உண்டு. களத்து மேட்டில் நெல் போரடித்து முடித்த நிலையில், அங்கு சிறிது நெல்லை விட்டுச் செல்வர். அவ்வாறு செய்வது என்பது லட்சுமியின் அகலாத தன்மையைக் குறிக்கும். அங்கே விடப்படும் நெல்லை விருத்தி நெல் என்பர். அதை தானமாக பெற்று உஞ்ச விருத்தி செய்பவர் உண்ண வேண்டும் என்பது விதி. அவ்வாறு அவர் பசியாறினால் அந்த ஊர் செழிப்போடு இருக்கும் என்பது இதன் அடிப்படை.

உஞ்சவிருத்தி செய்பவர் என்பவர் தெய்வத்தின் பிரதிநிதி. கோடி கோடி சொத்துக்கள் இருப்பினும் அதை எல்லாம் துறந்து, கடவுளின் நாமம் சொல்லிச் சென்று உஞ்ச விருத்தியால் அரிசியைப் பெற்று அதைக் கொண்டு தன் உடல்பசியை தணித்துக் கொள்வதால் பல நன்மைகள் ஏற்படுகின்றன.

அவைகள் குறித்து ஒருமுறை சுதர்சன சூரியின் புதல்வர்கள் கேள்வி எழுப்பினர்.

"சுவாமி... நமக்கென நிலபுலம் இருக்கும் போது எதற்காக இப்படி பிச்சை எடுக்க வேண்டும்?" எனக் கேட்டனர். தேசிகன் அதற்கு விளக்கம் அளித்தார்.

"சீடப்பிள்ளைகளே! முதலில் ஒரு திருத்தம் செய்து கொள்ளுங்கள். உஞ்சவிருத்தி பிராமணன் பெறுவது பிச்சையல்ல... பிட்சை!

பிச்சை என்பது நிர்கதிக்கு



## பிச்சை என்பது நிர்கதிக்கு ஆளானவர் பெறுவது! பிட்சை என்பது நற்கதிக்கு ஆளானவர் பெறுவது!

ஆளானவர் பெறுவது!

பிட்சை என்பது நற்கதிக்கு ஆளானவர் பெறுவது!

எல்லாவற்றையும் இழந்து பாவ கர்மங்களாலே வறுமை அடைந்து உயிர் வாழ வேண்டி ஒருவன் பெற்றிடுவதே பிச்சை. ஆனால் எல்லா செல்வங்களும் இருந்திட, அருட்செல்வமே பெரிது என எண்ணி கடவுளின் நாமம் சொல்லிச் சென்றபடி ஒருவர் பெறுவது பிட்சையாகும்!

பிச்சை இடுபவருக்கு புண்ணியம் சேரும். ஆனால் பெறுபவருக்கு ஒரு பயனும் இல்லை. அன்றைய பசி அடங்குவதோடு சரி... ஆனால் பிட்சை இடுபவர், பெறுபவர் என இருவரும் மேன்மை அடைகின்றனர். குறிப்பாக இடுபவரின் பாவ கர்மங்கள் நீங்குகின்றன. பெறுபவரும் நான் என்னும் அகந்தை இல்லாமல் பற்றில்லாத நிலையில் வாழ்பவராகிறார். கடவுளின் நாமம் சொன்ன பயன் இருவருக்கும் ஏற்படுகிறது.

ஆக உஞ்சவிருத்தி பெறுபவர், அளிப்பவர் என இருவரையும் நற்கதிக்கு ஆளாக்குகிறது. எல்லோராலும் உஞ்சவிருத்தி பெற முடியாது. தன்னை வென்ற ஒருவனாலேயே உஞ்ச விருத்தி பெற்றிட முடியும். தன் செல்வங்கள் மேலானதல்ல. அருட்செல்வமே மேல் என்று உணர தெளிவும், ஞானமும் வேண்டும்'' என விளக்கம் அளித்தார்.

சீடர்களிடம் பிரமிப்பு! அந்த விளக்கம் பெற்ற நிலையில் அன்றைய உஞ்ச விருத்திக்கும் அவரோடு சென்றனர். காஞ்சி மாநகர வீதிகள் அன்று புனிதம் அடைந்தன. தேசிகர் எழுப்பிய கடவுள் நாமக்குரல் வீடுகளில் இருப்போர் காதுகளில் விழுந்து அவர்களையும் துதிக்கச் செய்தது.

பல பெண்கள் தேசிகரின் கால்களை நீர் விட்டு அலம்பி, அந்த நீரைத் தங்களின் தலையில் தெளித்து புனிதம் அடைந்தனர். சிலர் வேதாந்த தேசிகனை எம்பெருமானாகவே தரிசித்தனர். தேசிகர் இப்படி தெருவில் வருவதை விஜயநகர அரசாங்க பட்டயக்காரர் ஒருவரும் கண்டார். அவர் பெயர் கோவிந்த சர்மன்! தேசிகர் பாடியபடி வருவதைக் கண்டவர் பல்லக்கை விட்டு இறங்கி காலில் விழுந்து வணங்கி ஆசி பெற்றார்.

''சுவாமி... நான் விஜய நகரிலிருந்து வருகிறேன்! என் பெயர் கோவிந்த சர்மன். வித்யாரண்ய மகாகுருவின் மாணவர்களின் நானும் ஒருவன்''

''மகிழ்ச்சி.... உங்கள் குருநாதர் நலமாக இருக்கிறாரா?''

''நலமுடன் இருக்கிறார். நான் வந்திருப்பது உங்களைக் காணவே''

'' அப்படியானால் வீட்டில் சந்தித்து பேசலாமே...''

''தங்கள் சித்தம்'' என ஒதுங்க முற்பட்டவர் சட்டென்று திரும்பி, ''தாங்கள் இது போல் உஞ்சவிருத்தி பெற்றுத் தான் வாழ வேண்டுமா?'' எனக் கேட்டார்.

''இதைக் கேட்கத்தான் விஜய நகரத்தில் இருந்து வந்தீர்களோ?'' என்றார்.

''இல்லை. தங்களை பல்லக்கில் ஏற்றி விஜயநகருக்கு அழைத்து வரும்படி அரசு உத்தரவு. எங்கள் குருநாதர் வித்யாரண்யரின் விருப்பத்தை நிறைவேற்ற வந்துள்ளேன்''

''தங்கள் குருநாதருக்குத் தான் என் மீது எத்தனை பரிவு? நாம் மற்ற விஷயங்களை வீட்டில் பேசுவோம்'' என தேசிகர் உஞ்சவிருத்தியைத் தொடர்ந்தார். தேசிகரின் பக்தியுணர்வைக் கண்ட கோவிந்த சர்மன் வியப்பில் ஆழ்ந்தார்.

உச்சி வெயிலில் வீடு திரும்பினார் தேசிகர். அவரது மனைவி திருமங்கை வரவேற்றாள். பாதங்களை தண்ணீர் விட்டு வணங்கியவள் அரிசிப்பையை தோளில் இருந்து இறக்கி எடுத்துச் சென்றாள்.

தேசிகரைப் பின்தொடர்ந்த பட்டயக்காரரான கோவிந்த சர்மர், பல்லக்கில் அமர்ந்து வராமல் நடந்தே வரலானார். அவருடன் வந்தவர்கள் விஜயநகர இலச்சினை பொறித்த பதாகைகளை பிடித்தபடி நின்றனர். தன் வீட்டிற்குள் சென்ற தேசிகர் உஞ்சவிருத்தி வழிபாட்டை நிறைவு செய்த நிலையில் சந்தியாவந்தனம் செய்தார்.

திருமங்கை அரிசியை தாம்பாளத்தில் கொட்டி பாத்திரத்தில் அளந்தாள். அப்போது அதில் ஐந்தாறு தங்க நாணயங்கள் கிடந்தன. அதைக் கண்டதும் இன்ப அதிர்ச்சி. தேசிகரும் சந்தியாவந்தனம் முடித்து வந்ததும் நாணயங்களைக் காட்டினாள்.

''அரிசியை அட்சதையாகக் கருதி பெறுவதே உஞ்ச விருத்தி! இதில் பொன்னைப் பெறுவது கூடாது. அது யாசகம் என்றாகி விடும்'' என்றார்.

''இதை அளித்தவர்கள் தங்களுக்கு உதவி செய்ய எண்ணியிருக்கலாம் அல்லவா?''

''ஆம்... அதுவே உண்மை. ஆனால் இதை நான் ஏற்பது சரியல்ல. உதவி பெறும் நிலையிலா வரதன் நம்மை வைத்திருக்கிறான்?''

''நமக்கென்ன குறை? குறைக்கு தானே இந்த காஞ்சியில் குறை?''

இருபொருள்பட தேசிகன் கேட்ட கேள்வி வெளியே காத்திருந்த கோவிந்த சர்மனின் காதுகளில் விழுந்து அவரையும் ஆச்சரியப்படுத்தியது!

தொடரும்

இந்த தொடரின் ஆசிரியர் இந்திரா சௌந்தர்ராஜன் எழுதிய புத்தகங்கள் **தெரிந்த பாரதம் தெரியாத பாத்திரம், கிருஷ்ணா ஜாலம், கடவுளைக் கண்டவர்கள்** பெற 1800 425 7700ல் தொடர்பு கொள்ளலாம்.

பக்தித்தொடர்

இந்திரா சௌந்தர்ராஜன்



வரதா வரம்தா – 46

# குறைக்கு குறை உள்ள நகரம்

ஆச்சரியத்துடன் கோவிந்த சர்மனும் காத்திருக்க அவரை வீட்டுக்குள்ளே அழைத்தார் வேதாந்த தேசிகன்.

எளிய இல்லம். கிழக்குச் சுவரில் மூலிகைச் சாற்றில் வரையப்பட்ட ஹயக்ரீவரின் திருவுருவம். அதன் முன் குங்கிலியம் புகைந்தபடி இருந்தது. செவ்வகமான கூடம் அதில் பாய் விரிக்கப்பட்டு இரண்டு திண்டுகள் சுவர் ஓரமாக காணப்பட்டன. உள்நுழைந்த நொடிகளில் திருச்சன்னதிக்குள் நுழைந்தது போலிருந்தது.

''அமருங்கள்'' என்றார் தேசிகன்.

''என் பெயரை நான் கூட ஒருமுறை தான் சொன்னேன். ஆனால் நீங்கள் நன்கு ஞாபகம் வைத்துள்ளீர்கள்'' என்று சொல்லி பாய் மீது அமர்ந்தார்.

தேசிகனும் எதிரில் அமர்ந்தார். அவர் ஏதும் ஆணையிடாமலேயே தேசிகனின் மனைவி திருமங்கை ஒரு குவளையில் நீர் கொண்டு வந்தாள். கோவிந்த சர்மருக்கும் சரியான தாகம். மறுப்பின்றி வாங்கி எச்சில்படாது குடித்தார்.

அவரிடம் தேசிகன்,

''சொல்லுங்கள் தாங்கள் வந்த விஷயத்தை...''

''அதைத் தான் தங்களைப் பார்த்த போதே கூறினேனே...? தங்களை எங்கள் அரசவையில் கவுரவிக்க வேண்டும் என்பது ராஜகுருவான வித்யாரண்யரின் விருப்பம்''

''காரணம்?''

''அது எனக்கு தெரியாது. ஆயினும் தாங்கள் ராஜ கவுரவும் பெற்றிட எல்லா தகுதிகளும் கொண்டவர் என்பது என் கருத்தும் கூட.''

''மகிழ்ச்சி... ஆனால் என்னைப் பற்றி எனக்கு தானே தெரியும்''

''தாங்கள் என்ன சொல்ல வருகிறீர்கள்?''

''அதெல்லாம் எனக்கு எதற்கு என்று எண்ணுகிறேன்''

''தாங்கள் வளமோடும் புகழோடும் வாழ வேண்டும் என்பது எங்கள் ராஜகுருவின் விருப்பம். அப்படி வாழும் பட்சத்தில் பல அரிய நூல்கள் இந்த சமுதாயத்திற்கு கிடைக்கும்''

''நான் இப்போதும் அப்படித்தானே வாழ்ந்து வருகிறேன்''

'' அப்படியென்றால் பிட்சைக்கு செல்வது எதற்கு?''

''அது என் சுதர்மம்...யோக வாழ்வின் ஒரு பகுதி அது''

'' பிறரிடம் யாசித்து வாழ்வதா யோக வாழ்வு?''

''பிறருக்காக வாழும் ஒருவன் வரையில் அதுவே யோக வாழ்வு! தனக்காக வாழும் ஒருவன் பெறுவதே யாசகம். அதுவே பிச்சை. இது பிட்சை! சமூகத்தில் தர்மத்தை தூண்டி விடும் முயற்சியும் கூட!''

''இப்படி ஒரு விளக்கத்தை நான் எதிர்பார்க்கவில்லை''

''ஏன் விஜய நகரத்தில் என் போல பிட்சை எடுப்பார் யாரும் இல்லையா?''

''ஆம்... அதுவே உண்மை. பிட்சை மட்டுமல்ல. பிச்சைக்கும் இடமில்லை. எங்கள் அரசர் எம் நாட்டை வளம் மிக்க, பசியில்லாத நாடாக வைத்திருக்கிறார்''

''சந்தோஷம்... எம் காஞ்சி நகரிலும் பசிக்கு இடமில்லை''

''அறிவேன்... குறைக்கு குறை உள்ள நகரம்



**சுதர்சன யக்ஞம் என்பது உடல், உள்ளத்திற்கு சக்தி தர வல்லது. துஷ்ட சக்திகள், கிருமிகளை சுதர்சன சக்கரம் ஓட ஓட விரட்டிடுமே...**

என கூறியது என் காதில் விழுந்தது''

''அது தான் உண்மை. எம்பெருமான் இங்கே அதனால் தான் அறிதுயில் கோலத்தை தவிர்த்து நின்று வரம் தரும் ராஜனாக அதாவது வரத ராஜனாக காட்சி தருகிறான்''

''நல்ல விளக்கம். முடிவாக தங்களின் பதில்''

''பொறுங்கள். பதிலை உங்கள் ராஜகுருவுக்கு எழுத்தாலேயே தருகிறேன்'' என்ற வேதாந்த தேசிகன் பூஜையறைக்குச் சென்று கோலமிட்ட மாம்பலகையில் அமர்ந்தார். எதிரில் கோவிலாழ்வாரும் அதனுள் எம்பெருமானின் அர்ச்சாரூப திருவிக்ரஹம் ஒன்றுடன், கொலுவில் அமரும் வண்ண உருவங்களும் மலரிட்டு வணங்கிய நிலையில் காட்சியளித்தன. ஐந்து முக விளக்கு சுடர் விட்டுக் கொண்டிருந்தது. எட்டும் தூரத்தில் பனை ஏடுகள், எழுத்தாணிகள் இருந்தன. அதில் ஒன்றை எடுத்து கூர்தீட்டி பாடல் ஒன்றை எழுதினார்.

அப்பாடலின் பொருள் இது தான்.

''எந்த அரசனும் இந்த ஒட்டு மொத்த உலகை ஒரு குடையின்கீழ் ஆண்டதில்லை. இனி ஆளவும் போவதில்லை. சிறிதாய் ஒரு நிலப்பரப்பு. அதில் ஒரு அரசாட்சி! அதனால் அரசனுக்கும் இறுமாப்பு. இது தான் புலவர்களை, ஞானியர்களை வரவழைக்கச் செய்து என்னை புகழ்ந்து பாடு என்கிறது.

வறுமையில் சிக்கியிருக்கும் புலவர்களும் வழியின்றி பாடுகின்றனர். நான் அவர்களில் ஒருவனல்ல! கண்ணனை நாடிச் சென்ற குசேலனைப் போன்றவன்! வறுமையிலும் குசேலன் கண்ணனிடம் எதையும் கேட்கவில்லை. கேட்கத்தான் சென்றான். ஆனால் கண்ணனைக் கண்டதும் கேட்க மனம் வரவில்லை. அதுதான் உயர்ந்த உள்ளம். கேளாமலே பெரும் பொருளை அடையும்படிச் செய்தான் கண்ணன். எனக்கும் அவன் துணையிருப்பான்''

என எழுதி கோவிந்த சர்மாவிடம் கொடுத்தார். கண்களில் ஒற்றிய அவர் பேழைக்குள் வைத்துக் கொண்டார்.

''சர்மரே... நெடுந்தொலைவு பயணித்து வந்துள்ளீர்! ஓய்வெடுத்து உணவருந்திச் செல்லலாம்'' என்றார் தேசிகன். அப்படியே ''மிலேச்ச உபாதை ஏதுமில்லையே?'' என்றும் கேட்டார்.

''மிலேச்சர்கள் விஜயநகரை பொருத்தவரை எச்சரிக்கையாகவே உள்ளனர். விஜய நகரம் நீங்கலாக இந்த நாவல பூமியை வலம் வந்து நாடுகளை வசப்படுத்திக் கொண்டு இறுதியாக விஜய நகரை பணியச் செய்வது தான் அவர்களின் எண்ணம்''

''அறிவேன்... அவர்களின் அடாத செயலால் அரங்கனும் இப்போது யாத்திரை கிளம்பி விட்டதை தாங்கள் அறிவீரா?''

''கேள்விப்பட்டேன். தங்கள் பங்கும் அதில் இருந்ததையும் அறிவேன்''

''என்னை இயக்கி தன்னை இயக்கிக் கொண்டதும் எம்பெருமான் அல்லவா?''

தேசிகன் அவ்வாறு சொன்ன போது, வேதியர்கள் சிலர் கூட்டமாக வாட்டமுடன் வந்து நின்றனர்.

''வாருங்கள். இந்த வெயிலிலா வர வேண்டும். காலையில் வந்திருக்கலாமே?'' என்றார் தேசிகன்.

''சுவாமி... எங்கள் துன்பம் எங்களை நேரம் பார்க்க விடவில்லை. நாங்கள் என்ன செய்ய?'' என்றார் ஒருவர்.

''அப்படி என்ன துன்பம்?''

''எங்கள் ஊரே கிருமியால் நோய்க்கு ஆளாகி உள்ளது''

''விளக்கமாக கூறுங்கள்''

''கடந்த சில நாட்களாக மக்கள் காய்ச்சலுக்கு ஆளாகி வருகின்றனர். வைத்தியர்களால் ஏதும் செய்ய இயலவில்லை''

''அப்படியா?''

''ஆம்... யார் இட்ட சாபமோ....இல்லை எங்கள் திருப்புட்குழி செய்த பாபமோ, ஒட்டு மொத்த ஊரே படுத்த படுக்கையாகி விட்டது''

''எம்பெருமானே இது என்ன சோதனை?''

''ஆம் சோதனை தான்... வீட்டிற்கு ஒருவர் இறந்து படும் நிலை தெரிகிறது. இப்படியே போனால் இன்னும் சில நாட்களில் திருப்புட்குழியே குழிக்குள் அடங்கி விடும்''

''கவலை வேண்டாம். நீங்கள் ஊர் திரும்புங்கள். நாளை காலை வருகிறேன். அதற்குள் சுதர்சன மகாயக்ஞம் செய்யத் தயாராக இருங்கள். இது போன்ற தருணங்களில் சுதர்சனமே அருமருந்தாக நம்மைக் காத்திடும்'' என்று முடித்தார்.

வேதியர்களும் வணங்கிப் புறப்பட்டனர். கோவிந்த சர்மன் ''சுவாமி! நாளை வேள்வியில் நானும் பங்கேற்கலாமா?'' எனக் கேட்டார்.

''தாராளமாய்...சுதர்சன யக்ஞம் என்பது உடல், உள்ளத்திற்கு சக்தி தர வல்லது. துஷ்ட சக்திகள், கிருமிகளை சுதர்சன சக்கரம் ஓட ஓட விரட்டிடுமே...?'' என்றார் உற்சாகமாய்...

அதைக் கேட்க கோவிந்த சர்மா முகம் பிரகாசம் அடைந்தது.

''இந்த காஞ்சி மாநகரின் நடமாடும் சக்தி களஞ்சியமாக தங்களைக் காண்கிறேன்'' என்றார் முத்தாய்ப்பாக. அப்போது காவல் வீரன் ஒருவன் குதிரையில் வந்து இறங்கி வணங்கினான். ஓலை ஒன்றை தேசிகனிடம் கொடுத்தான்.

அதில் மிலேச்சர்கள் காஞ்சியையும் சூறி வைத்து விட்டனர் என்பதோடு, பத்தாயிரம் பேர் கொண்ட காலாட்படை செஞ்சி வழியாக காஞ்சிபுரம் நோக்கி வரவிருக்கிறது என்ற செய்தி இருந்தது.

செய்தியை அனுப்பியவர் பல்லவ மண்டல ஊர்க்காவல் படைத் தளபதி மாதவராயன்!

**தொடரும்**

பக்தித்தொடர்
இந்திரா சௌந்தர்ராஜன்



வரதா வரம்தா – 47

# சுதர்சன ஹோமம்

பல்லவ மண்டல ஊர்க்காவல் படை தளபதி மாதவராயனின் ஓலை தேசிகனைக் கண்களை மூடி தியானத்தில் ஆழ்த்தியது. அதைக் கவனித்த கோவிந்த சர்மனுக்கும் ஏதோ பிரச்னை என்பது புரிந்தது.

ஓலையைத் தந்த வீரன் தேசிகனை பார்த்தபடி இருந்தான். தேசிகனும் கண் திறந்து அவனைப் பார்த்தவராக, ''அவர்கள் காஞ்சி நகருக்குள் நுழைய மாட்டார்கள். கவலை வேண்டாம் என்று தளபதியிடம் கூறி விட்டு... வரதன் கைவிட மாட்டான்'' என்றார். அந்த வீரனும் திரும்பிச் சென்றான்.

கோவிந்த சர்மன் முகத்தில் ஆச்சரிய ரேகைகள்.

''என்ன பார்க்கிறீர்?''

''மிலேச்சர் பார்வை காஞ்சி மாநகர் பக்கமும் திரும்பி விட்டது போல் தெரிகிறதே?''

''திரும்பாமல் போகுமா என்ன.... நாவல தேசத்தின் அரும்பெரும் ஏழு நகரங்களில் ஒன்றாயிற்றே... இந்த காஞ்சி?''

''ஆயினும் அவர்கள் நுழைய மாட்டார்கள் என்கிறீர்களே?''

''ஆம்... நுழைய மாட்டார்கள். விஷ ஜுரம் அவர்களை நுழைய விடாது''

''விஷ ஜுரமா?''

''திருபுட்குழியையே ஆட்டிப் படைக்கும் அது அவர்களைத் தானா விட்டு வைக்கப் போகிறது?''

''அப்படியாயின் விஷ ஜுரம் காரணத்தோடு தான் வந்துள்ளதோ?''

''பொதுவாக காய்ச்சலும் குளிரும் தேகத்துக்கு நல்லது. அது உடம்பின் பாஷை! அதை அனுபவித்தாலே ஆரோக்கியத்தின் அருமை புரியும். அழியாச் செல்வம் என்பது பொன் பொருளல்ல. உடலின் ஆரோக்கியமே என்பதும் அர்த்தமாகும்''

''நோயைப் போற்றுவது போல் உள்ளதே உங்கள் பேச்சு?''

''இப்போது வந்துள்ள விஷ ஜுரத்தை நான் போற்ற விரும்புகிறேன். போர்க்களத்தில் நிற்பவர்களுக்கு வாளையும், கேடயத்தையும் விட உறுதியானது அவர்கள் தேகமே! அதற்கு வரும் கேடு என்பது ஒரு போர்வீரனைப் பொறுத்தவரை எதிரியை விட மோசம் என்றாகும். அதிலும் பத்தாயிரம் பேர் கொண்ட படை வருகிறது. விஷ ஜுரம் அவர்களில் ஒருவரைத் தொற்றிக் கொண்டால் கூட போதும்.

குடம் பாலில் துளி விஷம் கலந்தால் எப்படியோ அப்படி ஆகி விடும். படை கலகலத்துப் போகும்!

''இப்படி ஒரு கோணத்தை நான் யூகிக்கவில்லை. தங்களின் சிந்தனை வேகமும், தாங்கள் யோசிக்கும் விதமும் எனக்கு பிரமிப்பை தருகிறது''

''எதற்கு இந்த புகழ்ச்சி? இரும்பை துருவானது வீழ்த்துவது போல மனிதர்களை புகழ்ச்சி வீழ்த்திவிடும். நீங்கள் எனக்கொரு உதவி செய்ய முடியுமா?''

''இது என்ன கேள்வி... தாராளமாக கூறுங்கள்''

''உங்களோடு விஜயநகர காவல்வீரர்கள் வந்துள்ளனரா?''

''ஆம்... ஒரு சமையல்காரர், ஒரு பரிசாரகர், ஒரு ரதசாரதி அதுபோக முன்பின்னாக ஆறுகுதிரை படை வீரர்கள் வந்துள்ளனர்''

''அவர்களில் சிலரை மிலேச்ச படைக்குள் நுழைத்து இந்த விஷக்கிருமி தொற்று காஞ்சியிலும் பரவி வருகிறது. திருப்புட்குழி அதற்கு சான்று என்று கூற வைக்க முடியுமா?''

''தங்களுக்கு சிறு சலனமும் தேவையில்லை. மிலேச்சர்களை மிலேச்ச வேடத்திலேயே சென்று சந்தித்து தாங்கள் கூறியது போல கூறுவதோடு, மீறி உள் நுழைந்தால் ரத்த வாந்தி எடுக்க நேரிடும் என்று மிரட்டி விடுகிறேன். இது இந்த நாட்டைக் காக்க நான் செய்யும் ஒரு தொண்டு, என் பாக்கியம் என்றும் கூறுவேன்''

கோவிந்த சர்மன் உற்சாகமாக கூறி விட்டு புறப்படலானார். வேதாந்த தேசிகன் முகத்தில் மகிழ்ச்சி கலந்த பெருமிதம். அதை கவனித்தபடியே வந்து பேசலானாள் அவரின் தர்மபத்தினியான திருமங்கை.

''பெரும் சோதனையான இவ்வேளையில் தங்கள் முகத்தில் ஒரு மகிழ்ச்சி தெரிகிறதே?''

''ஆம் திருமங்கை... இந்த கோவிந்த சர்மனை எனக்காக மட்டுமல்ல. இந்த காஞ்சிக்காகவும்



## அழியாச் செல்வம் என்பது பொன் பொருளல்ல. உடலின் ஆரோக்கியமே என்பதும் அர்த்தமாகும்

வரதனே அனுப்பியுள்ளதாக கருதுகிறேன். அவன் கருணையை எண்ணினேன். சோர்வு நீங்கி மகிழ்வு பிறந்தது''

''தாங்களோ அந்த நோயை விரட்ட சுதர்சன ஹோமம் செய்யப் போகிறீர்களே?''

''ஆம்... திருப்புட்குழி மக்கள் நம் மக்களல்லவா? அவர்களை காப்பது தலையான கடமையாயிற்றே?''

''நோய் நீங்கி விட்டால் திரும்ப அவர்கள் வரலாம் தானே?''

''அதை அப்போது பார்க்கலாம். இப்போது ஒரு வழியை காட்டிய வரதன் அப்போதும் நல்வழி காட்டுவான்''

''இந்த வரதன் திருவரங்கத்தைக் காக்க ஏன் ஒரு வழியும் காட்டவில்லை?'' திருமங்கையின் கேள்வி தேசிகனின் முகத்தில் விதிர்ப்பையும் ஏற்படுத்தியது.

''நான் அதிக பிரசங்கியாக ஏதாவது கேட்டு விட்டேனா?''

உன் கேள்வியிலும் பிழையில்லை. அரங்கன் வேறு வரதன் வேறு இல்லை தேவி. இதை முதலில் புரிந்து கொள்.

குழந்தைகள் தங்களுக்குள் வேடம் போட்டுக் கொண்டு நான் தலையாரி, நீ கள்வன், ஓடி ஒளிந்து கொள் – நான் கண்டு பிடிக்கிறேன் என்று விளையாடுவது போன்ற ஒரு விளையாட்டு தான் மிலேச்ச அபாயமும் அவன் திருவரங்கள் விட்டு மதுரை சென்றதும்.

மிலேச்சனுக்கும் அவனே கடவுள் என்பதை ஒரு பாமரன் அறியத் தவறலாம். என் போன்ற வேதம் கற்றோர் அறிந்திடத் தவறிடக் கூடாது.

பாலுக்குள் உள்ள நெய்யை எப்படி கடைந்து அறிகிறோமோ, அது போல நாலாவித செயல்பாடுகளிலும் அவனே இருப்பதை உணர்வதே ஞானம்.''

''எல்லாம் அவன் செயல் என்பதையே தாங்கள் இப்படி கூறுகிறீர்கள் என்பது புரிகிறது. அவன் செயல் என்பது அருளுவதாக இருந்தால் தேவலை. ஆயிரக்கணக்கானோர் தலை உருளுவதாக இருப்பது தான் வேதனை தருகிறது''

''அனைத்திற்கும் காரண காரியம் உண்டு தேவி. வாழ்வென்பது உண்பதும், உறங்குவது மட்டுமல்ல. விலங்குகளின் வாழ்வில் கூட இரை தேடுவதும், பின் தானே இரையாவதும் போராட்டமானதாகவே இருப்பதை எண்ணிப்பார். இதில் மனித வாழ்வு அறிவு கடந்த ஞானமும் சார்ந்த ஒன்று. வெறும் அறிவோடு சிந்தித்தால் நுட்பம் புரியாது. அதைக் கடந்து ஞானத்தோடு சிந்தித்தாலே பல உண்மைகள் புரியும்.

மேடும் பள்ளமும் இருந்தால் தானே இருப்பு தெரியும். சமநிலையில் இருப்பவர் வாழ்வில் இன்ப, துன்பங்களுக்கே இடமில்லாமல் போய் எதற்கு வாழ்கிறோம் என்பதே தெரியாது போய் விடும்''

''என் கேள்விக்கு தான் எத்தனை பெரிய வியாக்யானம்... அடேயப்பா!

திருமங்கை வியப்பில் ஆழ்ந்தாள்.

தேசிகனோ சுதர்சன ஹோமம் குறித்த சிந்தனையோடு அதற்கான துதியையும் சிந்திக்க தொடங்கி விட்டார்.

உணவு உண்டு முடித்ததும் ஓலை, எழுத்தாணியை எடுத்துக் கொண்டு தியானத்தில் ஆழ்ந்தார்.

அவருக்குள் எம்பெருமான் விஸ்வரூபக் காட்சியளித்தான்! அந்நேரம் சுதர்சனமாய் அவன் சாதித்தவைகள் மனதில் சாட்சியாக விரிந்தன. நரசிம்ம அவதாரத்தில் ஹிரண்ய வதத்தின் போது வயிற்றைக் கிழித்த நகங்களாய் திகழ்ந்தது சுதர்சனமே! வாமன அவதாரத்திலோ சுக்ராச்சாரியாரையே திசை திருப்பிற்று இந்த சுதர்சனம்!

கஜேந்திர மோட்சத்தில் முதலையை அழித்து யானையை காப்பாற்றியது சுதர்சனம் தானே?

இந்த சுதர்சனர் சொரூபம் கொண்டு நிற்கும்போது 16 ஆயுதங்கள் உதவிக்கு வருகின்றன!

'சக்கரம், மால், குந்தம், தண்டம், அங்குசம், சதாமுகாக்னி, மிஸ்கிரிசம், வேல் ஆகியவை வலக்கையிலும், சங்கு, வாள், பாசம், கலப்பை, வஜ்ராயுதம், கதை, உலக்கை, திரிசூலம் ஆகியவை இடக்கையிலும் வந்து விட்ட நிலையில் எதிர்படுவதை அழிக்கப் புறப்பட்டால் அது நிர்மூலமாகியே தீரும் என்பதே சுதர்சனம் எனப்படும் சக்கராயுதத்தின் பெரும் மகிமை!

சுதர்சனத்தை அணுஅணுவாய் தியானித்து உள்ளம் பூரித்தது. நெகிழ்ந்த நிலையில் சுதர்சனாஷ்டகம் தேசிகனுக்குள் கருக்கொண்டு வெளிப்படத் தொடங்கிற்று!

*''ப்ரதி படஸ்ரேணி பீஷண...*
*வரகுண ஸ்தோம பூஷண...*
*ஜெனிபயஸ்தான காரண...*
*ஜெக தவஸ்தான காரண...*
*நிகில துஷ்கர்ம தர்சன...*
*நிகம சத்தர்ம தர்சன...*
*ஜெய ஜெய ஸ்ரீசுதர்சன...*
*ஜெய ஜெய ஸ்ரீசுதர்சன...''*

வார்த்தைக்கு வார்த்தை வைரம். வார்த்தைக்கு வார்த்தை வீர்யம், வார்த்தைக்கு வார்த்தை பூர்ணம்....

அவரின் கைகள் ஏட்டில் மானுட குலத்திற்கு மகாமருந்தான சுதர்சனாஷ்டகம் என்ற ஸ்லோகத்தை எழுதிச் சென்றபடியே இருந்தன!

அதே வேளை திருப்புட்குழியிலோ விஷ ஜுரத்தின் தாக்கம் தாளாமல் பலர் மாண்ட நிலையில் அந்த ஊரின் பெயரைச் சொல்லக் கூட அஞ்சும் நிலை காஞ்சிக்குள் உருவாகியது!

**தொடரும்**

பக்தித்தொடர்

இந்திரா சௌந்தர்ராஜன்



வரதா வரம்தா – 48

# வைத்தியனுக்கெல்லாம் வைத்தியன்

மறுநாள் காலை!

பிரம்ம மூகூர்த்த வேளையிலே கண்விழித்து விட்டார் வேதாந்த தேசிகன். கொல்லைப்புறத்தில் காலைக் கடன்களை முடித்து, கிணற்று நீரை இறைத்து குளித்தவர், பன்னிரு காப்பு தரித்துக் கொண்டு, கச்சமும் உடுத்திக் கொண்டு உபய அங்க வஸ்திரத்தால் மார்பினை போர்த்தியபடி சந்தி புரியத் தயாரானார்.

கிழக்கு நோக்கி அமர்ந்து ஆசமனம் புரியத் தொடங்கி சந்தி வழிபாட்டில் மூழ்கிய அவ்வேளை, வீட்டு வாயில் புறத்தில் பல்லக்கில் வந்திறங்கினார் விஜய நகரத்து கோவிந்த சர்மன்!

வந்தவரை வரவேற்று அமரப் பணித்தாள் வேதாந்த தேசிகரின் தர்மபத்னி திருமங்கை. கோவிந்த சர்மன் பார்க்கும்படியாகத் தான் வேதாந்த தேசிகன் சந்தி புரிந்து கொண்டிருந்தார்.

அதிகாலை இருள் மெல்ல விலகிக் கொண்டிருந்தது. கிழக்கு வானில் சூரியனின் விட்டபாகம் தெரியும் முன்பே வானம் வெளுத்து விட்டது. அந்த வெளிச்சத்தில் வேதாந்த தேசிகன் அமர்ந்து பூணூலை கைவிரல்களில் பற்றி காயத்ரியை ஜபித்தபடி இருப்பது நன்கு தெரிந்தது. அப்போது கோவிந்த சர்மனின் விழிகளுக்கு வேதாந்த தேசிகன் பிரம்ம சொரூபமாகவே தெரிந்தார். தேஜஸ் என்ற வார்த்தைக்கு ஒரு பெரும் பொருளாய் அவர் நிமிர்ந்து அமர்ந்த நிலையில் காயத்ரியை உபாசித்துக் கொண்டிருந்தார்.

திருமண் காப்பை அவர் தரித்திருக்கும் விதம் நேர்த்தியாக இருந்தது. அதே போல் தலைமுடியை அழுந்த வாரி பின்னால் முடிந்திருக்கும் விதத்திலும் கலைநயம்.

கழுத்தில் துளசி மாலைகள் சிலவற்றோடு பவித்ர நூல்புரி மாலையும் கிடந்து அவரின் பொலிவை கூட்டிக் கொண்டிருந்தது.

கோவிந்த சர்மனுக்கு அந்த வேளை காஞ்சியில் பிறவாமல் போனோமே என்ற எண்ணம் எழுந்தது. கூடவே சில பல கேள்விகளும் எழும்பின. வேதாந்த தேசிகரும் காயத்ரி ஜபம் முடிந்து பின்னர் சந்தியை தொடர்ந்து முடித்தவராக உதித்தெழுந்து காட்சி தந்த சூரியனையும் கைகூப்பி வணங்கி முடித்தார்.

எதிரில் கோவிந்தசர்மன்!

''வாருங்கள். அதிகாலையிலேயே வந்து விட்டீர்களே?''

''தாங்களோடு திருப்புட்குழிக்கு வர வேண்டுமல்லவா?''

''நல்லது... சிறிது நேரத்தில் தயாராகி விடுவேன்...புறப்படலாம்''

''மகிழ்ச்சி. தாங்கள் நேற்று எனக்கு இட்ட கட்டளையையும் நிறைவேற்றி விட்டேன். விஷ ஜூரம் பற்றிய செய்தி மிலேச்சர்களை அடைந்து அவர்கள் கலங்கியிருப்பார்கள்''

''அதற்குள்ளாகவா?''

''மிலேச்சன் விஷயம் ஒரு பேராபத்து. அதிவேகம் தான் அதற்கான சிறந்த செயல்பாடாகும். எல்லாம் என் குருவான வித்யாரண்யரிடம் கற்ற பாடம்''

''நல்ல குரு, நல்ல சீடன்... நான் அளித்த பதில் மூகமன் ஏடு பத்திரமாக உள்ளது தானே?''

''பொக்கிஷம் போல் பாதுகாப்பாக வைத்துள்ளேன். சுதர்சன ஹோமம் முடிந்ததும்



**பக்தி உணர்வும், மன ஒருமையும் உடலின் சுரப்பிகளை சீராகச் சுரக்கச் செய்து நமக்குள் நன்மை செய்யும்.**

அங்கிருந்தே என் பயணம் தொடங்கி விடும்''

''மகிழ்ச்சி''

''இவ்வேளை நான் உங்களிடம் சில கேள்விகளை கேட்கலாமா?''

''நாம் திருப்புட்குழி நோக்கிச் செல்லும் போது பேசலாமே?''

தேசிகன் அவ்வாறு சொன்ன அந்த நொடிப் பொழுதில், அவர் இல்ல முகப்பில் தேசிகனை தங்களின் ஆப்த குருவாக கருதிடும் அவரது அன்புக்குரிய வைணவர்கள் பலர் கூடியிருந்தனர்!

அவர்கள் முகங்களில் ஒருவித வாட்டம்...

''என்னவாயிற்று... ஏன் எல்லோரும் வாட்டமாக உள்ளீர்கள்? தேசிகன் வினவினார்.

''தாங்கள் திருப்புட்குழி செல்ல இருப்பதாக அறிந்தோம்''

''ஆம்... அதற்கென்ன?''

''அதுதான் எங்கள் கவலையே...கொடிய விஷ ஜூரத்தால் அங்கு ஒருவர் பின் ஒருவராக மடிகின்றனர். சுற்று வட்டார கிராமங்களிலும் பரவி வருகிறது, என்கின்றனர்''

''அதைத் தடுப்பது முக்கியமல்லவா?''

''வைத்தியர்களாலேயே முடியவில்லையாம்''

''வைத்தியனுக்கெல்லாம் வைத்தியன் நம் வரதன். அவனது சுதர்சனச் சக்கரம் எந்த தீய சக்தியையும் அழிக்க வல்லது''

''தங்கள் சொற்கள் நம்பிக்கை தருகிறது. ஆயினும் தங்களை அந்த கிருமி தாக்கி விடுமோ என்று அச்சமாக உள்ளது''

''அச்சமே நரகம். பக்தியும், உறுதியான பற்றும் இருந்தால் அச்சம் தோன்றாது. அச்சமில்லாத மனதில் தான் பரோபகார எண்ணங்களும் தோன்றும். அதிலும் பரோபகாரம் என்பது வைணவ தர்மங்களில் பிரதானமானது''

வேதாந்த தேசிகனின் விளக்கம் சிந்திக்கச் செய்தது. ஒருவகை இறுக்கம் சூழ்ந்து கொண்டது.

''அஞ்சாதீர்கள்... அவன் துணை வருவான். யாதொரு கேடும் நேராது. வாருங்கள் செல்வோம்'' என அவர்களை அழைத்ததோடு மனதிற்குள் சுதர்சன காயத்ரியையும் சொல்லியவராக தேசிகன் திருப்புட்குழி நோக்கிப் புறப்பட்டார்.

''எம்பெருமானின் சிருஷ்டியில் இக்கிருமியும் ஒன்று தானே?''

'' என்ன சந்தேகம்?''

''கருணை மிகுந்த எம்பெருமான் எதற்காக இதை படைக்க வேண்டும்?''

''அவன் இதை நேராய் படைக்கவில்லை. நாம் நேர்த்தியற்று போகும் போது தானாக தோன்றிடும்''

''புரியவில்லையே?''

''தூய வாழ்வு நடத்த தவறிடும் போது, நெறிமுறைகளை மீறும் போது, முன்னோர் காட்டியவழியில் நடக்காமல் தன்னிச்சையாக செயல்படும் போது, போகம், கேளிக்கைகளில் மூழ்கும் போது.... இப்படி அடுக்கடுக்கான செயல்பாடுகளில் எந்த ஒன்றும் தன்னிலை திரிந்தால் கிருமி என்றாகி விடும். வாசம் மிகுந்த பழம் அழுகினால் துர்நாற்றம் வருவது போல், வண்ண மலர்கள் வாடினால் சருகாதல் போல், ஒரு விஷயமே இதுவும்...''

''அப்படியானால் இக்கிருமி மானுடப் பிழை தானா?''

''என்ன சந்தேகம். ஆயினும் எம்பெருமான் கருணை மிகுந்தவன் அவன் தன்வந்திரியும் கூட. அவனது அமிர்த கலசத்தின் ஒரு துளி போதும். அந்த கிருமி அழிந்து நாம் நலம் பெற்றிட...''

''என்றால் மருந்துகள் தேவையற்றவையா?''

''சுதர்சன மகாயக்ஞமே மகாமருந்து தான்! யக்ஞ நெருப்பில் சேர்க்கும் ஆஹுதி பொருட்கள் எரிந்து சாம்பலாகிடும் முன் உருவாகும் புகைக்குள் இருக்கிறது மருந்து... அடுத்து பக்தி உணர்வும், மன ஒருமையும் உடலின் சுரப்பிகளை சீராகச் சுரக்கச் செய்து நமக்குள் நன்மை செய்யும். எல்லாவற்றுக்கும் மேலாக உச்சரிக்கப்படும் மந்திர ஒலியும் பல அதிசயங்களை நிகழ்த்தும். அந்த சுதர்சனனின் அருளால் அஷ்டகம் ஒன்றை என் மனம் ஜனித்தது. அதை நான் இப்போது கூறுகிறேன். எல்லோரும் திரும்பக் கூறுங்கள்'' என்ற தேசிகர் அஷ்டகத்தைச் சொல்லவும் எல்லோரும் திருப்பிச் சொன்னார்கள். அப்போது ஒரு பரவச உணர்வும், இனம் புரியாத அதிர்வும் உடம்பிலும் ஏற்பட்டது.

''மந்திரங்களை பொறுத்தவரை உச்சரிப்பு முக்கியம். குருமூலமாக உபதேசிக்கப் பெற்று, அப்படியே சொல்வது தான் சிறப்பு.

வேத மந்திரங்களை 'எழுதாக்கிளவி' என்றிட இதுவே காரணம். சப்த வடிவில் மட்டுமே அவை சரியாக திகழும். எழுத்து வடிவில் ஆளுக்கு ஆள் மாத்திரை அளவுகளில் கூடுதல் குறைச்சல் ஏற்பட்டு சிதைவு உருவாகி விடும்.''

தேசிகன் அளித்த விளக்கம் கிருமிக்கானதாக மட்டுமின்றி மந்திரங்களுக்கும் சேர்த்தே இருந்தது.

திருப்புட்குழியை அடைந்த போது யாக ஏற்பாடுகள் தயாராக இருந்தன. ஜனங்கள் உடம்பை மூடிக் கொண்டு பயத்தோடு ஹோம குண்ட மைதானத்தில் கூடியிருந்தனர்.

அவர்களின் மனதில் மரணபயம் இருப்பதை தேசிகனால் புரிந்து கொள்ள முடிந்தது.

''யாரும் வருந்த வேண்டாம். காஞ்சி அருளாளன் துணை எப்போதும் உண்டு. நிகழப்போகும் ஹோமம் நிச்சயம் ஊரைக் காப்பது மட்டுமல்ல. சுதர்சனத்தால் அழியாதது ஒன்றுமில்லை என்ற நல்ல நிலை தோன்றப் போவதை நீங்கள் காணப் போகிறீர்கள்'' என்ற வேதாந்த தேசிகன் குண்டத்தின் முன் அமர்ந்து கைகூப்பி வணங்கினார்.

**தொடரும்**

பக்தித்தொடர்

இந்திரா சௌந்தர்ராஜன்



வரதா வரம்தா – 49

# வேள்வியின் பலன்

வேதாந்த தேசிகர் வணங்கிய நிலையில் சுதர்சன யாகம் தொடங்கியது. வேள்விக் குண்டத்தின் நான்கு பக்கத்திலும் அமர்ந்திருந்த வேதியர் பக்தியுடன் மந்திரங்களைச் சொல்லி வெண்கடுகினை நெருப்பில் போடலாயினர். பசுஞ்சாணம், பச்சைக் கற்பூரம், தளிர் வெற்றிலை, அரச, புரச சமித்துகள், பசு நெய் இதோடு ஏராளமான மூலிகைகளும் போடப்பட அக்னியானது இவைகளோடு வினை புரிந்து வெண்புகை எழும்ப சுற்றிலும் பரவியது.

வெட்ட வெளியில் செய்திருந்த ஏற்பாடு என்பதால் புகை பரவத் தடையில்லை. அப்போது சற்றும் எதிர்பாராதது போல வானில் மேகங்கள் கூடி காற்று பலமாக வீசியது. வேள்வி தடைபடும் என்றே எல்லோரும் கருதினர். அதை ஒரு சகுனத்தடையாகவும் கருதினர். ஆனால் வேதாந்த தேசிகனோ அண்ணாந்து மேகங்களைப் பார்த்தார். அப்படியே மனக்கண்களில் பிரார்த்தனை புரிந்து கொண்டார்.

"எம்பெருமானே உன் கருணையின் வடிவமே இம்மேகக் கூட்டம். இது இப்போதா வர வேண்டும்? வேள்வி முடியவும் வந்தால் அது வேள்விப்பயன் என்றாகும். இடையில் வந்தால் வேள்வி வீண் என்றாகாதா?

தாயும் தந்தையுமானவனே! மாலே... மணிவண்ணா... எங்களை ரட்சிப்பாய்" என்ற அவரின் பிரார்த்தனை வரதனுக்கு கேட்டு விட்டது போலும். மெல்ல காற்று வீசுவது குறைந்து, மேகங்களும் விலகி வேறிடம் நோக்கிச் சென்றிட, வானில் மீண்டும் கதிரவன் காயத் தொடங்கினான்.

வேள்வியும் முழுமையாக முடிந்திட, ஹோம குண்டத்து சாம்பலை ஒரு குடத்து நீரில் கரைத்து அதனை ஊரெங்கும் தெளிக்கச் செய்து, பின் எல்லோரையும் ஆசீர்வதித்தவராக புறப்பட்டார் வேதாந்த தேசிகன்.

அப்போது அங்குள்ளோர் சிலர் கண்ணீருடன் நன்றி கூறினர்.

"சுவாமி.. காஞ்சியில் இருந்து வந்து வேள்வி நிகழ்த்தி எங்களுக்கு நம்பிக்கை அளித்தமைக்கு நன்றி" என்றார் ஒரு வைணவர்.

"சுவாமி... இனி இந்த ஊர் நலம் பெறும் தானே?" என சந்தேகமுடன் கேட்டார் ஒரு வைணவர்.

நோய்க்கிருமியை விட கொடியது சந்தேகம். அது ஒருவருக்குள் புகுந்தால் நம்பிக்கை உணர்ச்சிக்கு அதுவே கரையானாக மாறி விடும். எனவே சந்தேகம் வேண்டாம்!

இந்த வேள்வி என்பது எம்பெருமானுக்கான வழிபாடு மட்டுமன்று. இது வழிப்பாடும் கூட! தனி மனிதனுக்கு உபாதை எனில் அதை வைத்தியரால் குணப்படுத்த முடியும். ஊருக்கே உபாதை எனில் இது போன்ற வேள்விகளாலேயே அதை சாதிக்க இயலும்.

இதன் பின்புலத்தில் எம்பெருமானின் கருணை மட்டுமல்ல. நிலம், நீர், தீ, காற்று, ஆகாயம் ஆகிய ஐம்பூதங்களின் கருணையும் உள்ளது. இவற்றாலேயே கிருமி பரவியது. இவற்றைக் கொண்டே அதை அழிக்கவும் இயலும். இந்த ஐம்பூதங்களை ஏதோ ஒரு வகையில் அசுத்தப்படுத்தி விட்டோம். அதுவும் கிருமி உபாதைக்கு காரணம்! மனிதவாழ்வில்



**ஒரு வேள்வி என்பது அகம், புறம் என இரண்டிற்கும் நன்மையளிப்பதாகும். பக்தியும், ஈடுபாடும் தான் இதில் முக்கியம்.**

அறிந்தும், அறியாமலும் பிழைகள் ஏற்படுவது சகஜம். அதை நேர் செய்தால் நல்ல நிலை தானே தோன்றும். எனவே தான் பிழைகளை நேர் செய்யும் விதமாக வேள்வி நிகழ்த்தப்பட்டது. இதனால் தேவர்கள் திருப்தியுற்று பதில் நன்மையை ஆரோக்கிய வடிவில் அளிப்பர். அளித்தே தீருவர்! அதன் காரணமாகவே இந்த வேள்வி நமக்கு அருளப்பட்டது. அரசர், ரிஷிகள், முனிவர்களும் இதைச் செய்திடக் காரணமே ஊர் நன்மைக்காகத் தான்!

இப்போது நம் நாவலபூமி இருக்கும் நிலையில் இது போன்ற செயல்பாடுகளை நாம் மறந்தோம். கலிபுருஷன் ஆட்சியில் இது நடப்பதும் சகஜமே!

எனவே தான் இந்த வேள்வியை மருந்தாக கருதி செய்யப் பணித்தேன். இதனால் தேவதைகள் திருப்தி அடைந்ததோடு, மூலிகைத் தூபத்தால் கிருமி எங்கிருந்தாலும் அழிந்திருக்கும்.

ஒரு வேள்வி என்பது அகம், புறம் என இரண்டிற்கும் நன்மையளிப்பதாகும். பக்தியும், ஈடுபாடும் தான் இதில் முக்கியம். அந்த பக்தியோடும், ஈடுபாட்டோடும் தான் இப்போது வேள்வி நிகழ்ந்துள்ளது.

எனவே சந்தேகம் வேண்டாம். இனி இப்பல்லவ மண்டலம் நலம் மிகுந்த மண்டலமாக மாறும்'' என்று வேதாந்த தேசிகன் விளக்கம் அளித்தார்.

வேள்வியின் பின்புலத்தில் இத்தனை செய்திகளா என்று எல்லோரும் வியந்தனர். விஜய நகரத்து கோவிந்த சர்மன் தேசிகன் காலில் விழுந்தான்.

''சுவாமி... தாங்கள் விஜய நகரத்துக்கு எழுந்தருளி எங்களை எல்லாம் ரட்சிக்க வேண்டும்'' என வேண்டினான். புன்னகைத்தத தேசிகன், ''கோவிந்த சர்மரே! நான் அழியாப் பொருளான அனந்தனைப் போற்றுபவன். அழியும் எதையும் பெரிதாகக் கருதி போற்ற மாட்டேன். அது ஞானத்திற்கு அழகல்ல. கடவுளின் செயலுக்கு இணையாக செயல்புரிவோரை போற்றலாம். அதில் தவறில்லை! ஆயினும் அவர் 'தான்' என்ற செருக்குடன் சிந்திப்பதோ, பேசுவதோ கூடாது.

ஆதிசேஷனின் அம்சமான ராமானுஜர் காட்டிய அற்புத வழியை நாம் மறக்கக் கூடாது'' என்றார்.

ராமானுஜரை மையமாக வைத்து எதைச் சொல்ல வருகிறார் வேதாந்த தேசிகன் என்பது பலருக்கு புரியவில்லை. அவர்களில் ஒருவர், ''சுவாமி... ராமானுஜர் காட்டிய அற்புத வழி எதுவோ?'' என்று கேட்டார்.

''நல்ல கேள்வி.... ஆளவந்தாராலேயே அங்கீகரிக்கப் பெற்று, பின் துறவு வாழ்வை ஏற்று விசிஷ்டாத்வைத தத்துவத்திற்காக தன்னை அர்ப்பணித்தவர் ராமானுஜர். ரகஸ்யார்த்த உபதேசம் பெற்றிட ஸ்ரீரங்கத்தில் இருந்து திருக்கோட்டியூருக்கு சென்றவர் அல்லவா அவர்! அப்போது தான் ஞானிகளின் வழி எது என்பது நமக்கு புலப்பட்டது. ஒவ்வொரு முறை திருக்கோட்டியூரில் ஆச்சார்ய நம்பியிடம் உபதேசம் பெற வந்திருப்பதை கூறிய போதெல்லாம் நம்பி 'பிறகு பார்க்கலாம்' எனக் கூறி தட்டிக்கழித்தார்.

ஸ்ரீரங்கத்தில் இருந்து திருக்கோட்டியூர் வருவது சுலபமான செயலா என்ன...குதிரை மீதேறிச் சென்றாலே இருநாட்களாகும். ஒரு அந்தண சன்யாசிக்கு எத்தனை நாளாகும் என்று சொல்லத் தேவையில்லை!

இது ஆச்சார்ய நம்பிக்கு தெரியாத ஒன்றா... இருப்பினும் தட்டிக் கழித்து திருப்பி அனுப்பியவர் இறுதியாக மந்திர உபதேசம் செய்த கையோடு ரகஸ்யார்த்தத்தையும் உபதேசித்தார்.

பலமுறை தட்டிக் கழித்தவர், இறுதியாக உபதேசித்தது எப்படி என்ற கேள்வி எழலாம். ஒவ்வொரு முறையும் ஆச்சார்ய நம்பி, 'யார் வந்திருப்பது?' என்று கேள்வி எழுப்புவார். ராமானுஜரும், 'நான் ராமானுஜன் வந்திருக்கிறேன்' என்பார். இதுதான் உலக வழக்கம். எல்லோரும் இப்படிதான் செல்வோம். இதில் தவறில்லை. ஆயினும் ஆச்சார்யநம்பி தட்டிக் கழித்தே வந்தார். ஆனால் உபதேசிக்க ஒப்புக் கொண்ட தருணத்தில் ராமானுஜர், 'நான் ராமானுஜன் வந்திருக்கேன்' என்று சொல்லாமல், 'அடியேன் ராமானுஜன் வந்திருக்கிறேன்' என்று கூறினார்.

'நான்' என்னும் பதம் 'அடியேன்' என்று மாறவும் ஆச்சார்ய நம்பியும் மாறி விட்டார். ஒரு தவறுமில்லாத இந்த அற்ப விஷயத்துக்காகவா ஆச்சார்ய நம்பி அலைக்கழித்தார் என்று தோன்றலாம்.

நுட்பமாக பார்த்தால் உண்மை புரியும். நான் என்பது ஆணவத்தில் தோய்ந்த ஒரு சொல் என்பதும், அடியேன் என்பது பணிவில் தோய்ந்த சொல் நமக்கு புரியும்.

மனிதனை எழ விடாமல் செய்வதில் நான் என்னும் அகந்தைச் சொல்லுக்கே பெரும்பங்கு. இதை துறக்காமல் ஒருவன் எதை துறந்தும் பயனில்லை. இதை ராமானுஜருக்கு உணர்த்தும் விதத்தில் ஆச்சார்யநம்பி உலகிற்கே உணர்த்தி விட்டார்.

நமக்காகவே ராமானுஜரும் அத்தனை முறை நடந்து பாடமாகவும் ஆனார். இதையே நானும் அவர் காட்டிய வழி என்றேன். இப்போது புரிகிறதா?'' என்று கேட்கவும் எல்லோரும் தலையை அசைத்து ஆமோதித்தனர்.

தேசிகன் விளக்குவதையும், அதை அந்தணர்கள் பணிவுடன் கேட்பதையும் தொலைவில் இருந்த மரத்தின்பின் ஒளிந்தபடி பொறாமையுடன் பார்த்தபடி ஒருவன் நின்றிருந்தான்.

தொடரும்

பக்தித்தொடர்

இந்திரா சௌந்தர்ராஜன்



வரதா வரம்தா – 50

# பன்னிரு பெயர்கள்

ஒளிந்து பார்த்தபடி இருந்த அவனொரு மாயாவி என்பது அவன் தோற்றத்தில் புலனாயிற்று. அவன் பார்க்க திருப்புட்குழி மக்கள் சகஜமாக நடமாட ஆரம்பித்தனர்.

சொல்லப்போனால் திருப்புட்குழிக்குள் விஷக்கிருமி பரவ அவனும் ஒரு காரணம்! ஏவல் என்னும் தந்திரத்தால் அவன் தீவிரப்படுத்திய செயலே அந்த விஷ ஜுரம்! அதை ஒழிக்க தன்னாலேயே முடியும் என்ற அகங்காரம் அவனிடம் இருந்தது.

ஊர்க்காரர்கள் இறுதியாக தவித்து நிற்கும் போது உள்ளே புகுந்து, ஏவலை அடக்கி மக்களிடம் பொன்னும் பொருளையும் பெறுவதே அவன் நோக்கம். ஆனால் ஊரார் அவனை நாடாமல் காஞ்சிபுரம் போய் தேசிகரை அழைத்ததைக் கண்டு அதிர்ந்து போனான். தேசிகர் இருக்கும் வரை தன்னால் தலையெடுக்க முடியாது எனக் கருதினான். பொறாமையும், சுயநலமும் அவனைப் பிசைந்து கொண்டிருந்தது.

தேசிகரை கொல்லும் எண்ணத்துடன் பின் தொடர்ந்தான். தேசிகரும் திருப்புட்குழிக்கு வந்த பணி நல்ல விதமாக முடிந்ததும், சகாக்களுடன் காஞ்சி திரும்பத் தொடங்கினார். இடையில் விஜய நகரத்து கோவிந்த சர்மன் விடைபெற்றார்.

தேசிகரிடம் பலரும் பல ஐயப்பாடுகளை கேட்கத் தொடங்கினர். குறிப்பாக காஞ்சி பற்றி அவர்கள் நிறையவே கேட்டனர்.

''சுவாமி.. காஞ்சியில் வரபிரசாதியாக எம்பெருமான் கோயில் கொண்டிருந்தும் அவரை இன்னும் சிலர் அறியாமல் இருப்பது எதனால்?'' என்பது அதில் ஒரு கேள்வி.

''பாவிகளே அவனை அறியாமல் போவர். ஆறு ஓடும் போதும் ஒருவர் அழுக்குடன் இருந்தால் அது ஆற்றின் குற்றமா இல்லை அழுக்குடன் இருப்பவர் குற்றமா? அது போல் தான் இதுவும்...''

அப்படியானால் நாம் பாவிகளாக இருந்தால் எம்பெருமானை அறியாமல் போய் விடுவோமா?''

''அப்படி அல்ல... சொல்ல வந்ததை சரியான கோணத்தில் புரிந்து கொள்ள வேண்டும். எம்பெருமானை நெஞ்சத்தில் இருத்தி விட்டால் பாவச்செயல் புரிய மாட்டோம். அடுத்து நற்செயல்கள் புரிபவர்களாய் ஆவோம். இதனால் நல்வினை உருவாகி வாழ்வு நலம் மிக்கதாக அமையும். அவன் நெஞ்சத்தில் இல்லாமல் போகும் போது தான் வாழ்வின் மாயை தவறு செய்ய வைக்கும். அதனால் பாவம் சேரும். அந்த பாவத்திற்கான தண்டனையை அனுபவிக்கும் வரை நமக்கு நற்கதியும் கிடைக்காது''

''தங்கள் பதில் மேலும் கேள்வி கேட்கத் தூண்டுகிறது. ஒருவன் பாவியாகி விட்டால் அந்த பாவமே அவனை பெருமானிடம் செல்ல விடாமல் தடுத்து விடும் எனில் அவன் எப்படி எம்பெருமானை அடைய முடியும்?''

''நல்ல கேள்வி... இப்படி தவிப்பவர்களை எல்லாம் ஆட்கொள்ளத்தான் குரு என்னும் ஸ்தானம் நம்மில் உண்டாகியுள்ளது. அப்படிப்பட்ட குருநாதரே கடைத்தேற்றுவார். இன்னும் சொன்னால் ஆச்சார்ய பக்தி மிக எளிதாக அவனிடம் நம்மை சேர்த்து விடும்.

வாழ்வெனும் கடலில் ஆச்சார்யனே படகு. அந்த படகை பற்றிக் கொண்டால் நீந்தும் சிரமம் இன்றி எம்பெருமானின் திருவடிகளை அடையலாம்''

இப்படி பேசிக் கொண்டே வந்ததில் அரிய கருத்துக்கள் அனைவருக்கும் தெளிவாகின. என் கருத்துக்களை பாடலாக்கி பதிவு செய்தால் சமூதாயம் நன்கு அறிந்திட உதவும்'' என்ற தேசிகர் எம்பெருமானின் பன்னிரு நாமங்களை அனைவரும் அறிய வேண்டி துவாதச நாம பஞ்சர ஸ்தோத்திரத்தை இயற்றியுள்ளேன். இது நம் மனதில் அழியாது இருந்திட வேண்டும். 'கேசவன், நாராயணன், மாதவன், கோவிந்தன், விஷ்ணு, மதுசூதனன், திரிவிக்ரமன், வாமனன், ஸ்ரீதரன், ரிஷிகேஷன், பத்மநாபன், தாமோதரன்'' என்ற இந்த பன்னிரு பெயர்கள் வெறும் பெயர்கள் அல்ல. தீய கர்மங்களை பெயர்த்து எடுத்து நம்மை நற்கதியில் தோயச் செய்பவை'' என்றும் விளக்கம் அளித்தார்.

களஞ்சியம் வந்த தேசிகர் இல்லத்திற்குச்



**வாழ்வெனும் கடலில் ஆச்சார்யனே படகு. அந்த படகை பற்றிக் கொண்டால் நீந்தும் சிரமம் இன்றி எம்பெருமானின் திருவடிகளை அடையலாம்.**

சென்றார். கணவரைக் கண்ட திருமங்கை தீர்த்தம் தந்து, அவர் குடித்ததும், காலில் விழுந்து எழுந்து கண்ணீருடன் நின்றாள். தேசிகனுக்கு பத்தினியின் செயல் வியப்பை தந்தது.

''மங்கை என்னாயிற்று உனக்கு?''

''ஒன்றும் ஆகவில்லையே''

''பின் எதற்கு கண்ணீர்?''

''தாங்கள் நலமுடன் திரும்பிட வேண்டி எம்பெருமாட்டி முன் விளக்கேற்றி அணையாது நெய்விட்டபடியே இருந்தேன்''

''எனக்கு எம்பெருமான் உனக்கு பெருமாட்டியா?''

''இது பூவுலக மானுடர்களின் பாச பந்தம் மிகுந்த வாழ்வில் உண்டான எண்ணம். பெருமாட்டியிடம் மனம் லயிப்பதும் நல்லதற்கே! ஆனால் எம்பெருமானுக்கு உன் உள்ளம் புரியாமல் போய் விடும் என பயந்ததன் மூலம் அவனைச் சற்றே குறைவு படுத்தி விட்டாய். அவன் புருஷ வடிவம் கொண்ட போதிலும் பால் கடந்தவன் – பரிபூரணன்! இதனாலேயே திருமங்கையாழ்வார் பாசுரம் ஒன்றில், 'பெற்ற தாயினும் ஆயின செய்யும்' என்று அவனை உயர்த்திப் பிடிக்கிறார். எனவே நீ இதனை உணர்தல் அவசியம்'' என திருமங்கையை நெறிப்படுத்தினார். திருமங்கையும் அது கேட்டு நெகிழ்ந்து ''என்னவோ தெரியவில்லை. என் மனதில் இனம் புரியாத கலக்கம். நான் தலையில் சூடிய பூ இது நாள் வரையில் தவறி விழுந்ததில்லை. அதுபோல் என் கைப்பொருளும் நழுவி உடைந்ததுமில்லை'' என்றாள் திருமங்கை.

''மங்கை...நீ சுயநலமாக சிந்திக்கிறாய். சுயநல உணர்வு வந்தாலே இது போல சாதாரணமாக நடப்பதெல்லாம் நிமித்தமாய் தோன்றும்''

''நான் சுயநலமாய் சிந்திக்கின்றேனா?'' அதிர்ந்தாள் திருமங்கை.

''நான் நலமுடன் விளங்க வேண்டும். எனக்கு எதுவும் ஆகி விடக் கூடாது போன்ற எண்ணங்கள் எப்படிபட்டதாம்?''

''இது இந்த மண்ணில் பிறந்த பெண்களுக்கே உண்டான ஒன்றல்லவா? நெற்றி வகிட்டில் இடும் பொட்டே கூட மணாளரின் நலம் விளங்கிடத் தானே?''

''நான் குறை கூறவில்லை. ஆயினும் தன்னலம், நம் நலம் என்பதெல்லாம் சுயநலச் சிந்தையே. ஒரு வைணவ ஆணோ, பெண்ணோ பிறர் நலனை முன் வைத்து தன் நலனை பின்வைத்தே சிந்திக்க வேண்டும்'' என திருமங்கைக்கு சொல்லும் விதமாக வைணவர் அனைவருக்கும் தேசிகர் சொன்னதாக பொருள் கொள்ள வேண்டும்.

மறுநாள் அதிகாலையே கண் விழித்த தேசிகர் நெடுநேரம் படுக்கையில் அமர்ந்தபடி இருந்தார். அதை ஆச்சரியமுடன் பார்த்தவளாக, ''தாங்கள் எழவில்லையா'' எனக் கேட்டாள் திருமங்கை.

''எழுவதற்கு மனம் இல்லாமல் நான் கண்ட கனவில் லயித்துள்ளேன் திருமங்கை'' என்றார் தேசிகன்.

''அப்படி என்ன கனவு?''

''அப்படி கேள். ஆச்சரியமான கனவு! விண்ணில் இருந்து ஒரு வெள்ளை குதிரை பறந்து வந்து நம் இல்லம் முன் நிற்கிறது. நான் செல்லும் இடமெங்கும் அது என்னுடன் வருகிறது. நான் வேத கூடத்தில் வேதம் சொல்லும் போதும், சீடர்களுக்கு போதிக்கும் போதும் அதுவும் அவர்களில் ஒருவராக நிற்கிறது''

''ஆகா... கேட்கவே தித்திக்கிறதே! தங்களுக்கு கருணை புரிந்த திருவந்திபுரத்து ஹயக்ரீவம் தானே அது?''

''அப்படித்தான் கருதுகிறேன். எங்கே என்னை மறந்து விட்டாயா... உடனே புறப்பட்டு வா'' என்று அழைப்பது போல் நான் உணர்கிறேன்''

''அப்படித்தான் எனக்கும் படுகிறது. நானும் உங்களோடு வரலாமல்லவா?''

''தாராளமாக... இன்றே திருவஹீந்திரபுரம் செல்வோம்'' என்ற வேதாந்த தேசிகன் அதற்கான ஏற்பாடுடன் பயணம் மேற்கொண்டார். இடையில் திருவெஃகா சென்று சொன்ன வண்ணம் செய்த பெருமாளிடம் சொல்லிக் கொள்ளச் சென்றவரை வெளியே காத்திருந்த மாயாவியும் பின்தொடர்ந்தான். திருக்கோயிலில் நுழையும் முன் குளத்தில் இறங்கி குளித்து பின் சந்தியாவந்தன கடமையை நிறைவேற்றியவராய் உள்சொல்ல கால் எடுத்தவர் முன் அந்த மாயாவி வைணவ பிராமணர் வடிவில் கையில் ஒரு ஜலப்பாத்திரமுடன் வந்து நின்று வணங்கினான். தேசிகரும் வணங்கினார்.

''இது எம்பெருமானின் புண்ய தீர்த்தம்''

''அப்படியா... மகிழ்ச்சி''

''பெற்றுக் கொள்ளுங்கள்'' என்று அவன் கூறியதோடு பெரிய உத்ருணியால் மூன்று முறை வழங்கினான். தேசிகனும் பணிவுடன் அருந்தியதோடு ஈரக்கைகளை உபய வஸ்திரத்தில் துடைத்தார். பின் சன்னதி நோக்கி நடக்கத் தொடங்கியவருக்குள் பெரும் வயிற்று உபாதை ஆரம்பமானது.

வயிறு பானை போல் வீங்கத் தொடங்கியது. அவன் பெருமாள் தீர்த்தம் என்று தந்தது விஷதீர்த்தம்! அந்த மாயாவி பின் தொடர்ந்தபடியே இருக்க தேசிகன் வலி தாளாமல் ஒரு கல் மண்டபத்தில் அமர்ந்தார். மூச்சு முட்ட உடம்பெல்லாம் நடுங்கத் தொடங்கியது.

தொடரும்

இந்த தொடரின் ஆசிரியர் இந்திரா சௌந்தர்ராஜன் எழுதிய புத்தகங்கள் **தெரிந்த பாரதம் தெரியாத பாத்திரம், கிருஷ்ண ஜாலம், கடவுளைக் கண்டவர்கள்** பெற 1800 425 7700 ல் தொடர்பு கொள்ளலாம்.

பக்தித்தொடர்

இந்திரா சௌந்தர்ராஜன்



வரதா வரம்தா – 51

# ஆமை புகுந்த வீடு

தனக்கு மூச்சு முட்டுவதை சற்று ஒளிந்திருந்து பார்த்தபடி இருந்த அவனை தேசிகரும் பார்த்தார். அந்த நொடியே அவருக்கு ஏதோ தப்பு நடந்திருப்பது புரியத் தொடங்கியது. வயிற்று உபாதை அதிகமாகிக் கொண்டே போனது. 'ஜலஸ்தம்பனம்' என்னும் தாந்த்ரீகத்தால் அந்த மாயாவி அவரை உபாதைக்கு ஆட்படுத்தி வயிறு வெடிக்கச் செய்வது என்பது அதன் முடிவாகும். தான் அதற்கு ஆட்பட்டதை உணர்ந்த தேசிகர், தன்வந்திரிக்கான பீஜாட்சரத்தை சொல்லத் தொடங்கினார்.

அந்த மாயாவி பார்த்துக் கொண்டே இருந்தான்.

ஸ்ரீதேசிகரும் பீஜாட்சரத்தை சொன்னதோடு நிமிர்ந்து உட்கார்ந்தார். அப்படியே எதிரில் இருந்த கம்பம் ஒன்றை உற்று நோக்கியவர், எழுந்து சென்று விரல் நகத்தால் அதை கீறினார். அந்த இடத்தில் தண்ணீர் கசியத் தொடங்கி தரையில் ஓடியது. அதைப்பார்த்த மாயாவியிடம் பெரும் திகைப்பு!

சில நொடிகளில் தேசிகர் உடல் பழைய நிலையை அடைந்தது. அவரும் எதுவும் நடக்காதது போல் எம்பெருமானை வணங்கச் சென்றார். அந்த மாயாவி அவரின் அந்த போக்கை எண்ணி ஆச்சரியப்பட்டதோடு, தன் மீது கோபம் கொள்ளாத அவரை நினைத்து குழம்பவும் செய்தான். ஜலஸ்தம்பனத்தை கம்பத்துக்கு இடம் மாற்றி, அந்த நீரை வெளியேற்றி, பஞ்சபூதங்களை ஆட்டி வைக்கும் வலிமை தனக்குள் இருப்பதை நிரூபித்துவிட்ட அவரை, ஒரு சாமான்யராக கருத அந்த மாயாவியால் முடியவில்லை. பதிலுக்கு அவர் தனக்கு ஏதும் செய்வாரோ என பயந்தான். தேசிகர் நினைத்திருந்தால் தனக்குள் தன்னை ஸ்தம்பிக்க வைக்கப் பார்த்த நீரை மாயாவிக்கே திருப்பியிருக்க முடியும். ஆனால் அவர் அதை கம்பத்திற்கு செய்து தன்னை விட்டுவிட்டது எதனால் என்றும் புரியவில்லை.

அவனுக்குள் பெரும் மன உளைச்சல்!

அப்போது உள்ளே தரிசனம் முடித்து தேசிகரும் சீடர்களுடன் வெளியில் வந்த வந்தார். எம்பெருமானுக்கு சாற்றிய துளசிமாலை அவர் கழுத்தில் இருந்தது. மாயாவி ஒளிந்திருக்கும் கம்பத்தருகே நின்று, "அப்பனே...எதற்காக மறைந்திருந்து பார்க்கிறாய்... நேரில் பார்க்கலாம் வா..." என்றார். அந்த அழைப்பு அவனை உலுக்கி விட்டது. வைணவ கோலத்தில் இருந்த அவனும் தயக்கமுடன் வெளிப்பட்டான். தேசிகரை மிரட்சியுடன் பார்த்தான், தேசிகரோ சிரித்தார். துளியும் அச்சமில்லாத இணக்கத்தை உருவாக்கிடும் சிரிப்பு.

"சுவாமி..." அவன் குரலில் நடுக்கம்.

"அச்சம் வேண்டாம். உனக்காகவே எம்பெருமானிடம் பிரார்த்தனை செய்து கொண்டேன் இனி இது போன்ற செயல்களில் ஈடுபடாதே.."

"சுவாமி... மன்னித்து விடுங்கள், நான் பொறாமை வயப்பட்டு விட்டேன்.."

"உன்னை வைத்தே ஆமை புகுந்த வீடு உருப்படாது என்றனர். வீடு உன் உடல்..! பொறாமை அதில் புகுந்த ஆமை..! எப்போதும் ஒப்பிட்டாலே பொறாமை தோன்றும். ஒப்பிடாமல் தன் பலம் அறிந்து நடப்பதே நலம் தரும். மிக உயரமாய் வளர்வதால் தென்னை உயர்ந்தது என்றோ, சிறு அளவே வளர்ந்ததால் புற்கள் தாழ்ந்தவை என்றோ யாரும் சொல்வதில்லை. புற்கள் அந்த அளவுக்கு வளர்ந்தாலே மாடுகளால் உண்ண முடியும். தென்னை உயர்ந்தாலே இளநீர் உருவாக இயலும். ஆட்டிற்கும் வால் அளந்தே வைக்கப்பட்டுள்ளது. இதில் பெரிது சிறிது எனும் பாகுபாடுகள் எதற்கு?"

என்று தேசிகர் அளித்த விளக்கம் அவனை



## வீடு உன் உடல்..! பொறாமை அதில் புகுந்த ஆமை..! எப்போதும் ஒப்பிட்டாலே பொறாமை தோன்றும்.

சிந்திக்க வைத்து கண்ணீர் விட வைத்தது.

"அழாதே...மனம் திருந்தி நட. அல்ப மாயாவித்தைகளில் காலத்தை செலவிடாமல், இவ்வேளையில் அவனை நினைத்து அவன் திருவடியை அடைவற்கு முயற்சி செய். அதுவே போகும் வழிக்கும் புண்ணியம்"என்று சொல்லிவிட்டு நடந்தார். அந்த நொடி தேசிகர், மாயாவி மனதில் மிகவே உயர்ந்து விட்டார் அவர் போவதையே பார்க்கலானான்!

வீடு திரும்பினார் தேசிகர். அங்கு திருமங்கை திருவஹீந்திரபுரம் செல்ல தயாராக இருந்தாள். சாரட் வண்டியும் கிருஷ்ண பாண்டனோடு தயாராக இருந்தது.

திருமங்கை முகத்தில் அலாதி சந்தோஷம்! மடிசார் புடவையிலும், மலர்ந்த முகத்தோடும் அவளைக் காண இரு கண்கள் போதாது. தேசிகனும் மனைவியை ரசித்துப் பார்த்தார். அப்படியே "பயணம் செல்லப் போகிறோம் என்றதும் மனம் ஏகாந்தத்தில் மூழ்கி விட்டதா உனக்கு?" என்றும் கேட்டார்.

"ஆம்...திருவஹீந்திரப் பெருமானை தரிசிக்கப்போவதை நினைக்கும் போதே என்னுள் பரவசம். அதிலும் தம்பதி சமேதராக வணங்குவது பாக்கியம் அல்லவா?"

"சரியாகச் சொன்னாய்...நம் வைஷ்ணவ தர்மத்தில் ஒரு கிரகஸ்தன் மணவாட்டியோடு கூடியே எம்பெருமானை தரிசிக்க வேண்டும். அவன் அதற்காகவே எம்பெருமான் மார்பிலும் மடியிலுமாக பெருமாட்டியை வைத்திருக்கிறான்."

என்று அதற்கு விளக்கமளித்தவர், அதன் பின் உரிய ஆயத்தங்களுடன் வேத பாடசாலையை பிரதான சீடர்கள் வசம் ஒப்புவித்து தான் வரும் வரை பாராயணம், சத்சங்கம் நடந்திட வகை செய்து விட்டே புறப்பட்டார்.

அன்றைய பயணத்தில் திருக்கோவிலூரை அடைந்தவர், திருக்குளத்தில் நீராடி சந்தி முடித்து, திருவிக்கிரமப் பெருமாளையும் வணங்கி முடித்தவராக திருவஹீந்திரபுரம் நோக்கிச் செல்லும் போது இருட்டத் தொடங்கியது.

ஒரு கிராமம் குறுக்கிட்டது. குதிரைகளும் களைத்து விட்டன. அந்த கிராமத்து தலையாரி வீட்டுத் திண்ணை பெரிதாக தங்குவதற்கு வசதியாக இருந்தது. அங்கேயே தங்கிய தேசிகரும், அவர் பத்னியும் கைவசம் பிரம்புக் கூடையில் வைத்துக் இருந்த ஹயக்ரீவ சாளக்ராமங்களுக்கு, தீர்த்தத்தை நிவேதனமாக வைத்து பூஜித்து விட்டு, அதையே தங்களுக்கான இரவு உணவு என்று அருந்தி உறங்கச் சென்றனர்.

அன்றிரவு அற்புதம் நிகழ இருப்பதை தேசிகர் அறியவில்லை. எம்பெருமானும் அவர் அறியாத வண்ணம் ஒரு திருவிளையாடல் புரியலானான்.

தேசிகரின் சாரட் குதிரைகள் அருகில் புல் மேய்ந்தபடி இருக்க, கிருஷ்ண பாண்டன் வேறு ஒரு வீட்டுத் திண்ணையில் படுத்திருந்தார். இந்நிலையில் நள்ளிரவில் குதிரையானது கனைக்கும் சப்தம் கேட்டு வெளிவந்து பார்த்தவனுக்கு திகைப்பாகி விட்டது. ஒரு வெண்ணிறக்குதிரை அவனது வயலில் விளைந்த கடலைப் பயிரை மேய்ந்து கொண்டிருந்தது. அதை விரட்டவும் தோன்றவில்லை. அது வயலில் மேய்ந்ததோடு அவன் வீட்டைச் சுற்றிவந்து வேலியில் படர்ந்திருந்த கொடிகளையும் உண்டது.

அந்தக் குதிரையை தேசிகரின் குதிரை என்றே கருதி விட்டார் அந்த தலையாரி.

மறுநாள் பொழுது விடிந்து தேசிகர் புறப்படத் தயாராகி நன்றி கூறலானார்.

"சுவாமி...தாங்கள் என் திண்ணையில் படுத்து உறங்கியதால் எனக்கு ஒரு நஷ்டமும் இல்லை. ஆனால் குதிரைகள் தான் சும்மா இல்லாமல் இரவில் கடலைப் பயிர்களையும், வேலிப் பயிர்களையும் தின்று தீர்த்தன. அவைகளுக்கு உணவு தேவை எனில் கேட்டிருந்தால் புற்களை கொண்டு வந்து போட்டிருப்பேனே" என்றான்.

திகைத்தார் தேசிகர், கிருஷ்ண பாண்டனே "நம் குதிரைகள் அவ்வாறு நடக்கவில்லை. அவை கட்டப்பட்ட இடத்தில் தான் இருந்தன." என்றான்.

உடனேயே தலையாரி கடலை வயலுக்கும், வேலியோரமாகவும் சென்று தேசிகருக்கு காட்டினார். அங்கெல்லாம் குதிரைக் காலடித் தடயங்களும் கண்களில் பட்டன.

"இப்பொழுது என்ன சொல்கிறீர்கள்? என்று கேட்கவும், தேசிகர் கண்களை மூடி தியானித்தவராக தலையாரிடம் ஒரு சொம்பில் பால் கொண்டு வரச் சொன்னார். அதைக் கொண்டு மீண்டும் திண்ணையில் அமர்ந்து ஹயக்ரீவ சாளக்ராமங்களுக்கு பால் நிவேதனம் செய்தார். செய்து அந்த பிரசாதத்தை அனைவருக்கும் சாப்பிடக் கொடுத்தார். இவ்வேளை அங்கொரு அதிசயம் அந்த காலை வேளையில் நிகழ்ந்தது.

குதிரை கனைக்கும் சப்தம் கடலை வயல் பக்கம் கேட்டது. எட்டிப் பார்க்கவும் வெண்குதிரை தோன்றி மீண்டும் கடலைப் பயிரை உண்ணத் தொடங்கியிருந்தது. அப்படியே அது வேலிப் பயிர்களில் மீதமிருந்ததை உண்டது. அதன் ஒளியும், கனைப்பும் அனைவரையும் கட்டிப்போட்டு விட்டிருந்த நிலையில் அது வாய் வைத்த இடமெல்லாம் தங்கமாய் மாறி ஜொலிக்கத் தொடங்கியது!

**தொடரும்**

இந்த தொடரின் ஆசிரியர்
இந்திரா செளந்தர்ராஜன் எழுதிய புத்தகங்கள்
**தெரிந்த பாரதம் தெரியாத பாத்திரம், கிருஷ்ண ஜாலம், கடவுளைக் கண்டவர்கள்** பெற
1800 425 7700 ல் தொடர்பு கொள்ளலாம்.

பக்தித்தொடர்

இந்திரா சௌந்தர்ராஜன்



வரதா வரம்தா – 52

# 'ஹயக்ரீவம்'

அந்த வெள்ளைக் குதிரை வாய் வைத்த இடம் எல்லாம் தங்கமாய் ஜொலிக்கவும் அதைக் கண்ட தலையாரி திகைத்துப் போனான். அது இன்பத் திகைப்பு அது ஆச்சரியத் திகைப்பு... வேதாந்த தேசிகரோ புளகாங்கிதம் அடைந்தார். கண்களில் ஆனந்தக் கண்ணீர். மனைவி திருமங்கையும் சிலிர்த்துப் போனாள். அந்த வெள்ளைக் குதிரையும் மேய்ந்த நிலையில் மறைந்தும் போனது. தலையாரி ஓடி வந்து காலில் விழுந்தான்.

''சுவாமி... என்ன அதிசயம் – அது தேவலோக குதிரையா? பச்சைத் தாவரம் பசும் தங்கமாகி விட்டதே... இது என்ன மாயம்?'' என்றான்.

''மாயமில்லை. கருணை! எனக்காக அந்த ஹயக்ரீவர் உன் மீது காட்டிய கருணை. அவன் எல்லை இல்லாத பேரருளாளன். அவதாரங்கள் பல எடுத்தவன். இப்போது ஹயக்ரீவமாக வந்து சேவை சாதித்ததோடு உனக்கேற்பட்ட நஷ்டத்தையும் ஈடு செய்து விட்டான்'' என்று பரவசத்தோடு பதிலைச் சொன்னார். அதைக் கேட்ட தலையாரி, 'ஹயக்ரீவம்' என்ற சொல்லே புதிது. தாங்கள் விளக்கம் தர இயலுமா?'' என்றும் கேட்டான்.

''ஹயக்ரீவம் எனில் வெள்ளைப் பரிமுகன் என தமிழல் பொருள் கொள்ள வேண்டும். இப்பரிமுகன் இல்லாவிட்டால் நால்வகை வேதமோ, அதன் கிளைகளான ஸ்மிருதி முதலானவைகளோ இல்லை. இவை இல்லாவிட்டால் உலகில் மொழியோ, எழுத்தோ அதனால் ஆன கல்வி, கேள்விகளோ எதுவும் இல்லை. மனிதன் மிருகத்தை விட சற்று மேலானவனாக ஆனால் சற்றும் ஞானமின்றி மூடனாக வாழ்ந்திருப்பான்.



மனித இனம் கடைத்தேற வேண்டும் என்றே எம்பெருமான் மனிதர்களைப் படைக்கும் மூன் வேதங்களைப் படைத்தான். படைத்ததன் மதிப்பை உலகிற்கு உணர்த்த, அவனே அசுரர்களான மது, கைடபர்களைப் படைத்தான். அவர்களே வேதத்தை குதிரை வடிவில் வந்து அபகரித்துச் செல்ல வைத்தான். பின் இவனே ஒரு வெள்ளை பரிமுகனாக மோதி அசுரர்களை அழித்து வேதங்களையும் காப்பாற்றி பிரம்மாவிடம் ஒப்படைத்தான். இந்தச் சம்பவம் வாயிலாக வேதங்களின் மதிப்பை மட்டுமல்ல அதன் விளைவான கல்வி, கேள்வி, ஞானம் ஆகியவற்றின் மதிப்பை உலகிற்கு உணர்த்தியவன் என்றானான். இந்த ஹயக்ரீவன் கடலூரில் திருவஹீந்திரபுரத்தில் எழுந்தருளி அருள்புரிகிறான். எனக்குள் ஞானத்தூண்டல் ஏற்படவும், வித்தைகள் வசப்படவும் இவனே முழுமுதல் காரணம். இப்போது கூட இவனை துதித்தபடியே நாங்கள் பயணம் செல்கிறோம். வழியிலேயே குதிரைத் தோற்றத்தால் தரிசனம் அளித்து பொன்னும், பொருளும் அளித்து விட்டான்'' என்றதும் தேசிகர் சிலிர்த்துப் போய் கூறினார்.

கல்விக்கும், கேள்விக்குமானவன்

## ஆசைப்படுவதில் தெளிவு, கடமைகளைச் செய்வதில் குறைவின்மை, எது நிரந்தரமானது என்பதில் நல்ல ஞானம் இந்த மூன்றுமே முக்கியம்.

பொன்னையும் தந்தது தான் ஆச்சர்யம். மகாலட்சுமி போல் தன்னை வணங்குபவர்க்கு இவன் ஐஸ்வர்யங்கள் தருபவனா?''

தலையாரியின் இந்தக் கேள்வியை தேசிகர் சற்றும் எதிர்பார்க்கவில்லை.

''அது பார்ப்பவர் கோணத்தை பொறுத்தது. என்னைப் பொறுத்த வரையில் ஹயக்ரீவத்தின் திருவாய்பட்ட இடம் பொன்னாகி விட்டது என்பது, ஹயக்ரீவத்தை உபாசித்து கல்வி கேள்விகளில் சிறந்து விளங்குபவர் சொல்வதெல்லாம் பொன் போன்றது என்றாகும். இன்று அவன் நிகழ்த்திய அற்புதத்தை நான் இப்படித்தான் பொருள் கொள்கிறேன்''

''சுவாமி... இது நான் சற்றும் எதிர்பார்த்திராத அரிய விளக்கம். தாங்கள் எங்கிருந்து வருகின்றீர்கள் என அறியலாமா?''

''நான் திருக்கச்சி என்னும் காஞ்சிபுரத்தில் இருந்து வருகிறேன்''

''காஞ்சி என்றவுடனேயே வரதன் என்ற பெயரே நினைவுக்கு வரும். அந்த வரதனை தரிசித்துள்ளீரா?''

''பரவாயில்லையே... காஞ்சியை சொன்னவுடன் எம்பெருமான் நினைவு உனக்கும் வந்து விட்டதே, இத்தனை தொலைவில் இருக்கும் உனக்குள்ளேயே அவன் இருக்கும் போது அங்கே வாழும் நான் அறியாமல் போவேனா?'' ''என்றால் அந்த வரதனின் பெருமையை கூறுங்களேன்''

''வரதன்... வரங்கள் தருபவன். ஒரு விந்தை தெரியுமா? அவன் முன் நாம் எதையும் கேட்கவே தேவையில்லை. அவனைப் பார்த்த மாத்திரத்தில் ஒரு வரத்தை நாம் கேளாமலே அளித்து விடுபவன் அவன்!''

''அப்படி என்றால் காஞ்சியில் வசிப்பவர்கள் எல்லோரும் பாக்கியசாலிகளா?''

''அதில் என்ன சந்தேகம்? காஞ்சியில் பிறப்பதென்பதே ஒரு வரம் தான்! பின் அவனை தரிசித்தல் இன்னொரு வரம்!''

''என்றால் காஞ்சியில் வாழ்பவர்கள் துன்பம் இல்லாத இன்ப வாழ்வு வாழ்பவர்களா?''

''இன்ப வாழ்வு வாழ்பவர்களே இல்லையோ, வாழ முடிந்தவர்கள் என்பேன்''

''இப்படி ஒரு பதிலா?''

''ஆமப்பா... வாழத் தெரிவது என்பது எத்தனை பெரிய விஷயம் தெரியுமா?''

''வாழத் தெரிவதா.... அப்படியானால் வாழத் தெரியாமலா எல்லோரும் வாழ்கிறார்கள்?''

''எல்லோரும் என மாட்டேன். ஆயினும் வாழத் தெரியாமல் வாழ்பவர்களால் ஆனதே இந்த உலகமாய் உள்ளது. இவர்கள் வாழ வேண்டுமெனில் எதற்கு ஆசைப்பட வேண்டும் என்பதில் தெளிவு முக்கியம். அடுத்து எது நிரந்தரமானது என்பதை அறியும் அறிவு. மூன்றாவது தன் கடமைகளை தொய்வின்றி செய்வது...''

''அடேயப்பா... என்ன அரிய விளக்கம். தாங்கள் கூறியபடி யோசித்து பார்த்தால் நான் கூட வாழத் தெரியாதவனே! தினமும் பொழுதுகள் விடிகின்றன. அதனால் எழுகிறேன். பசிப்பதால் உண்கிறேன். உண்ண உணவு தேவை. அதற்காக உழைக்கிறேன். உடல் களைப்பதால் உறங்குகிறேன். திரும்பவும் பொழுது விடிகிறது. விழிக்கிறேன். திரும்பவும் பசிக்கிறது. உண்கிறேன். இடையே மனைவி, பிள்ளைகள் என்னும் பந்தங்கள்! அவர்களால் சிலநேரம் இன்பம் – சில நேரம் துன்பம்! இதுதான் மனித வாழ்வா? என்று நானும் எனக்குள் கேட்பதுண்டு''

''அழகாகச் சொன்னாய்! இந்த திரும்பத் திரும்பச் செய்யும் செயல்கள் நடுவே காலம் கரைவதையும், உடல் மூப்படைந்து போவதையும், பின் ஒருநாள் மரணிக்கப் போவதையும் சேர்த்துக் கொள். அப்படியே இதனுள் எதைச் சாதித்தேன் என்றும் கேட்டுக் கொள். இந்த மட்டில் சிலர் பொன், பொருள் சேர்த்திருப்பர். இன்னும் சிலர் வீரம் விளங்க வாழ்த்திருப்பர். இன்னும் சிலரோ பெரும் பேச்செல்லாம் பேசியிருப்பர். ஆனால் இவை எதுவும் உயிர் பிரிந்த நிலையில் உடன் வராது. மிஞ்சும் சாம்பல் கூட ஓடும் ஆற்றில் கரைந்து போகும்.

இதுவா வாழ்வு?''

''புரிகிறது சுவாமி... எது வாழ்வு என்று தாங்களே கூற வேண்டும்''

''நான் முன்பே கூறியது போல் ஆசைப்படுவதில் தெளிவு, கடமைகளைச் செய்வதில் குறைவின்மை, எது நிரந்தரமானது என்பதில் நல்ல ஞானம் இந்த மூன்றுமே முக்கியம். தெளிவுள்ள மனம் நிலையில்லாதவற்றில் ஆசை வைக்காது. கடமைகளைச் சரியாகச் செய்திட பாவம் ஏற்படாது. நிரந்தரமானது வரதனின் திருவடி சரணாகதியே என்னும் ஞானம் அவனிடம் நம்மைக் கொண்டு சேர்க்கும்.

அவனை அடையவே இந்த வாழ்வு!

அதற்கே இந்த பிறப்பு. இதை உணர்ந்து வாழ்பவருக்கு கேடு இல்லை. இதுவே வெற்றிகரமான வாழ்வு!''

வேதாந்த தேசிகனின் விளக்கம் கேட்ட தலையாரி தெளிவு பெற்றவனாக திரும்ப அவரை வணங்கினான். அவரும் ''வரதனின் அருளும், அவன் அம்சமான ஹயக்ரீவனின் கருணையும் உன்னை வழிநடத்தட்டும்'' என ஆசியளித்து புறப்பட்டார்.

**தொடரும்**

**இந்த தொடரின் ஆசிரியர் இந்திரா சௌந்தர்ராஜன் எழுதிய புத்தகங்கள் தெரிந்த பாரதம் தெரியாத பாத்திரம், கிருஷ்ண ஜாலம், கடவுளைக் கண்டவர்கள்** பெற 1800 425 7700 ல் தொடர்பு கொள்ளலாம்.

பக்தித்தொடர்

இந்திரா சௌந்தர்ராஜன்



வரதா வரம்தா — 53

# பரமாத்மா — ஜீவாத்மா

திருவஹீந்திரபும் நோக்கி வேதாந்த தேசிகரும், அவரது பத்தினி திருமங்கையும் புறப்பட்டு செல்கையில், சாரட்டில் அமர்ந்திருந்த திருமங்கை வேதாந்த தேசிகரை எப்போதும் பார்த்திராத ஒருவர் போல பார்க்கலானாள்.

''என்ன திருமங்கை... புதியவர் போல பார்க்கிறாயே?''

''ஆம்! புதிதாகத்தான் தெரிகின்றீர்! அதிலும் தலையாரிக்கு அளித்த பதில்களால் தங்களை அந்த பெருமானாகப் பார்த்தேன்...'' என்றாள்.

''என்னை எம்பெருமானாகவே என்றுரைத்தது மிகை! அவன் கருணை எவருக்கும், எவரிடத்தும் இருக்க வாய்ப்பேயில்லை மங்கை. நாம் அற்பமான நிலையில்லாத தன்மை படைத்த உயிர்கள்! அவன் துளியும் குறைவுபடாத ஒளிப்புனல் போன்ற ஆதித்தன்...நாம் எங்கே? அவன் எங்கே?''

''அப்படி என்றால் நாம் அவனுள் கலப்பது சாத்தியம் இல்லையா?''

''கடலைப் பிரிந்த ஒரு துளி நீர் திரும்பக் கடலைச் சேர்ந்து விட்ட நிலையில், அதுவும் கடலென்றே ஆகிவிடும். ஆனால் துளி நீராய் இருக்கும் வரை, அது கடலைச் சேராத வரை அதை எவரும் கடல் என்பதில்லை. இதுவே பரமாத்மா — ஜீவாத்மா தத்துவம்.

நாம் அவனைச் சேர்ந்து விட்டால் அவன் வேறு நாம் வேறு இல்லை தான். ஆயினும் சேராதவரை நாம் அவன் படைப்பே... ஆயினும் அவனது எல்லையில்லாத சக்திகள் எதுவும் நமக்கு இல்லை. அவனை அடையவே பிறப்பு அருளப்பட்டுள்ளது. எனவே அவனை முயன்றால் அடையலாம். ஆனால் நாம் அவனாதல் சாத்தியமில்லை! அவன் என்றும் குறைவு படாத பூரணன் — நாம் அதன் திவலைகள். திவலைகள் பூரணத்துடன் கலந்தபின் உன் கேள்விக்கே இடமில்லை — கேள்விக்கு இடமிருந்தாலோ நாம் பூரணன் இல்லை என்பதே அடிப்படை.''

''இத்தனை புரிதல் உள்ள தாங்கள் கூடவா பூரணர் இல்லை...?''

''அப்படியானால் வைணவ சம்பிரதாயத்தில் ஆச்சார்யன் முதலாகவும், அப்பரிபூரணனே பின்னவனாக திகழ்வதும் மட்டும் எப்படி சரியாகும்?''

''இதுவும் அவன் கருணையே! முதலான அவன் நம் மீதுள்ள கருணையால், நமக்கு எளிதாக வசப்பட வேண்டும் என்ற வேட்கையால் ஆச்சார்யனை அணுகிவிட்டாலே போதும்; அது என்னையே அணுகிவிட்டது போல் என்று கூறுகிறான்.

நன்றாக கேட்டுக்கொள்... மாயை மிகுந்த உலகில் ஒருவர் பக்தியால் மட்டுமே எம்பெருமானை அடைதல் என்பது பாலை நிலத்தை ஒருவர் வெறும் கால்களுடன் நடந்து கடப்பது போன்றது அல்லது கடலை ஒருவர் நீந்திக் கடக்க முற்படுவது போன்றது! இவரே ஆச்சார்யன் என்கிற ஒட்டகத்தின் மேல் ஏறிக் கொண்டு விட, அப்பயணம் இலகுவாகவும் துரிதமாகவும் முடியும். அதே போல கடலில் படகில் பயணிக்க அதை கடத்தல் சுலபம்.

ஆச்சார்யனே இங்கே ஒட்டகம் — ஆச்சார்யனே இங்கே படகு!''

அந்த சாரட்டில் இருவரும் பயணிக்கும் போது ஒரு ஞானோபதேசமே நிகழ்ந்தது.

அழுத்தமாய் வேதாந்த தேசிகன் கூறியது சாரட்டை செலுத்தியபடி இருந்த கிருஷ்ண பாண்டவனின் காதுகளிலும் விழுந்து அவன் கண்களில் ஆனந்தக் கண்ணீர்! ஒரு ஆச்சார்ய புருஷருக்கு தேர்ப்பாகனாய் இருப்பதை எண்ணி கிருஷ்ண பாண்டவனுக்குள் பெருமிதம் உண்டாயிற்று.



## அறிந்தவர் அருகில் இருப்பவர் என்றாகிறார். அறியாதவர் தொலைவில் இருப்பவர் என்றாகிறார்... இதுவும் அவன் செயலே!

"ஸ்வாமி... நாம் திருவஹீந்திரபுரம் சென்று தரிசித்த நிலையில் காஞ்சியம்பதிக்கு உடன் திரும்பி விடுவோமல்லவா?'' என்று திருமங்கை கேட்டதும் அவ்வேளை அவன் காதில் விழுந்தது.

"அதிலென்ன சந்தேகம்....ஆம் எதற்காக இப்படி கேட்டாய்?''

"என்னவோ தெரியவில்லை... எம்பெருமானை நாம் தரிசித்தாலே போதும் – நமக்கு வரம் உறுதி என்று சொன்னதும் எல்லாம் எம்பெருமானை எப்போது தரிசிப்போமே என எண்ண வைத்து விட்டது..''

– அதைக் கேட்டவுடன் ஒரு மந்தகாசப் புன்னகை தோன்றியது வேதாந்த தேசிகரிடம்...

"இப்புன்னகைக்கு பல பொருள் இருப்பது போல எனக்குப் படுகிறது..'' என்றாள் மங்கை.

"உண்மைதான்! உன் பேச்சில் நான் குழைவு படும் ஒரு ஜீவாத்மாவை கண்டேன். எத்தனையோ முறை அவனை தரிசித்து விட்டாய்.. நீ மட்டுமா? நானும் தான்! ஆயினும் திரும்பத் திரும்ப தரிசிக்கவே மனம் விழைகிறது. நம் குறைவையே இது உணர்த்துகிறது.''

"இப்படி நீங்கள் சொல்லும்போது தான் எனக்கும் புரிகிறது. நாம் குறைவுடையவர்களே! அவன் தன்னையே நமக்கு தந்து விட்டாலும் அவனை எப்படி பாதுகாக்க போகிறோமோ தெரியவில்லையே என்று அசூயை வயப்படுவோம். அசூயை ஒரு குறைபாடு தானே?''

"சரியாகச் சொன்னாய்... சகலத்திலும் ஸ்திரம் நமக்குத் தோன்றுவதற்கும் அவன் கருணை தேவை...''

"இவ்வேளை எனக்கொரு கேள்வி எழுகிறது.. கேட்கட்டுமா?''

"எனக்கு நீங்கள் இருக்கிறீர்கள்... நமக்கு அந்த பேரருளாளன் இருக்கிறான். இந்த அளவில் காஞ்சி வாழ் மக்களுக்கு யாதொரு குறைவுமில்லை. ஆனால் இந்த உலகம் காஞ்சியோடு முடியவில்லையே...?''

"அதனால்?''

"அவனை அதாவது காஞ்சியில் பேரருளாளனை அறியாத மக்களுக்கு பேரருளாளன் கருணை கிடைப்பது எப்படி?''

"நல்ல கேள்வி...அவனை உணர்ந்து துதிப்பதே எப்படி அவன் கருணையோ, அதேபோல் அவனை அறியாத சிலர் இருப்பதும் கூட ஒரு வகையில் அவன் கருணையே...! அவர்களையும் அவனல்லவா படைத்திருக்கிறான்?''

"இது என்ன விசித்திரமான பதில்...?''

"அப்படி தோன்றினால் அது என் பிழையில்லை. நிழலின் அருமை வெய்யிலில் தெரிவதுபோல் இனிப்பின் தன்மை கசப்பிடம் தெரிவது போல், அவனை அறிந்து பக்திபுரிவோரின் தன்மை, அவனை அறியாதவர்களாலேயே உணரப்படும்.

சுருக்கமாக சொன்னால் அறிந்தவர் அருகில் இருப்பவர் என்றாகிறார். அறியாதவர் தொலைவில் இருப்பவர் என்றாகிறார்... இதுவும் அவன் செயலே!''

"தொலைவில் இருப்பவருக்கு எப்படி அவன் கருணை கிட்டும்? அவர்கள் அவனை அடையாது பிறவிக்கடலில் உழன்றபடியே அல்லவா இருப்பர்?''

"எல்லோருக்கும் அவன் கருணை கிட்ட வேண்டும். அதற்கு என்னவழி என்று தானே கேட்கிறாய்?''

"ஆம்..சரியாகச் சொல்லி விட்டீர்?''

"சிறந்த கேள்வியாக இதனை கருதுகிறேன். அதிலும் நாளாக நாளாக மனிதக்கூட்டம் பெருகுமேயன்றி குறுகாது. அப்போது மனிதனின் புத்தி ஆற்றலால் பல புதியன உருவாகும். அது பொருளால் மட்டுமல்ல.. மன இருளாலும்.. இது ஒருவகை இயற்கை நியதி!

மணக்க மணக்க உண்ணும் உணவே சகிக்க இயலா மலம் என்றாகிறது. அதுபோல ஒவ்வொன்றுக்கும் ஒரு எதிர்வினை நிச்சயம் உண்டு. இந்த வினைகளை எல்லாம் சமன் செய்ய அவனாலேயே இயலும். அவன் அதன் நிமித்தம் ஏதும் செய்வான்?''

"ஏதும் செய்வான் என்று பொதுவாகவும் புதிர் போலவும் சொன்னால் எப்படி?''

"இதுதான் நடக்கும், இப்படித்தான் நடக்கும் என்பதை அனுமானத்தின் அடிப்படையில் கூறுகிறேன். அந்த ஹஸ்தகிரி வரதன் எல்லோராலும் அத்திவரதன் என்று எளிதாய் அழைக்கப்படுவதற்கு ஏற்ப, அத்தி வரதனாய், காஞ்சியில் அன்றாடம் காட்சி தருவது ஒரு புறமிருக்க, அதே காஞ்சியில் அபூர்வக் காட்சி தருபவனாகவும் அப்படி தரும் சமயம் ஒரு பெரும் பக்தி இயக்கம் தோன்றும் என்றும், அதனால் ஒரு சமநிலை தோன்றி அவனை அறியாதவர் மற்றும் அறிய இயலா நிலையில் இருப்பவர்கூட அவன் நாமம் காதில் விழுந்திட அதை மனதால் எண்ணுவர்!

இது போதாதா? பார்த்து விட்டாலே, நாம் கேட்கத் தேவையின்றி வரம் தருபவன் இதன் பொருட்டு எல்லோருக்கும் தன் கருணையை அளித்திடுவானே?''

வேதாந்ததேசிகர் விண்ணைப் பார்த்தபடி சொன்ன அந்த அபூர்வக் காட்சி ஏதுவாக இருக்கும்? அது எப்போது நடக்கும்? என அப்போதே நினைக்கலானாள் திருமங்கை!

**தொடரும்**

இந்த தொடரின் ஆசிரியர்
இந்திரா சௌந்தர்ராஜன் எழுதிய புத்தகங்கள்
**தெரிந்த பாரதம் தெரியாத பாத்திரம், கிருஷ்ண ஜாலம், கடவுளைக் கண்டவர்கள்** பெற
1800 425 7700 ல் தொடர்பு கொள்ளலாம்.

பக்தித்தொடர்

இந்திரா சௌந்தர்ராஜன்



வரதா வரம்தா – 54

# கலியுகம்

திருவஹீந்திரபுரம்!

நல்ல அதிகாலை வேளை...

கிருஷ்ணபாண்டன் ஓட்டி வந்த புரவி ரதம் கருட நதிக்கரையில் நின்றது. பொலபொலவென்றொரு விடியல்... ஆதவனை தரிசித்தபடியே இறங்கினார் ஸ்ரீவேதாந்த தேசிகன். அவரைத் தொடர்ந்தாள் அவரது பத்தினியான திருமங்கை. கருட நதியில் ரத்தக் குழம்புபோல தண்ணீர் ஓடிக் கொண்டிருந்தது. அது திருமங்கையை யோசிக்கச் செய்தது.

''என்ன மங்கா யோசனை?'' லேசாய் சோம்பல் முறித்தபடியே கேட்டார் தேசிகன்.

''ஆற்றுநீர் ரத்தப்பெருக்கும் போல தென்படுகிறதே... ஸ்படிகம் போலல்லவா ஆற்று நீரிருக்கும்...?''

''நல்ல கேள்வி... ஆனால் ரிஷிகள் நினைத்தால் ஸ்படிகமும் செந்நீராகிவிடும்..''

''அப்படியானால்?''

''இதுபற்றி நீ அறிந்து கொள்ள வேண்டுமென்றால் இத்தலப் பெருமை முழுவதையும் முதலில் நீ அறிந்திட வேண்டும்.''

''அறியத் துடிக்கிறது மனது... முதலில் கூறுங்கள்...''

''இத்தலம் எம்பெருமான் மண்மிசை திருப்பதியாக திகழ எண்ணி கோவில் கொள்ள விரும்பி தலம்...''

''திருப்பதியாக என்றால்...?''

''காம்யார்த்தமாய் பிரார்த்தனை புரிந்து கொள்ள உகந்த இடம், உரிய இடம் என்று சுலபமாய் அதற்கொரு பொருள் கூறலாம்...''

''அப்படியாயின் திருவரங்கமும், காஞ்சியும் பிரார்த்தனைக்குரியவை ஆகாதா?''

''அங்கே பிரார்த்தனைக்கு தேவையே இல்லை. அவை சரணாகதி புரிவோர்க்கான தலங்கள்! அதனால் அங்கே பிரார்த்திக்க கூடாதா? பிரார்த்தனைகள் பலிக்காதா என்று கேட்டு விடாதே... எங்கும் பிரார்த்திக்கலாம்.. நகரக்கூட திராணியற்றவர்க்கு அவர் உள்ளமே கூட பிரார்த்தனைத் தலம் தான்! மனதால் நினைத்தாலும் போதும்... அதற்காக திடகாத்திரமாய் இருக்கும்போதும், மந்தகாச வயப்பட்டு என்னுள்ளேயே அவனிருக்கிறான் – ஆலயம் சென்று சேவித்தால் தானா? என்று கேட்டு விடக்கூடாது.''

''புரிகிறது... திருப்பதி எனும் பிரார்த்தனைக்குரிய தலத்திற்கு விளக்கம் தாருங்கள்..''

''யுகங்களில் கலி வீரியம் மிக்கது. பெரும் மாயைகளை உடையது! பெற்றெடுத்த தாயைக்கூட இந்த யுகம் வினாடியில் கொலைகாரி ஆக்கிவிடும்! தர்மபத்தினியையும் தடம் மாறிடச் செய்யும்! உண்ணும் உணவில் கூட கலப்படம் உருவாகி அரிசியைப்



போலவே ஆனால் அரிசி வடிவம் கொண்டு ஒன்று தோன்றும். இதெல்லாம் கலிபுருஷனின் செயல்பாடுகள். பொறாமை களவு, வஞ்சனை, சுயநலம் – போன்ற உணர்வு மிகுதியாக உடையோரே இவனது ராஜ்ஜியத்தின் மந்திரிகள்.

இவர்கள் மனிதர்கள் ஆட்டிப் படைக்க முயல்வர். அப்போதெல்லாம் இந்த கலிவசம் அகப்படாதிருக்க ஒருவன் எம்பெருமானை சிக்கெனப் பிடித்துக் கொள்வது ஒன்றுதான் ஒரேவழி! இருப்பினும் சில பிழைகளை இவன் நம்மை செய்ய வைத்துவிடுவான். இவனே நம் கர்மமாகவும் ஆகி அம்மட்டில் வழி நடத்துவான். அவ்வேளை நம் பிரார்த்தனைகளே நம்மை கர்மக் கட்டில் இருந்து விடுவிக்கும். நம் பிரார்த்தனைகளுக்கு செவி சாய்க்கவும், நமக்கு நல்லருள் புரியவும் எம்பொருமான் கோவில் கொண்ட தலத்தையே திருப்பதி என்கிறோம். பதி என்னும் சொல் பரம புருஷனை குறிப்பது... திருவுடையபதி என்றால் அவனுக்குள்

தினமலர் இணைப்பாக வெள்ளிக்கிழமை வெளிவருவது ஆன்மிக மலர். படைப்புகளை சுருக்கவும், திருத்தவும் தினமலர் நாளிதழுக்கு உரிமை உண்டு. படைப்புகளை அனுப்பும் போது, அதற்குரிய தலைப்பை முகவரியில் எழுதவும்.

அலைபேசி: 98940 09461 அலுவலக நேரம்: காலை 9:30 – இரவு 6:00 மணி ஞாயிறு விடுமுறை

மின்னஞ்சல்: aanmigamalar@dinamalar.in

ஆன்மிகம் 15 மலர் 51

## நகரக்கூட திரானியற்றவர்க்கு அவர் உள்ளமே கூட பிரார்த்தனைத் தலம் தான்! மனதால் நினைத்தாலும் போதும்...

அந்த திருமகளும் அடக்கம் என்பதாகும்... அப்படிப்பட்ட திருப்பதிகளுக்கு சென்று நம் பிரார்த்தனைகளை நாம் காம்யார்த்தமாய் ஈடேற்றிக் கொள்ளலாம்''

''காம்யார்த்தமாய் என்றால்''

''இங்கே ஆதிசேஷன் தன் வாலால் எழுப்பிய கிணறு ஒன்று உண்டு. அதன் நீர் ஆதிசேஷனின் பக்தியுணர்வு கலந்த சிறப்புக்குரியது. 'தாகமாய் இருக்கிறது' என்று தாகத்துக்கெல்லாம் தாகமான எம்பெருமான் ஒரு நாடகமாட, உடனே மானுட பாவனையோடு பதறிய ஆதிசேஷன் தன் வாலால் நிலத்தில் அடித்து உருவாக்கிய கிணறு இக்கிணறு! இக்கிணறு எம்பெருமான் தாகம் தீர்த்தது!

எம்பெருமானின் தாகத் தவிப்பையே போக்கிய இக்கிணறால் நம் தவிப்பதை தான் போக்க முடியாதா என்ன? இக்கிணற்றில் நாம் புனிதமான பசுவின் பாலைச் சேர்த்திட பாற்கடலாகவே அது ஆகி நம் கர்மமும் பாலோடு சேர்ந்து அக்கடலில் கலந்திடும்.

கலிவாழ்வில் மானிடர் துயரைக் குறைக்க என்றே எம்பெருமான் நம் பொருட்டு செய்த ஒரு ஏற்பாடு இது என்றும் கூறலாம்.

இங்கே தேவர்களுக்கெல்லாம் தலைவன் என்னும் பொருளில் தேவநாதன் என்னும் பெயரில் எம்பெருமான் சேவை சாதிக்கிறான். ஹேமாம்புஜ வல்லியாக தாயார் அவனுடன் திகழ்கிறாள்.

இங்குள்ள சிறுகுன்றின் மீதே எம்பெருமான் ஹயக்ரீவனாகவும் கோயில் கொண்டுள்ளான். இங்கு வருவோர் இந்த கருட நதியில் நீராடி, பின் சேஷ தீர்த்தத்தில் பால் சேர்த்து தேவநாதனிடமும், ஹேமாம்புஜ வல்லியிடத்தும் சென்று பிரார்த்தனைக்கான பயனை அனுக்ரஹமாய் பெற்று குன்றின் மேலேறி ஹயக்ரீவனை வணங்கிட, அவனே ஞானத்தை கல்வி என்னும் வடிவில் வழங்கி நம் வாழ்வில் ஒளி சேர்க்கிறான்''

''அடேயப்பா... எத்தனை கீர்த்தி! எத்தனை கருணை!''

''இங்கே திருமங்கையாழ்வார் எழுந்தருளி தேவநாதனை புகழ்ந்து பாடியுள்ளார்''

தேசிகரின் விளக்கத்தை கிருஷ்ண பாண்டனும் செவிமடுத்து சிலிர்த்துப் போனான். அதன்பின் கோவிலுக்கு வந்த எல்லோரும் தேசிகனை ஆச்சார்யனாக கருதி வணங்கிட, சிலருக்கு அவ்வாறு செய்ய தோன்றவில்லை! இவர் ஒரு சாமான்யப்பட்டவர்... அற்பமான மந்திர தந்திரங்களை கற்றவர். எம்பெருமான்

இந்த தொடரின் ஆசிரியர் இந்திரா சௌந்தர்ராஜன் எழுதிய புத்தகங்கள் **தெரிந்த பாரதம் தெரியாத பாத்திரம், கிருஷ்ண ஜாலம், கடவுளைக் கண்டவர்கள்** பெற 1800 425 7700ல் தொடர்பு கொள்ளலாம்.

வழி நடக்கும் ஆச்சார்யனுக்குரிய தகுதிகள் இல்லாதவர் என்று அவர்கள் கருதினர்.

இது குறித்து தேசிகன் கவலை கொள்ளவில்லை. ஆனால் திருமங்கை கவலை கொண்டாள்.

''உங்களை இங்குள்ள சிலர் ஒரு ஆச்சார்யனாகவே கருதவில்லை. அற்ப மந்திர தந்திரங்கள் உடையவர் என்கின்றனரே...''

''இதற்கா இத்தனை பாடு?''

''ஏன் உங்களுக்கு வருத்தமாக இல்லையா?''

''நான் கருப்பானவனில்லை. ஆயினும் என் நிழல் கருப்பாகவே உள்ளது. அது எப்படி கருப்பாக இருக்கலாம் என நான் கேட்கலாமா?''

''இது என்ன மடமை. நிழல் வண்ணமே இளங்கருப்பு தானே?''

''அதே போல கலிவண்ணமே இப்படி சிலர் நினைக்க காரணம் மங்கா! நீ இது குறித்து சிந்திக்காதே. காலத்தால் இவர்கள் மாறி விடுவர்''

''மாறாவிட்டால்?''

''அது அவர் கருமம். அதற்கு நானோ நீயோ என்ன செய்ய முடியும்?''

உன் பசிக்கு நான் உணவளிக்கலாம். அது வரைதான் என் எல்லை. உனக்காக நான் உண்டால் உன் பசி தீருமா? உண்ணத்தான் முடியுமா?''

''எப்படி இப்படி சாதாரணமாய் எடுத்துக் கொள்கிறீர்கள்?''

''ஒர சாதாரணத்தை அப்படியே அது உள்ளவிதத்தில் தானே எடுத்துக் கொள்ள முடியும்?''

''ஆனாலும் உங்களுக்கு ஸ்திர மனது''

''எம்பெருமானை மனத்தில் உறுதிபட இருத்தினால் உன் மனதும் ஸ்திரமாகி விடும்''

''தேசிகனும், திருமங்கையும் திருமாளிகையில் இவ்வாறு பேசியபடி இருக்க அந்த மாளிகையை எழுப்பிய சிலருடன், ஆலய வைதீகர்களும் அவரைக் காண அங்கு வந்தனர்.

அவர்களிடம் ஒரு படபடப்பு தெரிந்தது.

''என்ன விஷயம்?''

''ஒன்றுமில்லை. இத்திருமாளிகையின் புறத்தில் ஒரு கிணறு வெட்ட வேண்டும். வைதீக நிமித்தம் அது மிகவும் தேவைப்படுகிறது. ஆனால் இங்கே அந்த இடத்தில் கிணறு வெட்டவோ, எழுப்பவோ முடியாது என்கின்றனர். உள்ளே பாறை மிகுதியாம். ஊற்றும் இல்லையாம். கிணறு இங்கே சாத்தியமில்லை. கிணற்றின் உட்புறச் சுவரை எழுப்பத் தேவையான கற்களும் மிக கோணலானவை. அதைக் கொண்டு வட்ட வடிவில் ஒரு கிணற்றை எழுப்ப இயலாது என்கின்றனர்''

''அப்படியா?''

''ஆம்... நூறு கொத்தன் வந்தாலும் ஆகாதாம். வந்திருக்கும் தேசிகர் மந்திரத்தாலும் ஆகாது... என்கின்றனர்'' என்றார் ஒரு வைதீகர்?

**தொடரும்**

பக்தித்தொடர்

இந்திரா சௌந்தர்ராஜன்



வரதா வரம்தா – 55

# பூமியின் நீர்ப்பாத்திரம்

அந்த வைதீகரின் பேச்சு வேதாந்த தேசிகனை ஆழ்ந்து யோசிக்கச் செய்தது. ஒரு கிணற்றை உருவாக்குவது என்பது மானுடரின் அறிவும் உழைப்பும் கலந்த செயல். இதற்கும் மந்திர தந்திரத்திற்கும் தொடர்பில்லை. ஆயினும் நீரோட்டம் அறிவது, வெற்றி கருதி செயலை நல்லநேரம் பார்த்து தொடங்குவது என்ற விஷயங்கள் இதோடு தொடர்புடையவை!

நீரோட்டம் அறியவும், நல்லநேரத்தை அறியவும் கல்வி ஞானம் தேவை. கூடுதலாக பஞ்ச பூதங்களில் ஒன்றான நிலத்தின் அம்சம் கொண்ட உடல் உடையவருக்கே இச்செயல் எளிதாகும். இவர்களாலேயே நிலத்தின் மீது நின்று அதன் அடியில் ஓடும் நீரோட்டத்தை தன் உடலில் உருவாகும் காந்த அலைகளால் தொடர்பு கொள்ள இயலும். அவ்வாறு உடம்பின் அலைகள் அடியிலுள்ள நீருடன் தொடர்பு கொள்ளும் போது உடலில் இனம் புரியாத உணர்வு உருவாகும்.

எல்லோருக்கும் இது சாத்தியமன்று. மற்றவர்கள் இதனால் தாழ்ந்தவர்கள் என்றோ, குறைவுபட்ட உடல் கொண்டவர்கள் என்றோ பொருளில்லை. ஒரு மனிதனின் உடல் பஞ்சபூத அம்சமாகும். இந்த பஞ்சபூத அம்சம் சிலருக்கு நிலக்கூறுடன் இருக்கும். சிலருக்கு நீர்க்கூறு... இன்னும் சிலருக்கு அக்னி, வாயு, ஆகாயம் என பூதசக்தி கூடுதலாக இருக்கும்.

இது இயற்கையான அமைப்பு. நிலக்கூறு பூதபலத்தை அதிகம் உடைய ஒருவரால் மட்டுமே நீரோட்டம் காண இயலும்.

அப்படி நீரோட்டம் உள்ள இடத்தை தோண்டினாலே நீர் அகப்படும். இல்லாவிட்டால் தோண்டிய குழி ஒரு இருள் பள்ளம் என்றாகி அங்கே துர்ஆத்மாக்கள் சென்று அடையும் நிலை தோன்றி விடும்.

இப்படி கிணறு தோண்டுவதன் பின்னே அறிவு பூர்வமாக சிந்திக்க வேண்டிய விஷயங்களே உள்ளன. அடுத்து நல்ல நேரத்தில் அக்காரியத்தை தொடங்குவது என்பதும் பிரதானம். இங்கே நேரத்தில் நல்லநேரம், கெட்ட நேரம் என்று உள்ளதா என்ற கேள்வி எழும்.

உண்மையில் நல்ல நேரம் என்று இல்லை. நல்லதை மட்டுமே எண்ணி, நல்லதையே செய்து வருவோருக்கு எல்லா நேரமும் நல்ல நேரமே! ஆயினும் நல்லதை மட்டுமே செய்து இந்த மண்ணில் வாழ்வது அசாத்தியமான செயல். ஒரு நல்லதை உணர ஒரு கெட்டதும், ஒரு கெட்டதை உணர ஒரு நல்லதும் என்று ஒரு கலவையாக இருப்பதே இந்த உலகமாகும். அதனால் தான் பூமியே கூட இரவு, பகல் என்ற இரண்டு தன்மை கொண்டதாக உள்ளது. அதிலும் கூட விடியற்காலை, உச்சிவேளை, மதியம், மாலை என்னும் கால அடையாளங்கள் தோன்றி நாமும் அதற்கேற்ப செயல்படுகிறோம்.

இந்த வேறுபாடுகள் தவிர்க்க முடியாதவை. எனவே தான் காலை நேரத்தில் செயல்பட உகந்த கிரகசாரம் மிகுந்த நேரத்தை ஒரு நல்ல நேரமாக கருதி அவ்வேளை செயலை தொடங்குகிறோம். இது ஒருவகை அறிவியலே.

மொத்தத்தில் கிணறு வெட்ட பவுதீகம், அறிவியல் ஞானம் இருந்தால் போதுமானது. அப்படியிருக்க எதை வைத்து, 'உம் தேசிகரின் மந்திரத்தாலும் ஆகாது' என்று மந்திரத்தை குறிப்பிட்டு பேசினர் என்ற கேள்வி தேசிகரின் மனதிலும் தோன்றியது. அதுவே அவரை சிந்திக்கவும் வைத்தது. அதைக் கண்ட ஒருவர் தேசிகரிடம் வினவத் தொடங்கினார்.

"சுவாமி... தாங்கள் எது குறித்து சிந்திக்கிறீர்கள் என நாங்கள் அறியலாமா?"

"மந்திரத்தாலும் ஆகாது என்று சொன்னார்கள் அல்லவா அது குறித்து..."

"அப்படியானால் ஆகும் என்கிறீர்களா?"

"மனதை தரப்படுத்துவதும், திறப்படுத்துவதும் தானே மந்திரம். அவ்வாறு ஒரு மந்திரம் ஒருவர் மனதை தரமும், திறமும் உடையதாக ஆக்கி விட்டால் அதன்பின் அவரால் ஆகாததும் உண்டா என்ன?"

"என்றால் உம் மந்திர சக்தியால் இங்கே கிணறு தோண்டி அதை பயன்படுத்த முடியும் என்கிறீர்களா?"

"இங்கு



நேரத்தை மதியுங்கள்; வேலையின்றி சும்மா இருக்கக் கூடாது

**'அறிவு, முயற்சி, உழைப்பு' உடையோருக்கே எதுவும் அகப்படும் என்ற கருத்தை மறைமுகமாக கூறுவதாகவும் கிணறு திகழ்கிறது.**

மட்டுமல்ல...எங்கும் அதை செய்ய இயலும். என்னால் மட்டுமல்ல... இப்படி கேட்டவர்களாலும் செய்ய இயலும்''

''அது எப்படி?''

''மந்திரம் என்பதே மனதோடு தொடர்புடையது தானே? அதாவது ஒரு சக்தி மிகுந்த ஒலிக்கற்றை. மந்திரம் ஒருவரின் மனதை ஒரு புள்ளியில் குவியச் செய்து அதீத சக்தியைத் தருகிறது. அந்த சக்தி அறிவை செயல்படுத்தி நல்ல நேரத்தையும், செய்ய வேண்டிய செயலுக்கான சக்தியையும் அளிக்கிறது. இவ்வளவே இதன் பின்புலம்!

இதில் மாயத்திற்கும், தந்திரங்களுக்கும் இடமே இல்லை''

''இப்படி தாங்கள் விளக்கமாய் கூறும் போது புரிகிறது. அப்படியானால் இங்கே கிணறு சாத்தியம் என்கிறீர்களா?''

''அந்த தேவநாதன் நம்முள் புகுந்து விட்டால் எல்லாமே சாத்தியம் தான்''

''சுவாமி.. அவன் நம்முள் புக நாம் தகுதி படைத்தவர்களாக இருக்க வேண்டியது அவசியம் அல்லவா?''

''நம்பிக்கையும், பக்தியும் இருந்தால் அந்த தகுதி தானாக வந்திடுமே?''

வேதாந்த தேசிகனின் பதில் எல்லோரையும் மவுனமாக சிந்திக்க மட்டுமே வைத்தது. ஆனால் தேசிகன் சிந்தித்தபடி இராமல் செயலிலும் இறங்கினார்.

வான் பார்த்து கைகூப்பி, மனதில் வரதனை, அரங்கனான தேவநாதனை என்ற அவன் வண்ணங்களை நிரப்பி, பக்தியுடன் தியானித்தவர் மாளிகைப்புறத்தில் குறிப்பிட்ட ஒரு இடத்தின் மீது நின்று நீரோட்டம் உணர்ந்து பின் அங்கே அவர்கள் அனைவரும் பார்த்திட மண்வெட்டி கொண்டு வட்டமாய் குழி தோண்டலானார். அதைக் கண்ட அவரின் சீடர்கள் அவருக்கு ஒத்தாசையாக தாங்களும் இறங்கினர்.

''தற்செயலாக செயலாற்றுவதற்கு உகந்த நேரமாக இந்த நேரம் அமைந்து விட்டது. இதன் முடிவு நிச்சயம் நல்லவிதமாக இருக்கும்'' என்று அப்போது அனைவரிடமும் குறிப்பிட்ட தேசிகன் தொடர்ந்து உழைத்திட, அதைக் கண்டு அனைவரும் பாடுபட கிணறும் உருவாகியது. நீரும் பிறிட்டு வந்தது! இனி எக்காலத்திலும் இது வற்றாது. அதன் ஒரு பாகம் கருடநதியின் மிசையும், மறுபாகம் கடல்புரத்தின் மிசையும் இருந்திட நீருக்கு உத்தரவாதம் என்ற நிலை உருவானது. இதன்பின் தேசிகனை மறுத்து பேசியவர்கள் சொன்ன கோணல் கற்களைக் கொண்டே பக்கவாட்டு சுவரையும் தேசிகன் எழுப்பலானார். இந்த வேளை தன் கணித அறிவைப் பயன்படுத்தினார். அந்த கணித அறிவு ஒளிர்ந்திட பிரார்த்தனை புரிந்தார். பிரார்த்தனைக்கான பயனை வேதாந்த பெருமானும், மலை மீது கோயில் கொண்டிருந்த எம்பெருமானின் அம்சமான ஹயக்ரீவனும் வழங்கிட, ''இயலாது, நடவாது, முடியாது'' என்று சவால் விட்டவர்கள் நாணித் தலைகுனியும் வண்ணம் அக்கிணறும் உள்ளது. இன்றும் தேசிகரின் திருமாளிகையில் இக்கிணறு ஒரு சாட்சி போல் உள்ளது.

இந்த வேளையில் கிணறு குறித்த அரிய செய்திகளையும் தேசிகன் கூறலானார்.

''ஒரு கிணறு என்பது பூமியின் ஒரு நீர்ப்பாத்திரம் போன்றது. அசுத்தம் அணுக இயலாதபடி ஆழத்தில் இது இருப்பது இதன் சிறப்பு. எவரும் இதை நேராக தீண்ட முடியாது. ஒரு கயிறு, ஒரு கருவி, ஒரு பாத்திரம் மூலமே நீரை நாம் பெற்று பயனடைகிறோம். இதனால் மாசுபடாத பவித்ர நீரை உடையதாக கிணறு திகழ்கிறது. கூடுதலாக 'அறிவு, முயற்சி, உழைப்பு' உடையோருக்கே எதுவும் அகப்படும் என்ற கருத்தை மறைமுகமாக கூறுவதாகவும் கிணறு திகழ்கிறது. ஆற்று நீரிலும், குளத்து நீரிலும் கூட இது சாத்தியமில்லை. எளிதில் அது மாசடைய வாய்ப்புண்டு. கிணற்றை ஒருவர் அத்தனை சுலபத்தில் மாசாக்கிட முடியாது. இதன் நீர் மட்டும் உயர்ந்தும், தாழ்ந்தும் காலகதியையும் எடுத்துரைக்கும். அம்மட்டில் இது ஒரு காலக்கருவியும் கூட. இதுவே ஞானியருக்கு கண்ணாடியும் கூட!

ஒரு ஞானி தன்னைக் காண இது புறத்திலும் உதவுகிறது, அகத்திலும் உதவுகிறது. எனவே ஞானியர், ஆச்சார்ய புருஷர்களுக்கு ஒரு கிணறே முதல் தேவை... ஆறும் குளங்களும் பிறகே...'' என்று கிணற்றின் நுட்பமான சங்கதிகளையும் தேசிகன் எடுத்துரைத்தார்.

சுருங்கச் சொல்வதானால் எதிர்ப்புகளும், எதிர்கேள்விகளும் வேதாந்த தேசிகனை புடமிட்ட பொன் போல ஜொலிக்கச் செய்தன. திருவஹீந்திர புரத்தில் இச்சாதனையை நிகழ்த்தியவர் தன் வாழ்நாளில் இது போல எவ்வளவோ சாதனைகளை நிகழ்த்தினார். ஸ்ரீவைஷ்ணவம் பொலிந்து விளங்க ஏராளமான நூல்களை இயற்றினார். இவற்றில் பாதுகா சஹஸ்ரமும், அத்திகிரி மகாத்மியமும் தனிப்பெரும் சிறப்புடையவையாகும்.

தன் மனையாளான திருமங்கையிடம் வேதாந்த தேசிகன் உரைத்தாற் போல அந்த அத்திகிரி வரதனும், உலகில் உள்ளோர் அனைவரின் கவனத்தையும் ஈர்க்கும்படியான ஒரு செயலுக்கு ஆவன செய்தான். அது?

**தொடரும்**

இந்த தொடரின் ஆசிரியர்
இந்திரா சௌந்தர்ராஜன் எழுதிய புத்தகங்கள்
**தெரிந்த பாரதம் தெரியாத பாத்திரம், கிருஷ்ண ஜாலம், கடவுளைக் கண்டவர்கள்** பெற
1800 425 7700 ல் தொடர்பு கொள்ளலாம்.

பக்தித்தொடர்

இந்திரா சௌந்தர்ராஜன்



வரதா வரம்தா — 56

# அத்தி மரத்தின் சிறப்பு

திருவஹீந்திரபுரத்தில் இருந்தும் வேதாந்த தேசிகர் திருவரங்கத்திற்கு திரும்பவும் சென்றது என்பது திருவரங்கத்தை விட்டு பிள்ளைலோகாச்சார்யரால் மதுரை கொடிக்குளம் நோக்கி எடுத்துச் செல்லப்பட்ட திருவரங்கத்து அழகிய மணவாளன் திரும்ப வந்து சேர்ந்த தருணத்தில் தான்...

பிள்ளைலோகாச்சார்யரால் கொண்டு செல்லப்பட்ட அழகிய மணவாளப் பெருமாள் பாரத தேசத்தின் தென்பகுதியே ஒரு சுற்று சுற்றியவராக கேரளா சென்று பின் திருமலை சென்று அதன்பின் திருவரங்கம் அடைய 60 ஆண்டுகள் ஆயிற்று.

இந்த 60 ஆண்டுகளில் வேதாந்த தேசிகனும் முதிர்வும், பிரகாசமும் கொண்டிருந்தார். இவருக்கு குமார வரதாச்சார்யார் என்ற மகன் பிறந்து அவரும் தந்தைக்கேற்ற தனயனாக விளங்கினார்.

இவரே தன் தந்தைக்கான தனியனையும் அதாவது கட்டியம் கூறும் பாடலை எழுதியவர்.

தந்தையும், தனயனும் ஒன்றாக திருவரங்கம் வந்து அழகிய மணவாளன் திரும்ப கோயில் கொண்டபோது அதைகண்டு மகிழ்ந்தவர்களும் கூட....!

மிலேச்சர்களின் ஆதிக்கம் கூடுவதும், பின் குறைவதுமாக இருந்த காலகட்டம் அது! கலிமாயை பல காட்சிகளை அன்றாடம் காட்டிக் கொண்டிருந்தது. ஒரு விளையாட்டில் அதில் விளையாடுபவர் வெற்றிக்காக முனையும் போது எதிரியாக விளையாடுபவர் நம் வெற்றியை தட்டிப் பறிக்க முயல்வார். நாம்



போராடித்தான் வெல்ல வேண்டியிருக்கும். அந்த போராட்டத்தை நாம் குறை கூறுவதில்லை. அப்போது கடவுளிடம் கூட என் வெற்றிக்கு துணை நில் என்றுதான் வேண்டுவோம். கடவுளே இது என்ன சோதனை என புலம்ப மாட்டோம். ஒருவேளை தோற்றாலும் அடுத்து வெற்றி பெறுவோம் என நம்புவோம்.

கிட்டதட்ட வாழ்வும் விளையாட்டு போலத்தான். கடவுள் இதில் நடுவரைப் போன்றவர். நடுவர் இருதரப்புக்கும் பொதுவாக செயல்படுவதைப் போல்தான் கடவுளும் வாழ்வில் நல்லவர் கெட்டவர் என்னும் இரு சாரருக்கும் எல்லா வாய்ப்பையும் அளித்து செயல்படுகிறார். இறுதியில் நல்லவனே வெல்வான் என்பதே நிதர்சனமாகும். ஆனால் அந்த இறுதி எது என்பதில் குழப்பம் ஏற்பட்டு, தாமாக ஒரு இறுதியை கற்பனை செய்தபடி கடவுள் கைவிட்டு விட்டார், அவர் இல்லவே இல்லை என்றெல்லாம் புலம்பித் திரிவதும் உண்டு.

ஸ்ரீவேதாந்த தேசிகன் காலத்தில் இப்படி புலம்ப பல வாய்ப்புகள் இருந்தன. மிலேச்சர் படையெடுப்பும், தங்கள் கொள்கை என்று சிலை வழிபாட்டுக்கு எதிராக அவர்கள் செயல்பட்ட போதெல்லாம், அதை சகித்தும் எதிர்த்தும், கல்லிலும் முள்ளிலும் கூட கடவுள் இருக்கிறான் என்னும் கருத்தோடு அதை ஸ்தாபிப்பவராக தேசிகன் திகழ்ந்தார்.

குறிப்பாக காஞ்சியிலும் மிலேச்சர் தொல்லை இருந்தது. ஆயினும் திருவரங்கம் போல் ஆலயத்தினுள் புகுந்து அடாத செயல்புரிவது என்பது பெரிதாக நடக்கவில்லை.

குறிப்பாக அத்திவரதனை இச்சமயத்தில் மிலேச்சர்கள் மட்டுமல்ல, ஆலயத்தில் இருப்போர் கூட பெரிதாக அறிந்திருக்கவில்லை... அவர்கள் அறிந்திராதபடி அனந்தசரஸ் என்னும் குளத்திற்குள் அவன் வாசம் செய்து கொண்டிருந்தான்!

அது எப்படி என்று அறிந்து கொள்ள வேண்டும் என்றால் நாம் கலியுகம் கடந்து முந்திய யுகங்களுக்கு அதாவது ஹஸ்திகிரி தோன்றிய அந்த காலப் புள்ளிக்கே சென்றாக வேண்டும்.

''மும்மூர்த்திகளில் தானே முதலானவன் தானே சிருஷ்டி கர்தா... தன்னாலேயே எல்லாம் இயங்குகிறது. தான் இல்லாது போகும் போது எல்லாமே இல்லாது போய்விடும். சப்தலோகங்கள், சூரிய சந்திரர் நட்சத்திரங்கள், உப கிரகங்கள், மாந்தர், தேவர் மிருகம், பறவை என எதுவுமே இருக்காது. எல்லாமே தன்னால்தான்...!'' என்று பிரம்மா அகந்தை வயப்பட்ட இடத்தில் தான் அத்திவரதன் உருக் கொள்கிறான்.

அகந்தையை மஹாவிஷ்ணு அழித்து சர்வமும்

**அத்தி மரத்தண்டுக்கு மந்திர சப்தத்தை கருங்கல் போல் ஆகர்ஷிக்கும் சக்தி மிகுதி. அத்தி மரத்தடியில் தவம் புரிந்தால் மனவடக்கம் எளிதில் சித்திக்கும்.**

நானே... ஆனால் உன்னைப் போல அதை அகந்தையோடு கூறிட மாட்டேன் என்று உணர்த்தவும் பிரம்மாவும் தவறை உணர்ந்து திருந்துகிறார்.

திருந்தினால் போதாது. அகந்தையால் நேர்ந்த தவறுகளுக்கு பிராயச்சித்தம் செய்யவும் எண்ணுகிறார். அப்படிச் செய்தால் தான் அது நல்ல முன்னுதாரணமாக ஆவதோடு, காலத்திற்கும் அழியாத ஒரு செய்தியாகவும் இருக்கும்.

இன்னமும் சற்று அழுத்தமாக கூற வேண்டும் என்றால் இது ஒருவகை தேவ நாடகம்! தேவ நாடகங்களையே திருவிளையாடல் என்கிறோம். திருவிளையாடல்களின் வெற்றிக்கான பரிசு என்பது காலத்தால் அழிக்க முடியாத ஒன்றாகிவிடும்.

பிரம்மன் அகந்தை வயப்பட்டது கூட திருவிளையாடலே! பரிகாரமும் அதன் தொடர்ச்சியே... பரிகாரம் என்ன தெரியுமா? பூஉலகில் காஞ்சி நகரின் மிசை ஒரு வேள்வி புரிந்தது தான்! வேள்வியின் பயனாக வேள்வித்தீயில் இருந்தே எம்பெருமானும் பேரருளானாக உற்ஸவமூர்த்தியாக தோன்றினான். அந்த மூர்த்தியை ஹஸ்தம் என்கிற யானை முதுகில் ஏற்றி வலம் வரச் செய்தான் பிரம்மன்.

பின் ஹஸ்தமே குன்றாகிட, அதன் மேல் அப்படியே பேரருளாளனும் கோயில் கொண்டிட பிரம்மா உள்ளிட்ட சகலரும் மகிழ்ந்தனர். இவ்வேளை சிலர் ரூபமாக மட்டுமின்றி, தன் தேஜோ மயரூபத்தோடும் அனைவருக்கும் காட்சியளித்தான் எம்பெருமான்! அப்படி காட்சியளித்த தருணத்தில் தேவர்கள் கேட்ட வரங்களை எல்லாம் வாரி வழங்கியதால் வரதராஜன் என்றும் ஆனான்!

இக்காட்சி பிரம்மா, இந்திரன் உள்ளிட்ட சகலர் மனதிலும் நிரம்பி வழியலாயிற்று. அதி அற்புதக்காட்சி! சங்கு சக்கரதாரியாக கதாயுதமுடன் முகத்தில் புன்னகை ததும்பிட எம்பெருமான் அளித்த காட்சியை கொண்டு ஒரு சிலை செய்து அதை ஆலயத்தின் பிரதான மூர்த்தமாக்கிட விருப்பம் கொண்டார் பிரம்மா. இந்திரனும் அதற்கிணங்கி விஸ்வகர்மா, மயனை அழைத்து சிலை செய்யப் பணித்தான். சிலைகளை கல், உலோகம், சுதை எனப்படும் மண்குழம்பால் வடிப்பதுதான் வழக்கம்.

எம்பெருமானின் அபூர்வக்காட்சி இதுபோல் வழக்கமான ஒன்றுக்குள் அடங்கிடாமல் அதற்குரிய மூலமும் அபூர்வமாக இருக்க வேண்டும் என்று எண்ணிய போது தாரு எனப்படும் விருட்ச வகையில் அதாவது மரம் கொண்டு செய்தால் என்ன என்று தோன்றிற்று.

மரச்சிற்பம் என்னும் போது அதை பேணும் முறைகளும் மாறிடும். புதிய அணுகுமுறை தோன்றிடும். அபிஷேக ஆராதனை மரச்சிற்பங்களுக்கு செய்ய முடியாது. பூச்சிகளால் அரிக்கப்படாத படியும் அதை பாதுகாக்க வேண்டும்.

சுருக்கமாய் கூறுவதானால் புதிய நடைமுறையை உருவாக்கினால் அன்றி தாருவகையை உருவாக்க முடியாது.

இதனால் குழப்பம் ஏற்பட்ட போது எம்பெருமானே, 'அத்தி மரங்களிலும் நான் இருப்பதை உலகுக்கு பாடமாக்க விரும்புகிறேன்' என்று கூறவும் அத்திமரத்தால் மயனும், விஸ்வகர்மாவும் சிலை செய்ய முனைந்தனர்! இதனால் அத்தியின் அம்சமான சுக்ரனும் மிக மகிழ்ந்தான்.

அத்தி பூத்ததே தெரியாமல் காய்க்கும் தன்மை கொண்ட தாவரம். அதாவது பலனை வேகமாய் அளிக்கக் கூடியது. அதனால் சுக்ரன் நீச்சமானவர்கள் இந்த மரத்தை நட்டு வளர்த்து அதன் பயனை நீச்சத்துக்கு இணையாக பெற்று சிறப்புறுவர்.

ஒருவர் ஜாதகத்தில் சுக்ரனின் இருப்பை வைத்தே இகபர சுகமும், தாம்பத்யமும், வம்ச விருத்தியும் ஏற்படுகிறது. செல்வம் இருந்தும் அதை அனுபவிக்கும் விதியமைப்பை சுக்ரனே அளிக்க வேண்டும். அதனாலேயே எம்பெருமானும் சுக்ர அம்சத்தில் அத்திகிரி அருளாளன் என்றானான். இந்த அருளாளனை வணங்கினாலும் இகபரசுகம் கிட்டும். மகிழ்வான வாழ்வு அமையும். அடுத்து அத்தி மரத்தண்டுக்கு மந்திர சப்தத்தை கருங்கல் போல் ஆகர்ஷிக்கும் சக்தி மிகுதி. அத்தி மரத்தடியில் தவம் புரிந்தால் மனவடக்கம் எளிதில் சித்திக்கும். புவி ஈர்ப்பு விசையையே தன் வயப்படுத்திடும் ஆற்றல் இதன் அணுக் கூறுகளுக்கு உண்டு. பூச்சிகளாலும் எளிதில் அரிக்கப்படாது. புதைந்தால் எளிதில் கரியாகி வைரமாகும். நீரில் கிடந்தாலும் துளியும் தன்னிலை மாறாது அப்படியே உயிர்ப்போடு இருப்பதோடு தண்ணீரில் வினைபுரிந்து அந்த தண்ணீரையும் மந்திர நீராக மாற்றிவிடும்.

மேலினும் மேலான ஒரு விஷயம் – ஒரு அத்தி உள்ள இடத்தில் வற்றாத நீரோட்டம் இருக்கும். இப்படி அத்தி சிறப்புக்குரிய விருட்சமாக திகழ்ந்ததன் பொருட்டே இதனில் எம்பெருமானும் சிலையானான்!

அப்படிச் சிலையானவன் திருக்குளத்தினுள் தன்னை இருத்திக் கொண்ட பின்புலம் சுவையானது மட்டுமல்ல... மிகப் பொருளுடையதும் கூட... அது?

**தொடரும்**

இந்த தொடரின் ஆசிரியர் இந்திரா சௌந்தர்ராஜன் எழுதிய புத்தகங்கள் **தெரிந்த பாரதம் தெரியாத பாத்திரம், கிருஷ்ண ஜாலம், கடவுளைக் கண்டவர்கள்** பெற 1800 425 7700 ல் தொடர்பு கொள்ளலாம்.

பக்தித்தொடர்

இந்திரா சௌந்தர்ராஜன்



வரதா வரம்தா – 57

# விசித்திர விருப்பம்

அத்தி விருட்சம் மூலம் எம்பெருமானின் அருட்சொரூபம் அப்படியே வடிக்கப்பட்டது! ஒன்றே இரண்டாக இருத்தல் போல் அந்த மரச்சிலை நின்ற நிலையிலும் படுத்த நிலையிலும் கச்சிதமாய் பொருந்திப் போனது. 'ஒன்பது அடி உயரம், மூலிகைச் சாந்து வண்ணம், திவ்ய லட்சணம்' என்று எம்பெருமான் நம் கண் எதிரில் உறங்குவது போலவும் காட்சியளித்தது!

இவ்வேளை யாக நெருப்பில் தோன்றிய உற்ஸவத் திருமேனியான பஞ்சலோகத் திருமேனியில் கன்னத்தில் தீச்சூட்டின் சிவப்பு ஒரு தடயம் போல் காட்சியளித்தது. அதைக் கண்ட பிரம்மாவிடம் பெரும் வருத்தம் ஏற்பட்டது.

''அய்யனே! தாங்கள் உவந்து அளித்த மூர்த்தத்தில் இது என்ன தங்கள் திருமுகத்தில் தீத்த மும்புத் தடயம்?'' என்று தயங்கியபடியே கேட்டான்.

எம்பெருமானும் சிரித்த வண்ணம் பதில் கூறலானான்.

''பிரம்மா உன் யாகத்தீதான் அதற்கு காரணம்!''



''எம்பெருமானே... அந்த தீயை படைத்ததே தாங்கள் தான்! அப்படியிருக்க அந்த தீயா தங்களைச் சுட்டது?''

''இது என்ன கேள்வி? நாம் விலை கொடுத்து வாங்கிய கத்தி என்பதற்காக, அதை நாமே நம் வயிற்றில் குத்திக் கிழிக்க முயலுகையில் அது குத்திக் கிழிக்காது போகுமா?''

''பெருமானே... இது என்ன பதில்? சர்வமும் நீர்தான்... புவனம் பதினான்கு முதல், புல், பூண்டு வரை எல்லாமே உம் படைப்பு. அதில் தீயும் ஒன்று.. அந்த தீக்கே தீக்காயமென்றால் எப்படி?''

''விதியைப் படைத்தவனே மீறலாமா? நெருப்பென்றால் சுட வேண்டும், நீரென்றால் பள்ளம் கண்ட இடத்தே பாய வேண்டும், காற்றென்றால் புலனாகாதபடி எங்கும் நிரம்பிக் கிடக்க வேண்டும். அதேபோல் நான் யாக நெருப்பில் உதித்த சமயத்தில் உச்சபட்ச உஷ்ணத்தை நான் விழுங்கித் தணிக்க முயன்றேன். அவ்வேளை இவ்வாறாகி விட்டது!''

''அப்படியானானல் இந்த உற்ஸவ மூர்த்தத்தை காண்பவர்க்கும் தரிசிப்பவர்க்கும், நீங்கள் யாக நெருப்பில் தோன்றிய சம்பவம் புலனாகக் கூடும். அப்படி புலனாக வேண்டும் என்பது தான் உங்கள் விருப்பமா?''

''ஆம்! அதைக் கண்டு பிரம்மனாகிய உன் நினைவும் வர வேண்டும். எனக்கான வணக்கம் உனக்கானதாயும் ஆகிட வேண்டும், அப்படியே விதித்தவனே விதிப்படி நடந்தான் என்னும் செய்தியும், அப்படி நடந்தாலே இயக்கம் என்பது சீர்மையானதாக இருந்திடும் என்பதும் புலனாகும்.''

''என்ன ஒரு துார நோக்கு...! எம்பெருமானே, நான் இதைக்கேட்டு வியப்பது மட்டுமல்ல, என் படைப்புத் தொழிலில் நானும் விதிப்படி இயங்கிடும் நடு தன்மைக்கு என்னை நிலைப்படுத்திக் கொள்ள முடிவு செய்து விட்டேன்''

''அதுவே சிறப்பானது... அவரவரும் அவரவர் தன்மையறிந்தும், பிறர் தன்மை புரிந்தும் செயல்படும் போதுதான் வாழ்வும் ரசனைக்குரியதாக ஆகிடும்.''

– என்று கூறிய எம்பெருமான் அத்தி மரத்திருமேனி கண்டு புன்னகைக்கலானான்.

அப்படிப் புன்னகைத்தாலே ஒரு கருத்து இருப்பதாகத்தான் பொருள்.

## ''அத்தி மண்ணில் புதைந்தால் வைரம்... மண்மேல் கிடந்தால் வரம்!''
## ''ஆஹா.. அற்புதம்! அற்புதம்! வைரம், வரம் இரண்டுமே காலத்தை விஞ்சியவை!''

''எம்பெருமானே... இந்த தாரு விக்ரகம் கண்டு தாங்கள் சிரித்த காரணம் நானறியலாமா?''

''இதுதான் மூலமாக கோயில் கொள்ளப் போகிறதா?''

''ஆம்.. ஒன்று நீங்கள் உகந்த உலோகமேனி இதுவோ தேவர்கள் உகந்த சுத்தித் திருமேனி... தாங்கள் உகந்தது உறஸவ மூர்த்தமாயும், தேவர்கள் உகந்த இந்த அத்தித் திருமேனி மூல மூர்த்தமாகவும் திகழ வேண்டும் என்பது என் விருப்பம்..''

''ஆனால் என் விருப்பமே வேறு.. நான் அதைக் கூறட்டுமா?''

''எம்பெருமானே.. கட்டளையிட வேண்டிய தாங்கள் இப்படியா கனிவாய் கேட்பீர்கள்...?''

''சர்வத்திலும் நானிருக்கலாம். அப்படிப்பட்ட நான் அந்த சர்வங்களில் ஒன்றாக ஆகிடும் போது எனக்கும் ஒரு வழிமுறை உருவாகிவிடுகிறது. அந்த வழிமுறைப்படி நடப்பதே நலம் பயக்கும் ஒன்றாகும்.''

''தங்கள் விருப்பத்தை முதலில் கூறுங்கள்...''

''இங்கே நீ எனக்கு ஆலயம் எழுப்பக் காரணம்?''

''யாம் பெற்ற இன்பத்தை வையமும் வரும் காலத்தில் பெற வேண்டும் என்பதனால்..''

''இங்கே நீ பெற்ற இன்பம் எது?''

''அகந்தையால் புரிந்த தவறுகள் சீராகின! பெரும் வரசித்திகளுக்கு நான் மட்டுமின்றி, தேவாதி தேவர்களும் ஆளாயினர்! உம்மை கிருஷ்ணாவதாரத்தில் கோவிந்தராஜனாக கண்டுள்ளோம். இங்கோ வரதராஜனாக காண்கிறோம். இந்த வரதராஜனின் வரங்கள் வேண்டுவோர்க்கெல்லாம் எப்போதும் கிட்ட வேண்டும் என்று எண்ணியே இங்கே ஆலயம் எழுப்பிட விரும்புகிறேன்''

''அப்படியானால் நான் எப்போதும் குளிர்ந்த மன நிலையில் இருக்க வேண்டியது அவசியமல்லவா?''

''எம்பெருமானே! குளிரும் சூடும் குணங்கள்! தாங்களே நிர்குணன்! அப்படியிருக்க குளிர்ந்த மனநிலை என்று தாங்கள் குறிப்பிடுவது விசித்திரமாக உள்ளது எனக்கு..''

''நிர்குணனே பூமியில் கோயில் கொள்ளும் போது சில குணப்பாடுகளுக்கும் ஆட்படுகிறேன். அவ்வகையில் இங்கே இந்த அத்தி கிரியில் நான் குளிர்ந்த தன்மைக்குள் நிரந்தரமாய் இருந்து வேண்டுவார் தமக்கும் குளிர்வைத் தர விரும்புகிறேன்.''

''அப்படியாயின்...?''

''அப்படியாயின் எனது இந்த அத்திமர சிலாரூபம் இத்தலத்தில் எல்லோர் பார்வையிலும் படும்படியாக சன்னதியில் நிற்கவோ கிடக்கவோ தேவையில்லை,''

''பின் எப்படி?''

''நான் இங்கிருக்கும் திருக்குளத்தின் மிசை உள்ளடங்கிக் கிடக்கவே விரும்புகிறேன்!''

''இறைவா.. இது என்ன விசித்திரமான விருப்பம்! நீரின் மிசை பிறருக்கு புலனாகாதபடி கிடக்க விரும்புவதன் நோக்கம்?''

''நான் முன்பே குறிப்பிட்டதுபோல் குளிர்ந்து கிடந்து, குளிர்வைத் தர..''

''அப்படியாயின் எப்படி வழிபாடு புரிவது?''

''அவைகளெல்லாம் காலத்தால் குறைவின்றி நிகழ்ந்திடும். நான் விரும்பும்போது குளத்தினின்றும் வெளிப்படுவேன். பின் சில காலம் பிறர் பூஜிக்கக் கிடப்பேன், மீண்டும் ஜலவாசம் கொள்வேன்''

''மற்ற நாட்களில்?''

''கல்லிலோ, இல்லை சுதையாலோ உருக்கொண்டு காட்சி தந்தால் வேண்டாம் என்பாயா?''

''புரிகிறது, ஒன்றுக்கு மூன்றாக அதாவது 'மூலவம், உற்ஸவம் குளஜலம்' என்பதாக.. அப்படித்தானே?''

''அப்படியே தான்...''

''அதனாலேயே அத்திவிருட்சம் பயன்படுத்தப்பட்டுள்ளதோ?''

''அத்தி மண்ணில் புதைந்தால் வைரம்., மண்மேல் கிடந்தால் வரம்!''

''ஆஹா.. அற்புதம்! அற்புதம்! வைரம் வரம் இரண்டுமே காலத்தை விஞ்சியவை!''

''ஆம்.. காஞ்சி எனும் இந்த அத்திகிரியும் காலத்தை விஞ்சி நிற்கப் போகிறது. என் அருள் கருணை என்னை அறியப் போகிறவர்க்கெல்லாமும் கிட்டப் போகிறது.''

''அவர்களில் அசுரர்கள் இருந்து அலட்சியம் செய்தால்?''

''என் வரையில் இரண்டும் ஒன்றே!''

எம்பெருமான் பிரம்மனிடம் நிகழ்த்திய இந்த வாதப்பிரதிவாதங்கள் வரலாறாகியது. அத்திகிரி கோயிலும் எழும்பி நின்றிட அத்திச்சொரூபமும் அனந்த சரசில் வெள்ளிப் பேழைக்குள் மூழ்கிய நிலையில் கோயில் கொண்டது.

அது வெளிப்படும் நாளை அவனே தீர்மானம் செய்யலானான். இப்படி உள்ளடக்கமாய் எம்பெருமான் கிடப்பதை தன் ஞானத்தால் உணர்ந்தே ஸ்ரீவேதாந்த தேசிகனும் காலத்தால் இத்திருக்குளம் பெரிதும் சிந்திக்கப்படும் ஒன்றாகிடும் என்றார்.

காலத்தால் மிலேச்ச படையெடுப்பின் போது காஞ்சி பேரருளாளன் ஆலயமும் சில சோதனைகளை சந்திக்க நேர்ந்தது... அதில் தொடங்குகிறது அத்திவரதனின் வெளிப்பாடு!

**தொடரும்**

**இந்த தொடரின் ஆசிரியர்**
**இந்திரா சௌந்தர்ராஜன் எழுதிய புத்தகங்கள்**
**தெரிந்த பாரதம் தெரியாத பாத்திரம்,**
**கிருஷ்ண ஜாலம், கடவுளைக் கண்டவர்கள் பெற**
1800 425 7700 ல் தொடர்பு கொள்ளலாம்.

பக்தித்தொடர்

இந்திரா சௌந்தர்ராஜன்



வரதா வரம்தா – 58

# விசித்திர விருப்பம்

வேதாந்த தேசிகன் கி.பி.1369ல் பரமபதம் அடைந்தார். கி.பி.1268ல் அவதரித்த தேசிகன் நூறு ஆண்டுகளுக்கும் மேல் காஞ்சி மண்ணில் நல்வாழ்வு வாழ்ந்தவராவார்! இடையில் திருவரங்கம், திருவஹீந்திரபுரம், திருமலை என்று சென்றும், வந்தும் அவர் சாதித்த செயல்கள் பலப்பல.

ராமானுஜரால் கட்டப்பட்ட வைணவ சம்பிரதாயம் என்ற மாளிகை, வேதாந்த தேசிகனால் பெரிதும் பேணப்பட்டு அடுத்த கட்டத்திற்கும் சென்றது. இவர் வாழ்ந்த காலத்தில் அத்திவரதப் பெருமான் திருக்குளத்தை விட்டு வெளியே வந்து ஒரு மண்டல காலம் காட்சி தந்து சென்றதாக குறிப்புகள் இல்லை. ஆயினும் பிரம்மப் பிரயத்தனத்தின் போது மயனால் இந்திர கட்டளைக்கேற்ப வடிக்கப்பட்ட அத்திமரத்தாலான தாருரூபம் திருக்குளத்திற்குள் இருந்ததை ஞானத்தால் உணர்ந்தவராக தேசிகன் இருந்தார். அதை காட்டித் தரவோ இல்லை தான் கண்டு பேறு பெறவோ அவர் முயலவில்லை. அவ்வாறு நடப்பது என்பது எம்பெருமானின் திருவுள்ளத்திற்கு மாறானது எனக் கருதியதால் 'அத்திகிரி மகாத்மியம்' என்ற பாடல் தொகுப்பை எழுதி திருப்தியடைந்தார்.

ஆயினும் எம்பெருமான் பின்வரும் நாளில் என்றாவது ஒரு நாள் எப்படி வெளிப்பட வேண்டுமோ அப்படி வெளிப்பட்டு அவனது அருள் அனைவருக்கும் சேரும் எனக் கருதினார்.

கலியின் கொடுமைக்கு ஏற்ப தர்மம், நியாயங்களுக்கு சோதனை ஏற்பட்ட காலங்களில் குளத்திற்குள் குளிர்ந்து கிடந்தே எம்பெருமானும் அருளாட்சி புரிந்தான்.

பலவித ஆட்சி மாற்றங்கள்! பல மன்னர்கள்! பல போக்குகள்! பருவ மாற்றங்கள் எப்படி பூமிக்கு இயற்கையான ஒன்றோ அதுபோல காட்சி மாற்றங்களும் இயற்கையானதே!

ஒருவரைப் போல் இன்னொருவர் எப்படி இருப்பதில்லையோ, ஒருவர் குரல் போல எப்படி இன்னொருவர் குரலும் அமைவதில்லையோ, அதே அடிப்படையில் ஒருகாலம் போல இன்னொரு காலம் இருந்ததில்லை. இருப்பதில்லை – இருக்கப் போவதுமில்லை.

இந்த இயற்கையை உலகுக்கு புரிவிப்பவன் போல பலப்பல சோதனைகளை அளித்தவனும் அவனே! அதை எதிர்த்து வெற்றி கொண்டவனும் அவனே!

அவன் சன்னதியில் ராமானுஜர் போல், தேசிகர் போல் மகான்கள் மட்டுமல்ல, பக்தி என்றால் என்னவென்றே தெரியாத பாமரர்களும் நின்று எம்பெருமானைக் கண்டு வணங்கியும் உள்ளனர்.

அவனை ஒரு கலாரூபமாக கண்டுகளித்த மிலேச்சர்களும் இதில் அடக்கம். இந்த ரூபத்தை உடைத்து நொறுக்கினால் தான் இந்த காஞ்சி தம் வசமாகும் எனக் கருதியவர்களும் உண்டு.

டெல்லியில் அவுரங்கசீப் தலைமையிலான ஆட்சி 49 வருடகாலம் நீடித்த போது, காஞ்சியில் அதன் அதிர்வுகள் இருக்கவே செய்தன. ஆயினும் உயிரை விடவும் பக்தி உணர்வும் அவன் நினைவுமே பெரிது எனக் கருதிய வைணவர்கள் மற்றும் ஆதிசைவர்களால் காஞ்சிபுரம் தன்னை காப்பாற்றிக் கொண்டது.

காணக் கிடைக்கும் சில குறிப்புகளின் படி 1609ல் பிரம்மனால் அருளப் பெற்ற, யாக வேள்வியில் தோன்றிய பேரருளாளப் பெருமானின் உற்ஸவ மூர்த்தம் கோயிலில் இல்லாது போனதாக தெரிகிறது. மிலேச்சர்கள் வசம் எம்பெருமான் அகப்பட்டு அழிந்து விடக்கூடாது என்று கருதிய ஸ்ரீவைஷ்ணவ தாசர்களால் உடையார் பாளையம் எனப்படும் ஊரில் வாழ்ந்த ஜமீன்தார் வசம் சென்று சேர்க்கப்பட்டதாக தெரிகிறது. இதன் பின்புலம் கூர்ந்து நோக்கப்பட வேண்டிய ஒன்று.

அன்று மார்கழி மாத ஏகாதசித் திருநாள்! காஞ்சிவாழ் வைணவர்கள் ஏகாதசி விரதமிருந்து அதிகாலை சொர்க்கவாசல் கதவு திறக்கையில்



**ஒருவரைப்போல் இன்னொருவர் இருப்பதில்லை அதுபோல ஒருகாலம் போல இன்னொரு காலம் இருந்ததில்லை. இருப்பதில்லை – இருக்கப் போவதுமில்லை.**

அதன் வழியே எம்பெருமானைப் பின் தொடர்ந்து சென்று விடுவதன் மூலம், பிறவித் தளையில் இருந்தும் விடுபட்டுவிடும் நம்பிக்கையோடும் உருக்கத்தோடும் இருந்தனர்.

இச்சமயம் ஊருக்குள் மிலேச்சர்களும் புகுந்து பல இடங்களை ஆக்ரமித்திருந்தனர். விஜயநகர மன்னர் நரசிங்கராயனின் கட்டளைக்கேற்ப கங்காதரன் எனும் சிற்றரசனின் மகன் விரூபாக்ஷ தானாயகன் என்பவன் இச்சமயம் உள்ளூர் அதிகாரியாக இருந்ததாக தெரிகிறது.

இந்த விரூபாக்ஷ தானாயகனும் அன்றைய இரவில் மாறுவேடத்தில் ஊருக்குள் நோட்டமிட்டபடியே நடந்து வரலானான்.

உறங்கி விடக்கூடாது என்று கருதிய பல வைணவர்கள் அந்த இரவில் பரமபதம் என்கிற தாய விளையாட்டு விளையாடிக் கொண்டிருந்தனர். பித்தளையால் ஆன தாயக்கட்டைகள் உருட்டிப் போடப்படும் ஓசைகள் வீட்டுக்கு வீடு கேட்டபடி இருந்தன! வீட்டு வாயிலில் அணைந்து விடாதபடி மாட விளக்குகள் எரிந்து கொண்டிருந்தன. பலர் தங்கள் வீட்டுத் திண்ணைகளில் அமர்ந்து விளையாடிக் கொண்டிருந்தனர்.

தானாயகன் ஒரு வைணவர் வீட்டு வாசலில் நின்று கவனிக்கலானான்! பின் மெல்ல அருகில் சென்று பார்க்கலானான். பரமபதத்தில் ஈடுபட்டிருந்த இருவரில் ஒருவர் புண்ணிய ஏணிகளில் ஏறி வைகுண்டம் எனும் உச்சம் நோக்கி சென்றபடி இருக்க, இன்னொருவரையோ பரமபத கட்டங்களின் ஊடே கிடந்த அசுர சர்ப்பங்கள் மேலேற விடவில்லை.

மேலேறிக் கொண்டிருந்த வைணவர் உணர்ச்சிப் பெருக்கில் இருந்தார். இன்னும் சில கட்டங்கள் தான்... கடந்தால் வைகுண்டம் தான். அதே சமயம் இடையில் ஒரு பாம்பு அவரை விழுங்கி தொடங்கிய இடத்துக்கே அனுப்பக் காத்திருந்தது. அதனால் கட்டையை உருட்ட அவர் கைகள் தயங்கின. எதிரில் இருந்த வைணவரோ "உம்.. உருட்டுமய்யா உருட்டும்... வைகுண்டமா இல்லை மீண்டும் நரகவாசமா என்று பார்த்து விடுவோம்..." என்றார். அவரும் காஞ்சிவரதனை எண்ணிக் கொண்டு எம்பெருமானே என கட்டைகளை உருட்டினார். பன்னிரண்டு என்ற எண்ணிக்கை விழுந்து நேராக வைகுண்டத்திற்குள் அவரது சோழி புகுந்து நின்றது.

"ஆஹா வைகுண்டம்..வைகுண்டம்! எம்பெருமான் கருணை கிட்டி விட்டது. என் விரதம் பூர்த்தியாகி விட்டது. இனி எனக்கு இந்த மானுடப் பிறப்பில்லை ஏன் மறுபிறப்பே இல்லையென்பேன்.. நான் இனி நித்ய சூரி!" என்று உற்சாகக் குரலெடுத்து கத்தலானார். அதைக் கண்ட தானாயகன் அவரிடம் பேசலானான்.

"சுவாமி.. இது என்ன விந்தை! இது ஒரு பொழுது போக்கு விளையாட்டு – இதில் வென்றால் பிறப்பையே வென்றதாகி விடுமா... உங்கள் சந்தோஷம் எனக்கு இப்படி கேள்வியைத் தான் எழுப்புகிறது" என்றான். அவரும் பதில் தரலானார்.

"நீ யாரப்பா?"

"நானொரு நாடோடி"

"உறங்க வேண்டிய நேரத்தில் இப்படி ஊரைச் சுற்றிக் கொண்டிருக்கிறாயே..?"

"உறக்கம் வரவில்லை.. அப்படியே இந்த காஞ்சி நகரை சுற்றி வருவோம் என்றே கிளம்பினேன். ஆனால் இந்த நகரமோ இரவிலும் விழித்திருக்கிறது. ஒரே கொண்டாட்டமாக உள்ளது.."

"இன்று என்ன நாள் என்று உனக்கு தெரியாதா?"

"என்ன நாள்?"

"வைகுண்ட ஏகாதசியப்பா.. வருடத்திற்கொரு முறை வரும் உயிர்களுக்கான விடுதலை நாள்..."

"விடுதலை நாளா? புரியவில்லை எனக்கு..."

"ஆம்.. இந்த உடம்பெனும் சிறைக்குள் அடைபட்டிருக்கும் உயிருக்கு முக்தியும், மோட்சமும் கிடைக்கும் நாள்.."

"முக்தியும் மோட்சமும் எங்குள்ளது.. அங்கே அப்படி என்ன இருக்கிறது?"

"அது சரி.. ஊரைச் சுற்றி உண்டு களித்து நோக்கமின்றித் திரியும் உனக்கெப்படி முக்தி மோட்சம் பற்றி தெரியும்.. உனக்கு நான் சொன்னாலும் புரியப் போவதில்லை.. நீ உன் வழியே செல் – ஆயினும் இன்று இரவு கண் விழித்து ஊரைச் சுற்றும் உனக்கும் உண்டு முக்தி மோட்சம்.."

"இப்படி அலட்சியமாக பதில் கூறினால் எப்படி? விளக்கமாகச் சொன்னாலல்லவா புரியும்..."

– தானாயகன் அந்த வைணவரைத் தூண்டி விட்டான். அதே வேளை ஐந்தாறு குதிரைகளின் மேல் சில மிலேச்ச வீரர்கள் தெருவில் ஊர்வலம் போவது போல் வரவும் மாட விளக்கை அணைத்து விட்டு எல்லோரும் வீட்டினுள் சென்று கதவுகளை தாழிட்டுக் கொண்டனர்.

தானாயகனை ஒரு மிலேச்ச அதிகாரி பிடித்துக் கொண்டான்.

"அடேய்.. யார் நீ? உறங்காமல் இங்கென்ன செய்து கொண்டிருக்கிறாய்?"

– அதிகாரியிடம் கடுமை தொனித்தது. தானாயகனுக்கோ கண்கள் சிவக்க ஆரம்பித்தன.

**தொடரும்**

இந்த தொடரின் ஆசிரியர்
இந்திரா சௌந்தர்ராஜன் எழுதிய புத்தகங்கள்
**தெரிந்த பாரதம் தெரியாத பாத்திரம், கிருஷ்ண ஜாலம், கடவுளைக் கண்டவர்கள்** பெற
1800 425 7700 ல் தொடர்பு கொள்ளலாம்.